# தண்டனைச் சட்டக்கோவை



JPL
C11157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02 OCT 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# தண்டனைச் சட்டக்கோவை

11157 C.C

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

242295

242,295 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
345.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

## *Foreward*

CPPHR in collaboration with USAid has already brought out the Code of Criminal Procedure and the Evidence Ordinance (the Un-Official version) in Tamil. Along this line, once again with the assistance of USAid, CPPHR brings out the Penal Code in Tamil.

This is an effort of CPPHR to render its support to the Language policy of the Government where these books will be of much use in the judicial system. The Code of Criminal Procedure and the Evidence Ordinance was welcomed with enthusiasm by the legal fraternity – the Judges, Attorneys, Police Officers, law students and many others connected in this field have expressed much appreciation. CPPHR trusts that the Penal Code too will find the same support.

The Penal Code had seen many amendments recently and it was becoming difficult to use in the daily practice, having all the amendments separately. The salient feature of this Tamil un-official version of the Penal Code is that it has incorporated all the amendments in the relevant sections of the Code and has made it user friendly.

This is a humble effort of a small organization to build unity in diversity in the context of our country.

**Acknowledgement**

I wish to express my gratitude to my Attorney at Law friend who spent his valuable time in compiling and inserting all amendments in Evidence Ordinance, CrPC and now Penal Code and those who spent time in typing, proof-reading and printing and wishes to remain anonymous. In appreciation of their selfless effort, only a certificate of acknowledgement is provided, ever grateful to their selfless acts of dedication.

The Penal Code can be obtained from:

V.Yogeswaran,S.J. – Attorney at Law.
Centre for Promotion and Protection of Human Rights, [CPPHR]
238, Inner Harbour Road, Trincomalee, Sri Lanka. Ph. +94263260895
e-mail :- cpphrtrinco@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Errata

| பக்கம் | பிரிவு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 348 | 404 | 6 | கூடுு | கூடும் |
| 352 | 408(ஈ) | 1 | செல்லுதி | செல்லுமதி |
| 354 | 411 | 3 | நஞ் | நஞ் |
| 359 | 423 | 7 | பாகத்தை | பாகத்தை |
| 359 | 423 | 11 | வ | எவ |
| 361 | 426 | 5 | சொத் | சொத் |
| 367 | 437 | 10 | நீடிக்கலம் | நீடிக்கலாம் |
| 370 | 445 | 9 | ஆள | ஆளா |
| 371 | 448 | 5 | நேர்மை | நேர்மை |
| 374 | 452 | 11 | பொய் | பொய் |
| 375 | 453 | 19 | இலச்சிணை | இலச்சினை |
| 383 | 456 | 9 | அளிப | அளிப் |
| 386 | 463 | 5 | பொருளில் | பொருளில் |
| 387 | 464 | 4 | உபாயத்தை | உபாயத்தை |
| 387 | 464 | 12 | உபா | உபா |
| 387 | 464 | 14 | ஏதேனும் | ஏதேனும் |
| 388 | 466 | 10 | பதிவேடு | பதிவேடு |
| 389 | 467 | 13 | மோசடி | மோசடி |
| 391 | 468(2) | 2 | மாட்சிமை | மாட்சிமை |
| 392 | 471 | 3 | எவரும் | எவரும் |
| 396 | 478 | 8 | இவை | இவை |
| 397 | 478(அ) | 8 | அதன் | அதன் |
| 398 | 478(ஆ) | 4 | இலங்கை | இலங்கை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனைச் சட்டக்கோவை

## (அத்தியாயம் 19)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

## கட்டளைச் சட்டங்கள் இலக்கங்கள்.

KOHA
JPL

1883 இன் 02
1887 இன் 11,
1888 இன் 13,
1890 இன் 13,
1892 இன் 03,
1895 இன் 12,
1898 இன் 15,
1898 இன் 16,
1903 இன் 05,
1903 இன் 10,
1906 இன் 12,
1909 இன் 10,
1910 இன் 10,
1912 இன் 26,
1915 இன் 07,
1918 இன் 16,
1919 இன் 21,
1919 இன் 25,
1924 இன் 05,
1926 இன் 19,
1937 இன் 23,
1938 இன் 29,
1939 இன் 50,
1939 இன் 54,
1939 இன் 62,
1941 இன் 19,
1944 இன் 06,
1945 இன் 12,
1945 இன் 40,
1946 இன் 37,
1980 இன் 50,
1991 இன் 32,
1995 இன் 22,
1998 இன் 29,
2002 இன் 12,
2006 இன் 16,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 19

## தண்டனைச் சட்டக்கோவை

## இலங்கைக்கு பொதுவானதொரு தண்டனைச் சட்டக்கோவையை ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம்.

(1885, ஜனவரி 1)

## அத்தியாயம் 1.

1. இக்கட்டளைச் சட்டமானது தண்டனைச் சட்டக் கோவையென எடுத்துக் காட்டப்படலாம். இது, இதன் அகத்தின் பின்னர் "இச்சட்டக் கோவை" எனப் பொதுவாக குறிப்பிடப்படுகின்றது. சுருக்கப் பெயர்

2. (1) இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணான செயல் அல்லது செய்யாமை ஒவ் வொன்றுக்கும், இச்சட்டக்கோவை யின் கீழான தவறுகளுக்கான பொறுப்பு பி2,2006 இன்16

(அ) முழுமையான அல்லது பகுதியளவில் இலங்கையினுள்

(ஆ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளுக் குள் அல்லது வான்வெளிக்குள்

(இ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கப்பல் அல்லது வானூர்தி அத்தகைய செயல் அல்லது தவிர்வு புரியப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் எங்கிருந்தாலும் அக்கப்பலில் அல்லது வானூர்தியில்.

(ஈ) இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஓர் இலங்கைத் தூதராலயத்தலைவரின் தூதாண்மை முகவரின் அல்லது அத்தகைய தூதராலயத்தின் வேறு எவரேனும் உறுப்பினரின் வதிவிட வளவுகளுக்குள் அல்லது

(உ) இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கையில் தாபிக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டக்குழுவின் சார்பில் அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பாட்சிக் கொள்ளப்பட்டவையும் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளவையுமான எவையேனும் வளவுக்குள் புரியப்படும்.

குற்றப்பொறுப்பாளியாகும் ஆளொவ்வொருவரும் இச்சட்டக் கோவையின் கீழ்த்தண்டனைக்குரியவரா தல் வேண்டுமொழிய வேறு வகையாகவன்று.

பி2 : 2006
இல16

(2) இலங்கை நாட்டினத்தவர் ஒருவர் இச்சட்டக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக இலங்கைக்கு வெளியே புரியப்படும் எச்செயல் அல்லது தவிர்வு ஒவ்வொன்றிற்கும் அத்தகைய செயல் அல்லது தவிர்வு தொடர்பில் வெளிநாட்டு அரசொன்றினால் அத்தகைய அரசில் அவரது தூதாண்மை அந்தஸ்து காரணமாக அவருக்கு வழங்கப்பட்ட தூதாண்மை விடுபாட்டுரிமையை அத்தகைய நாட்டினத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துய்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி, இச்சட்டக் கோவையின் கீழ் அத்துடன் வேறெதன் கீழு மன்றி தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ளது எதுவும், எந்நாட்டில் அத் தகைய செயல் அல்லது செய்யாமை புரியப் பட்டதோ அந்த நாட்டின் சட்டங்களின் கீழ், அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர் பில் எவரேனும் இலங்கை நாட்டினத்தவரின் பொறுப்பினை பாதிப்பதாகப் பொருள் கொள்ள லாகாது. பி2 : 1991 இல32

உரோம - டச்சுக் குற்றவியற் சட்டம் நீக்கப்படுதல்

**3.** இதற்கு முன்னர் இலங்கையில் நிர்வகிக் கப்பட்டு வந்த குற்றவியற்சட்டத்தில் "ஐக்கிய மாகாணங்கள் குற்றவியற் சட்டம்" அல்லது "உரோம டச்சுச் சட்டம்" என்று அறியப்படும் அத்துணையளவும் இத்தால் நீக்கப்படுகின் றது.

குறிப்பிட்ட சில சட்டங்கள் பாதிக்கப் படாமை.

**4.** இச்சட்டக்கோவையிலுள்ளதெதுவும், ஏதே னும் சிறப்பான சட்டத்தின் அல்லது உள் ளூர்ச் சட்டத்தின் ஏற்பாடுகளெதனையும் நீக்கு வதாக வேனும், வேறுபடுத்துவதாகவேனும் அல்லது இடைநிறுத்தி வைப்பதாகவேனும் அன்றேல் பாதிப்பதாகவேனும் அல்லது உயர் நீதிமன்ற அவமதிப்புக்கு குற்றப் பொறுப் பாளிகளாகும் ஆட்களையும் மற்றும் தங்க ளின் தான்புரிந்த தொழிலை நடாத்துவதில் முறைகேடான நடத்தைக்கு குற்றப்பொறுப் பாளிகளான வழக்குரைஞர்கள், வழக்கறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர்கள் என்போரையும் தாமே விளங்கித் தண்டிப்பதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அல்லது அதன் நீதிபதி எவருக்கும் இதற்கு முன்னிருந்த தத்துவத்தைப் பாதிப்பதாக வேனும் கருதப்படவில்லை.

## அத்தியாயம் II

### பொதுவான விளக்கங்கள்

விதிவிலக்குகளுக்கமைய வரைவிலக்கணங்கள் விளங்கிக் கொள்ளப்படுதல்.

5. இச்சட்டக்கோவையின் எவ்விடத்திலும், தவறொன்றின் வரைவிலக்கணம் ஒவ்வொன்றும், தண்டவேற்பாடொவ்வொன்றும், அத்தகைய வரைவிலக்கணம் ஒவ்வொன்றினதும், அல்லது தண்டவேற்பாடு ஒவ்வொன்றினதும் எடுத்துக்காட்டு ஒவ்வொன்றும் அத்தகைய வரைவிலக்கணத்தில் தண்டவேற்பாட்டில் அல்லது எடுத்துக்காட்டில் அவ்விதிவிலக்குகள் திரும்பக் கூறப்படவில்லை ஆயினும் ''பொதுவிதி விலக்குகள்'' என்னும் தலைப்பினை கொண்ட IV அத்தியாயத்தில் அடங்கியுள்ள விதி விலக்குகளுக் கமைய விளங்கிக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) இச்சட்டக்கோவையின் தவறுகளில் வரை விலக்கணங்களைக் கொண்டு உள்ள பிரிவுகள். அத்தகைய தவறுகளை எட்டு வயதுக்கு உட்பட்ட பிள்ளையொன்றை புரியமாட்டாதென வெளிப்படுத்தவில்லை. ஆனால் எட்டு வயதிற்குட்பட்ட பிள்ளையொன்றினாற் செய்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்படுமெதுவும் தவறொன்றாகாதென ஏற்பாடு செய்யும் பொதுவிதிவிலக்குக்கமைய அவ்வரை விலக்கணங்கள் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியனவாகும்.

(ஆ) கொலையொன்றினைப் புரிந்துள்ள "க" என்பவரை "அ" என்ற பொலிசு அலுவலரொரு வர், பிடியாணையின்றிக் கைது செய்கிறார். இங்கு "க" என்பவரை கைதுசெய்வதற்கு, அவ் அலுவலர் சட்டத்தினால் கட்டுப்பட்டவராகையா லும், - அவ்விடயமானது "அதனைச் செய்வ தற்கு சட்டத்தினால் கட்டுப்பட்டுள்ள ஆள் ஒருவராற் செய்யப்படுமெதுவும் தவறென்றா காது" என ஏற்பாடு செய்யும் பொதுவிதிவிலக் கினுள் அமையுமா கையாலும் முறைகேடாக அடைத்து வைக்கும் தவறுக்கு குற்றப்பொறுப் பாளியல்ல.

ஒருமுறை விளங்கிக் கூறப்பட்ட ஒவ்வொரு சொல்லமைப்பும் அதே கருத்திற்தான் இச்சட்டக்கோவை முழுவதிலும் பயன் படுத்தப்படுகின்றது.

**6.** இச்சட்டக்கோவையின் ஏதாவது பாகத்தில் விளக்கிக் கூறப்பட்ட ஒவ்வொரு சொல்லமைப் பும், அவ்விளக்கத்திற்கிணங்கவே இச்சட்டக் கோவையின் ஒவ்வொரு பாகத்திலும் பயன் படுத்தப்படுகின்றது.

பால்

**7.** "அவர்" என்ற சுட்டுப்பெயரும் அதனடிப்பிறந்த னவும் ஆண் பாலைச் சேர்ந்த அல்லது பெண் பாலைச் சேர்ந்த எவ்வாள் தொடர்பிலும் பயன் படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்

8. அச்சந்தர்ப்பத்திலிருந்து அதற்கு முரணாகத் தோன்றினாலன்றி ஒருமையைக் குறிக்கும் சொற்கள் பன்மையையும் அடக்கிநிற்கின்றன. பன்மையைக் குறிக்கும் சொற்கள் ஒருமையையும் அடக்கி நிற்கின்றன.

ஆண், பெண்

9. "ஆண்" என்னுஞ்சொல் எவ்வயதினையுமுடைய ஆண்பாலைச் சேர்ந்த மனிதப்பிறவியைக் குறிக்கும். "பெண்" என்னுஞ்சொல் எவ்வயதினையுமுடைய பெண்பாலைச் சேர்ந்த மனிதப்பிறவியைக் குறிக்கும்.

"ஆள்"

10. "ஆள்" என்னுஞ்சொல் ஏதேனும் கம்பனியை அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்சேர்க்கையை அல்லது ஆட்கள் குழுவை உள்ளடக்கும்.

"பொதுமக்கள்"

11. "பொதுமக்கள்" என்னுஞ்சொல் பொதுமக்களின் ஏதேனுமொரு வகுப்பை அல்லது ஏதேனுஞ் சமுதாயத்தை உள்ளடக்கும்.

"குடியரசு"

12. "குடியரசு" என்னுஞ்சொல் இலங்கை சனநாயக குடியரசைக் குறிக்கும்.

13. இப்பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம்

14. எவையேனும் விபரிக்கின்ற அல்லது மட்டுப் படுத்துகின்ற சொற்களினாலேனும் சந்தர்ப்பத்தினாலேனும் வேறுபொருள் குறிப்பிடப்படாத விடத்து, அரசாங்கம் என்னும் சொல்லும் "இலங்கை அரசாங்கம்" என்ற சொல்லமைப்பையும் 1978ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோசலிச குடியரசின் அரசியலமைப்பினால் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கம் எனப் பொருள் படுதல் வேண்டும்.

15. "இத்தீவு" "இலங்கை" என்ற சொற்கள் இலங் கைத் தீவினைக் குறிக்கும். இத்தீவு இலங்கை

16. "சனாதிபதி" என்னும் பதம் இலங்கை சன நாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியை யும் அவரது கடமை களையும் பணிகளையும் புரியவும் அதிகாரங்களைப் பயன்படுத்தவும் முறையாக நியமிக்கப்பட்ட அல்லது பிரயோ கிக்க ஒதுக்கப்பட்ட எவரேனும் ஆளை உள்ள டக்கும். "சனாதிபதி"

17. "நீதிபதி" என்னுஞ்சொல் நீதிபதியாக அலுவலக முறையில் பதவிப்பெயர் சூட்டப்பட்டுள்ள ஆளொவ்வொருவரையும் குறிப்பது மட்டுமன்றி குடியியல் அல்லது குற்றவியற் சட்ட நடவ டிக்கை எதிலும் உறுதியானதொரு தீர்ப்பினை அளிப்பதற்கு, அல்லது அதனை எதிர்த்து மேன் முறையீடு செய்யப்படாவிடில் உறுதியானதாகக் கூடிய தீர்ப்பொன்றினை அளிப்பதற்கு அல்லது வேறு ஏதாவது அதிகாரத்தினால் உறுதிப்படுத் தப்படின் உறுதியானதாகக் கூடிய தீர்ப்பு ஒன் றினை அளிப்பதற்குச் சட்டத்தினால் தத்துவம் பெற்றுள்ள ஆள் ஒவ்வொருவரையும் அல்லது அத்தகைய தீர்ப்பினை அளிப்பதற்குச் சட்டத்தி னால் தத்துவம் பெற்றுள்ள ஓர் ஆட்கள் குழுவை "நீதிபதி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர்களான ஆட்களுள் ஒருவராயுள்ள ஒவ்வோராளையும் குறிக்கும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை விதிப்பதற்கு அவருக்குத் தத்துவமுடைய ஒரு குற்றச்சாட்டின் தொடர்பில் நியாயாதிக் கத்தைப் பிரயோகிக்கும் நீதிவானொருவர் ஒரு நீதிபதியாவர்.*

*(ஆ) கண்டியர் திருமண - மண நீக்கச்சட்டத் தின் - 33 ஆம் பிரிவின் கீழ் நியாயாதிக்கத் தைப் பிரயோகிக்கும் மாவட்டப் பதிவாளர் ஒருவர் அல்லது மேலதிக மாவட்டப் பதிவாள ரொருவர் ஒரு நீதிபதியாவர்.*

*(இ) மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம் ஒன்றின் யூரர் ஒரு நீதிபதியாவர்.*

*(ஈ) வேறொரு நீதிமன்றத்திற்கு விளக்கத்திற் கெனப் பாரப்படுத்துவதற்கு மட்டும் அவர் தத்து வம் பெற்றுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் நியாயாதிக்கத்தைச் செலுத்தும் நீதிவான் ஒரு நீதிபதியல்லர். ஆனால் சமாதானம் கடைப் பிடிப்பதற்கென அல்லது நன்னடத்தை உடைய வராயிருத்தற்கென ஆட்களைப்பிணை கட்டும் படி பணிக்கும் நியாயாதிக்கத்தைப் பிரயோ கிக்கும் நீதிவானொருவர் ஒரு நீதிபதியாவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. "நீதிமன்றம்" என்னுஞ் சொற்கள் நீதிபதி ஒருவர் அல்லது நீதிபதிகள் குழு வொன்று நீதி முறையிற் செயலாற்றுகையில் நீதி முறைப்படி தனிமையிற் செயலாற்றுவதற் குச் சட்டத்தினால் தத்துவம் அளிக்கப்பட் டவரான அத்தகைய நீதிபதியொருவரை அல்லது நீதி முறைப்படி ஒரு குழுவாகச் செயலாற்றுவதற்கு சட்டத்தினால் தத்துவ மளிக்கப்பட்ட அத்தகைய நீதிபதிகள் குழுவைக் குறிக்கும். நீதிமன்றம்

18அ. "தேர்தல்" என்னுஞ்சொல் வெளிப்படை யாக அல்லது அவசிய உட்கிடையினால் இலங்கைக்கு சேர்வதாகின்ற ஐக்கிய இராச் சியப் பாராளுமன்ற நியதிச்சட்டம் அல்லது சட்டவாக்கம் எதனதும் அல்லது அரசப் பேரவையினிடத்தான இராணியாரின் கட் டளை எதனதும் கீழ் அல்லது அதன் பய னாக அல்லது அதன் கீழாக்கப்பட்ட விதி கள் ஒழுங்குவிதிகள் எவற்றினதும் கீழ் அல்லது அவற்றின் பயனாக நடாத்தப்படும் எத்தகையதுமான ஏதேனும் நோக்கத்துக் கான எத்தேர்தலையும் குறிக்கும். "தேர்தல்"

19. "பகிரங்க ஊழியர்" என்னுஞ்சொற்கள் இதன கத்துப் பின்வரும் விவரணங்களுள் எதனுள் ளும் அடங்கக்கூடிய ஆளொருவரைக் குறிக்கும். அதாவது "பகிரங்க ஊழியர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக - சனாதிபதியினால் அல்லது சனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதாவதோர் ஆணை யின் அல்லது எழுத்தாணையின் பய னாக இலங்கையில் ஏதாவதொரு பதவியை வகிக்கும் ஆளொவ்வொரு வரும்;

இரண்டாவதாக - இலங்கையின் நிர்வாக சேவை உறுப்பினர் ஒவ்வொருவரும்;

மூன்றாவதாக - இலங்கைக் குடியரசின் கடற் படை, தரைப்படை அல்லது வான் படையில் ஆணைபெற்ற அலுவல ரொவ்வொருவரும்;

நான்காவதாக - நீதிபதியொவ்வொருவரும்;

ஐந்தாவதாக - சட்ட விடயம் அல்லது நிகழ்வு விடயம் எதனையும் பற்றி நுண்ணாய்வு செய்ய அல்லது அறிக்கை செய்ய ஏதேனும் ஆவணத்தைத் தயாரிக்க உண்மைப்படுத்த அல்லது வைத்தி ருக்க அல்லது ஏதேனும் ஆதனத்தை பொறுப்பேற்க அல்லது கையாள அல்லது எவையேனும் நீதி முறைக் கட்டளையாகியனவற்றை நிறைவேற்ற அல்லது நீதிமன்றத்தில் ஏதேனும் சத்தியத்தை எடுத்தோத அல்லது பேச்சு மொழிபெயர்க்க அல்லது ஒழுங் கினைப் பேண அத்தகைய அலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலரென்ற முறையில் கடமையுடைய நீதிமன்றத்து அலுவலா் ஒவ்வொருவரும், அத்துடன் அத்தகைய கடமைகளுள் எவற்றையேனும் புரிவதற்கு நீதிமன்றத்தினால் சிறப்பாக அதிகாரம் அளிக்கப்பட்டவரான ஆளொவ்வொருவரும்;

242295

ஆறாவதாக - நீதிமன்றமொன்றிற்கு அல்லது பகிரங்க ஊழியரொருவருக்கு உதவி புரியும் யூரரொவ்வொருவரும் அல்லது மதிப்பீட்டாளரொவ்வொருவரும்;

ஏழாவதாக - ஏதேனும் காரியம் அல்லது விடயம் அவரால் முடிபு காணப்படுவதற்கென அல்லது அறிக்கை செய்யப்படுவதற்கென ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது தகுதிவாய்ந்த பகிரங்க அதிகாரியினால் அவருக்கு வழிப்படுத்தப்பட்டவரான நடுத்தீர்ப்பாளர் அல்லது வேறு ஆள் ஒவ்வொருவரும்;

11157

எட்டாவதாக - எவரேனுமாளொருவரை அடைத்து வைப்பதற்கு அல்லது அடைத்து வைத்திருப்பதற்கு அவருக்குத் தத்துவமளிக்கும் ஒரு பதவியை வகிக்கும் ஆளொவ்வொருவரும்;

ஒன்பதாவதாக - அத்தகைய அலுவலா் என்ற முறையில் தவறுகளைத் தடுக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகள் பற்றிய தகவல் கொடுக்க, தவறாளர்களை நீதி வழிக்குக் கொணர அல்லது பொதுமக்கள் சுகாதாரம், பாதுகாப்பு அல்லது வசதியைப் பாது காக்கக் கடமையுடைய அரசாங்க அலுவலரொவ்வொருவரும்;

பத்தாவதாக - அத்தகைய அலுவலரென்ற முறையில், அரசாங்கத்தின் சார்பில் ஏதாவதோர் ஆதனத்தை எடுத்துக் கொள்வதை, பெற்றுக்கொள்வதை, வைத்திருப்பதை அல்லது செலவழிப் பதை அல்லது அரசாங்கத்தின் சார்பில் ஏதேனும் அளவையை, மதிப்பிடுதலை அல்லது ஒப்பந்தத்தைச் செய்வதை அல்லது அரசாங்கத்தின் பணவக்கறை களைப் பாதிக்கக்கூடிய ஏதேனும் விடயம் பற்றி நுண்ணாய்வு செய்தலை அல்லது அறிக்கை செய்தலை அல் லது அரசாங்கத்தின் பணவக்கறை களோடு தொடர்புடைய -

ஏதேனும் ஆவணத்தினைத் தயாரிப்பதை உண்மைப்படுத்துவதை அல்லது வைத் திருப்பதை அல்லது அரசாங்கத்தின் பணவக்கறையைப் பாதுகாப்பதற்கான ஏதேனும் சட்டம் மீறப்படுதலை தடுப்ப தைத் தனது கடமையாகக் கொண் டுள்ள அலுவலர் ஒவ்வொருவரும், மற்றும் ஏதேனும் பகிரங்க கடமையி னைப் புரிவதற்காக அரசாங்க சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலுள்ள அல்லது அரசாங்க சம்பளம் பெறும் அல்லது கட்டணம் மூலம் அல்லது தரகு மூலம் ஊதியம்பெறும் அலுவலர் ஒவ்வொருவரும்;

பதினோராவதாக - அத்தகைய அலுவலர் என்ற முறையில் ஏதேனும் கிராமம், பட்டிணம், அல்லது மாவட்டத்தினது உலகியற் பொது நோக்கத்திற்காக ஏதேனும் ஆதனத்தை எடுத்துக்கொள்வதை, பெற்றுக்கொள்வதை, வைத்திருப்பதை அல்லது செலவழிப்பதை அல்லது ஏதேனும் அளவையை அல்லது மதிப்பிடுதலை செய்வதை அல்லது ஏதேனும் வீதவரியினை அல்லது வரியினை விதித்தலை அல்லது ஏதேனும் கிராமம் அல்லது பட்டினம் அல்லது மாவட்டத்தின் மக்களது உரிமைகளை நிச்சயிப்பதற்காக ஏதேனும் ஆவணத்தைத் தயாரித்தலை, உண்மைப்படுத்தலை அல்லது வைத்திருத்தலைக் கடமையாகக் கொண்டுள்ள அலுவலரொவ்வொருவரும்;

பன்னிரண்டாவதாக - தேர்தல் இடாப்பொன்றினைத் தயாரிப்பதற்கு, வெளியிடுவதற்கு, பேணுவதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கு அல்லது தேர்தலொன்றினை அல்லது தேர்தலொன்றின் பாகத்தினை நடாத்துவதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டுகள்**

*மாநகரசபைப் பரிசோதகரொருவர் பகிரங்க ஊழியரொருவராவார்.*

*பொதுவழிக் கட்டளைச் சட்டத்தின் கீழான கண்காணிப்பு எந்திரியொருவர் பகிரங்க ஊழியரொருவராவார்.*

*பிரதிப் பிசுக்காலொருவர் பகிரங்க ஊழியரொருவராவார்.*

*பொலிசு விதானையொருவர் பகிரங்க ஊழியரொருவராவார்.*

விளக்கம் 1: மேலேயுள்ள விவரணங்களுள் எதனதும் கீழ்வரும் ஆட்கள், அவர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருப்பினும் இல்லாவிடினும் பகிரங்க ஊழியர்களாவர்.

விளக்கம் 2: "பகிரங்க ஊழியர்" என்றசொற்கள் தோன்றுமிடமெல்லாம், அவை பகிரங்க ஊழியரின் பதவியை உண்மையில் வகிக்கும் ஆளொவ்வொருவரும் தொடர்பாகவும், அவர் அப்பதவியை வகிப்பதற்குள்ள உரிமையில் எவ்வித சட்டக்குறைபாடிருப்பினும் அவ்வாறே விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20.** "அசைவுள்ள ஆதனம்" என்ற சொற்கள், காணியும் நிலத்தோடு பிணைக்கப்பட்டுள்ள அல்லது நிலத்தோடு பிணைக்கப்பட்டுள்ள எதனுடனும் நிரந்தரமாகச் சேர்க்கப்பட்டுள்ள பொருள்களும் தவிர்ந்த வேறு எவ்விவரணத்தையும் கொண்ட உருப்படியான கருப்பொருள் ஆதனத்தை உள்ளடக்கக் கருதப்படுகின்றன.

"அசைவுள்ள ஆதனம்"

**21.** (1) "முறைகேடான பேறு" என்பது ஆதன மொன்றைப் பெறுவதற்குச் சட்டமுறையான உரிமையற்ற ஆள் சட்டமுறையல்லாத வழிகளில் அவ்வாதனத்தைப் பெறுவதாகும்.

"முறைகேடான பேறு"

(2) "முறைகேடான இழப்பு" என்பது ஆதமொன்றிற்குச் சட்டப்படியான உரிமையுடைய ஆள் சட்டமுறையல்லாத வழியினால் அவ்வாதனத்தை இழப்பதாகும்.

"முறைகேடான இழப்பு'

(3) ஆளொருவர் முறைகேடாகத் தடுத்து வைத்திருக்கும் பொழுதும் அத்தகைய ஆள் முறைகேடாகக் கொள்ளும் பொழுதும் அவ்வாள் முறைகேடான பேறடைகிறார் எனச் சொல்லப்படும்.

"முறைகேடான பேறு என்பது ஆதனத்தினை முறைகேடாக வைத்திருத்தலையும் உள்ளடக்கும்"

(4) ஏதேனும் ஆதனத்திலிருந்து ஆளொருவர் முறைகேடாகத் தள்ளிவைக்கப்படுகின்றபோதும் அத்தகை ஆதனத்தை முறைகேடாக இழக்கச் செய்யும் பொழுதும் அத்தகைய ஆள் முறைகேடான இழப்படைகின்றார் என்று சொல்லப்படும்.

"முறைகேடான இழப்பு என்பது ஆதனத்திலிருந்து முறைகேடாகத் தள்ளிவைக்கப் படுவதையும் உள்ளடக்கும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேர்மையின்றி"

**22.** ஆளொருவருக்கு முறைகேடான பேற்றினை உண்டாக்கும் கருத்துடன் அல்லது வேறோர் ஆளுக்கு முறைகேடான இழப்பினை உண்டாக்கும் கருத்துடன் எதையும் செய்யும் எவ்வாளும் அதனை "நேர்மையின்றிச்" செய்வதாக சொல்லப்படும்.

"மோசடியாக"

**23.** ஆளொருவர் மோசடி செய்யும் கருத்துடன் ஒரு விடயத்தினைச் செய்யின், அவர் அதனை மோசடியாகச் செய்வதாகச் சொல்லப்படும் மற்றப்பயன்று.

"நம்புவதற்கான நியாயம்"

**24.** விடயமொன்றினை நம்புவதற்கு ஆளொருவருக்கு போதிய காரணமிருப்பின் அவ்வாள் அதனை நம்புவதற்கு நியாயம் உடையவரெனச் சொல்லப்படுவர் மற்றப்படியன்று.

"மனைவி எழுது விளைஞர் பணியாளர் ஆகியவர்களின் உடமையிலுள்ள ஆதனம்"

**25.** ஆளொருவரின் பொருட்டு, அவ்வாளின் மனைவி, எழுதுவினைஞர் அல்லது பணியாளரின் உடைமையில் ஆதனம் இருக்கும் பொழுது, இச்சட்டக்கோவையின் பொருள்களுக்கு உட்பட அது அவ்வாளின் உடைமையில் இருப்பதாகும்.

விளக்கம் : ஓர் எழுதுவினைஞர் அல்லது பணியாள் என்ற தன்மையில் தற்காலிகமாக அல்லது குறிப்பிட்டவொரு சந்தர்ப்பத்திலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவர் இப்பிரிவின் பொருளுக்குட்பட ஓர் எழுதுவினைஞர் அல்லது பணியாளராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. அவ்விதம் ஒத்திருத்தல் காரணமாக ஏமாற் றத்தை ஏற்படுத்தும் கருத்துடன் அல்லது அத னால் ஏமாற்றம் ஏற்படக்கூடுமென அறிந்து ஒரு பொருள் இன்னொரு பொருளை ஒத்திருக்கச் செய்விக்கும் ஆளொருவர், "போலி புனைகி றார்" எனச் சொல்லப்படும். "போலி புனைதல்"

விளக்கம் : போலி புனைவதற்கு போலித் தோற்றம் இம்மியும் பிசகாதிருக்க வேண்டுமென்பது அத்தியாவசிய மல்ல.

27. ஆவணம் என்னும் சொல் எழுத்துக்கள், எண்கள் அல்லது குறியீடுகள் மூலம் அல்லது இவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் மூலம் ஏதேனும் பதார்த்தத்தின் மீது வெளிப்படுத்தப்பட்டதால் அல்லது விவரிக்கப்பட்ட ஏதேனும் விடயத்துக் குச் சான்றாகப் பயன்படுத்தக் கருதப்பட்ட அல்லது சான்றாக பயன்படுத்தக் கூடியதான ஏதேனும் விடயத்தைக் குறிக்கும். "ஆவணம்"

விளக்கம் 1:எம்முறையினால் அல்லது எப் பதார்த்தத்தின் மீது எழுத்துக்கள், எண்கள் அல்லது குறியீடுகள் அமைக் கப்பட்டுள்ளனவென்பது அல்லது அச் சான்றானது நீதிமன்றமொன்றில் பயன் படுத்துவதற்கெனக் கருதப்பட்டதா அல்லது பயன்படுத்தக்கூடியதாக வல்லவா என்பதெல்லாம் முக்கியமா னவையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டுகள்**

*ஓர் ஒப்பந்தத்தின் நியதிகளைத் தெரிவிப்ப தால், அவ் ஒப்பந்தத்திற்கு சான்றாக பயன் படுத்தப்படக்கூடிய எழுத்தொன்று ஆவண மொன்றாகும்.*

*வங்கியாளரொருவர் மீதான காசோலையொன்று ஆவணமொன்றாகும்.*

*அற்றோனித் தத்துவப்பத்திரம் ஒன்று ஆவண மொன்றாகும்.*

*சான்றாக பயன்படுத்தக் கருதப்படும் அல்லது சான்றாகப் பயன்படுத்தப்படக்கூடிய தேசப்பட மொன்று அல்லது மாதிரிப்படமொன்று ஆவண மொன்றாகும்.*

*அறிவுறுத்தல்களை அல்லது பணிப்புரைக ளைக் கொண்டுள்ள எழுத்தொன்று ஆவண மொன்றாகும்.*

விளக்கம் 2: வணிக அல்லது வேறு பிரத்தி யேக முறையினால் விளக்கப்படும் வகையில் எழுத்துக்கள், எண்கள் அல்லது குறி யீடுகள் மூலம் தெரிவிப்பதெதுவாயி னும், அது உண்மையிற் தெரிவிக்கப் படாதிருப்பினும் இப்பிரிவின் பொருளுக் குட்பட்டவை அத்தகைய எழுத்துக்கள், எண்கள் அல்லது குறியீடுகளினாற் தெரி விக்கப்படுவதாக கருதப்படுதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டு**

*"அ" என்பவர் தனது கட்டளைக்குச் செலுத் தப்படவேண்டிய மாற்று உண்டிய லொன்றின் பின் புறத்தில் தனது பெயரை எழுதுகின்றார். வணிகப் பிரயோகத்தினால் விளக்கப்படும் இப்புறக்குறிப்பின் கருத்து இவ்வுண்டியலானது அதனை வைத்திருப்பவருக்குச் செலுத்தப்படு தல் வேண்டுமென்பது இப்புறக்குறிப்பானது ஆவணமொன்றாகும். அத்துடன் அதில் கையொப்பத்தின்மேல் "வைத்திருப்பவருக்குச் செலுத்து" என்ற சொற்கள் அல்லது அந்தப் பயனுடைய சொற்கள் எழுதப்பட்டிருந்தாற் போன்று, அதே முறையில் பொருள் கொள் ளப்படுதல் வேண்டும்.*

**28.** "பெறுமதியான பிணை" என்ற சொற்கள் ஏதே னும் சட்டமுறையான உரிமையினைத் தோற்று விக்கும், நீடிக்கும் கைமாற்றும், மட்டுப்படுத்தும் இல்லாதொழிக்கும் அல்லது விடுவிக்கும், ஆவண மொன்றாக அல்லது எவரேனுமாள் தாம் சட்டப் பொறுப்பின் கீழ் உடையவராய், இருப்பதாக அல்லது குறிப்பிட்ட சட்ட உரிமை யொன் றினை உடையவரல்ல எனத்தெரிவிக்கும் ஆவண மொன்றாகவுள்ள அல்லது அவ்விதம் கொள் ளப்படும் ஆவணம் ஒன்றினைக் குறிக்கும். "பெறுமதியான பிணை"

**எடுத்துக்காட்டு**

*மாற்றுண்டியலொன்றின் பின்புறத்தில் "அ" என்பவர் தனது பெயரை எழுதுகின்றார். இப்புறக்குறிப்பின் பயனாவது, அவ்வுண்டிய*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லுக்கான உரிமையை அதனை சட்டமுறை யாக உடையவராகும், எவ்வாளுக்கும் மாற்று தலேயாதலின், அப்புறக் குறிப்பானது ஒரு "பெறுமதியான பிணை" ஆகும்.*

"விருப்பாவண மொன்று"

**29.** "விருப்பாவணமொன்று" என்னுஞ் சொற்கள் ஏதேனும் எழுத்தாவணமுறையான ஆவணத் தைக் குறிப்பனவாகும்.

'சொல்களைக் குறிக்குஞ் சொற்கள் சட்ட விரோதமான செய்யாமை களையும் உள் ளடக்கும்.

**30.** இச்சட்டக்கோவையின் ஒவ்வொரு பாகத்திலும், சந்தர்ப்பத்திலிருந்து முரணான கருத்தொன்று தோன்றுமிடத்தன்றி, செய்யப்பட்ட செயல் களைக் குறிக்கும் சொற்கள் சட்டவிரோதமான செய்யாமைகளையும் குறிப்பனவாகும்.

"செயல்"

**31.** (1) "செயல்" என்னுஞ் சொல் தனித்தவொரு செயலைக் குறிப்பது போல ஒரு தொடரான செயல்களையும் குறிப்பதாகும்.

"செய்யாமை"

(2) "செய்யாமை" என்னுஞ்சொல் தனித்த வொரு செய்யாமையைக் குறிப்பது போல ஒரு தொடரான செய்யாமைகளையும் குறிப்பதாகும்.

பொதுவான கருத்தினை நிறைவேற்று வதில் பல்வேறு ஆட்களினாற் செய்யப்பட்ட செயலுக்கான பொறுப்பு.

**32.** அவர்கள் எல்லோருக்கும் பொதுவான கருத் தினை நிறைவேற்றுவதற்காகப் பல்வேறு ஆட்க ளினால் குற்றச்செயலொன்று புரியப்பட்டால், அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும், அச் செயல் தனித்து அவராற் செய்யப்பட்டாற்போன்று அதே முறையில் அச்செயலுக்குப் பொறுப் பாளியாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**33.** குற்ற அறிவுடன் அல்லது குற்றக்கருத்துடன் செய்யப்படுவதன் காரணத்தினால் மாத்திரம் குற்றமானதாகவிருக்கும் செயல் ஒன்று, பல்வேறு ஆட்களாற் செய்யப்பட்டால், அத்தகைய அறிவு டன் அல்லது கருத்துடன் அச்செயலிற் சேரும் அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவரும், அவ் வித அறிவு அல்லது கருத்துடன் அவரால் மட்டும் அச்செயல் செய்யப்பட்டிருந்தாற் போன்று அச்செயலுக்கு பொறுப்பாளியாவார்.

குற்ற அறிவுடன் அல்லது குற்றக் கருத்துடன் செய்யப்படுதல் காரணமாக அத்தகைய செயல்குற்றமா காதிருக்கும் போது.

**34.** செயலொன்றினால் அல்லது செய்யாமையொன் றினால் பயனொன்றினை விளைவித்தல் அல் லது விளைவிக்க எத்தனித்தல் தவறொன்றா கவிருக்கும் பொழுதெல்லாம் அப்பயனைச் செயலினால் பகுதியாகவும் செய்யாமையி னாற் பகுதியாகவும் விளைவிப்பதுவும் அதே தவறாகபுரிந்து கொள்ளப்படுதல் வேண்டும்.

செயலினால் பகுதியும் செய்யாமை யினால் பகுதியுமாக ஏற்படும் விளைவு.

**எடுத்துக்காட்டு**

*"அ" என்பவர் "க" என்பவருக்கு சட்ட விரோதமாக உணவு கொடாமையினால் பகுதியாகவும் அவரை அடிப்பதனால் பகுதியாகவும் கருத்துடன் "க" வின் மரணத்தை உண்டாக்குகிறார். ஆகவே "அ" என்பவர் கொலை புரிந்தவராகிறார்.*

**35.** பல செயல்களினால் தவறொன்று புரியப்படு கையில் அச்செயல்களுள் ஏதேனுமொன்றினைத் தனித்து அல்லது வேறு ஆளுடன் கூட்டாகச் செய்வதினால் அத்தவறினைப் புரிவதில் கருத்

தவறொன்றாக வரும் பல செயல்களுள் ஒன்றினைச் செய்வதாலான ஒத்தாசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் ஒத்தாசை செய்யும் ஆளெவரும் அத் தவறினைப் புரிந்தவராகிறார்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) "அ" என்பவரும் "ஆ" என்பவரும் தனித் தனியே நஞ்சினை சிறிய அளவுகளில் வெவ்வேறு நேரங்களிற் கொடுப்பதனால் "க" என்பவரை கொலைசெய்ய உடன்பட்டுக் கொள்ளுகிறார்கள். "அ"வும் "ஆ"வும் உடன்பட்டுக் கொண்டபடி "க" என்பவரைக் கொலை செய்யும் கருத்துடன் நஞ்சினைக் கொடுக்கின்றார்கள். அவ்விதம் தமக்கு கொடுக்கப்பட்ட பல அளவுகளைக் கொண்ட நஞ்சின் விளைவினால் "க" மரணமடைகின்றார். இங்கு கொலையைப் புரிவதில் "அ"வும் "ஆ"வும் ஒருவருக்கொருவர் கருதி ஒத்தாசை புரிகிறார்கள். அவர்களுள் ஒவ்வொருவரும் மரணத்தை ஏற்படுத்திய ஒரு செயலினைச் செய்ததனால் அவர்களது செயல்கள் தனித்தனி வேறாயினும் இருவரும் அத் தவறுக்கான குற்றவாளிகளாவர்.*

*(ஆ) "அ" என்பவரும் "ஆ" என்பவரும் கூட்டுச் சிறைச்சாலைக் காவலாளர்களாக விருந்து மறியற்காரராகிய "க" என்வரை முறையே ஆறு மணித்தியாலங்களுக்குத் தத்தம் பொறுப்பில் வைத்திருக்கிறார்கள். "அ"வும் "ஆ"வும் "க" என்பவரைக் கொல்லும் கருத்துடன் அவர்களிலொவ்வொரு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் தத்தம் முறையில் "க" என்பவருக் கென்று தத்தம் வசம் கொடுக்கப்பட்ட உணவினைச் சட்டவிரோதமாக அவனுக் குக் கொடுக்காமல் விடுவதன் மூலம் அதன் பயனாக அவனுக்கு மரணத்தினை ஏற்படுத்துவதற்கு அறிந்து ஒத்தாசை புரி கின்றனர். "க" பசியினால் இறந்து விடு கின்றார். "அ"வும் "ஆ"வும் "க" வினைக் கொலை செய்வதற்கான குற்றவாளியாகிறார் கள்.

242295

(இ) "அ" சிறைச்சாலை காவலர்கள் ஒரு வர் "க" என்னும் மறியற்காரரைத் தனது பொறுப்பில் வைத்திருக்கிறார். 'க"வினைக் கொல்லவேண்டும் என்று கருதி "அ" சட்டவிரோதமான முறையில் "க"வுக்கு உணவினைக் கொடாது விடுகிறார். இத னால் "க"வுக்குப் பலம் மிகவும் குறைந் துள்ளது. எனினும் அப்பசி அவனுக்கு மரணத்தை உண்டு பண்ணுவதற்குப் போதிய தாகவில்லை. "அ" தனது பதவி யிலிருந்து அகற்றப்படுகின்றார். அதன்மேல் அப்பதவிக்கு "ஆ" என்பவர் வருகிறார். "ஆ" என்பவர் "அ" என்பவருடன் ஒத்தி கையின்றியும், ஒத்தாசை இல்லாமலும் ஆனால் அதனால் "க" வின் மரணத்தைத் தாம் ஏற்படுத்தக்கூடும் என அறிந்து கொண்டு "க" வுக்கு உணவு கொடாது சட்டவிரோதமாக விட்டு விடுகிறார். "க" பசியினால் மரணமடைந்துவிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு "ஆ" கொலைக்கு குற்றவாளி யாகிறார், "அ" என்பவர் "ஆ" வுக்கு ஒத்தாசை செய்யாததினால், "அ" என்பவர் கொலைபுரிவதற்கு எத்தனித்த குற்றத் திற்கு மட்டும் குற்றவாளியாகிறார்.

குற்றச்செயல் ஒன்றினைப் புரிவதில் ஈடுபட்ட ஆட்கள் பலர் வெவ்வேறான தவறுகளுக்குக் குற்றவாளிகளாகலாம்.

**36.** குற்றச்செயலொன்றினைப்புரிவதில் பல்வேறு ஆட்கள் ஈடுபட்டிருக்குமிடத்து அல்லது தொடர்பு பட்டிருக்குமிடத்து அந்தச்செயலினால் அவர்கள் வெவ்வேறு தவறுகளுக்குத் குற்றவாளிகளாகலாம்.

**எடுத்துக்காட்டு**

அத்தகைய பாரதூரமான ஆத்திரச் சூழ்நிலைகளில் "அ" என்பவர் "க" என்பவரைத் தாக்குவதினால், "க" வினை அவர் கொல்லுதல் கொலையாகாத மனித உயிர்போக்கலாக அமையக்கூடிய சூழ்நிலைகளில் "க" வை "அ" தாக்குகிறார். "ஆ" என்பவர் "க" என்பவரின் மீது வைத்திருக்கும் வெறுப்பின் அடிப்படையில் அவரைக் கொல்லக் கருதி அவர் ஆத்திரமூட்டப்படுகைக்கு ஆளாகாமல் இருந்துங்கூட "க" வினைக் கொல்ல "அ" வுக்கு உதவிபுரிகிறார். இங்கு "அ" வும் "ஆ"வும், "க" வுக்கு மரணத்தினை ஏற்படுத்துவதில் ஈடுபட்டிருப்பினும் "ஆ" மாத்திரம் கொலைக் குற்றவாளியாகிறார். "அ" கொலையாகாத மனித உயிர்போக்கலுக்கு மாத்திரம் குற்றவாளியாகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**37.** ஆள் ஒருவர் பயனொன்றை விளைவிக்கக் கருதிய வழிகளினால் அல்லது அவ்வழிகளைப் பிரயோகிக்கும் நேரத்தில், அதை விளைவிக்கக் கூடும் என அவர் அறிந்து அல்லது நம்புவதற்கு நியாயமுள்ள வழிகளினால் அப்பயனை ஏற்படுத்தும் பொழுது அவர் வேண்டுமென்று அப்பயனை ஏற்படுத்தியவராகச் சொல்லப்படுகிறார். "வேண்டுமென்று"

பொது நூலகம் யாழ்ப்பாணம். விசேட சேர்க்கைப் பகுதி

**எடுத்துக்காட்டு**

*"அ" என்பவர் கொள்ளையொன்று நடைபெறுவதனை வசதியாக்குவதற்கென ஒரு பெரியபட்டிணத்திலுள்ள, குடியிருப்போர் உள்ளவீடொன்றுக்கு இரவு நேரத்தில் நெருப்புவைக்கிறார். அதனால் ஆளொருவருக்கு மரணத்தினை ஏற்படுத்துகின்றார். இங்கு "அ" என்பவர் மரணத்தினை ஏற்படுத்துவதற்கு கருதாது இருந்திருக்கலாம். அத்துடன் தனது செயலினால் மரணம் ஏற்பட்டதற்கு அவர் வருந்தவுங்கூடும். என்றும் தாம் மரணமேற்படுத்தக்கூடுமென அவர் அறிந்திருந்தாராயின் அவர் மரணத்தினை வேண்டுமென்று ஏற்படுத்தியவராகிறார்.*

**38.** (1) இரண்டாம், மூன்றாம் உட்பிரிவுகளிற் குறிப்பிட்ட அத்தியாயத்திலும் பிரிவுகளிலும் தவிரத் "தவறு" என்னுஞ் சொல் இச்சட்டக் கோவையினாற் தண்டிக்கப்படக்கூடிய தாக்கப்பட்டவொன்றைக் குறிக்கும். "தவறு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஐஏஆம் அத்தியாயத்திலும் பின்வரும் பிரிவுகளிலும் அதாவது 67, 100, 101, 101அ, 102, 103, 105, 107, 108, 109, 110, 111, 112, 113, 113அ, 113ஆ, 184, 191, 192, 200, 208, 210, 211, 216, 217, 218, 219, 220, 318, 319, 320, 321, 322, 338, 339, 377, 378, 431 ஆகிய பிரிவுகளிலும் "தவறு" என்னுஞ் சொல் இச்சட்டக்கோவையின் கீழ் அல்லது இச்சட்டக்கோவை தவிர்ந்த வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் இலங்கையில் தண்டிக்கப்படக் கூடியவொன்றினைக் குறிக்கும்.

(3) அத்துடன் 138, 174, 175, 198, 199, 209, 213, 427 ஆகிய பிரிவுகளில் "தவறு" என்னுஞ் சொல்லானது தண்டிக்கப்பட வேண்டிய காரியம் இச்சட்டக் கோவையல்லாத வேறேதேனும் சட்டத்தின் கீழ்க் குற்றப்பணத்துடன் அல்லது குற்றப்பணமின்றி ஆறு மாத காலமென்றுக்கு அல்லது அதற்கு மேலானதொரு காலத்துக்கான மறியற்தண்டனையால் அத்தகைய சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படற்பாலதாக இருக்கும் பொழுது (2) ஆம் உட்பிரிவுகளிலுள்ள அதே கருத்தினைக் கொண்டுள்ளது.

"சிறப்பான சட்டம்"

**39.** "சிறப்பான சட்டம்" என்பது குறிப்பிட்டவொரு விடயத்திற்கு ஏற்புடையதான சட்டமொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. "உள்ளூர்ச் சட்டம்" ஒன்று இலங்கையிற் குறிப் பிட்ட பாகமொன்றுக்கு மட்டும் ஏற்புடையதான சட்டமொன்றாகும். "உள்ளூர்ச் சட்டம்"

41. "சட்டவிரோதம்", "சட்டவிரோதமாக" ஆகிய சொற்கள் தவறொன்றாகவிருக்கின்ற அல்லது சட்டத்தினால் தடுக்கப்பட்டதாக இருக்கின்ற அல்லது குடியியல் வழக்கொன்றுதொடுப்பதற் குக் காரணமாக விருக்கின்ற காரியம் ஒவ் வொன்றிற்கும் ஏற்புடையதாக விருக்கும். "சட்டவிரோதம்" "சட்டவிரோத மாக"

42. ஆளொருவர் அதனைச் செய்யாது விடுதல் அவருக்குச் சட்டவிரோதமாகவிருக்கும் எதனை யும் அவர் "சட்டப்படி செய்யக் கட்டுப்பட்டவர்" எனச் சொல்லப்படுவார். "சட்டப்படி செய்யக்கட்டுப் பட்டவர்"

43. "ஊறு" என்னுஞ் சொல்லானது எவரேனுமா ளுக்கு அவரது உடலில், உள்ளத்தில், புகழில் அல்லது ஆதனத்திற் சட்டவிரோதமாகச் செய் யப்படும் ஏதேனும் தீங்கினைக் குறிக்கும். "ஊறு"

44. "உயிர்" என்னுஞ் சொல்லானது சந்தர்ப்பத்தி லிருந்து முரணாகத் தோன்றினாலன்றி ஒரு மனித உயிரைக் குறிக்கும். "உயிர்"

45. "மரணம்" என்னுஞ் சொல்லானது சந்தர்ப்பத்தி லிருந்து முரணாக தோன்றினாலொழிய மனித மரண மொன்றினைக் குறிக்கும். "மரணம்"

46. "விலங்கு" என்னுஞ் சொல்லானது சந்தர்ப்பத்தி லிருந்து முரணாகத் தோன்றினாலொழிய, மனி "விலங்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிறவி யொன்றைத் தவிர்ந்த வேறு ஏதேனும் வாழும் உயிரினத்தைக் குறிக்கும்.

"கலம்"

47. "கலம்" என்னும் சொல்லானது மனிதப்பிறவி களை அல்லது ஆதனத்தை நீர்வழியாகக் கொண்டு செல்வதற்காகச் செய்யப்பட்ட எத னையும் குறிக்கும்.

"ஆண்டு மாதம்"

48. "ஆண்டு" என்னுஞ் சொல்லானது அல்லது "மாதம்" என்னுஞ் சொல்லானது பயன்படுத்தப் படும் இடமெல்லாம் அந்த ஆண்டு அல்லது மாதம் பஞ்சாங்கப்படி கணிக்கப்பட வேண்டு மென்று புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

"பிரிவு"

49. "பிரிவு" என்னுஞ்சொல் முன்வைக்கப்பட்ட எண் இலக்கங்களால் பகுத்தறியக்கூடிய, இச்சட்டக் கோவையின் அத்தியாயமொன்றின் பகுதிகளில் ஒன்றைக் குறிக்கும்.

"சத்தியம்"

50. "சத்தியம்" என்னுஞ் சொல்லானது சத்திய மொன்றுக்காகச் சட்டத்தினாற் பதிலீடு செய் யப்படும் பயபக்தியான உறுதியுரை ஒன்றினை யும் பகிரங்க ஊழியர் ஒருவர் முன்னிலையிற் செய்யப்படவேண்டுமென்று சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டதான அல்லது அதி காரமளிக்கப்பட்டதான அல்லது நீதிமன்றத்தில் சான்றுக்காக பயன்படுத்துவதற்கான அல்லது அவ்விதமல்லாததான ஏதேனும் வெளிப்படுத்த லையும் உள்ளடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. உரிய கவனமும் அவதானமுமின்றிச் செய்யப் பட்ட அல்லது நம்பப்பட்ட எதுவும், நல்லெண் ணத்துடன் செய்யப்பட்டதாக அல்லது நம்பப் பட்டதாகச் சொல்லப்படுவதில்லை. "நல்லெண்ணம்"

## அத்தியாயம் III

### தண்டனைகள் பற்றி

52. இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழ்த் தவறா ளர்கள் ஆளாகக்கூடிய தண்டனைகளாவன:- "தண்டனைகள்"

முதலாவதாக - மரணம்

இரண்டாவதாக - இருவகையினதான மறியற்தண்டனை அவையாவன:-

(அ) கடுழிய, அதாவது கடுமையான உடலுழைப்போடு கூடியது.

(ஆ) சாதாரணம்.

மூன்றாவதாக - சவுக்கடி

(நீக்கப்பட்டது) பி3,2005 இன்23.

நான்காவதாக - ஆதன இழப்பு.

ஐந்தாவதாக - குற்றப்பணம்.

53. நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் பதினெட்டு வயதிற்குட்பட்டவராய் இருக்கும் ஆளெவருக் கும் எதிராக மரண தண்டனை விதிக்கப்படு தலோ பதியப்படுதலோவாகாது. ஆனால் அத் தண்டனைக்கு பதிலாக அத்தகைய ஆளை ஜனாதிபதி விரும்பும் அத்தகைய காலத்திற் குத் தடுத்து வைக்கும்படி தண்டனை வழங்க லாம்.

பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆட்களுக்கு மரணதண்டனைக் குப் பதிலாகத் தடுத்துவைத்தல் தண்டனை. பி 2, 1980 இன் 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பமான பெண்ணுக்கு மரணதண்டனைக் குப் பதிலாக மறியற்றண்டனை.

**54.** குற்றவாளியாகக் காணப்படும் காலத்தில் குற்ற வியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை யின் 305ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்க கர்ப்பவதியாகக் காணப்படும் எவ ரேனும் பெண்ணுக்கெதிராக மரணதண்டனை விதிக்கப்படுதலோ பதியப்படு தலோவாகாது. ஆனால் அத்தண்டனைக்குப் பதிலாக நீதிமன்ற மானது அவளுக்கு ஆயுட்காலத்திற்கு அல்லது வேறு ஏதேனும் காலத்திற்கு இருவகையிலொரு வகை மறியற் தண்டனையை விதித்தல் வேண் டும்.

தண்டனையானது (சில சந்தர்ப்பங்களில்) முழுமையாக அல்லது சாதாரணமாக இருக்கலாம்.

**55.** தவறாளரொருவர் இருவகையிலொரு வகை யான தாயிருக்கக்கூடிய மறியற்தண்டனையால் தண்டிக்கப்பட வேண்டிய விடயமொவ்வொன்றி லும் அத்தகைய மறியற்தண்டனையானது முழு மையாகக் கடூழியமாக இருக்க வேண்டுமென்று அல்லது அத்தகைய மறியற்தண்டனையானது முழுமையாகச் சாதாரணமாக இருக்கவேண்டு மென்று அல்லது அத்தகைய மறியற்தண்ட னையின் ஏதேனும் பாகம் கடூழியமாகவும் எஞ் சியது சாதாரணமாகவும் இருக்கவேண்டுமென்று தீர்ப்பில் பணிப்பதற்கு தண்டனை விதிக்கும் நீதிமன்றம் தகுதி வாய்ந்ததாதல் வேண்டும்.

ஆதன இழப்புத் தண்டனை.

**56.** ஆளொருவர் தன் ஆதனம் முழுவதையும் இழந்து விடுவதற்காளாகக் கூடியதவறொன் றுக்கு குற்றவாளியாகக் காணப்படும் ஒவ்வொரு விடயத்திலும் அத்தவறாளர் தமக்குத் தீர்க்கப் பட்ட தண்டனையை அல்லது அதற்குப் பதிலாக மாற்றியமைக்கப்பட்ட தண்டனையை அனுப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கும்வரை, அல்லது அவர் மன்னிக்கப்படும் வரை அரசாங்கத்தின் நலனுக்காக வல்லாது அவர் ஏதேனும் ஆதனத்தைத் கொள்ளத் தகுதி யற்றவராதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*அரசாங்கத்துக்கெதிராக யுத்தஞ் செய்த தற்காகக் குற்றவாளியாகக் காணப்பட்டதால் "அ" என்பவர் தனது ஆதனமெல்லாவற் றையும் இழந்துவிடுவதற்காளாகிறார். தண்ட னைத் தீர்ப்புக் கூறப்பட்டதன் மேல் அது வலுவுடையதாயிருக்கும் காலத்தில் அந்த இழப்புத் தண்டனை இல்லாவிடின் "அ" வின் ஆதனமாக வரக்கூடிய சொத்தினை விட்டுவிட்டு "அ" வின் தகப்பனார் இறந்து விடுகிறார். அச்சொத்தானது அரசின் ஆதனமாகின்றது.*

**57.** நீக்கப்பட்டது பி3, 2005 இன் 23

**58.** நீக்கப்பட்டது பி3,1939 இன் 50

**59-66.** நீக்கப்பட்டது, பி2,1938 இன் 20

**67.** தவறாகும் எதுவும் பல பாகங்களைக் கொண்ட மைந்ததாயும் அப்பாகங்களில் ஏதேனும் ஒரு பாகம் அதுவே தவறொன்றாகவுமிருக்குமிடத்து அதற்கென்று அவ்விதம் வெளிப்படையாக ஏற் பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி தவறாளர் அவ

பல்வேறு தவறுகளினா லாக்கப்பட்ட தவறிற்கான தண்டனைக்கு எல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது அத்தகைய தவறுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகளுக்கான தண்டனையாற் தண்டிக்கப்படுதலாகாது.

தவறுகளை வரையறுக்கின்ற அல்லது தவறுகளுக்குத் தண்டனையளிக்கின்ற, அக்காலத்துக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் இரண்டு அல்லது அதற்கதிகமான வரைவிலக்கணங்களுக்குள் அமையக்கூடிய தவறொன்றாக ஏதாவதிருக்குமிடத்து, அல்லது

பல்வேறு செயல்களுள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைதானாக அல்லது தாமாகத் தவறென்றாகவும், கூடிநிற்கும்போது வேறொரு தவறாகவுமிருக்குமிடத்து,

தவறாளரை விளங்கும் நீதிமன்றம் அத்தகைய தவறுகளில் ஏதேனும் ஒன்றுக்குக் கொடுக்கக் கூடிய தண்டனையிலும் பார்க்க கடுமையான தண்டனையால் தவறாளர் தண்டிக்கப்படுதலாகாது.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) “அ” என்பவர் “க” என்பவருக்கு தடியொன்றினால் ஐம்பது அடிகள் அடிக்கின்றார். இங்கு மொத்தமான அடிகளினாலும் அம்முழு அடிகளையும் அமைவு செய்யும் ஒவ்வோர் அடியினாலும் “க” விற்கு எதிராக “அ” வேண்டுமென்று காயம் விளைவிக்கும் தவறொன்றைப் புரிந்தவர் ஆகலாம் “ஆ” ஒவ்வோர் அடிக்கும் தண்ட*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*னைக்குள்ளாதல் வேண்டுமெனின் ஒவ்வோர் அடிக்கும் ஆண்டொன்றாக ஐம்பது ஆண்டு களுக்கு அவர் மறியலில் வைக்கப்படக் கூடும். ஆனால் முழு அடிகளுக்குமாக அவர் ஒருதண்டனைக்கு மாத்திரம் ஆளா கிறார்.*

*(ஆ) ஆனால் "க"வை "அ" அடிக்கும் போது, "ஆ" என்பவர் அதில் தலையிட "அ" அடிக் கும் கருத்துடன் "ஆ"வை அடித்தால், "ஆ" விற்கு கொடுக்கப்பட்ட அடியானது "க" விற்கு "ஆ" வேண்மென்று காயம் விளை வித்த செயலின் ஒரு பாகமாகாது. "க" விற்கு வேண்மென்று காயம் விளைத்த தற்காக ஒரு தண்டனைக்கு "ஆ" விற்கு கொடுக்கப்பட்ட அடிக்காக இன்னொரு தண்டனைக்கும் "அ" ஆளாகிறார்.*

**67அ.** தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட தவறுகள் பலவற்றுள் ஒன்றுக்கு ஆளொருவர் குற்றவாளி எனவும் ஆனால் அத்தவறுகளில் எதற்கு அவ்வாள் குற்ற வாளி என்பது பற்றி ஐயம் உண்டு எனவும் தீர்ப்பளிக்கப்படும் எல்லா விடயங்களிலும் அதே தண்டனை எல்லாத் தவறுகளுக்கும் ஏற் பாடுகள் செய்யப்பட்டிராவிடின் மிகக் குறைந்த தண்டனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தவறுக் காகத் தவறாளர் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பல தவறுகளுள் ஒன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்ட ஆளொருவருக்கு அத்தவறுகளில் எதற்கு அவர் குற்றவாளி என்பதில் ஐய மேற்படுமிடத்துக் கொடுக்கப்பட வேண்டிய தண்டனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாண்டுகள் மறியற்றண்டனை யால் தண்டிக்கப் படக்கூடிய தவறொன்றுக்காக முன்னர் குற்றவாளியான ஆட்கள் குற்றவாளிகளாகக் காணப்படுகையில் உள்ள தண்டனை.

**68.** இச்சட்டக்கோவையில் XII ஆம் அல்லது XVII ஆம் அத்தியாயத்தின் கீழ் மூன்றாண்டுகளுக்கு அல்லது அதற்கு மேலான காலம் ஒன்றிற்கு இருவகையில் ஒரு வகை மறியற் தண்டனை யால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்ட எவரும் பின்னர் இவ் அத்தியாயங்களுக்குள் ஏதேனும் ஒன்றின் கீழ் அல்லது மூன்று ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேலான காலம் ஒன்றிற்கு இருவகை யில் ஒரு வகை மறியற்தண்டனையால் தண் டிக்கப்படக்கூடிய ஏதேனும் தவறுக்கு குற்ற வாளியானால் அத்தகைய அடுத்துவரும் தவறு ஒவ்வொன்றிற்கும் அவ்விதம் இல்லாது இருப் பின் அதே தவறிற்கு அவர் ஆளாகக்கூடிய தண்டனையிலும் பார்க்க இரு மடங்கிற்கு ஆளாதல் வேண்டும்.

பி3.2005இன்23

ஆயினும் அவர் எவ்வகையிலும் இருபது ஆண்டு களுக்கு மேற்பட்ட காலம் ஒன்றிற்கு மறிய லுக்கு ஆளாதல் ஆகாது.

## அத்தியாயம் IV

## பொது விதிவிலக்குகள்

ஒருசெயலைச் செய்யும்படி சட் டத்தில் கட்டுப்பட் டுள்ள அல்லது சட்டப் பிழையொன்று அல்லது நிகழ்வுப் பிழையினால்

**69.** அச்செயலைச் செய்வதற்கு சட்டத்தினால் கட் டுப்பட்டுள்ள அல்லது சட்டப்பிழை ஒன்றிலல் லாது நிகழ்வுப் பிழையொன்றினால் அதனைச் செய்ய சட்டத்தினை கட்டுப்பட்டதாகக் நல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெண்ணத்துடன் நம்பும் ஆளொருவரினால் செய்யப்படும் எதுவும் தவறொன்றாகாது.

கட்டுப்பட்டதாக நல்லெண்ணத்துடன் நம்பும் ஆளொருவரினாற் செய்யப்பட்ட செயல் .

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) சட்டஆணைகளுக்கு இணங்க தனது மேலுள்ளவர்களின் கட்டளைப்படி "ஆ" என்னும் போர் வீரர் ஒருவர் கலகக் கூட்ட மொன்றை நோக்கிச் சுடுகிறார். "அ" எவ்வித தவறையும் புரியவில்லை.*

*(ஆ) "அ" என்னும் நீதிமன்ற அலுவல ரொருவர் "க" என்பவரைக் கைதுசெய்யும் படி நீதிமன்றத்தினால் கட்டளை இடப் பட்டிருக்க உரிய விசாரணைக்குப் பின் "ங" என்பவரை "க"என நம்பி "ங"வை கைதுசெய்கிறார். "அ" எவ்வித தவறையும் புரியவில்லை.*

**70.** சட்டத்தினால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அல்லது தமக்கு கொடுக்கப்பட்டதாக அவர் நல்லெண்ணத்துடன் நம்பும் ஏதேனும் தத்து வத்தை பிரயோகிப்பதில், நீதிமுறையில் செய லாற்றும் பொழுது நீதிபதி ஒருவரினால் செய் யப்படும் எதுவும் தவறென்றாகாது.

நீதிமன்றில் செயலாற்றுகை யில் நீதிபதியின் செயல்.

**71.** நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பினை அல்லது கட்டளையினைப் பின்பற்றிச் செய்யப்பட்டது அல்லது தீர்ப்பினால் அல்லது கட்டளையினால் அதிகாரம் அளிக்கப்பட்ட எதுவும், அத்தகைய

நீதிமன்ற மொன்றின் தீர்ப் பினை அல்லது கட்டளையைப் பின் பற்றிச் செய்யப் பட்ட செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பு அல்லது கட்டளை வலுவுடையதாக இருக்கையிற் செய்யப்பட்டதாயின், அத்தகைய தீர்ப்பை அல்லது கட்டளையைச் செய்ய நீதிமன்றிற்கு நியாயாதிக்கம் இல்லாதிருப்பினும் கூட அச்செயலைச் செய்ய ஆள் அந்நீதிமன் றம் அத்தகைய நியாயாதிக்கத்தை உடையதா யிருந்ததென நல்லெண்ணத்துடன் நம்பியிருப் பின் தவறென்றாகாது.

சட்டமுறை நியாயமுள்ள நிகழ்வுப் பிழை காரணமாகத் தமக்கு அது சட்டமுறை நியா யமானதாகும் என நம்பும் ஆளொ ருவரினாற் செய் யப்பட்ட செயல்.

**72.** சட்டமுறை நியாயமுள்ள அல்லது சட்டப்பிழை யொன்றில் அல்லாது நிகழ்வுப்பிழை ஒன்றி னால் தமக்கு அது சட்டமுறை நியாயமான தாகும் என நல்லெண்ணத்துடன் நம்பும் ஆளொருவரினாலும் செய்யப்பட்டதெதுவும் தவ றென்றாகாது.

**எடுத்துக்காட்டு**

*கொலை என "அ" என்பவருக்குத் தோன் றும் செயல் ஒன்றினைக் "க" என்பவர் புரிவதனை "அ" காண்கிறார். கொலை காரரை கொலை செய்கையில் கைது செய்ய எல்லா ஆட்களுக்கும் சட்டம் கொடுக்கும் தத்துவத்தை நல்லெண்ணத் துடன் தனது மனத்துதித்த தீர்ப்பின்படி பிரயோகித்து, "க" வை உரிய அதிகாரி கள் முன்கொண்டு வருவதற்காக பிடித் துக்கொள்கிறார். அப்பொழுது தற்காப்பிற் காகவே "க" அங்ஙனம் செய்தாரெனப் பின்னர் தெரியவரக்கூடும் எனினும் "அ" தவறொன்றையும் செய்யவில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. சட்டப்படியான செயலொன்றைச் சட்டப்படியான முறையொன்றில் சட்டப்படியான வழிகளினால் முறையான கவனத்துடன் எச்சரிக்கையுடனும் செய்கையில் விபத்தினால் அல்லது துரதிட்ச வசத்தினாலும் குற்றக்கருத்து அல்லது அறிவு எதுவும் இன்றியும் செய்யப்படும் எதுவும் தவறென்றாகாது.

சட்டப்படியான செயலொன்றைச் செய்கையில் ஏற்படும் விபத்து.

**எடுத்துக்காட்டு**

*"அ" என்பவர் கைக்கோடரி ஒன்று கொண்டு வேலை செய்கிறார். கோடரி கழன்று பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மனிதன் ஒருவனை கொல்கிறது. முறையான எச்சரிக்கையுடன் "அ" வேலை செய்து கொண்டிருந்தாரெனில் அவரது செயல் மன்னிக்கப் படக்கூடியதாகும் தவறொன்றாகாது.*

74. தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற குற்றக் கருத்து எதுவுமின்றியும் ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கு நேரவிருக்கும் வேறு தீங்கினைத் தடுப்பதற்காக அல்லது விலக்குவதற்காக நல்லெண்ணத்துடன் எதுவேனும் செய்யப்படின், அது தீங்கு விளைவிக்கக்கூடும் என்ற அறிவுடன் செய்யப்பட்டதென்ற காரணத்தால் மட்டும் தவறென்றாகாது.

தீங்குவிளைவிக்கக்கூடிய, ஆனால் குற்றக் கருத்து இன்றியும் வேறு தீங்கினைத் தடுப்பதற்காகவுஞ் செய்யப்படும் செயல்.

விளக்கம் - அங்ஙனம் தடுக்கப்பட வேண்டிய அல்லது விலக்கப்பட வேண்டியிருந்த தீங்கானது தீங்கு விளைவிக்கக்கூடும் என்ற அறிவுடன் செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை மேற்கொள்ளும் அபாயத் தினை நியாயமானதாகும். அல்லது மன்னிக்கப்படக்கூடியதாக்கும் அத் தகைய இயல்பினதாயும் உடனடி யாக நிகழக்கூடியதாயும் உள்ளதா என்பது நிகழ்வு பற்றிய ஒரு பிரச் சினை ஆகும்.

**எடுத்துக்காட்டுக்கள்**

*(அ) நீராவிக்கலமொன்றின் தலைவரான "அ" என்பவர் தனது கலத்தின் திசையை மாற்றிவிட்டால் தனது கலத்தை நிறுத்த இயலும் முன்னர் இருபது அல்லது முப்பது பயணிகளைக் கொண்ட "ஆ" என்னும் படகினைக் கட்டாயமாக மோதிக் கவிழ்த்து விட வேண்டிய அத்தகைய நிலையில் இருப்பதாக திடீரென அவதானிக்கிறார். அவரிடம் தவறோ கவலையீனமோ கிடை யாது. ஆனால் கலத்தின் திசையை மாற்று வதனால் "இ" என்னும் இரு பயணிகளை மாத்திரம் கொண்ட மற்றொரு படகை அவர் மோதிக் கவிழ்த்துவிடும் ஆபத்து உண்டு எனவும், அத்தகைய மோதலை "அ" தவிர்த்துவிடவும் கூடும் எனவும் அவர் உணருகிறார். இங்கு "இ" என்ற படகை மோதிக்கவிழ்க்கும் எவ்வித கருத் தும் இன்றியும் "ஆ" என்ற படகில் உள்ள பயணிகளுக்கு நேரிடக்கூடிய அபாயத்தை விலக்கும் நோக்கத்திற்காகவும் நல்லெண் ணத்துடனும் "அ" தனது கலத்தின்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையை மாற்றினால் அங்ஙனம் விளைவை ஏற்படுத்தும் என தெரிந்து கொண்டு அச்செயலைச் செய்வதனால் "இ" என்ற படகை மோதிக் கவிழ்த்துவிட வும் கூடும் என்ற போதிலும் அவ்வாறு கவிழ்க்கும் அபாயத்தினை மேற்கொள்ள அவர் துணிந்ததற்கு அவர் விலக்கக் கருதிய அபாயத்தின் இயல்பு அவருக்கு மன்னிப்பு அளிக்கப் போதியதாகும் என நிகழ்வு அடிப்படையில் காணப்படுமாயின் அவர் செய்ததெதுவும் தவறென்றாகாது.

(ஆ) பெரிய தீ விபத்தொன்றின் போது "அ" என்பவர் தீ பரவுவதைத் தடுப்பதற் காக வீடுகளைப் பிடுங்கி விடுகிறார். இதை அவர் நல்லெண்ணத்துடனும் மனித உயிர் களை அல்லது ஆதனத்தை பாதுகாக் கும் கருத்துடனும் செய்கிறார். இங்கு தடுக்கப்படவேண்டிய தீங்கு, "அ"வின் செயலை மன்னிக்கக்கூடிய அத்தகைய செயல் இயல்பினதெனவும் உடனடியாக நிகழ்ந்திருக்கக் கூடியதெனவும் காணப் படுமாயின் "அ" அத்தவறிற்கு குற்றவாளி அல்ல.

**75.** எட்டு வயதிற்குட்பட்ட பிள்ளையொன்றினால் செய்யப்படும் எதுவும் தவறென்றாகாது.

எட்டுவயதுக்குட் பட்ட பிள்ளை யொன்றின் செயல்

**76.** எட்டு வயதிற்கு மேற்பட்டதும் 12 வயதிற்குட்பட் டதும் குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றில் தனது

எட்டு வயதுக்கு மேற்பட்டதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு வயதுக்குட்பட்டதுமான போதிய முதிர்ச்சி விளக்கமடையா பிள்ளையொன்றின் செயல்

நடத்தையின் தன்மையையும் விளைவினையும் சீர்தூக்கிப்பார்ப்பதற்குப் போதிய விளக்க முதிர்ச்சி அடையாததுமான பிள்ளையொன்றி னால் செய்யப்படுமெதுவும் தவறென்றாகாது.

சித்த சுவாதீனமற்ற ஆளொருவரின் செயல்.

**77.** செயலொன்றினைச் செய்யும்பொழுது சித்த சுவாதீனம் இன்மை காரணமாக அச்செயலின் தன்மையினை அல்லது தான் செய்வது பிழை யானது அல்லது சட்டத்திற்கு முரணானது என்பதினை அறிந்துகொள்ள இயலாத ஆளொ ருவரினால் செய்யப்படும் எதுவும், தவறென் றாகாது.

தனது விருப்பத்துக்கு மாறாக ஊட்டப்பட்ட மதுபோதை காரணமாக நிதானிக்க இயலாத நிலையிலுள்ள ஆளொருவரின் செயல்.

**78.** செயலொன்றினைச் செய்யும்பொழுது மது போதை காரணமாக அச்செயலின் தன்மை யினை அல்லது தான் செய்வது பிழையானது அல்லது சட்டத்திற்கு முரணானது என்பதை அறிந்து கொள்ள இயலாத ஆளொருவரினால் செய்யப்படும் எதுவும், தவறென்றாகாது.

ஆனால் அவருக்கு போதை உண்டாக்கிய பொருள் அவரது அறிவின்றி அல்லது அவரது விருப்பத்திற்கு எதிராக ஊட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

மதுபோதையுடைய ஒருவராற் புரியப்பட்ட குறிப்பிட்ட கருத்து அல்லது அறிவைத் தேவைப்படுத்தி நிற்கும் தவறு.

**79.** செய்யப்பட்ட செயல் ஒன்று குறிப்பிட்டதோர் அறிவுடன் அல்லது கருத்துடன் செய்யப்பட்டா லன்றி தவறென்றாகாத இடங்களில் மது போதை நிலையில் அச்செயலை செய்யும் ஆளொருவர் அவரை மதுபோதைக்கு உட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திய பொருள் அவரது அறிவின்றி அல்லது அவரது விருப்பத்திற்கு எதிராக ஊட்டப்பட்டதாக இருந்தாலன்றி அவர் மது போதைக்குட்படாது இருந்திருப்பின் அவர் உடையவராயிருக்கக்கூடிய அதே அறிவினை உடையவராய் இருந்தால் போன்று அவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்குரியவராதல் வேண்டும்.

**80.** மரணத்தை அல்லது கடும் காயத்தை விளைக்கக் கருதாதும் மரணம் அல்லது கடும் காயம் விளையக் கூடும் எனச்செய்தவர் அறியாததுமான செயலெதுவும் அத்தகைய தீங்கினை அனுபவிக்க வெளிப்படையாக அல்லது உட்கிடையாகச் சம்மதம் அளித்துள்ள பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட எவரேனும் ஆளுக்கு அது ஏற்படுத்தக் கூடிய அல்லது செய்பவரால் ஏற்படுத்தக் கருதப்பட்ட ஏதேனும் தீங்கின் காரணத்தால், அல்லது அத்தகைய தீங்கின் அபாயத்தை மேற்கொள்ளச் சம்மதமளித்த எவரேனுமத்தகைய ஆளுக்கு ஏற்படக்கூடுமெனச் செய்பவரால் அறியப்பட்ட ஏதேனும் தீங்கின் காரணத்தால் தவறொன்றாகாது.

மரணத்தை அல்லது கடும் காயத்தை விளைக்கும் கருத்தேதுமின்றியும் அங்ஙனம் விளையக் கூடுமென அறியாமலும் சம்மதத்துடன் செய்யப்பட்ட செயல்.

**எடுத்துக்காட்டு**

*பொழுதுபோக்குக்காக ஒருவரொடொருவர் வாட்சிலம்பம் விளையாடுவதற்கு "அ" என்பவரும் "ஆ" என்பவரும் உடன்படுகின்றனர் அத்தகைய வாட்சிலம்ப விளையாட்டின் போது முறைகேடெதுவுமின்றி விளையக்கூடிய எத்தகைய தீங்கினையும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தாமே அனுபவித்துக் கொள்வதற்கு ஒவ் வொருவரும் சம்மதிக்கின்றனர் என்பது இவ்வுடன்பாட்டின் உட்பொருள். நேர்மையாக விளையாடும் பொழுது "ஆ" வுக்கு "அ" காயம் விளைப்பின், "அ" எவ்விதத் தவ றும் புரியவில்லை.*

மரணம் விளைவிக்க வேண்டுமென்ற கருத்தின்றி ஆளொருவரின் நன்மைக்காக நல்லெண்ணத் துடன் சம்மதத்தோடு செய்யப்பட்ட செயல்.

**81.** மரணத்தை விளைக்க கருதப்படாதெதுவும் எவரேனுமாளின் நன்மைக்காக நல்லெண்ணத் துடன் அது செய்யப்படுவதுமல்லாமல் அந்தத் தீங்கினை அவர் அனுபவிக்க அல்லது அந்தத் தீங்கின் அபாயத்தினை மேற்கொள்ள வெளிப் படையாக அல்லது உட்கிடையாக சம்மதம் தந்துள்ளவருமான அவ்வாளுக்கு அது ஏற்படுத் தக்கூடிய, அல்லது செய்பவரால் ஏற்படுத்த கருதப்பட்ட அல்லது ஏற்படக்கூடும் எனச் செய் பவரால் அறியப்படக்கூடிய ஏதேனும் தீங்கின் காரணத்தால் தவறொன்றாகாது.

**எடுத்துக்காட்டு**

*மிக்க வருத்தத்தினையளிக்கும் நோய் ஒன்றினால் வருந்துகின்ற "க" என்பவ ருக்கு குறிப்பிட்டோர் அறுவைச்சிகிச்சை மரணத்தை விளைக்கக்கூடுமென்பதைத் தெரிந்துகொண்டு, ஆனால் "க" வுக்கு மரணத்தை விளைவிக்கும் கருத்தின்றி நல்லெண்ணத்துடன் "க" வின் நன்மையை கருதி "த" வின் சம்மதத்தோடு "அ" என்ற மருத்துவர் "க" வுக்கு அறுவைச்சிகிச்சை செய்கிறார் "அ" தவறெதும் புரியவில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட அல்லது சித்த சுவாதீனமற்ற ஆளொருவரின் நன்மைக்காக நல்லெண்ணத்துடன் அவரது பாதுகாவலரால் அல்லது அவ்வாளைச் சட்டப்படி பொறுப்பில் வைத்திருப்பவரான வேறு ஆளினால் அல்லது அப்பாதுகாவலரின் அல்லது அவ்வாளைச் சட்டப்படி பொறுப்பில் வைத்திருப்பவரான வேறு ஆளின் வெளிப்படையான அல்லது உட்கிடையான சம்மதத்துடன் செய்யப்பட்ட ஏதும் அது அவ்வாளுக்கு ஏற்படுத்தக் கூடிய அல்லது செய்பவரால் ஏற்படுத்தக் கருதப்பட்ட அல்லது ஏற்படக்கூடும் எனச் செய்பவரால் அறியக்கூடிய ஏதேனும் தீங்கின் காரணமாகத் தவறொன்றாகாது. ஆயினும்:-

ஒரு பிள்ளையின் அல்லது சித்தசுவாதீன மற்ற ஆளொருவரின் நன்மைக்காக நல்லெண்ணத்துடன் பாதுகாவலரால் அல்லது பாதுகாவலரின் சம்மதத்துடன் செய்யப்பட்ட செயல்.

முதலாவதாக - இவ்விதிவிலக்கானது கருத்துடன் மரணத்தை விளைவிப்பதற்கு அல்லது மரணத்தை விளைவிக்க எத்தனிப்பதற்கு விரிவுபடுத்தலாகாது.

இரண்டாவதாக - இவ் விதிவிலக்கானது மரணம் ஏற்படுவதை அல்லது கடும் காயம் நேருவதைத் தடுத்தல் அல்லது கடும் நோய் அல்லது பலக்குறைவு எதனையும் போக்குதல் ஆகியன வல்லாத வேறு ஏதேனும் நோக்கத்திற்காக அதனால் நாம் மரணம் விளைவிக்கக்கூடும் என அதைச் செய்பவர் அறிந்து கொண்டு செய்யும் எந்தச் செயலுக்கும் விரிவுபடுத்தப்படுத்தலாகாது.

மூன்றாவதாக - இவ்விதிவிலக்கானது மரணம் அல்லது கடும் காயம் நேருவதை தடுப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது கடும் நோயினை அல்லது பலக் குறைவு எதனையும் போக்குதல் என்பவற்றிற் காகவில்லாவிடின் வேறு ஏதேனும் நோக்கத் திற்காக வேண்டும் என்றே கடும் காயம் விளைப் பதற்கு அல்லது கடும் காயம் விளைவிக்க எத்தனிப்பதற்கு விரிவு படுத்தலாகாது

நான்காவது - இவ்விதிவிலக்கானது எத்தவறினைப் புரிவதற்கு இவ்விதிவிலக்கு ஏற்புடையதாகாதோ அத்தவறைப்புரிய உடந்தையளிப்பதற்கும் ஏற்புடையதாகாது.

**எடுத்துக்காட்டு**

*அறுவைச்சிகிச்சையினால் தனது பிள் ளைக்கு மரணம் விளையக்கூடும் என அறிந்து கொண்டு ஆனால் பிள்ளைக்கு மரணம் விளைவிக்கும் எவ்வித கருத்தும் இன்றி நல்லெண்ணத்துடன் தனது பிள்ளை யின் நன்மைக்காக அதன் சம்மதமின்றி அறுவை மருத்துவரொருவரைக் கொண்டு "அ" என்பவர் தனது பிள்ளைக்கு கல் லடைப்பை நீக்குவதற்காக அறுவைச் சிகிச்சை அளிப்பிக்கின்றார். அப்பிள்ளையை குணமாக்குவதை அவரது நோக்கமாய் இருக்கும் அளவில் "அ" விதிவிலக்கிற் குட்பட்டவராவார்.*

பயத்தினால் அல்லது பிழையான

**83.** ஊறு விளையக்கூடும் என்ற பயத்தினால் அல் லது நிகழ்வு பற்றிய பிழையான விளக்கத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் ஆளொருவரினால் சம்மதம் கொடுக்கப் படுவதோடு அச்சம்மதம் அத்தகைய பயத்தின் விளைவாக அல்லது பிழையான விளக்கத்தின் விளைவாகக் கொடுக்கப்பட்ட தென்பதனை அச்செயலைச் செய்பவர் அறிந்திருந்தால்

விளக்கத்தில் கொடுக்கப்பட்ட தாகத் தெரியும் சம்மதம்.

அல்லது அவ்வாறு அவர் நம்புவதற்கு நியாயம் இருந்தால் அல்லது தான் எதற்குச் சம்மதம ளிக்கிறார் என அதன் தன்மையினையும் விளை வினையும் விளங்கிக் கொள்வதற்கு சித்தசுவா தீனம் இன்மை அல்லது மதுபோதை காரண மாக இயலாது இருக்கும் ஆளொருவரால் சம் மதம் கொடுக்கப்படின் அல்லது சந்தர்ப்பத்தி லிருந்து முரணாக ஏதேனும் தோன்றினால் அன்றி 12 வயதுக்குட்பட்ட ஆளொருவரினால் சம்மதம் கொடுக்கப்படின் அச்சம்மதமானது இச்சட்டக்கோவையின் ஏதேனும் பிரிவினால் கருதப்படும் அத்தகைய சம்மதமொன்றல்ல.

பிள்ளை யினுடைய அல்லது சித்த சுவாதீன மற்ற ஆளொரு வரின் சம்மதம்.

**84.** சம்மதம் கொடுத்தாளுக்கு அல்லது சம்மதம் எவர் சார்பில் கொடுக்கப்பட்டதோ அவருக்கு அதனால் விளையக்கூடிய அல்லது விளைக்கக் கருதப்பட்ட அல்லது விளையக்கூடும் என அறியப் பட்ட ஏதேனும் தீங்கினை சாராத தனி வேறான தவறுகளாகவுள்ள செயல்களுக்கு 80, 81, 82ம் பிரிவிலுள்ள விதிவிலக்குகள் விரிவுபடா.

சம்மதம் கொடுத்த ஆளுக்கு விளைக்கப்படும் எத்தீங்கினையும் சாராது தனிவேறான தவறுகளா கவுள்ள செயல்கள் 80,81,82 ஆம் பிரிவுகளிலுள்ள விதிவிலக்குகளுக்கு உட்படாமை

**எடுத்துக்காட்டு**

*(பெண்ணின் உயிரைக் காப்பாற்றும் நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டாலன்றிக்) கருச்சிதைவு ஏற் படுத்துவது அப்பெண்ணிற்கு அதனால் விளையக்கூடிய அல்லது விளையும் எனக் கருதப்பட்ட ஏதேனும் தீங்கினை சாராத தனி வேறானதொருதவறாகும். எனவே அது "அத்தகைய தீங்கு காரண மாக" தவறென்றன்று அத்துடன் அத்த கைய கருச்சிதைவு ஏற்படுவதற்கான பெண்ணின் அல்லது அவளின் பாதுகாவ லரின் சம்மதம் அச்செயலினை நீதியான தாக்காது.

ஆளொருவரின் நன்மைக்காக அவரின் சம்மதமின்றி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்

**85.** ஆளொருவருடைய நன்மைக்காக அவருடைய சம்மதம் கூடப் பெறாமல் செய்யப்பட்ட எச் செயலும், அவ்வாள் தனது சம்மதத்தை தெரி விப்பதற்கு முடியாத வகையில் சந்தர்ப்பங்கள் இருப்பின் அல்லது அவ்வாள் சம்மதம் கொடுக்க இயலாத வராயின் நன்மையளிக்கும் வகையில் அச்செயலைச் செய்வதற்கு உரிய காலத்தில் சம்மதம் பெறக்கூடிய முறையில் அவருக்கு பாதுகாவலர் அல்லது அவருக்குச் சட்டப்படி பொறுப்புடையவர் இல்லாமல் இருப்பின், அச்செயலினால் விளையக்கூடிய ஏதேனும் தீங்கு காரணமாக, தவறொன்றாகாது.

ஆயினும் -

முதலாவதாக - இவ்விதிவிலக்கானது கருத் துடன் மரணத்தை விளைவிப்பதற்கு அல்லது மர ணத்தை விளைவிக்க எத்தனிப்பதற்கு, விரிவு படுத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக - இவ்விதிவிலக்கானது மரணம் ஏற்படுவதை அல்லது கடும்காயம் நேருவதை தடுத்தல் அல்லது கடும் நோய் அல்லது பலக்குறைவு எதனையும் போக்குதல் ஆகியனவல்லாத வேறு ஏதேனும் நோக்கத்திற்காக அதனால் தான் மரணம் விளைவிக்கக்கூடும் என அதைச் செய்பவர் அறிந்து கொண்டு செய்யும் எச்செயலிற்கும், விரிவுபடுத்தலாகாது.

மூன்றாவதாக - இவ்விதிவிலக்கானது மரணம் அல்லது காயம் நேருவதைத் தடுப்பது தவிர்ந்த வேறு ஏதேனும் நோக்கத்திற்காக வேண்டும் என்றே காயத்தினை விளைவிப்பதற்கு அல்லது காயத்தினை விளைக்க எத்தனிப்பதற்கு விரிவுபடுத்தலாகாது.

நான்காவதாக - இவ்விதிவிலக்கானது எத்தவறினைப் புரிவதற்கு இவ்விதிவிலக்கு ஏற்புடையதாகாதோ அத்தவறைப் புரிய உடந்தையளிப்பதற்கும் ஏற்புடையதாகாது.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) "க"என்பவர் தனது குதிரையில் இருந்து தூக்கியெறியப்பட்டு உணர்வற்றுக்கிடக்கிறார். "அ" என்னும் அறுவை மருத்துவரொருவர் "க"வின் மண்டையோட்டில் துளையிட்டு பரிசோதனை செய்வதவசியம் எனக் காண்கிறார்."க" தனது நிதானிக்கும் ஆற்றலையடைய முன்னர் "அ", "க", விற்கு மரணம் விளைவிக்கவேண்டுமென்ற கருத்தின்றி நல்லெண்ணத்துடன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"க" வின் நன்மைக்காக அவரது மண்டையோட்டில் துளையிட்டு சிகிச்சையளிக்கிறார். "அ" தவறெதுவும் புரியவில்லை.

(ஆ) கரடியொன்றினால் "க" தாக்கப்படுகிறார். தமது செயல் "க" வைக் கொலை செய்யவும் கூடுமென்பதனையும் அறிந்து கொண்டு ஆனால் "க" வைக் கொலை செய்யும் கருத்தின்றி "க"வின் நன்மைக்காக நல்லெண்ணத்துடன் "அ" கரடியை நோக்கி சுடுகிறார். "அ"வினுடைய குண்டு "க" வுக்கு மரணம் தரக்கூடிய காயத்தை விளைவிக்கிறது. "அ" தவறு எதுவும் புரியவில்லை.

(இ) அறுவைச்சிகிச்சையொன்று உடனடியாக அளிக்கப்படாவிடின் மரணம் ஏற்படக் கூடிய விபத்திலேற்பட்ட காயத்தினால் பிள்ளையொன்று வருந்துவதை "அ" என்னும் அறுவை மருத்துவர் காண்கிறார். அப்பிள்ளையின் உடைய பாதுகாவலருக்கு விண்ணப்பிக்க போதிய நேரமில்லை பிள்ளையினுடைய நன்மைக்காக நல்லெண்ணத்துடன் பிள்ளையினுடைய கெஞ்சுதல்களையும் பொருட்படுத்தாமல் "அ" அறுவைச் சிகிச்சையொன்றை அளிக்கிறார். "அ" தவறெதுவும் புரியவில்லை.

(ஈ) தீப்பற்றி எரியும் வீடொன்றில் "க" என்னும் பிள்ளையொன்றுடன் "அ" நின்று கொண்டிருக்கிறார். கீழே மக்கள் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கம்பளத்தை விரித்துப் பிடிக்கின்றனர். பிள்ளையை அவ்வாறு போடுவதால் பிள்ளை கொல்லப்படவும் கூடுமென்பதனையும் அறிந்துகொண்டு ஆனால் பிள்ளையைக் கொல்லும் எவ்வித கருத்துமின்றி அப்பிள்ளையின் நன்மைக்காக நல்லெண்ணத்துடன் "அ" அப்பிள்ளையை மேல் வீட்டிலிருந்து கீழே போடுகிறார். இங்கு அங்ஙனம் விழுந்ததனால் அப்பிள்ளை கொல்லப்பட்டாலும் கூட "அ" தவறெதுவும் புரியவில்லை.*

விளக்கம் : பணநன்மை மட்டும் 81,82,85 ஆகிய பிரிவுகளின் கருத்துப்படி நன்மைகளாகா.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

**86.** நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செய்தி அறிவிப்பெதுவும் அதுசெய்யப்பட்ட அவ்வாளின் நன்மைக்காகச் செய்யப்பட்டிருத்தல் அதனால் அவ்வாளுக்கு ஏற்பட்ட ஏதேனும் தீங்கு காரணமாகத் தவறொன்றாகாது. நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செய்தி அறிவிப்பு.

**எடுத்துக்காட்டு**

*"அ" என்னும் அறுவை மருத்துவர் ஒருவர் நோயாளி ஒருவருக்கு அவர் வாழமுடியாது என்ற தனது அபிப்பிராயத்தை நல்லெண்ணத்துடன் அறிவிக்கிறார். இதனால் ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாக நோயாளி இறக்கிறார். அத்தகைய செய்தி தொடர்பு நோயாளிக்கு மரணத்தினை ஏற்படுத்தலாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்பதை அவர் அறிந்திருந்த போதிலும், "அ" தவறு எதுவும் புரியவில்லை.*

பயமுறுத்தல் களினால் ஆளொருவரைக் கட்டாயப்படுத்திச் செய்விக்கப்பட்ட செயல்

**87.** மரணதண்டனையினை தண்டிக்கப்படக்கூடிய கொலை, அரசுக்கெதிரான தவறுகள் என்பன வற்றைத் தவிர, பயமுறுத்தல்களினால் அதனைச் செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்ட ஆண் ஒருவரினால் செய்யப்பட்டதும், அதனைச் செய்த நேரத்தில் அதனை செய்யாதுவிட்டால் அவ்வாளுக்கு உடனடியாக மரணம் விளையும் என்ற பயத்தை நியாயமாக ஏற்படுத்தக்கூடியதுமான செயல் எதுவும் தவறொன்றாகாது. ஆயினும் அத்தகைய கட்டாயப்படுத்தலுக்கு தம்மையுள்ளாக்கி கொண்ட சூழ்நிலையில் அச்செயலைப் புரியும் ஆள் வேறு தீங்கு தனக்கு ஏற்படுமென்ற நியாயமான பயத்தின் காரணமாக தம்மை உட்படுத்தியிருத்தல் ஆகாது.

விளக்கம் 1: தாக்க, அல்லது அடிக்கப்படுவார் என்ற பயமுறுத்தல் ஒன்றின் காரணமாக வலிந்து வீடுபுகுவோர் கூட்டம் ஒன்றுடன், அவர்களின் பண்பினை அறிந்துகொண்டு, சேர்ந்துகொள்ளும், ஆளொருவர் சட்டத்தின்படி தவறாக உள்ள எதனையும் செய்ய தனது கூட்டாளிகளினால் கட்டாயப்படுத்தப்பட்டார் என்ற காரணத்தின் மீது, இவ்விதிவிலக்கின் நன்மைக்கு உரித்துடையவர் ஆகார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் 2: வலிந்து வீடுபுகுவோர் கூட்டம் ஒன்றினால் பிடிக்கப்பட்டு உடனடி யாக மரணப்பயமுறுத்தலின் மீது சட்டத்தினால் தவறொன்றாகவுள்ள விடயம் ஒன்றை செய்யும்படி கட் டாயப்படுத்தப்பட்ட ஆளொருவர் உதாரணமாக, வலிந்து வீடுபுகுப வர் நுளைந்து கொள்ளையடிப் பதற்காக, அவர் கருவிகளை கொண்டு அவ்வீட்டின் கதவினை உடைத்து திறக்குமாறு கட்டாயப் படுத்தப்பட்ட கொல்லர் ஒருவர் இவ்விதிவிலக்கினால் பயனடைவ தற்கு உரித்துடையவர் ஆவார்.

**88.** சாதாரணமான உணர்வும் குணவியல்பும் உடைய ஆளொருவர் அத்தகைய தீங்கு பற்றி முறையிடமாட்டாத அளவு அத்தீங்கு மிகவும் அற்பனாக விருப்பின், அத்தகைய தீங்கினை விளைவித்த எச்செயலும், ஏதாவது ஒரு தீங் கினை விளைவிக்கிறது, அல்லது விளைவிக்க கருதப்பட்டது. அல்லது விளைவிக்க கூடுமென அறியப்பட்டது என்ற காரணத்தினால் தவ றொன்றாகாது.

அற்ப தீங்கினை விளைவிக்கும் செயல்.

### தற்காப்பு உரிமை பற்றியது.

**89.** தற்காப்புரிமையைப் பிரயோகிப்பதில் செய்யப் படுமெதுவும். தவறாகாது.

தற்காப்புக்காகச் செய்யப்பட்ட தெதுவும் தவறாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலையும் ஆதனத்தையும் காப்பதற்காக தற்காப்புரிமை.

**90.** ஆளொவ்வொருவரும், 92ம் பிரிவில் அடங்கி யுள்ள மட்டுப்படுத்தல்களுக்கமைய -

முதலாவதாக - மனித உடலைப்பாதிக்கும் ஏதேனும் தவறுக்கெதிராக தனது சொந்த உடலையும் வேறு எவரேனும் ஆளின் உடலையும் காப்பதற்கு:

இரண்டாவதாக - திருட்டு கொள்ளை, சொத் தழிவு, அல்லது குற்ற அத்து மீறுகை ஆகியவற்றின் வரை விலக்கணத்தி னுள் அடங்குகின்ற தவறொன்றாகவும், ஏதேனும் செயலுக்கு எதிராகவும் அல் லது திருட்டு, கொள்ளை, சொத்தழிவு, அல்லது குற்றமான அத்துமீறுகை யைப் புரிய எத்தணிக்கும் ஏதேனும் செயலுக்கெதிராக தன்னுடைய அல் லது வேறு எவரேனும் ஆளினது ஆத னத்தை அசைவற்றதாயினும்சரி அசைவுள்ளதாயினும் சரி காப்பதற்கு உரிமையுடையவராவர்.

சித்தசுவாதீன மற்றவர் முதலிய ஆட்களின் செயலுக் கெதிரான தற்காப்புரிமை.

**91.** வேறு சந்தர்ப்பங்களிலாயின் குறிப்பிட்ட தவ றொன்றாகக் கூடிய செயல் ஒன்று, அச்செய லைச் செய்யும் ஆளின் இளமை, விளக்க முதிர்ச்சியின்மை, சித்தசுவாதீனமின்மை, மது போதை காரணமாக அல்லது அவ்வாளின் ஏதேனும் பிழையான விளக்கம் காரணமாக, அது தவறாகாதிருக்குமிடத்து அச்செயல் தவ றாய் இருந்திருப்பின் அச்செயலுக்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாளுக் கிருக்கக்கூடியதான, அதே தற்காப்பு உரிமையினை ஒவ்வோர் ஆளும் உடையர்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) "க" என்பவர் பைத்தியத்தின் வசப்பட்டு, "அ" என்பவரைக் கொல்ல எத்தனிக்கின்றார்: "க" எத்தவறுக்கும் குற்றப்பொறுப்புடையவரல்லர்:"க" சித்தசுவாதீன முடையவராயிருந்தால் "அ"வுக்கு இருக்கக்கூடிய அதே தற்காப்புரிமையை உடையர்.*

*(ஆ) தான் புகுவதற்குச் சட்டப்படியுரிமையுள்ள ஒரு வீட்டில் "அ" இரவில் புகுகிறார் "க" நல்லெண்ணத்துடன், "அ"வை வலிந்து வீடுபுகுவோர் என எண்ணித் தாக்குகிறார். இப்பிழையான விளக்கத்தினால் 'அ" வை தாக்கு வதனால் "க" தவறெதுவும் புரியவில்லை எனினும் "க" அத்தவறான விளக்கத்தின் கீழ்ச் செயலாற்றாதிருந்திருப்பின் "க" விற்கு எதிராக "அ"விற்கு இருக்கக்கூடிய அதே தற்காப்புரிமையை அவர் உடையர்.*

**92.** (1) மரணம் ஏற்படும் அல்லது கடுங்காயம் ஏற்படும் என்ற பயத்தினை நியாயமான அளவில் ஏற்படுத்தாத செயலொன்று, தமது (1) உத்தியோக போர்வையின் கீழ் (2) நல்லெண்ணத்துடன் செயலாற்றும் (3) பகிரங்க ஊழியரொருவரால் செய்யப்படின் அல்லது எத்தனிக்கப்படின், அவற்றிற் கெதிராக தற்காப் புரிமையிலாச் செயல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்செயல் சட்டத்தினால் கண்டிப்பாக நீதியானதாக்கப்படக் கூடாததாயினும் அச்செயலுக்கெதிராக தற்காப்புரிமை கிடையாது.

(2) மரணம் ஏற்படும் அல்லது கடுங்காயம் ஏற்படும் என்ற பயத்தினை நியாயமான அளவில் ஏற்படுத்தாத செயல்லொன்று, தமது உத்தி யோக போர்வையின் கீழ் நல்லெண்ணத்துடன் செயலாற்றும் பகி ரங்க ஊழியர் ஒருவரின் பணிப்பின் கீழ்ச் செய்யப்படின் அல்லது எத்தனிக்கப்படின், அப்பணிப்பு சட்டத்தினால் கண்டிப்பாக நீதியானதாக்கப்படக் கூடாதாயினும், அச்செயலுக்கெதிராகத் தற்காப்புரிமை கிடையாது.

(3) பகிரங்க அதிகாரிகளின் பாதுகாப்பினை நாடுவதற்கு நேரம் (அவகாசம்) உள்ள விடயங்களில், தற்காப்புரிமை கிடை யாது.

உரிமையைப் பிரயோகிக்கக் கூடிய அளவு

(4) எச்சந்தர்ப்பத்திலும் பாதுகாப்புக்குத் தேவையான தீங்கிலும் கூடுதலான தீங் கினை உண்டாக்குவதற்குப் பாதுகாப்பு ரிமை விரிவுடையதாகாது.

விளக்கம்: 1. பகிரங்க ஊழியம் என்ற வகை யில் பகிரங்க ஊழியர் ஒருவரால் செய் யப்பட்ட அல்லது செய்ய எத்தனிக்கப் பட்ட செயலெதற்கும் எதிராக ஆள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்க்குள்ள தற்காப்புரிமை அச்செயலைச் செய்யும் ஆள் அத்தகைய பகிரங்க ஊழியர் என அவர் அறிந்திருந்தலன்றி அல்லது நம்புவதற்கு நியாயமிருந்தாலன்றி அற்றவராகார்.

விளக்கம்: 2. பகிரங்க ஊழியர் ஒருவரின் பணிப்பின் மீது செய்யப்பட்ட அல்லது செய்ய எத்தனிக்கப்பட்ட செயலொன்றுக்கெதிராக ஆள் ஒருவருக்குள் தற்காப்புரிமை, அத்தகைய செயலைச் செய்யும் ஆள் அத்தகைய பணிப்பின் கீழ் செயலாற்றியுள்ளார் என அவர் அறிந்திருந்தலன்றி அல்லது அவர் நம்புவதற்கு நியாயமிருந்தாலன்றி அல்லது எவ்வதிகாரத்தின் கீழ் அவர் செயலாற்றுகிறார் என அவர் கூறினால் அன்றி, அல்லது அதிகாரத்தை எழுத்தீலுடையவரானால் அத்தகைய அதிகாரத்தினை கேட்கப்படின் காண்பித்தாலன்றி அற்றவராகார்.

**93.** உடலைப் பாதுகாக்கும் தற்காப்புரிமையானது கடைசியாக முற்போந்த பிரிவில் குறிப்பிடப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைய அவ்வித உரிமையைப் பிரயோகிக்கச் சந்தர்ப்பம் அளிக்கும் தவறானது இதனகத்துப் பின்னர் எண்ணிட்டுக் கூறப்பட்ட விவரணங்களுள் எதனையேனும் உடையதாயின் தாக்கியவருக்கு விரிவுடையது.

உடலைப் பாதுகாக்கும் தற்காப் புரிமை எப்பொழுது மரணத்தை விளைத்தற்கு விரிவுபடும்.

முதலாவதாக - காப்புரிமை பயன்படுத்தப் படாவிடில் அத் தகைய தாக்குதலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவு மரணத்தை ஏற்படுத்தும் என்ற பயத்தினை நியாயமான அள வில் ஏற்படுத்தக்கூடிய அத்தகைய தாக்குதல்.

இரண்டாவதாக - அவ்விதமில்லாவிடில் அத் தகைய தாக்குதலில் விளைவு கடும் காயத்தை ஏற்படுத்தும் என்ற பயத் தினை நியாயமான அளவில் ஏற்படுத் தக்கூடிய அத்தகைய தாக்குதல்.

மூன்றாவதாக - வன்புணர்ச்சி புரியும் கருத் துடன் தாக்குதல்

நான்காவதாக - இயற்கைக்கு விரோதமாக காமவேட்கை தணிக்கும் கருத்துடன் தாக்குதல்.

ஐந்தாவதாக - ஆட்கவரும் அல்லது ஆட் கடத்தும் கருத்துடன் தாக்குதல்.

ஆறாவதாக - தமது விடுதலைக்காகப் பகி ரங்க அதிகாரிகளை நாடுவதற்குத் தமக்கு இயலாதிருக்கும் என்ற பயத் தினை நியாயமான அளவில் ஏற் படுத்தக்கூடிய அத்தகைய சூழ் நிலை களில் ஆளொருவரை முறை கேடாக அடைத்து வைக்கும் கருத்துடனான தாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. கடைசியாக முற்போந்த பிரிவில் எண்ணிட்டுக் குறிப்பிட்ட விவரணங்களுள் எதனையும் தவறு கொண்டதாயிராத விடத்து, தாக்குநருக்கு வேண்டுமென்று மரணம் விளைவிக்கும் அளவுக்கு உடற்காப்புத் தற்காப்புரிமை விரிவுள்ளதாகாது, ஆனால் 92ம் பிரிவில் குறிப்பிடப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைய தாக்குனருக்கு மரணந் தவிர்ந்த வேறு தீங்கினை வேண்டுமென்று விளைவிக்கும் அளவிற்கு விரிவுபடும்.

மரணம் தவிர்ந்த வேறேதேனும் தீங்கினை விளைக்கும் அளவுக்கு அத்தகைய உரிமை எப்பொழுது விரிவுபடும்.

95. உடற்காப்புத் தற்காப்புரிமை, தவறினைப் புரிவதற்கான எத்தனத்திலிருந்து அல்லது புரிவதற்கான அச்சுறுத்தலிலிருந்து உடலுக்கு அபாயம் ஏற்படும் என்று நியாயமான பயம் தோன்றியவுடன், அத்தவறு புரியப்படாவிடினுங்கூடத் தொடங்குகின்றது. உடலின் அபாயம் பற்றிய அத்தகைய பயம் தொடர்ந்திருந்துவரும் வரை அதுவும் தொடர்ந்திருந்துவரும்.

உடற்காப்புத் தற்காப்புரிமை தொடங்குதலும் தொடர்ந்திருந்து வருதலும்.

96. ஆதனத்தைப் பாதுகாக்கும் தற்காப்புரிமை 92ம் பிரிவில் குறிப்பிடப்பட்ட மட்டுப்பாடுகளுக்கமைய, எத்தவறைப் புரிதல் அல்லது புரிய எத்தனித்தல் அவ்வித உரிமையைப் பிரயோகிக்கச் சந்தர்ப்பம் அளித்ததோ அத்தவறு இதனகத்துப் பின்னர் எண்ணிட்டுக்கூறப்பட்ட விவரணங்களுள் எதனையேனும் உடையதாயின் தீங்கிளைத்தவருக்கு வேண்டுமென்றே மரணத்தை அல்லது வேறு ஏதேனும் தீங்கை விளைவித்தற்கு விரிவானதாகும்.

ஆதனத்தைப் பாதுகாக்கும் காப்புரிமை எப்பொழுது ஆதனத்தை பாதுகாத்தற்கு விரிவுபடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக - கொள்ளை.

இரண்டாவது - இரவில் வலிந்து வீடுபுகுதல்.

மூன்றாவது - மனித வாழ்விடமாக அல்லது ஆதனக் கட்டுக்காப்புக்கான இடமொன்றாகப் பயன்படுத்தப்படும் கட்டிடம், கூடாரம் அல்லது கலம் எதன் மீதும் தீயினால் அல்லது வெடிப் பொருட்களினால் புரியப்படும் சொத்தழிவு.

நான்காவது - அவ்விதம் தற்காப்புரிமை, பிரயோகிக்கப்படாவிட்டால் அதன் விளைவு மரணம் அல்லது கடும் காயம் ஏற்படுவதாகும் என்ற பயத்தினை நியாயமானளவில் ஏற்படுத்தக்கூடிய அத்தகைய சூழ்நிலைகளின் கீழான திருட்டு, சொத்தழிவு அல்லது வீடத்துமீறல்.

மரணம் தவிர்ந்த வேறேதேனும் தீங்கினை விளைவிக்கும் அளவுக்கு அத்தகைய உரிமை எப்பொழுது விரிவுபடும்.

**97.** எத்தவறினைப் புரிதல் அல்லது புரிய எத்தனித்தல் தற்காப்புரிமையைப் பிரயோகிக்கச் சந்தர்ப்பம் அளித்ததோ அத்தவறு கடைசியாக முற்போந்த பிரிவில் எண்ணிட்டுக் கூறப்பட்ட விவரணங்களுள் எதனையும் கொணடிராத திருட்டு, சொத்தழிவு அல்லது குற்றவியல் அத்துமீறலாயிருந்தால், அவ்வுரிமை வேண்டுமென்று மரணத்தை ஏற்படுத்தும் அளவுக்கு விரிவுபடாது, ஆனால் 92ஆம் பிரிவில் குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடப்பட்ட மட்டுப்பாடுகளுக்கமையத் தீங்கு விளைவிக்குநருக்கு மரணந்தவிர்ந்த வேறு தீங்கினை வேண்டுமென்று விளைவிக்கும் அளவிற்கு விரிவுபடும்.

ஆதனக் காப்புத் தற்காப்புரிமை தொடங்குதலும் தொடர்ந் திருந்து வருதலும்.

**98.** முதலாவதாக - ஆதனத்துக்கான அபாயம் பற்றி நியாயமான பயம் தோன்றும் பொழுது ஆதனத் தற்காப்புரிமை தொடங்குகின்றது.

இரண்டாவதாக - திருட்டுக்கெதிரான ஆதனத் தற்காப்புரிமை, ஆதனத்துடன் தவறாளர் அகன்று சென்றுவிடும்வரை அல்லது பகிரங்க அதிகாரிகளின் உதவி பெறப்படும்வரை அல்லது அவ்வாதனம் மீளப் பெறப்படும் வரை தொடர்ந்திருந்துவரும்.

மூன்றாவதாக - கொள்ளைக் கெதிரான ஆதனத் தற்காப்புரிமை, எவரேனும் ஆளுக்குத் தவறானர் மரணம் அல்லது காயம் அல்லது முறைகேடான தடை விளைவிக்கும் வரை அல்லது விளைவிக்க எத்தனிக்கும் வரை அல்லது உடனடி மரணம் அல்லது உடனடி காயம் அல்லது உடனடி ஆளுக்கான தடை பற்றிய பயம் தொடர்ந்திருந்து வரும்வரை தொடர்ந்திருந்து வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவதாக -குற்றவியல் அத்துமீறல் அல்லது சொத்தழிவுக்கெதிராக ஆதனத் தற்காப்புரிமை தவறாளர் குற்றவியல் அத்துமீறலை அல்லது சொத்தழிவுகளைத் தொடர்ந்து புரியும்வரை தொடர்ந்திருந்துவரும்,

ஐந்தாவதாக - இரவில் வலிந்து வீடுபுகுதலுக் கெதிரான ஆதனத் தற்காப்புரிமை, அத்தகையை வலிந்து வீடு புகு தலால் தொடங்கப்பட்டவிடத்து மீறல் தொடர்ந்திருக்கும் பொழுது தொடர்ந்திருந்துவரும்.

தவறற்ற ஆளொருவருக்கு தீங்கு ஏற்படும் பொழுது மரணத் தாக்குதலுக் கெதிரான தற்காப்புரிமை.

**99.** மரணத்தினை ஏற்படுத்தும் பயத்தினை நியாய மானளவில் ஏற்படுத்தும் தாக்குதலுக்கு எதி ரான தற்காப்புரிமையைப் பிரயோகிக்கையில் எவரேனும் அப்பாவியான ஆளொருவருக்குத் தீங்கேற்படும் அபாயமின்றி அவ்வுரிமையைப் பயனுறப் பிரயோகிக்க முடியாத நிலையில் காப்பு மேற்கொள்பவர் இருப்பின், அவருடைய தற்காப்புரிமை அவ்வபாயத்தினை மேற்கொள் ளும் அளவுக்கு விரிவுபடும்.

**எடுத்துக்காட்டு**

*தம்மைக்கொல்ல எத்தனிக்கும் கூட்டமொன்றி னால் "அ" தாக்கப்படுகின்றார். அக்கூட்டத்தின் மீது வெடி தீர்க்காது தமது தற்காப்புரிமையை அவர் பயனுறப் பிரயோகிக்கமுடியாது. அத்து டன் அக்கூட்டத்துள் கலந்து கிடக்கும் சிறு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பிள்ளைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் அபாயம் இன்றி வெடி தீர்க்கவும் முடியாது. அவ்விதம் வெடி தீர்த்தல் மூலம் பிள்ளைகளுள் எவர்க்கேனும் தீங்குண்டாக்கினால் "அ" தவறொன்றும் புரியவில்லை.*

## அத்தியாயம் V

### உடந்தை பற்றி

விடயம் ஒன்றைச் செய்வதற்கு உடந்தையளித்தல்.

**100.** முதலாவதாக - ஒரு விடயத்தைச் செய்யும் படி எவரேனும் ஆளைத் தூண்டுகின்ற அல்லது

இரண்டாவதாக - அவ்விடயத்தைச் செய்வதற்காக ஏதேனும் சதியில் ஈடுபடுகின்ற அல்லது

மூன்றாவதாக - அவ்விடயத்தினைச் செய்வதற்கு, ஏதேனும் செயலினால் அல்லது சட்டவிரோதமான செய்யாமையினால் கருத்தோடு உதவியளிக்கின்ற, ஆள் ஒருவர் அவ்விடயத்தைச் செய்ய உடந்தையளிக்கின்றார்.

விளக்கம் 1. உளமார்ந்த திரித்துக்காட்டல் அல்லது அவர் வெளிவிடக்கட்டுப்பட்ட முக்கியமான நிகழ்வொன்றை மறைப்பதன்மூலம், வேண்டுமென்று ஏதேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் புரியப்படச்செய்கின்ற அல்லது செய்விக்கின்ற அல்லது புரியப்படச் செய்ய அல்லது செய்விக்க எத்தனிக் கின்ற ஆள் ஒருவர் அவ்விடயத்தினைச் செய்யத் தூண்டுவதாகச் சொல்லப்படு கிறார்.

**எடுத்துக்காட்டு**

*"அ" என்னும் பகிரங்க அலுவலர் நீதி மன்ற எழுத்தாணை ஒன்றினால் "க" என்பவரைக் கைதுசெய்ய அதிகாரமளிக் கப்பட்டுள்ளார். "ஆ" என்பவர் அவ்விட யத்தை அறிந்தும் "இ" என்பவர் "க" அல்லர் என்பதறிந்தும் "அ" வுக்கு "இ" தான் "க"என உளமார எடுத்துக் கூறி அதனால் "இ"யை "அ" வைத்துக் கொண்டு கருத்துடன் கைதுசெய்விக்கின்றார். இங்கே "இ" கைது செய்யப்படுவதற்கு "ஆ" தூண்டுதல் மூலம் உடந்தையளிக்கின்றார்.*

விளக்கம் 2. விடயமொன்றினைச் செய்வதற் கான சதி என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் அவ்விடயத் தைச் செய்ய அல்லது செய்விக்க அல் லது நடைபெறுவிக்க இணங்கிக் கொள் வதாகும். நீதிமன்றத்தின் நியாயாதினுட் பட்ட ஒருவர் அந்நீதிமன்றத்தின் நியாயாதிக் கத்துக்கு அப்பாலுள்ள வேறு ஓராள் அல்லது அதிலுமதிகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்களுடன் அவர்களால் அல்லது அவர்களுளெவராலும் அல்லது வேறு ஆள் எவராலும் தவறொன்றைப் புரிவதற் கான சதியில் ஈடுபடுதல் மூலம் தவ றொன்று புரியப்படுதற்கு உடந்தையளிக் கலாம்.

விளக்கம் 3. செயலொன்றைப் புரிவதற்கு முன்னர் அல்லது புரிகின்ற நேரத்தில் அச்செயலைப்புரிவதற்கு வசதி அளிப்ப தற்கான எதனையும் செய்து அதனால் அது புரியப்படுதற்கு வசதியளிக்கும் எவ ரும் அச்செயல் செய்யப்படுதற்கு உதவி செய்வதாகச் சொல்லப்படுகிறார்.

**101.** தவறொன்று புரியப்படுதற்கேனும், அல்லது உடந்தையாளரின் அதே கருத்து அல்லது அறிவுடன் தவறொன்றைப் புரிவதற்குச் சட்டப் படி தகுதியுடைய ஆளொருவரால் புரியப்படு மானால் தவறாக இருக்கக்கூடிய செயலொன்று புரியப்படுதற்கேனும் உடந்தையளிக்கும் ஆளொ ருவர், தவறொன்றுக்கு உடந்தையளிக்கிறார். உடந்தை யாளர்.

விளக்கம் 1. செயலொன்றைச் சட்டவிரோத மாகச் செய்யாது விடுதற்கு உடந்தைய ளித்தல், உடந்தையாளர் தாமே அச் செயலைச் செய்யக் கட்டுப்படாத வராயி னும்கூட, தவறொன்றாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் 2. உடந்தைத் தவறாவதற்கு உடந்தையளிக்கப்பட்ட செயல் புரியப்பட்டிருக்க வேண்டும் என்பதேனும், அத்தவறாயமைவதற்குத் தேவையான பயன் ஏற்பட்டிருக்க வேணடும் என்பதேனும் அவசியமில்லை.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) "இ" யைக் கொல்லும்படி "ஆ" வை "அ" தூண்டுகிறார். அவ்விதஞ் செய்ய "ஆ" மறுக்கிறார். கொலைபுரிவதற்கு "ஆ" வுக்கு உடந்தையளித்ததற்கு"அ" குற்றவாளியாவார்.*

*(ஆ) "ஈ" யைக் கொல்லும்படி "ஆ" வை "அ" தூண்டுகிறார். அத்தூண்டுதலைப் பின்பற்றி "ஆ", "ஈ"யினைக் (கத்தியினால்) குத்துகிறார். "ஈ" அக்காயத்திலிருந்து குணமடைகிறார். கொலைபுரிவதற்கு "ஆ"வைத் தூண்டியதற்கு"அ" குற்றவாளியாவார்.*

விளக்கம் 3. உடந்தையளிக்கப்பட்ட ஆள் தவறொன்றைப் புரிவதற்குச் சட்டப்படி தகுதியுடையவராயிருக்க வேண்டும் என்பதேனும், உடந்தையாளர்க்கள்ளது போன்ற அதே குற்றக்கருத்து அல்லது அறிவையேனும் அல்லது ஏதேனும் குற்றக் கருத்து அல்லது அறிவையேனும் அவர் உடையவராயிருக்க வேண்டுமென்பதேனும் அவசியமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டுகள்**

(அ) "அ" என்பவர் குற்றக்கருத்துடன், தவறொன்றைப் புரிவதற்குச் சட்டப்படி தகுதியுள்ளவரும் "அ" வினையொத்த அதே கருத்தையுடையவருமான ஆளொருவரினால் புரியப்படின் தவறொன்றாக இருக்கக்கூடிய செயலொன்றைப்புரியும்படி பிள்ளையொன்றுக்கு அல்லது சித்தசுவாதினமற்ற ஆளொருவருக்கு உடந்தையளிக்கிறார். இங்கு செயல்புரியப்படினும் புரியப்படாவிடினும் தவறொன்றுக்கு உடந்தையளித்ததற்கு "அ" குற்றவாளியாகிறார்.

(ஆ) "க" வைக் கொல்லும் கருத்துடன் "அ" என்பவர் எட்டு வயதிற்குட்பட்ட பிள்ளையான "ஆ" வை "க" வின் மரணத்தை ஏற்படுத்தும் செயலொன்றைச் செய்யும்படி தூண்டுகிறார். அவ்வுடந்தையின் விளைவாக "ஆ" அச்செயலைச் செய்து அதனால் "க"வினது மரணத்தை ஏற்படுத்துகிறார். இங்கே தவறொன்றைப் புரிவதற்குச் சட்டப்படி "ஆ" தகுதியற்றவரான போதிலும், அத்தவறைப் புரிவதற்கு "ஆ" சட்டப்படி தகுதியுடைய வராகவும் கொலை புரிந்தவராகவும் இருந்தாற்போன்று அதே முறையாக "அ" தண்டிக்கப்படற்குரியவர் எனவே அவர் மரணதண்டனைக்கு உட்பட்ட வராவார்.

(இ) வாழ்வீடு ஒன்றிற்குத் தீயிடும்படி "ஆ" வை "அ" தூண்டுகிறார். "ஆ" தமது சித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாதீனமின்மையின் விளைவாகச் செயலின் தன்மையையேனும் தாம் பிழையான ஒன்றை அல்லது சட்டமுரணான ஒன்றைச் செய்கிறார் என்பதையேனும் அறியுந்தகுதியற்றவராய் "அ" வினது "ஆ" தூண்டுதலின் விளைவாக அவ் வீட்டுக்குத் தீயிடுகிறார். "ஆ" எத்தவறும் புரிய வில்லை. ஆனால் வாழ்வீடு ஒன்றிற்குத் தீயிட்ட தவறுக்கு உடந்தையளித்த மைக்காக "அ" குற்றவாளியாவதுடன் அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தண்டனைக்கும் ஆளாகி றார்.

(ஈ) "அ" திருட்டொன்றைப் புரிவிக்கக் கருதி "க" வுக்குச் சொந்தமான ஆதனத்தை "க" வின் உடமையிலிருந்து எடுக்கும்படி "ஆ" வைத் தூண்டுகிறார். அவ்வாதனம் "அ"வுக் குச் சொந்தமானது என நம்பும்படி "ஆ" வை "அ" ஊக்கப்படுத்துகிறார். "ஆ" அதனை "அ" வினது ஆதனமென நல்லெண்ணத்துடன் நம்பி "க"வின் உடமையிலிருந்து எடுத்துக் கொள்ளு கிறார். இந்தப் பிழையான விளக்கத்தின் கீழ்ச் செயலாற்றும் "ஆ" நேர்மையீனமாக அதனை எடுக்கவில்லையாதலால் திருட்டுப் புரியவில்லை. ஆனால் "ஆ" திருட்டுப் புரிந்தாற் போன்று "அ" திருட்டுக்கு உடந்தைக் குற்றவாளியாகி அதே தண்டனைக்கு ஆளாவர்.

விளக்கம் 4. தவறுக்கு உடந்தையளித்தல் அதுவே தவறாதலின் அத்தகைய உடந்தைக்கு உடந்தையளித்தலும் தவறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டு**

*"க"வைக் கொலை செய்யும் படி "இ" யைத் தூண்டும்படி "ஆ" வை "அ" தூண்டுகிறார். அதற்கிணங்க "க" வைக் கொலைபுரியும்படி "இ" யை "ஆ" தூண்டுகிறார். "ஆ" வின் தூண்டுதலின் விளைவாக "இ" தவறைப் புரிகிறார். அவருடைய தவறுக்காகக், கொலைக் குரிய தண்டனையினால் "ஆ" தண்டிக்கப்படு வதற்கு ஆளாவர் தவற்றைப் புரியும்படி "ஆ" வை "அ" தூண்டியதனால் "அ" வும் அதே தண்டனைக்குரியர்.*

விளக்கம் 5. சதியால் உடந்தையளித்தலான தவறைப் புரிவதற்கு, அத்தவறைப் புரியும் ஆளுடன் உடந்தையாளர் அத்தவறு பற்றி இணங்கியிருக்க வேண்டுமென்று அவசியமில்லை. அத்தவறு எச்சதியைப் பின்பற்றிப் புரியப்பட்டதோ அச்சதியில் அவர் ஈடுபட்டிருந்தால் போதுமானது.

**எடுத்துக்காட்டு**

*"க" வுக்கு நஞ்சூட்டும் திட்டமொன்றை "ஆ" வுடன் "அ" தீட்டுகிறார். "அ" நஞ்சினை ஊட்ட வேண்டுமென இணங்கிக்கொள்ளப்பட்டது. மூன்றாமாளொருவர் நஞ்சையூட்டுவாரென, ஆனால் "அ" வின் பெயரைக் குறிப்பிடாமல் "இ" க்கு "ஆ" அதன்மேல் அத்திட்டத்தை விளக்குகிறார். "இ" நஞ்சைப் பெற்றுத்தர இணங்கி, அதனைப் பெற்று விளக்கப்பட்ட அம்முறையாக அது பயன்படுத்தப்படுவதற்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கென "ஆ" வுக்கு ஒப்படைக்கிறார். "அ" நஞ்சினை ஊட்டுகிறார். அதன் விளைவாக "க" மரணமடைகிறார். இங்கே, "அ" வும் "இ" யும் ஒருமித்துச் சதி செய்யாவிடினும் எச்சதியினைப் பின்பற்றி "க" கொல்லப்பட்டாரோ அதில் "இ" ஈடுபட்டிருந்தார். எனவே இப்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்ட தவறினை "இ" புரிந்துள்ளார். அவர் கொலைக்கான தண்டனைக்கும் ஆளாவர்.*

இலங்கைக்கு வெளியே ஆன தவறுகளுக்கு இலங்கையில் உடந்தை யளித்தல்.

**101 அ.** இலங்கையிற் புரியப்பட்டால் தவறாயமையக் கூடிய செயலொன்று இலங்கைக்கு வெளியேயும் அப்பாலும் புரியப்படுதற்கு இலங்கையில் உடந்தையளிக்கும் ஆளொருவர் இச்சட்டக் கோவையின் பொருளுக்குட்படத் தவறொன்றுக்கு உடந்தையளிக்கிறார்.

உடந்தையளிக் கப்பட்ட செயல் உடந்தையளித் தலின் விளைவாகப் புரியப்பட்டு அதன் தண்டனைக்கு வெளிப்படையான ஏற்பாடு செய்யப் படாதவிடத்து உடந்தையளித் ததற்குத் தண்டனை.

**102.** ஏதேனும் தவறினுக்கு உடந்தையளிக்கும் எவரும், உடந்தையளிக்கப்பட்ட செயல் அவ்வுடந்தையளித்தலின் விளைவாகப் புரியப்படுமிடத்து, அத்தகைய உடந்தையளித்தலைத் தண்டித்தற்கு இச்சட்டக் கோவையினால் வெளிப்படையான ஏற்பாடு செய்யப்படாவிடின், அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தண்டனையால் தண்டிக்கப்படல் வேண்டும்.

விளக்கம்:- உடந்தையளித்தலாய் அமையும் தூண்டுதலின் விளைவாக அல்லது சதியைப் பின்பற்றி அல்லது உதவியுடன் செயல் அல்லது தவறொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியப்படுமிடத்து, அவ்வுடந்தை அளித்தலின் விளைவாக அது புரியப் பட்டதாகச் சொல்லப்படும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) "ஆ" என்னும் பகிரங்க ஊழியருக்கு "அ" என்பவர் "ஆ" தனது உத்தியோகப் பணிகளைப் பிரயோகிப்பதில் "அ"வுக்குச் சாதகமாக நடப்பதற்கு வெகுமதியாகக் கைலஞ்சம் அளிக்க முனைகிறார். 158ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்ட தவறுக்கு "அ" உடந்தையளித்துள்ளார்.*

*(ஆ) "ஆ" வைப் பொய்ச் சான்றழிக்கும்படி "அ" தூண்டுகிறார். அத்தூண்டுதலின் விளைவாக "ஆ" அத்தவறைப் புரிகிறார். அத்தவறுக்கு உடந்தை அளித்ததற்கு "அ" குற்றவாளியாவதோடு "ஆ" வுக்குரியது போன்ற அதே தண்டனைக்கு ஆளாகிறார்.*

*(இ) "க" வுக்கு நஞ்சூட்ட "அ"வும் "ஆ"வும் சதிசெய்கிறார்கள். அச்சதியைப் பின்பற்றி "அ" நஞ்சைப் பெற்று, "க" வுக்கு அதனை "ஆ" ஊட்டுவதற்கென அவரிடம் ஒப்படைக்கிறார். அச்சதியினைப் பின்பற்றி "அ" இல்லாத நேரத்தில் "க"வுக்கு "ஆ" நஞ்சினை ஊட்டி அதனால் "க"வின் மரணத்தை ஏற்படுத்து கிறார். இங்கு "ஆ"கொலைக் குற்றவாளி யாவார். "அ" சதிமூலம் அத்தவறுக்கு உடந்தையளித்த*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லுக்குக் குற்றவாளியாகிக் கொலைக்கான தண்டனைக்கு ஆளாவார்.*

உடந்தையளிக் கப்பட்ட ஆள் உடந்தையளித் தவரின் கருத்துக்கு வேறான கருத் தொன்றுடன் செயலாற்றினால் உடந்தையளித் தற்கான தண்டனை.

**103.** தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையளிக்கும் எவரும், உடந்தையளிப்பவருக்கிருந்த கருத்தி லிருந்து அல்லது அறிவிலிருந்து வேறான கருத் துடன் அல்லது அறிவுடன் உடந்தையளிக்கப் பட்ட ஆள் செயலைச் செய்தால், உடந்தைய ளித்தவருக்கிருந்த அதே கருத்து அல்லது அறிவுடனேயே, வேறெக் கருத்தோ அறிவோ இன்றி, அச்செயல் செய்யப்படுவதினால் உண் டாகக்கூடிய தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ள தண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஒரு செயலுக்கு உடந்தையளிக்க வேறொரு செயல் புரியப்பட்டால் உடந்தையளித் தவரின் பொறுப்பு.

**104.** ஒரு செயலுக்கு உடந்தையளிக்கப்படும் பொழுது வேறொரு செயல் செய்யப்பட்டால், அச்செய்யப் பட்ட செயலுக்கு, உடந்தையளித்தவர் நேரடி யாக உடந்தையளித்திருந்தாற் போன்ற அதே முறையாகவும் அதேஅளவுக்கும் அவர் அச்செய லுக்குப் பொறுப்பாவார்.

எவ்வாறாயினும், செய்யப்பட்ட செயலானது உடந்தையளித்தலின் நேர்தகு விளைவான தாகவும் உடந்தையளித்தலாயமையும் தூண்டு தலின் தாக்கத்தின்கீழ் அல்லது உதவியுடன் அல்லது சதியினைப் பின்பற்றிப் புரியப்பட்ட தாகவுமிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டு.**

(அ) "க"வினுடைய உணவில் நஞ்சிடும்படி பிள்ளையொன்றினைத் தூண்டி அதற்கென நஞ்சினை அதனிடம் "அ" கொடுக்கிறார். அப்பிள்ளை அத்தூண்டுதலின் விளைவாகப் பிழையாக "க" வினுடைய உணவுக்குப் பக்கத்திலிருந்த "ங"வினுடைய உணவில் நஞ்சையிடுகின்றது. இங்கே அப்பிள்ளையானது "அ" வினது தூண்டுதலின் தாக்கத்தின் கீழ்ச் செயலாற்றுவதாயும் செய்யப்பட்ட செயல் அச்சூழ் நிலைகளில் உடந்தையளித்தலின் நேர்தகு விளைவாகவும் இருப்பின் "ங"வின் உணவில் நஞ்சிடும்படி அப்பிள்ளையை "அ" தூண்டியிருந்தாற் போன்று அதே முறையாகவும் அதே அளவுக்கும் "அ" பொறுப்பாளியாவார்.

(ஆ) "க" வினுடைய வீட்டை எரிக்கும்படி "ஆ"வை "அ" தூண்டுகிறார். "ஆ" அவ்வீட்டுக்குத் தீயிடுவதோடு அதேநேரத்தில் அங்கு ஆதனங்களையும் திருடுகிறார். "அ" வீடு எரித்தலுக்கு உடந்தையளித்தற்குக் குற்றவாளியான போதிலும் திருட்டு உடந்தைக்குக் குற்றவாளியல்லர். ஏனெனில் திருட்டு தனிப்பட்ட செயலாவதோடு எரிப்பதன் நேர்தகுவிளைவொன்றல்ல.

(இ) குடிவாழ் வீடொன்றில் கொள்ளையடிக்கும் நோக்கமாக இரவில் வலிந்துபுகும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"ஆ" வையும் "இ" யையும் "அ" தூண்டுகிறார். அதற்காக அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கினார். "ஆ"வும் "இ"யும் வீட்டின் வலிந்து புகுந்து குடியிருப்பாளருள் ஒருவரான "க" வினால் எதிர்க்கப்படவே "க"வைக் கொலைபுரிகிறார். இங்கு அக்கொலை உடந்தையளித்தலின் நேர்தகு விளைவாக இருக்குமானால் கொலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தண்டனைக்கு "க" "அ" ஆளாவர்.*

உடந்தையளிக்கப்பட்ட செயலுக்கும் செய்யப்பட்ட செயலுக்குமான திரண்ட தண்டனைக்கு எப்பொழுது உடந்தையளித்தவர் ஆளாவார்.

**105.** கடைசியாக முற்போந்த பிரிவின்கீழ் உடந்தையளித்தவர் பொறுப்புடையவராகக்கூடிய செயல் உடந்தையளிக்கப்பட்ட செயலோடு மேலதிகமாகப் புரியப்பட்டு வேறொரு தவறாக அமையின், உடந்தையளித்தவர் தவறுகள் ஒவ்வொன்றுக்கும் தண்டனைக்காளாவர்.

**எடுத்துக்காட்டு**

*பகிரங்க ஊழியரொருவரால் செய்யப்பட்ட பற்றாணை ஒன்றை வலோத்காரமாக எதிர்க்கும்படி "ஆ" வை "அ" தூண்டுகிறார். அதன் விளைவாக "ஆ" அப்பற்றாணையை எதிர்கிறார். எதிர்ப்பைக்காட்டும்பொழுது "ஆ" அப்பற்றாணையை நிறைவேற்றும் அலுவலருக்கு வேண்டுமென்றே கடும் காயம் விளைவிக்கிறார். பற்றாணையை எதிர்த்தல், கடும் காயம் வேண்டுமென்று விளைவித்தல் ஆகிய இருதவறு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் "ஆ" புரிந்துள்ளாராதலால் இவ் விருதவறுகளுக்கும் "ஆ" தண்டனைக்கு ரியர். அத்துடன் அப்பற்றாணையை எதிர்ப் பதில் "ஆ" வேண்டுமென்று கடும் காயம் விளைவிக்கக்கூடுமென "அ" அறிந்திருந் தால் "அ" வும் தவறுகளுள் ஒவ்வொன் றுக்கும் தண்டனைக்குரியர்.

உடந்தையளிக் கப்பட்ட செயலிலிருந்து உடந்தையளித் தவரினால் கருதப்பட்டதற்கு வேறான பயன் ஏற்படுமிடத்து உடந் தையளித்தவரின் பொறுப்பு.

**106.** குறிப்பிட்ட பயனொன்றை விளைவிக்கவேண்டு மென்று உடந்தையளித்தவர் கொண்டிருந்த கருத்துடன் செயலொன்று உடந்தையளிக்கப் பட்டு, அந்த உடந்தையளித்தலின் விளைவாக உடந்தையளித்தவர் ஆளாகக்கூடிய செயல் ஒன்று உடந்தையளித்தவர் கருதிய பயனின் வேறானதொன்றை விளைவிக்குமிடத்து விளைந்த பயனுக்கு, அப்பயனை விளைவிக் கும் கருத்துடன் அச்செயலுக்கு அவர் உடந் தையளித் திருந்தாற்போன்று அதேமுறையாக வும் அதே அளவுக்கும் உடந்தையளித்தவர் ஆளாதல் வேண்டும் ஆயினும் உடந்தையளிக் கப்பட்ட செயல் அப்பயனை விளைவிக்கக்கூடு மென அவர் அறிந்திருக்க வேண்டும்.

11157

**எடுத்துக்காட்டு**

"க"வுக்கு கடும் காயம் விளைவிக்கும்படி "ஆ" வை "அ" தூண்டுகிறார். அத்தூண்டுத லின் விளைவாக "க"வுக்கு "ஆ" கடும் காயம் விளைவிக்கின்றார். அதன்விளை வாக "க"இறக்கிறார். இங்கே, உடந்தை யளிக்கப்பட்ட கடும் காயம் மரணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விளை விக்கக்கூடுமென "அ" அறிந்திருந் தால் மரணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ள தண்டனையால் "அ" தண்டிக்கப் படற்குரியர்.*

தவறு புரியப்படும் பொழுது உடந்தைய ளித்தவர் சமூகமாயிருத்தல்.

**107.** அவர் சமூகமாயிருந்திராவிடில் உடந்தைய ளித்தவ ரொருவராகத் தண்டிக்கப்படற்குரிய எவரேனுமாள் ஒருவர் உடந்தையளித்தலின் விளைவாக அவர் தண்டிக்கப்படக்கூடிய செயல் அல்லது தவறு புரியப்படும் பொழுது சமூக மாயிருந்தால், அத்தகைய செயலை அல்லது தவறைப் புரிந்தவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*"இ" என்பவர் புதையலுடன் குறித்தவொரு வழியாகச் செல்லக்கூடுமென "ஆ" வுக்கு அறிவித்து வழிமறித்து "இ"யைக் கொள்ளை யிடும்படி "ஆ"வைத் தூண்டி "அ" எழுது கிறார். "இ" யுடன் "அ" பிரயாணத்தில் ஒன்றுசேர்ந்துவர, அத்தகைய தூண்டுத லின்மீது "ஆ" வழிமறித்து "இ" யைக் கொள்ளையடிக்கிறார். இப்பிரிவின் கீழ் "அ" குற்றவாளியாகிறார்.*

மரணதண்டனை விதிக்கப்படக் கூடிய தவறொன்றுக்கு உடந்தைய ளித்தல், அவ்வுடந்தைய

**108.** மரணதண்டனை விதிக்கப்படக்கூடிய தவறொன் றைப்புரிய உடந்தையளிக்கும் எவரும், அவ் வுடந்தையளித்தலின் விளைவாக அத்தவறு புரியப்படாமல் போகும் பொழுது அத்தகைய உடந்தையளித்தலைத் தண்டித்தற்கு இச்சட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்கோவையினால் வெளிப்படையான ஏற்பாடு எதுவும் செய்யப்படாதுள்ளவிடத்து, ஏழு ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக்கு இரு வகையில் ஒருவகை மறியலால் தண்டிக்கப் படல் வேண்டும், அத்துடன் அவர் குற்றப் பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.

ளித்தலின் விளைவாக அத்தவறு புரியப்படாவிடின்.

அத்துடன் உடந்தையளித்தலின் விளைவாக உடந்தையளித்தவர் பொறுப்பாளியாகவுள்ள தும், எவரேனும் ஆளுக்கு காயம் விளைவிப் பதுமான செயல் செய்யப்படின், உடந்தைய ளித்தவர் பதினான்கு ஆண்டுகள்வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்துக்கு இருவகையில் ஒரு வகை மறியலால் தண்டிக்கப்படல் வேண்டும், அத்துடன் அவர் குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்..

இவ்வுடத்தை யளித்தலின் பயனாகக் காயம் விளைவிக்கும் செயலொன்றைப் புரிதல்

**எடுத்துக்காட்டு**

*"க" வைக் கொலை செய்யும்படி "ஆ"வை "அ" தூண்டுகிறார். அத்தவறு புரியப்பட வில்லை. "க" வை "ஆ" கொலை செய்தி ருந்தால் அவர் மரண தண்டனைக்காளா யிருப்பார். எனவே "அ" ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்துக்கான மறியலுக்கும் குற்றப்பணத்துக்கும் ஆளா வார். அந்த உடந்தையளித்தலின் விளை வாக "க" வுக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டி ருந்தால் அவர் "அ" பதினான்கு ஆண்டு கள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக் கான மறியலுக்கும் குற்றப்பணத்துக்கும் ஆளாவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தவறொன்றுக்கு உடந்தை யளித்தல், அவ்வுடந்தை யளித்தலின் விளைவாக அத்தவறு புரியப்படா விடின்

**109.** மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன் றுக்கு உடந்தையளிக்கும் எவரும், அந்த உடந்தையளித்தலின் விளைவாக அத்தவறு புரியப்படாமல் போகும் பொழுது அத்தகைய உடந்தையளித்தலைத் தண்டித்தற்கு இச்சட் டக்கோவையினால் வெளிப்படையான ஏற்பாடெ துவும் செய்யப்படாதிருக்குமிடத்து அத்தவ றுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள மிகக்கூடிய காலத்தின் நாலிலொன்றுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக்கு அத்தகைய தவறுக்கு ஏற் பாடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் விவரணத்தைக் கொண்ட மறியலினால் அல்லது அத்தவறுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள அத்தகைய குற்றப் பணத்தினால் அல்லது இவ்விரண்டினாலும் தண்டிக்கப்படல் வேண்டும்.

உடந்தைய ளிததவர் அல்லது உடந்தைய ளிக்கப்பட்டவர் தவறினைத் தடுக்குங் கடமையுடைய பகிரங்க ஊழியரா யிருப்பின்.

அத்துடன் உடந்தையளித்தவர் அல்லது உடந் தையளிக்கப்பட்ட ஆள் அத்தகைய தவறு புரி யப்படுதலைத் தடுக்குங்கடமையுடைய பகிரங்க ஊழியர் ஒருவராயின் அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மிகக்கூடிய காலத்தின் அரைவாசிக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் விவரணத்தைக் கொண்ட மறியலி னால் அல்லது அத்தவற்றுக்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ள அத்தகைய குற்றப்பணத்தினால் அல்லது இவ்விரண்டினாலும் தண்டிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டுகள்**

(அ) "ஆ" என்னும் பகிரங்க ஊழியருக்கு "அ" என்பவர் "ஆ" தனது உத்தியோகப் பணிகளைப் பிரயோகிப்பதில் "அ"வுக்குச் சாதகமாக நடப்பதற்கு வெகுமதியாகக் கைலஞ்சம் அளிக்கமுனைகிறார். "ஆ" அதனை ஏற்க மறுக்கிறார். இப்பிரிவின்கீழ் "அ" தண்டனைக்குரியவர்.

(ஆ) "ஆ" வைப் பொய்ச் சான்றளிக்கும்படி "அ" தூண்டுகிறார். இங்கே "ஆ" பொய்ச் சான்றளிக்காவிடினும் இப்பிரிவில் வரை விலக்கணங் கூறப்பட்ட தவறினை "அ" புரிந்துள்ளார். அதற்கிணங்கத் தண்ட னைக்குரியர்.

(இ) கொள்ளையைத் தடுக்கும் கடமையு டைய "அ" என்னும் பொலிஸ் அலுவலர் அத்தவறைப் புரியும்படி "ஆ" உடந்தை யளிக்கிறார். இங்கே கொள்ளைபுரியப்படா விடினுங்கூடக் கொள்ளைத் தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆகக் கூடிய மறியற்காலத்தின் அரைப் பங்கிற்கும் குற் றப் பணத்திற்கும் அவர் ஆளாவர்.

(ஈ) கொள்ளையைத் தடுக்கும் கடமையு டைய "அ" என்னும் பொலிஸ் அலுவலர் அத்தவறைப் புரியும்படி "ஆ" உடந்தைய ளிக்கின்றார். இங்கே கொள்ளை புரியப் படாவிடினும்கூடக் கொள்ளை தவறுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆகக்கூடிய மறியற் காலத்தின் அரைப்பங்கு "ஆ" ஆளாவார். அத்துடன் குற்றப்பணத்திற் கும் "ஆ" ஆளாவார்.*

பொதுமக்களால் அல்லது பத்துக்கு மேற்பட்ட ஆட்களால் தவறு புரியப்படுவதற்கு உடந்தைய ளித்தல்.

**110.** பொதுவாகப் பொதுமக்களால் அல்லது பத்துக்குமேற்பட்ட ஏதேனும் எண்ணினை அல்லது வகுப்பைச்சேர்ந்த ஆட்களினால் தவறொன்று புரியப்படுதலுக்கு உடந்தையளிக்கும் எவரும் மூன்றாண்டு காலத்திற்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியலி னால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*ஊர்வலத்தில் ஈடுபட்டிருக்கும் எதிர்ச் சமயப் பிரிவின் உறுப்பினர்களைத் தாக் கும் நோக்கத்திற்காக ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் பத்துக்கு மேற் பட்ட உறுப்பினரைக் கொண்ட ஒரு சமயப் பிரிவினை கூடும்படி தூண்டும் விளம்பர அட்டையொன்றை "அ" பகிரங்க இட மொன்றில் நிறுத்துகிறார். இப்பிரிவில் வரைவிலக்கணங் கூறப்பட்டுள்ள தவ றினை "அ" புரிந்துள்ளார்.*

மரண தண்டனை யினால் அல்லது இருபது ஆண்டுகள் மறியலினால்

**111.** மரணதண்டனையினால் அல்லது இருபது ஆண்டுகள் மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்று புரியப்படுதற்கு வசதியளிக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி அல்லது அதனால் தாம் வசதியளிக்கக் கூடும் என அறிந்து, ஏதேனும் செயல் மூலம் அல்லது சட்டவிரோதமான செய்யாமைமூலம் அத்தகைய தவறு புரியப்படுதற்குச் சூழ்ச்சி உள்ளது. என்பதை வேண்டுமென்று மறைகின்ற அல்லது அத்தகைய சூழ்ச்சி தொடர்பில் பொய்யான அவர் அறிந்த ஏதேனும் கூற்றினைச் செய்கின்ற ஆளெவரும் அத்தவறு புரியப்பட்டால் ஏழாண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியலினால் அல்லது அத்தவறு புரியப்படாவிடின் மூன்றாண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் இந்த இரண்டில் எவ்விடயத்திலேனும் குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றுக்கான சூழ்ச்சியை மறைத்தல்.

**எடுத்துக்காட்டு**

*"அ", கொலை ஒன்று "ஆ" என்னும் இடத்தில் புரியப்படவுள்ளது என அறிந்து கொண்டு பொய்யாக எதிர்த்திசையில் உள்ள இடமொன்றான "இ" என்னும் இடத்தில் கொலையொன்று புரியப்படவுள்ளதென நீதிவானிடம் தெரிவிக்கின்றார். அதனால் அத்தவறு புரியப்படுவதற்கு வசதியளிக்கும் கருத்துடன் நீதிவானைப் பிழையான நெறியிடுகிறார். இச்சூழ்ச்சியினைப் பின்பற்றி "ஆ" என்னும் இடத்தில் கொலை புரியப்படுகிறது. இப்பிரிவின்கீழ் "அ" தண்டனைக்குரியர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறொன்று புரியப்படுதலை தடுத்தல் தமது கடமையாக வுள்ள பகிரங்க ஊழியர் ஒருவர் அத்தவறு புரிதற்கான சூழ்ச்சியை மறைத்து வைத்திருத்தல்.

**112.** பகிரங்க ஊழியரென்ற தன்மையில் குறிப்பிட்ட தவறு புரியப்படுதலைத் தடுத்தல் தமது கடமை யாகவுள்ள பகிரங்க ஊழியர் ஒருவராயிருந்து கொண்டு அத்தவறு புரியப்படுதற்கு வசதிய ளிக்கும் கருத்துடன் அல்லது அதனால் அவர் தவறு புரியப்படுதற்கு வசதியளிக்கக்கூடும் என்ற அறிவுடன் ஏதேனும் செயலினால் அல்ல சட்ட விரோதமான செய்யாமையினால், அத்தகைய சூழ்ச்சி உள்ளதென்பதை வேண்டுமென்றே மறைக்கின்ற அல்லது அத்தகைய சூழ்ச்சி பற்றிப் பொய்யானதென அவர் அறிந்த ஏதே னும் கூற்றைச் செய்கின்ற எவரும், அத்தவறு புரியப்படின், அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ள அத்தகைய மறியலின் ஆகக் கூடிய காலத்தின் ஒரு பாதிக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் விவரணத்தைக் கொண்ட மறியலினால் அல்லது அத்தகைய குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டி னாலும் அல்லது அத்தவறு மரணதண் டனை விதிக்கப்படக்கூடியதாயின் பத்து ஆண்டுகள் நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படல் வேண்டும் அத்தவறு புரியப்படாவிடின் அத்தவ றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அத்தகைய மறியலின் ஆகக்கூடிய காலத்தின் நாலி லொன்றுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் விவரணத்தைக் கொண்ட மறியலி னால் அல்லது அத்தகைய குற்றப்பணத்தி

அத்தவறு புரியப்பட்டால்

அத்தவறு மரண தண்டனையி னால் தண் டிக்கப்படக் கூடியதாயின்

அத்தவறு புரியப்படாவிடத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக் கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*தனது அறிவுக்கு எட்டக்கூடிய கொலை புரிதற்கான சூழ்ச்சிகள் யாவும் பற்றிய செய்தியைத் தருவதற்குச் சட்டப்படி கட் டுப்பட்டவராயிருந்து கொண்டு பொலிசு அலுவலரொருவரான "அ" என்பவர் கொலை புரிய "ஆ" சூழ்ச்சிசெய்கிறாரென அறிந் தும் அத்தவறு புரியப்படுதற்கு வசதிய ளிக்கும் கருத்துடன் அத்தகைய செய்தி யைத் தராது விட்டுவிடுகிறார். இங்கே சட்டவிரோதமான செய்யாமையினால் "ஆ" வினுடைய சூழ்ச்சியிருந்ததை மறைத்து விட்டார். இப்பிரிவின் ஏற்பாட்டுக்கிணங்கத் தண்டனைக்குரியர்.*

**113.** மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்று புரியப்படுதற்கு வசதியளிக்குங் கருத்துடன் அல்லது அதனால் தாம் வசதியளிக்கக்கூடும் என அறிந்து ஏதேனும் செயல் அல்லது சட்ட விரோதமான செய்யாமையினால் அத்தகைய தவறு புரியப்படுதற்குச் சூழ்ச்சியுள்ளது என் பதை வேண்டுமென்று மறைக்கின்ற அல்லது அத்தகைய சூழ்ச்சி தொடர்பில் பொய்யென அவர் அறிந்த ஏதேனும் கூற்றினைச்செய்கின்ற எவரும், அத்தவறு புரியப்பட்டால் அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, அத்தகைய மறிய லின் ஆக்கக்கூடிய காலத்தின் நாலிலொரு

மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தவறொன்று புரியப்படுவதற் கான சூழ்ச்சியை மறைத்து வைத்தல்.

அத்தவறு புரியப்படின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தவறு புரியப்படாத விடத்து.

பங்குக்கும் அத்தவறு புரியப்படாதிருக்குமிடத்து, எட்டிலொருபங்குக்கும் நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விவரணத்தைக்கொண்ட மறியலினால் அல்லது அத்தகைய குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் V அ

### சதி பற்றி

சதியின் வரை விலக்கணம்.

**113 அ.** (1) இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள், ஏதேனும் முன்னரே ஏற்பட்ட உடன்பாடு அல்லது கலந்தாய்வுடன் அல்லது அது இல்லாமல் தவறொன் றைப் புரிவதற்கு, அல்லது அதற்கு உடந்தையளிப்பதற்கு அல்லது புரிய அல்லது உடந்தையளிக்க அல்லது புரி வதில் உடந்தையளிப்பதில் ஒரு பொது நோக்குடன் ஒன்று சேர்ந்து செயலாற்ற இணங்கினால், அவர்களுளொவ்வொருவ ரும் அத்தவறினைப்புரிய அல்லது விட யத்திற்கேற்றாற்போல அத்தவறுக்கு உடந்தையளிக்கவுள்ள சதித் தவறுக் குக் குற்றவாளியாவார்.

(2) இலங்கையிலுள்ள ஆளொருவர் இலங் கைக்கு அப்பாலுள்ள வேறு ஆள் ஒருவ ருடன் அவர்களால் அல்லது அவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளொலுவராலும் அல்லது வேறு ஆள் எவ ராலும் இலங்கையிலேனும் அதற்கப் பாலேனும் ஏதேனும் தவறு அல்லது தவ றிற்கு உடந்தையளித்தல் புரியப்படுவதற்கு உடன்படுவதன் மூலம் இலங்கைக்கு அப்பால் புரியப்படும் தவறு தொடர்பில் "தவறு" என்பது, இலங்கையில் செய்யப் படின் அச்செயல் இச்சட்டக்கோவையின் கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின் கீழ்த் தவறொன்றாக இருக்கக்கூடிய ஏதேனும் செயல் என்று பொருள்படும்.

விதிவிலக்கு - இப்பிரிவான கணவரொருவ ருக்கும் அவரது மனை விக்குமிடை யிலுமாய் இருக்கும் சதியின் விடயத் திற்கு விரிவுடையதாதலாகாது.

**113 ஆ.** ஏதேனும் தவறு புரிதற்கான அல்லது தவ றுக்கு உடந்தையளித்தற்கான சதித்தவறுக்கு இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் குற்றவாளிகளானால் அவர்களொவ்வொருவரும் அத்தகைய தவறுக்கு அவர் உடந்தையளித் திருந்தாற்போன்று அதேமுறையில் தண்டிக் கப்படல் வேண்டும். தவறுக்குத் தண்டனை

## அத்தியாயம் VI

## அரசுக்கெதிரான தவறுகள் பற்றி

**114.** குடியரசுக்கெதிராகப் போர்புரியும் அல்லது போர் புரிய எத்தனிக்கும் அல்லது போர்புரிய உடந் குடியரசுக் கெதிராகப் போர்புரிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது போர்புரிய எத்தனித்தல் அல்லது போர்புரிய உடந்தைய ளித்தல்.

தையளிக்கும் எவருக்கும் மரணதண்டனை விதிக்கப்படுதல் வேண்டும். அல்லது இருபது ஆண்டுகள் நீடிக்கக்கூடிய இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு அவர் தம் ஆதனம் எல்லாவற்றை யும் இழத்தலும் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*குடியரசுக்கெதிரான புரட்சியொன்றில் "அ" சேருகிறார். இப்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள தவறினை "அ" புரிந்துள்ளார்.*

முற்போந்த பிரிவினால் தண்டிக்கப் படக்கூடிய தவறினைப் புரிவதற்கான சதி.

**115.** அடுத்த முற்போந்த பிரிவினால் தண்டிக்கப்பட வேண்டிய தவறுகளுள் எதனையேனும் புரிய அல்லது குடியரசின் மக்களிடமிருந்து இலங் கையின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் ஆள்புலங்கள் என்பவற்றுள் எதனதும் இறை மையை அபகரிக்கச் சதிசெய்யும் அல்லது குற்ற முறையான வலோற்காரத்தின்மூலம் அல் லது குற்றமுறையான வலோற்காரத்தைக் காட்டு வதன்மூலம் இலங்கையின் அரசாங்கத்தைப் பயந்து பணியவைக்கச் சதிசெய்யும் எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய லினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

விளக்கம்:- இப்பிரிவின் கீழான சதியாக அமை வதற்கு அதனைப் பின்பற்றி ஏதே னும் செயல் அல்லது சட்டவிரோத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான செய்யாமை நடைபெற்றிருக்க வேண்டுமென்பது அவசியமில்லை.

**116.** குடியரசுக்கெதிராகப் போர்புரியும் அல்லது போர் புரிய முன்னேற்பாடாயிருக்கும் கருத்துடன் ஆட்கள், ஆயுதங்கள் அல்லது போர்க்கலங்களைச் சேகரிக்கும் அல்லது வேறுவகையாக முன்னேற்பாடு செய்யும் எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலத்திற்கு இருவகை யிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு அவர் தம் ஆதனம் எல்லாவற்றையும் இழத்தலும் வேண்டும்.

குடியரசுக்கெதி ராகப் போர் புரியும் கருத்துடன் ஆயுதங்கள் முதலியவற்றைச் சேகரித்தல்.

**117.** குடியரசுக்கெதிராகப் போர் புரியச் சூழ்ச்சி யொன்று உண்டென்பதை மறைத்துவைப்பதன் மூலம் அத்தகைய போர் புரியப்படுதலுக்கு வசதியளிக்கும் கருத்துடன் அல்லது அதனால் தாம் வசதியளிக்கக்கூடும் என்ற அறிவுடன் ஏதேனும் செயல் மூலம் அல்லது சட்டவிரோத மான செய்யாமை மூலம் அத்தகைய சூழ்ச்சி யொன்றுண்டென்பதை மறைத்துவைக்கும் எவரும் பத்து ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

போர் புரியும் சூழச்சி யென்றை வசதியளிக்குங் கருத்துடன் மறைத்து வைத்தல்.

**118.** நீக்கப்பட்டது (பி 2, 2002 இன் 12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் சட்ட முறையான தத்துவத்தைப் பிரயோகித்தலைக் கட்டாயப்படுத் தும் அல்லது தடை செய்யும் கருத்துடன் சனாதிபதி முதலியோரைத் தாக்குதல்.

**119.** சனாதிபதியின் அல்லது பாராளுமன்ற உறுப்பி னரின் சட்டமுறையான தத்துவங்களுள் எதனை யும் பிரயோகிக்கும்படி அல்லது பிரயோகியாது தடை செய்யும்படி அத்தகைய சனாதிபதி, அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தூண்டும் அல்லது கட்டாயப்படுத்தும் கருத்து டன் அத்தகைய சனாதிபதியை, அல்லது பாராளு மன்ற உறுப்பினரைத் தாக்கும் அல்லது முறை கேடாகத் தடைசெய்யும் அல்லது முறைகேடா கத் தடைசெய்ய எத்தனிக்கும் அல்லது குற்ற முறையான வலோற்காரமூலம் அல்லது குற்ற முறையான வலோற்காரத்தைக் காட்டுதன்மூலம் பயந்து பணியவைக்கும் அல்லது அவ்விதம் பணியவைக்க எத்தனிக்கும் எவரும் ஏழு ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத் திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பற்றின்மையைத் தூண்டி விடுதல் அல்லது தூண்டிவிட எத்தனித்தல்

**120.** பேசப்படும் அல்லது வாசிக்கக் கருதப்படும் சொற்கள் மூலம் அல்லது சைகைகள் மூலம் அல்லது கட்புலக்காட்சிகள் மூலம் அல்லது வேறுவகையாக சனாதிபதியின் அல்லது இலங் கையிலுள்ள அவரது அரசாங்கத்துக்கு எதிரா கப் பற்றின்மை உணர்ச்சியைத் தூண்டிவிடு கின்ற அல்லது தூண்டிவிட எத்தனிக்கின்ற அல்லது நீதி நிருவாகந்தொடர்பில் வெறுப் பினை அல்லது அவமதிப்பைத் தூண்டிவிடு கின்ற அல்லது தூண்டிவிட எத்தனிக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் கருமத்தைச் சட்டமுறை வழிகளல்லாத வேறு விதமாக மாற்றுவிக்கும்படி இலங்கை மக்களைத் தூண்டுகின்ற அல்லது தூண்டிவிட எத்தனிக்கின்ற அல்லது குடியரசின் மக்களுக்கிடையில் அதிருப்தியை அல்லது பற்றின்மையை ஏற்படுத்த அல்லது அத்தகைய குடிகளின் வெவ்வேறு வகுப்பினரிடையில் விரோதத்தையும் பகையையும் மேம்படுத்த எத்தனிக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம் - சனாதிபதி அல்லது இலங்கையிலுள்ள குடியரசின் அரசாங்கம் பிழைநெறிப்படுத்தப்பட்டது அல்லது கையாண்ட நடவடிக்கையில் பிழையிழைத்துள்ளது எனக்காட்டக் கருதல் அரசாங்கத்தில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் அல்லது நீதிநிருவாகத்தில் பிழை அல்லது பழுது உண்டெனா, அவ்விதம் காட்டப்பட்ட பிழை அல்லது பழுதினைத் திருத்தும் நோக்கத்துடன் எடுத்துக்காட்டுதல் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் கருமத்தைச் சட்டமுறையான வழிகளில் மாற்றுவிக்க எத்தனிக்கும்படி குடியரசின் மக்களைத் தூண்டுகின்ற அல்லது குடியரசின் மக்களுக்குள் பல்வேறு வகுப்பினருக்கிடையே வெறுப்பு அல்லது விரோத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளச்சியை உண்டாக்குந் தன்மையுள்ள கருமங்களை அகற்றுவதற்காக அவற்றைச் சுட்டிக்காட்டுதல் இப்பிரிவின் கீழ்த் தவறொன்றாகாது.

குடியரசோடு நேச உறவுள்ள அல்லது சமாதானமுள்ள நாட்டுக்கெதிராகப் போர் புரிதல்.

**121.** குடியரசோடு நேச உறவுள்ள அல்லது சமாதான முள்ள ஏதேனும் நாட்டின் அரசாங்கத்துக்கெதிராகப் போர்புரியும் அல்லது அத்தகைய போர்புரிய எத்தனிக்கும் அல்லது போர்புரிய உடந்தையளிக்கும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால், (அதற்குக் குற்றப்பணமும் சேர்க்கப்படலாம்) அல்லது குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படல் வேண்டும்.

குடியரசோடு நேச உறவுள்ள அல்லது சமாதானமுள்ள ஏதேனும் நாட்டின் ஆள்புலங்களில் கொள்ளையிடுதல்.

**122.** குடியரசோடு நேசஉறவுள்ள அல்லது சமாதானமுள்ள ஏதேனும் நாட்டின் ஆள்புலங்களில் கொள்ளையிடும், அல்லது கொள்ளையிட முன்னேற்பாடு செய்யும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும் அத்துடன் அத்தகைய கொள்ளையிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தக் கருதப்பட்ட அல்லது அத்தகைய கொள்ளையினால் பெறப்பட்ட ஏதேனும் ஆதனத்தை இழத்தற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**123.** பிரிவுகள் 121, 122 என்பவற்றிற் குறிப்பிடப்பட்ட எவையேனும் தவறுகளைப் புரிவதனால் அவ்வாதனம் பெறப்பட்டது என்பதனையறிந்து கொண்டு அதனைப் பெற்றுக்கொள்ளும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய, ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப்பணத்திற்கும் அவ்விதம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆதனத்தை இழத்தற்கும் ஆளா தல் வேண்டும்..

பிரிவுகள் 121, 122 என்பவற்றில் குறிப்பிடப்பட்ட போரினால் அல் லது கொள்ளை யினால் பெறப் பட்ட ஆதனத் தைப் பெற்றுக் கெள்ளல்.

**124.** பகிரங்க ஊழியராய் அரசினால் சிறையிலிடப் பட்ட கைதியை அல்லது போர்க் கைதி எவரை யேனும் தம் கட்டுக்காவலில் வைத்திருப்பவ ராயிருந்து அத்தகைய கைதி அடைத்து வைக் கப்பட்டிருக்கும் ஏதேனும் இடத்திலிருந்து அக் கைதி தப்பிச்செல்ல வேண்டுமென்று விடுகின்ற எவரும் இருபது ஆண்டுகள்வரை நீடிக்கப்படக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளா தல் வேண்டும்.

அரசினால் சிறையிலிடப் பட்ட கைதியை அல்லது போர்க் கைதி யைத் தம் கட்டுக்காவலில் வைத்திருக்கும் பகிரங்கஊழியர் வேண்டுமென்று அவரைத்தப்பிச் செல்லவிடுதல்.

**125.** பகிரங்க ஊழியராய் அரசினால் சிறையிலிடப் பட்ட கைதியை அல்லது போர்க் கைதி எவரை யேனும் தம் கட்டுக்காவலில் வைத்திருப்பவரா யிருந்து அத்தகைய கைதி அடைத்து வைக் கப்பட்டிருக்கும் ஏதேனும் இடத்திலிருந்து அக் கைதி தப்பிச்செல்லக் கவனயீனமாக விருக்கும் எவரும் மூன்று ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய

அரசினால் சிறையிலிடப் பட்டகைதியை அல்லது போர்க் கைதியைத் தம் கட்டுக்காவலில் வைத்திருக்கும் பகிரங்கஊழியர் அவர் தப்பிச் செல்லக் கவன யீனமாயிருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

அத்தகைய கைதி தப்பிச் செல்வதில் துணைபுரிதல், அவரை மீட்டல், அல்லது அவர்க்கும் புகலளித்தல்.

**126.** அரசினால் சிறையிடப்பட்ட அல்லது போர்க் கைதி எவரேனும் சட்டமுறையான கட்டுக் காவலிலிருந்து தப்பிச்செல்ல அறிந்துகொண்டு துணைபுரிகின்ற அல்லது உதவிசெய்கின்ற, அல்லது அத்தகைய எவரேனும் கைதியை மீட்கின்ற அல்லது மீட்க எத்தனிக்கின்ற அல்லது அவ்விதக் கட்டுக்காவலிலிருந்து தப்பியுள்ள எவரேனும் அத்தகைய கைதிக்குப் புகலளிக்கின்ற அல்லது அத்தகைய கைதி மீளவும் கைதுசெய்யப்படுவதற்கு எதிர்ப்புக்காண்பிக்கின்ற அல்லது காண்பிக்க எத்தனிக்கின்ற எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

விளக்கம். - இலங்கையில் குறிப்பிட்ட எல்லைகளுள் உலவிவருதற்கென வாக்குறுதியின் மீது விடுதலை செய்யப்பட்ட அரசின் கைதி அல்லது போர்க் கைதி ஒருவர் அவர் அவ்விதம் உலவி வருதற்குக் குறிக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பாற் சென்றால், அவர் சட்டமுறைக் கட்டுக் காவலிலிருந்து தப்பிச்செல்வதாகச் சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127. சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவரின் எழுத்திலான அதிகாரத்துடன் அல்லாது, இவ்வத்தியாயத்தின் கீழ்க் குற்ற வழக்கெதுவும் தொடரப்படுதலாகாது.

இவ்வத்தியாயத்தின் கீழான குற்ற வழக்குத் தொடுப்புக்குச் சட்டத் துறைத் தலைமையதிபதியின் அதிகாரம் தேவையாதல்.

## அத்தியாயம் VII

### கடற்படை, தரைப்படை, வான்படை என்பன தொடர்பான தவறுகள் பற்றி

128. குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள அலுவலர், மாலுமி, தரைப் படைவீரர், அல்லது வான்படைவீரர் ஒருவர் கலகம் புரிய உடந்தையளிக்கும், அல்லது அத்தகைய அலுவலர் மாலுமி, தரைப்படை வீரர் அல்லது வான்படைவீரரைப் பற்றுறுதியிலிருந்து அல்லது கடமையிலிருந்து மருட்டிக் கெடுக்க எத்தனிக்கும் எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

மாலுமி, தரைப்படை வீரர் அல்லது வான்படைவீரர் ஒருவர் கலகஞ்செய்ய உடந்தையளித்தல் அல்லது அவரைக் கடமையிலிருந்து மருட்டிக் கெடுத்தல்

129. குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள அலுவலர், மாலுமி, தரைப் படைவீரர் அல்லது வான்படைவீரர் ஒருவர் கலகம் புரிய உடந்தையளிக்கும் எவரும் அவ்வுடந்தையளித்தலின் விளைவாகக் கலகம் புரியப்படின், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்

அதன் விளைவாகக் கலகம் புரியப்படின் கலகத்துக்கு உடந்தையளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளா தல் வேண்டும்.

உயர்நிலை அலுவலர் தமது கடமையைப் புரியும்பொழுது, மாலுமி, தரைப் படை வீரர் அல்லது வான்படைவீரர் அவரைத் தாக்குதலுக்கு உடந்தைய ளித்தல்.

130. குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள அலுவலர், மாலுமி, தரைப் படைவீரர், அல்லது வான்படைவீரர் அவரது கடமையினைப் புரிபவராயிருக்கும் உயர் நிலை யலுவலரைத் தாக்குவதற்கு உடந்தையளிக் கும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளா தல் வேண்டும்.

தாக்குதலுக்கு உடந்தைய ளித்தல்.

131. குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள அலுவலர், மாலுமி, தரைப் படைவீரர் அல்லது வான்படைவீரர் அவரது கடமையினைப் புரிபவராயிருக்கும் உயர்நிலை அலுவலரைத் தாக்குவதற்கு உடந்தையளிக் கும் எவரும் அத்தகைய உடந்தையளித்தலின் விளைவாகத் தாக்குதல் புரியப்படின், ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொருவகை மறியலி னால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**132.** குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள அலுவலர், மாலுமி, தரைப் படைவீரர் அல்லது வான்படைவீரர் எவரேனும் படையை விட்டேக உடந்தையளிக்கும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.

மாலுமி, தரைப் படைவீரர், அல்லது வான்படை வீரர் ஒருவரின் கீழ்படியாச் செயலுக்கு உடந்தை யளித்தல்

**133.** குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள அலுவலர், மாலுமி, தரைப் படைவீரர், அல்லது வான்படைவீரர் ஒருவர் படைவிட்டேகியுள்ளார் என அறிந்துகொண்டு, அல்லது நம்புவதற்கு நியாயமுடையவராயி ருந்து கொண்டு, இதனகத்துப் பின்னர் விதி விலக்களிக்கப்பட்ட விதமாகவல்லாது, அத் தகைய அலுவலர், மாலுமி, தரைப்படைவீரர், அல்லது வான்படைவீரருக்குப் புகலளிக்கும் எவரும் இரண்டு ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படு தல்வேண்டும்.

விதிவிலக்கு: மனைவி ஒருவர் தனது கணவனுக்குப் புகலளிக்கும் விடயத் துக்கு இவ்வேற்பாடு விரிவுபடுவதாகாது.

படைவிட்டேகிய வருக்குப் புகல் அளித்தல்.

**134.** குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலிருந்து ஏகியவர் எவரேனும்

கப்பற்றலைவரின் கவனமின்மை யால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகக் கப்பலில் மறைந்து கொள்ளும் படை விட்டேகிறவர்.

அதன் கண் மறைந்திருக்கும் வர்த்தகக் கப்பல் ஒன்றின் தலைவர் அல்லது அதற்குப் பொறுப்பான ஆள், அவ்விதம் மறைந்திருப்பதனையறியாவிடினும், அத்தகைய தலைவர் அல்லது பொறுப்பாள் என்ற முறையில் தமது கடமையில் ஓரளவு கவனமின்மை காரணமாக அல்லது அக்கப்பலில் ஒழுக்கக் கட்டுப்பாட்டுக் குறை காரணமாகவல்லாது அவ்விதம் ஒழித்திருத்தலைப் பற்றி அவர் அறிந்திருக்கக்கூடுமானால், ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.

மாலுமி, தரைப் படைவீரர், அல்லது வான்படை வீரர் ஒருவரின் கீழ்படியாச் செயலுக்கு உடந்தை யளித்தல்

**135.** குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள அலுவலர், மாலுமி, தரைப்படைவீரர், அல்லது வான்படைவீரர் ஒருவரின் கீழ்ப்படிவிலாச் செயல் என அவர் அறிந்த ஒன்றுக்கு உடந்தையளிக்கும் எவரும், அவ்வித உடந்தையளித்தலின் விளைவாக அக்கீழ்ப்படியாமை புரியப்படின், ஆறு மாதம் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக் கப்படுதல் வேண்டும்.

கப்பற்படை ஒழுக்காற்றுச் சட்டம், தரைப் படைச்சட்டம், வான்படைச் சட்டம் என்பவற்றுக் குட்பட்ட ஆட்கள்

**136.** கடற்படை ஒழுக்காற்றுச் சட்டம், தரைப்படைச் சட்டம் வான்படைச் சட்டம் அல்லது அப்போதைக்கு வலுவுடையதாகவிருக்கும் அதுபோன்ற வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அவற்றின் கீழாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டவரான ஆள் எவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வத்தியாயத்தில் வரை விலக்கணங் கூறப் பட்ட தவறெதற்கும் இச்சட்டக்கோவையின்கீழ்த் தண்டனைக்குரியராகார்.

இவ்வத்தியாயத் தலுள்ள தவறு களுக்குத் தண்டிக்கப்படலாம்.

**137.** குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள அலுவலர், மாலுமி, தரைப்படைவீரர், அல்லது வான்படைவீரர் ஒருவரல்லாதவராக விருந்து கொண்டு, தாம் அத்தகைய மாலுமி, தரைப்படைவீரர் அல்லது வான்படைவீரர் என நம்பப்படலாம் என்ற கருத்துடன், அத்தகைய மாலுமி, தரைப்படை வீரர், அல்லது வான்படைவீரரால் பயன்படுத் தப்படும் ஏதேனும் உடைக்கு ஒத்த உடையை உடுக்கின்ற, அல்லது ஏதேனும் அடையாளச் சின்னத்தை ஒத்த ஒன்றைத் தாங்குகின்ற எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல் லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மாலுமி, தரைப் படைவீரர், அல்லது வான்படை வீரரின் உடையைத் தரித்தல்.

## அத்தியாயம் VIII

### பொது அமைதிக்கெதிரான தவறுகள் பற்றி

**138.** ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்ட கூட்டமொன்று, அக்கூட்டத்தில் அடங்கி யுள்ள ஆட்களின் பொதுவான நோக்கம் -

சட்டவிரோதமான கூட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக - இலங்கையிலுள்ள மாட்சி மைதங்கிய சனாதிபதியின் அரசாங்கத்தை அல்லது மூதவையை அல்லது பிரதிநிதிகள் சபையை அல்லது அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற முறையில் சட்டமுறையான தத்துவத்தைப் பிரயோகிப்பதில் எவரேனும் பகிரங்க ஊழியரைக் குற்றமுறையான வலோற்காரத்தினால் அல்லது குற்றமுறையான வலோற்காரத்தைக் காட்டுவதனால் பயந்து பணியவைப்பதற்கு அல்லது (சனாதிபதியின் ஆட்சி முறையை எதிர்த்தல்)

இரண்டாவதாக - ஏதேனும் சட்டம் நிறைவேற்றப்படுதலை அல்லது ஏதேனும் சட்டவழி அழைப்பாணைகள் முதலானவை நிறைவேற்றப்படுதலைத் தடுப்பதற்கு அல்லது (சட்டத்தை எதிர்த்தல் or சட்டத்திற்கு எதிராக நடத்தல்)

மூன்றாவதாக - ஏதேனும் சொத்தழிவு குற்றமுறையான அத்துமீறல் அல்லது வேறு தவறினைப் புரிவதற்கு அல்லது

நான்காவதாக - ஆளொருவர் மீதும் குற்ற முறை வலோற்காரம் பயன்படுத்தல் மூலம் அல்லது குற்றமுறையான வலோத்காரம் காண்பித்தல் மூலம் ஏதேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதனத்தை எடுப்பதற்கு அல்லது
உடைமை பெறுவதற்கு அல்லது எவ
ரேனும் ஆளொருவர் அல்லது பொது
மக்கள் உடைமையில் கொண்டிருந்த
அல்லது அனுபவித்து வந்த ஏதேனும்
வழியுரிமையை அல்லது தண்ணீர்
பயன்படுத்தும் உரிமையை அல்லது
வேறு அருவ உரிமையை அவ்வாள்
அல்லது பொதுமக்கள் பயன்படுத்
தாது செய்வதற்கு அல்லது ஏதே
னும் உரிமையை அல்லது உள
தென்றெண்ணப்படும் உரிமையை
வலியுறுத்துவதற்கு அல்லது

ஐந்தாவதாக - ஆளொருவர் செய்வதற்குச் சட்ட
முறையாகக் கட்டுப்பட்டிராத ஒன்றி
னைச் செய்ய அல்லது செய்வதற்
குச் சட்டமுறையான உரிமையுள்ள
ஒன்றினைச் செய்யாது விடக் குற்ற
முறை வலோற்காரம் பயன்படுத்தல்
மூலம் அல்லது குற்றமுறையான
வலோற்காரம் காண்பித்தல் மூலம்
ஆளொருவரைக் கட்டாயப்படுத்துவ
தற்கு அல்லது

ஆறாவதாக - இலங்கையின் மகாதேசாதிபதியின்
சம்மதமின்றி, அங்கு கூடியுள்ள ஆட்
கள் அல்லது அவர்களுள் எவரேனு
மொருவர் தங்களைப் பழக்கிக்
கொள்ள அல்லது பயிற்சியளித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள அல்லது போர்ப்படைக்கலங் களைப் பயன்படுத்துவதற்குப் பழக் கப்பட்ட அல்லது பயிற்சியளிக்கப் பட்ட அல்லது இராணுவ நடமாட்டத் தில் அல்லது இராணுவத் தோற்றங் களில் பயிற்சி செய்வதற்கு, ஆனதாயி ருப்பின், "சட்டவிரோதமான கூட்ட மென" சுட்டப்படும்.

விளக்கம் - கூடும்பொழுது சட்டவிரோதமாக விரோத கூட்டமொன்று பின்னர் சட்டவிரோதமானதாகலாம்.

சட்டவிரோத மான கூட்டத்தில் உறுப்பினரா யிருத்தல்.

**139.** ஏதேனும் கூட்டத்தைச் சட்டவிரோதமான கூட்ட மொன்றாக வாக்கும் நிகழ்வுகளை அறிந்து கொண்டு, கருத்துடன் அக்கூட்டத்தில் சேரும் அல்லது அதில் தொடர்ந் திருந்துவரும் எவரும் சட்டவிரோதமான கூட்டமொன்றின் உறுப்பின ரெனச் சொல்லப்படுவர்.

தண்டனை

**140.** சட்டவிரோதமான கூட்டத்தின் உறுப்பினர் எவரும் ஆறுமாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.

மரணம் விளைவிக்கும் ஏதேனும் ஆயுதந்தாங்கிச்

**141.** மரணத்தை விளைவிக்கும் ஏதேனும் ஆயு தத்தை அல்லது குற்றத்திற்கான ஆயுதமொன் றாகப் பயன்படுத்தப்படின் மரணத்தை விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கக்கூடிய எதனையேனும் தாங்கியவராயிருந்துகொண்டு சட்டவிரோதமான கூட்டத்தில் உறுப்பினராயிருக்கும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சட்டவிரோதமான கூட்டத்தில் சேருதல்.

142. சட்டவிரோதமான கூட்டமொன்று கலைந்து செல்லும்படி சட்டமுறையான அதிகாரியினால் கட்டளையிடப்பட்டதென அறிந்து அத்தகைய சட்டவிரோதமான கூட்டத்தில் சேரும் அல்லது தொடர்ந்திருந்துவரும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சட்டவிரோதக் கூட்டமொன்று கலைந்து செல்லும்படி கட்டளையிடப் பட்டது என அறிந்துகொண்டு அதில் சேருதல் அல்லது தொடர்ந் திருந்து வருதல்.

143. சட்டவிரோதமான கூட்டமொன்றினால் அல்லது அதன் எவரேனுமுறுப்பினரால் அத்தகைய கூட்டத்தின் பொது நோக்கத்தினை முன்னேற்றுவதற்கென வலோற்காரம் அல்லது வன்முறை பயன்படுத்தும் பொழுது அத்தகைய கூட்டத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கலகம் விளைவிக்கும் தவறுக்குக் குற்றவாளியாவார்.

பொது நோக்கத்தை முன்னேற்றுவதற்கு ஓர் உறுப்பினரால் வலோற்காரம் பயன்படுத்தப் படுதல்.

144. கலகம் விளைவித்தற்குக் குற்றவாளியாகும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு

கலகம் விளை வித்தலுக்குத் தண்டனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தி னால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக் கப்படுதல் வேண்டும்.

மரணம் விளைக்கும் ஆயுதந் தாங்கிக் கலகம் விளைத்தல்.

**145.** மரணத்தை விளைவிக்கும் ஏதேனும் ஆயு தத்தை அல்லது குற்றத்திற்கான ஆயுதமொன் றாகப் பயன்படுத்தப்படின் மரணத்தை விளை விக்கக்கூடிய எதனையேனும் தாங்கியவராய்க் கலகம் விளைத்தற்குக் குற்றவாளியாகும் எவ ரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.

பொது நோக்கத்தை முன்னேற்றுவதில் புரியப்பட்ட தவறு எதற்கும் சட்டவிரோதக் கூட்டஉறுப்பினர் ஒவ்வொருவரும் குற்றவாளியாக் கருதப்படல்.

**146.** சட்டவிரோதமான கூட்டமொன்றின் பொது நோக் கத்தினை முன்னேற்றுவதில் அந்தச் சட்ட விரோதக் கூட்டத்தின் உறுப்பினர் எவராலேனும் தவறொன்று புரியப்படின் அல்லது அந்நோக் கத்தை நிறைவேற்றுவதில் புரியப்படக்கூடுமென அச்சட்டவிரோதமான கூட்டத்தின் உறுப்பினர் அறிந்திருந்து அத்தகைய தவறொன்று புரியப் படின் அத்தவறு புரியப்படும் அந்நேரத்தில் அக்கூட்டத்தில் உறுப்பினராயிருந்த ஒவ்வோர் ஆளும் அத்தவறுக்குக் குற்றவாளியாவார்.

சட்டவிரோத மான கூட்ட மொன்றில் சேரும்படி ஆட்களைக்

**147.** ஏதேனும் சட்டவிரோதமான கூட்டத்தினைச் சேரும்படி அல்லது அதன் உறுப்பினராகும் படி எவரேனுமாளைக் கூலிக்கமர்த்துகின்ற அல் லது ஈடுபடுத்துகின்ற அல்லது வேலைக்கமர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற அல்லது கூலிக்கமர்தலை அல்லது ஈடுபடுத்தலை அல்லது வேலைக் கமர்த்துதலை முன்னேற்றுகின்ற அல்லது அதற்கு மறைமுக ஆதரவளிக்கின்ற எவரும் அத்தகைய சட்ட விரோதமான கூட்டத்தின் உறுப்பினராயிருந் தாற்போன்று தண்டிக்கப்படுதல் வேண்டு மென்ப தோடு அத்தகைய கூலிக்கமர்த்தல் ஈடுபடுத் தப்படல் அல்லது வேலைக் கமர்த்தலைப் பின்பற்றி அத்தகைய சட்டவிரோதமான கூட் டத்தின் உறுப்பினராக எவரேனும் அத்தகைய ஆளால் புரியப்படக்கூடிய ஏதேனும் தவறுக்கு அத்தகைய சட்டவிரோதமான கூட்டத்தின் உறுப்பினர் ஒருவராயிருந்தாற்போன்று அல்லது அத்தகைய தவறை அவரே புரிந்திருந்தாற் போன்று அதே விதமாகத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கூலிக்கமர்த்தல் அல்லது அதற்கு மறைமுக ஆதரவளித்தல்.

**148.** பொது மக்கள் சமாதானத்தைக் குழப்பக்கூடிய ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களின் கூட்டம் ஏதேனுமொன்றை கலைந்து செல்லும் படி அத்தகைய கூட்ட சட்டமுறையாகப் பணிக் கப்பட்டதன் பின்னர், அறிந்து கொண்டு சேரும், அதில் தொடர்ந்திருந்துவரும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொருவகை மறியலி னால் அல்லது குற்றப்பணத்தில் அல்லது இவை இரண்டிலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கலைந்து செல்லும்படி பணிக்கப்பட்ட பின்னர் ஐந்து அல்லது மேற்பட்ட ஆட்களில் கூட்டத்தில் அறிந்து கொண்டு சேருதல் அல்லது தொடர்ந்திருத்தல்.

**விளக்கம்** -அக்கூட்டம் 138ஆம் பிரிவின் பொருளுக்குட்படச் சட்டவிரோதமான கூட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொன்றாயின், தவறாளர் 142ஆம் பிரிவின் கீழ்த் தண்டிக்கப்படற்குரியர்.

கலகம் முதலியவற்றை அடக்கும் போது பகிரங்க ஊழியரைத் தாக்குதல் அல்லது தடைசெய்தல்.

**149.** சட்டவிரோதமான கூட்டமொன்றினைக் கலைக்க அல்லது ஏதேனும் கலகத்தை அல்லது பொது விடச் சண்டையினை அடக்க முயற்சிசெய்வதில் பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் தமது கடமையைப் புரிகின்ற பகிரங்க ஊழியர் எவரேனுமொருவரைத் தாக்குகின்ற அல்லது தாக்க அச்சுறுத்துகின்ற அல்லது தடைசெய்கின்ற அல்லது தடைசெய்ய எத்தனிக்கின்ற அல்லது அத்தகைய பகிரங்க ஊழியர்மீது குற்றமுறையான வலோற்காரத்தைப் பிரயோகிக்கின்ற அல்லது பிரயோகிக்கப் போவதாக அச்சுறுத்துகின்ற அல்லது பிரயோகிக்க எத்தனிக்கின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கலகம் விளைக்கக் கருதித் தேவையின்றி ஆத்திர மூட்டல்.

**150.** ஏதேனும் அத்தகைய ஆத்திரமூட்டல், கலகத்தவறை புரியச்செய்யும் என கருதி அல்லது அது அவ்வாறு செய்யக்கூடும் என அறிந்து கொண்டு சட்டவிரோதமான எதனையும் தீய எண்ணத்துடனும் தேவையின்றியும் செய்தல் மூலம் எவரேனுமாளுக்கு ஆத்திரமூட்டும் எவரும் அத்தகைய ஆத்திரமூட்டலின் விளைவாக அக்கலகத்தவறு புரியப்படின் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான

கலகம் புரியப்படின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும் அத்துடன் கலகத்தவறு புரியப்படாவிடின் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிரொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கலகம் புரியப்படாவிடின்.

**151.** ஏதேனும் சட்டவிரோதமான கூட்டம் அல்லது கலகம் நிகழுமிடத்து அத்தகைய சட்டவிரோதமான கூட்டம் நடைபெறும் அல்லது அத்தகைய கலகம் புரியப்படும் காணியின் சொந்தக்காரர் அல்லது அதில் குடியிருப்பவரும் அத்தகைய காணியின்மேல் அக்கறையுடைய அல்லது அக்கறைகோரும் எவரேனுமாளும், அத்தகைய தவறு புரியப்படுகின்றது. அல்லது புரியப்பட்டுள்ளது என அறிந்து கொண்டு அல்லது புரியப்படக்கூடுமென நம்புவதற்கு நியாயமுள்ளவராயிருந்து கொண்டு தமது வலுவுக்கேற்ற அதிவிரைவில் அறிவித்தலை ஆகக்கிட்டிய பொலிசு அலுவலருக்குக் கொடாவிடின் அல்லது அது புரியப்பட போகின்றது என நம்புவதற்கு நியாயம் இருக்கும் விடயத்தில் அதனைத் தவிர்ப்பதற்கு தமது வலுவிலுள்ள சட்டமுறையான வழிவகைகள் எல்லாவற்றையும் பயன்படுத்தாவிடின், அத்துடன் அது நடைபெறும் சம்பவத்தில் அக்கலகத்தை அல்லது சட்டவிரோதமான கூட்டத்தைக் கலைக்க

சட்டவிரோதமான கூட்டம் நடைபெறுங் காணியின் சொந்தக்காரர் அல்லது அதில் குடியிருப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அடக்க தமது அதிகாரத்திலுள்ள சட்டமுறையான எல்லாவழிகளையும் பயன் படுத்தாவிடின் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தினால் • தண்டிக்கப்படுதல் வேண்டும்.

எவ்வாளின் நன்மைக்காக் கலகம் புரியப்படு கிறதோ அவரின் பொறுப்பு.

**152.** எக்காணி தொடர்பில் அத்தகைய கலகம் ஏற் படுகின்றதோ அக்காணியின் சொந்தக்காரரான அல்லது அதில் குடியிருப்பவரான அல்லது அத் தகைய காணியில் அல்லது அக்கலகத்தை உண்டாக்கிய பிணக்கு விடயத்தில் ஏதேனும் அக்கறை கோருபவரான அல்லது அதில் இருந்து ஏதேனும் நன்மையைப் பெற்றவரான அல்லது அடைந்தவரான எவரேனுமாளின் நன்மைக் கென அல்லது அவர் சார்பில் கலகம் ஒன்று புரியப்படுமிடத்து, அத்தகைய கலகம் புரியப் படக் கூடுமென அல்லது அத்தகைய கல கத்தை புரிந்த சட்டவிரோதமான கூட்டம் நிகழக் கூடுமென நம்புவதற்கு காரணம் இருந்து கொண்டு அத்தகைய கூட்டத்தை அல்லது கலகத்தை நடைபெறாது தவிர்த்தற்கும் அதனை அடக்குதற்கும் கலைத்தற்கும் தம் அதிகா ரத்திலுள்ள சட்டமுறையான எல்லாவழிகளை யும் பயன்படுத்தத் தவறியிருந்தால், அவர் குற்றப் பணத்தினால் தண்டிக்கப்படுதல் வேண் டும்.

சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவரின் நன்மைக்காகப் புரியப்படும்

**153.** எக்காணி தொடர்பில் அத்தகைய கலகம் ஏற்படுகின்றதோ அக்காணியின் சொந்தக்கார ரான அல்லது அதிற் குடியிருப்பவரான அல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லது அத்தகைய காணியில் அல்லது அக்கல கத்தை உண்டாக்கிய பிணக்கு விடயத்தில் ஏதேனும் அக்கறை கோருபவரான அல்லது அதில் இருந்து நன்மையைப் பெற்றவரான அல்லது அடைந்தவரான எவரேனுமாளின் நன்மைக்கென அல்லது அவர் சார்பில் கல கம் ஒன்று புரியப்படும் இடத்து, அத்தகைய கலகம் புரியப்படக்கூடுமென அல்லது அத் தகைய கலகத்தைப் புரிந்த சட்டவிரோதமாக கூட்டம் நிகழக்கூடுமென நம்புவதற்கு கார ணம் இருந்து கொண்டு அத்தகைய கூட் டத்தை அல்லது கலகத்தை நடைபெறாது தவிர்த்தற்கும் அதனை அடக்கற்கும் கலைத் தற்கும் தம் அதிகாரத்திலுள்ள சட்ட முறையான எல்லாவழிகளையும் பயன்படுத்த அத்தகைய ஆளின் முகவர் அல்லது முகாமையாளர் தவறியிருந்தால் அத்தகைய முகவர் அல்லது முகாமையாளர் குற்றப்பணத்தினால் தண்டிக் கப்படுதல் வேண்டும்.

கலகத்துக்கு அவரின் முகவரது பொறுப்பு.

**154.** சட்டவிரோதமான கூட்டமொன்றில் சேர்வதற் கென அல்லது உறுப்பினராய் இருத்தற் கெனக் கூலிக்கமர்த்தப்பட்டுள்ளனர், ஈடுபடுத் தப்பட்டுள்ளனர் அல்லது வேலைக்கமர்த்தப் பட்டுள்ளனர், அல்லது கூலிக்க மர்த்தப்பட, ஈடுபடுத்தப்பட அல்லது வேலைக்க மர்த்தப் படவுள்ளனர் என அறிந்து கொண்டு எவ ரேனுமாட்களுக்குத் தாம் குடியிருக்கும் அல் லது தமது பொறுப்பில் அல்லது கட்டுப்பாட் டின் கீழ் இருக்கும் ஏதேனும் வீடு அல்லது

சட்டவிரோத மான கூட்டத் திற்கெனக் கூலிக்கமர்த் தப்பட்ட ஆட்களுக்குப் புகலளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவுகளில் புகலளிக்கும் அல்லது அவர் களைப் பெற்றுக்கொள்ளும் அல்லது சேர்க் கும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினா லும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சட்டவிரோதமான கூட்டமொன்றில் அல்லது கலகத் தில் பங்குகொள்வ தற்கெனக்கூலிக் கமர்த்தப்படல்.

**155.** நூற்றிமுப்பத்தெட்டாம் பிரிவில் விபரிக்கப் பட்ட செயல்களுள் எதையேனும் செய்ய அல்லது செய்வதில் உதவியளிக்க ஈடுபடும் அல்லது கூலிக்கமர்த்தப்படும் அல்லது கூலிக் கமர்த்தப்பட அல்லது ஈடுபட முனையும் அல் லது எத்தனிக்கும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல் லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் மேற்சொல்லப்பட்ட விதமாகக் ஈடு பட்டவராய் அல்லது கூலிக்கமர்த்தப்பட்டவ ராய் இருந்து கொண்டு மரணம் விளைவிக் கும் ஆயுதம் எதனையும், அல்லது தவறு விளைவிக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தப் பட்டால் மரணத்தை உண்டு பண்ணக் கூடிய எதனையும் தாங்கிச்செல்லும் அல்லது தாங் கிச் செல்ல ஈடுபடும் அல்லது முனையும் எவ ரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது குற்றப்

அல்லது ஆயுதந் தாங்கிச் செல்வதற்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணதினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**156.** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் பொதுவிடமொன்றில் சண்டையிடுவதன் மூலம் பொதுச் சமாதானத்தைக் குலைக்கும் பொழுது அவர்கள் "பொதுவிடச் சண்டை புரிவதாகச்" சொல்லப்படும்.

பொதுவிடச் சண்டை

**157.** பொதுவிடச் சண்டை புரியும் எவரும் ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பொதுவிடச் சண்டை புரிவதற்கான தண்டனை.

## அத்தியாயம் IX

### பகிரங்க ஊழியர்களினால் அல்லது அவர்கள் தொடர்பிலான தவறுகள் பற்றி

**158.** பகிரங்க ஊழியாராகவிருந்து கொண்டு அல்லது பகிரங்க ஊழியராகவர எதிர்பார்த்து இருந்துகொண்டு ஏதேனும் அலுவலகச் செயலைச் செய்யாது தவிர்த்து விடுவதற்கு அல்லது அவரது அலுவலகப்பணிகளை புரிவதில் எவரேனும் ஆளுக்கு ஆதரவை அல்லது ஆதரவின்மையைக் காட்டுவதற்கு அல்லது காட்டாது தவிர்த்துவிடுவதற்கு அல்லது இலங்கை அரசாங்கத்துடன் அல்லது அத்தகைய பகிரங்க

அலுவலகச் செயல் தொடர்பில் சட்டமுறையான ஊதியம் தவிர்ந்த அவாறிறை வினைப் பகிரங்க ஊழியர் பெறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர் என்ற தன்மையில் எவரேனுமாளுக்கு ஏதேனும் சேவையை அல்லது வினைக்கேட்டை உண்டாக்குவதற்கு அல்லது உண்டாக்க எத் தனிப்பதற்கு உந்து ஏதுவாக அல்லது வெகு மதியாக சட்டமுறையான ஊதியம் தவிர்ந்த வேறெவ்வகையதுமான அவாநிறைவெதனை யும் தமக்காக அல்லது வேறெவரேனுமா ளுக்காக எவரேனுமாளிடமிருந்து ஏற்கின்ற அல்லது பெறுகின்ற அல்லது ஏற்க உடன்படு கின்ற அல்லது பெற எத்தனிக்கின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறி யலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல் லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கங்கள்:-

"பகிரங்க ஊழியரொருவராக வர எதிர்பார்த்திருக்கும்": பதவியொன் றுக்குவர ஆளொருவர் தாம் அப் பதவிக்கு வரப்போவதாகவும் அவ் வாளுக்கு அப்போது சேவை புரி யப்போவதாகவும் அவர்களை நம் பச் செய்து ஏனையோரை வஞ் சித்தல் மூலம் அவாநிறைவொன் றைப் பெற்றல் அவர் ஏமாற்றுவ தற்குக் குற்றவாளியாகலாம் ஆனால் இப்பிரிவில் விபரிக்கப்பட்ட தவ றுக்கு அவர் குற்றவாளியல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவாநிறைவு" அவாநிறைவு" என்பது பண வகையான அவாநிறைவுகளுக்கோ பணத்தளவில் மதிப்பிடப்படும் அவா நிறைவுகளுக்கோ மட்டுப்படுத்தப் படவில்லை.

"சட்டமுறையான ஊதியம்": "சட்டமுறையான ஊதியம்" என்பது பகிரங்க ஊழியரொருவர் சட்ட முறையாகக் கோரக்கூடிய ஊதிய மொன்றுக்கு மட்டுப்படுத்தப் பட வில்லை. ஆனால் அவர் சேவை புரியும் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளும்படி அனுமதிக்கப்பட்ட எல்லா ஊதியங்களையும் உள்ள டக்கும்.

"செய்வதற்கு உந்து ஏதுவாக அல்லது வெகுமதியாக": தாம் செய்யக்கருதியிராத ஒன்றைச் செய்வதற்கு உந்து ஏதுவாக அல் லது அவர் செய்திராத ஒன்றைச் செய்வதற்கு வெகுமதியாக அவா நிறைவைப் பெறுவதற்கு ஆளொ ருவர் இச்சொற்களுள் அடங்குவார்.

**எடுத்துக்காட்டுக்கள்**

*(அ) யூரி ஆளொருவராக வர எதிர்பார்த் திருக்கும் "அ" என்பவர் வங்கியாளரான "க" வுக்கு ஆதரவாக யூரி முடிவென்றைத்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவதற்கு "அ"வுக்கு வெகுமதியாக "அ" வின் சகோதரனுக்கு "க" வின் வங்கியில் ஒரு உதவியைப் பெறுகிறார். "அ" அப் பிரிவில் விபரிக்கப்பட்ட தவறைப் புரிந்துள் ளார்.

(ஆ) பகிரங்க ஊழியரொருவரான "அ" தான் அரசாங்கத்துடன் கொண்டிருந்த செல்வாக்கு "க"வுக்குப் பட்டத்தைப் பெற் றுக்கொடுத்துள்ளதென. "க"வைப் பிழை யாக நம்பச்செய்து இச்சேவைக்கு வெகு மதியாக "அ" வுக்குப் பணம் கொடுக்கும் படி "அ"வைத் தூண்டுகிறார். இப்பிரிவில் விபரிக்கப்பட்ட தவறைப்புரிந்துள்ளார்.

பகிரங்க ஊழியர் ஒருவரின் மீது செல்வாக்கைப் பிரயோகிக்க ஊழல் அல்லது சட்ட விரோதமான வழிகளில் அவாநிறை வொன்றைப் பெறுதல்.

**159.** எவரேனும் பகிரங்க ஊழியர் ஏதேனும் அலு வலகச் செயலைச் செய்வதற்கு அல்லது செய் யாது விடுவதற்கு அல்லது அத்தகைய பகி ரங்க ஊழியரின் அலுவலகப் பணிகளைப் புரிவ தில் எவரேனுமாளுக்கு ஆதரவை அல்லது ஆதரவின்மை காட்டுவதற்கு அல்லது மூதவை யுடன் அல்லது மக்கள் பிரதிநிதிகள் சபையு டன் அல்லது இலங்கையில் நிறைவேற்று அர சாங்கத்துடன் அல்லது அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற முறையில் எவரேனுமாளுக்கு ஏதேனும் சேவையை அல்லது வினைக்கேட்டை உண்டாக்குவதற்கு ஊழலான அல்லது சட்ட விரோதயான வழிமூலம் தூண்டுவதற்கான உந்து ஏதுவாக அல்லது வெகுமதியாக சட்டமுறை யான ஊதியம் தவிர்ந்த வேறெவ்வகையது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அவாநிறைவெதனையும் தமக்காக அல்லது வேறெவரேனுமாளுக்காக எவரேனுமாளிடமிருந்து ஏற்கின்ற அல்லது பெறுகின்ற அல்லது ஏற்க உடன்படுகின்ற அல்லது பெற எத்தனிக்கின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பொது நூலகம் யாழ்ப்பாணம். இரவல் சேர்க்கைப் பகுதி

பகிரங்க ஊழியர் ஒருவரிடத்தில் செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கென அவாநிறைவொன்றைப் பெறுதல்.

**160.** எவரேனும் பகிரங்க ஊழியர் ஏதேனும் அலுவலகச் செயலைச் செய்வதற்கு அல்லது செய்யாது விடுவதற்கு அல்லது அத்தகைய பகிரங்க ஊழியரின் அலுவலகப் பணிகளைப் புரிவதில் எவரேனும் ஆளுக்கு ஆதரவை அல்லது ஆதரவின்மை காட்டுவதற்கு அல்லது மூதவையுடன் அல்லது பிரதிநிதிகள் சபையுடன் அல்லது இலங்கையின் நிறைவேற்று அரசாங்கத்துடன் அல்லது அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற முறையில் எவரேனுமாளுக்கு ஏதேனும் சேவையை அல்லது வினைக்கேட்டை உண்டாக்குவதற்கு ஆட்செல்வாக்கைப் பிரயோகிப்பதன் மூலம் தூண்டுவதற்கான உந்து ஏதுவாக அல்லது வெகுமதியாக சட்டமுறையான ஊதியம் தவிர்ந்த வேறெவ்வகையதுமான அவாநிறைவெதனையும் தமக்காக அல்லது வேறெவரேனுமாளுக்காக எவரேனுமாளிடமிருந்து ஏற்கின்ற அல்லது பெறுகின்ற அல்லது உடன்படுகின்ற அல்லது பெற எத்தனிக்கின்ற எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*நீதிபதி ஒருவரின் முன்னிலையில் வழக்கொன்றை வாதாடுவதற்கெனக் கட்டணம் பெறும் வழக்குரைஞர் ஒருவர் மனுச் செய்பவரின் சேவைகளையும் அவரின் உரிமைகளையும் எடுத்துக்கூறி அரசாங்கத்திற்குச் செய்யப்படும் மனுவொன்றை ஏற்பாடு செய்து திருத்திக் கொடுப்பதற்கெனச் சம்பளம் பெறும் ஆள் ஒருவர், தண்டனையளிக்கப்பட்ட குற்றவாளியொருவரின் தண்டனை பற்றி அது நியாயமற்றது எனக் காட்டும் முகமாகவுள்ள கூற்றுக்களை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும் சம்பளம் பெற்ற முகவர் ஒருவர், என்போர் தமது சொந்தச் செல்வாக்கைப் பிரயோகிப்பதில்லை அல்லது பிரயோகிப்பதற்காக எண்ணப்படுவதினால் இப்பிரிவினுள் அடங்கார்.*

மேலே வரையறுக் கப்பட்ட தவறுகளைப் புரிய உடந் தையளிக்கும் பகிரங்க ஊழியருக்கான தண்டனை.

**161.** இறுதியாக மேற்போந்த இரண்டு பிரிவுகளிலும் வரையறுக்கப்பட்ட தவறுகளுள் ஏதாவது அவர் தொடர்பில் புரியப்படுகின்றவரான பகிரங்க ஊழியராக இருந்துகொண்டு தவறுக்கு உடந்தையளிக்கும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*"அ" ஒரு பகிரங்க ஊழியர் அவரின் மனைவியான "ஆ" குறிப்பிட்ட ஒருவருக்கு உத்தியோகத்தை "அ" வைக்கொண்டு பெற்றுக் கொடுப்பதற்கான உள் உந்தாக பரிசொன்றைப் பெற்றுக்கொள்கிறார். அவள் அவ்விதம் செய்வதற்கு "அ" உடந்தையளிக்கிறார். "ஆ"- ஓராண்டுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படக்குரியவர். "அ" மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படற்குரியவர்.*

எவரேனுமாளுக்கு அல்லது அரசாங்கத்துக்கு ஊறு ஏற்படுத்தும் கருத்துடன் பகிரங்க ஊழியர் சட்டப் பணிப்புக்குக் கீழ்ப் படியாமை.

**162.** எவரேனுமாளுக்கு அல்லது அரசாங்கத்திற்கு ஊறு ஏற்படுத்தும் கருத்துடன் அல்லது அத்தகைய கீழ்ப்படிவின்மையினால் தாம் ஊறு ஏற்படுத்தக்கூடும் என அறிந்து கொண்டு பகிரங்க ஊழியரொருவராக இருந்து கொண்டு பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் தாம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்ற வழிபற்றிய சட்டப்பணிப்பெதனையும் அறிந்து கீழ்படியாது நடக்கும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*நீதிமன்றம் ஒன்றினால் "க" வுக்குச் சாதகமாக அளிக்கப்பட்ட தீர்வை ஒன்றைத் திருப்தி செய்வதற்கென அதை நிறைவேற்றுமுகமாக ஆதனத்தைத் கைப்பெற்ற சட்டத்தினால் பணிக்கப்பட்ட அலுவலராக இருந்து கொண்டு "அ" என்பவர் தாம் அவ்விதம் செய்வதால் "க" விற்கு ஊறு ஏற்படுத்தக் கூடும் என அறிந்துகொண்டு அச்சட்டப்பணிப்பினை அறிந்து கீழ்ப்படியாது விடுகிறார். இப்பிரிவில் வரையிலக்கணம் கூறப்பட்ட தவறினை "அ" புரிந்துள்ளார்.*

ஊறுவிளைவிக்கும் கருத்துடன் பகிரங்க ஊழியர் சரியானதல்லாத அவரும் ஒன்றைத் தயாரித்தல்.

**163.** பகிரங்க ஊழியர் ஒருவராகவும், அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையில், ஏதேனும் ஆவணத்தைத் தயாரிக்கும் அல்லது மொழி பெயர்க்கும் பொறுப்புடையவராகவும் இருந்து கொண்டு எவரேனும் ஆளுக்கு அதனால் ஊறு விளைவிக்கும் கருத்துடன் அல்லது அதனால் தாம் ஊறுவிளைவிக்கக்கூடும் என அறிந்து கொண்டு, சரியானதல்ல என அவர் அறிந்த அல்லது நம்புவதற்கிடமுள்ள முறையில் அவ்வாவணத்தைத் தயாரிக்கின்ற அல்லது மொழிபெயர்க்கின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அஞ்சல், தொலைச் செய்திப் போக்குவரத்துத் திணைக்களப் பகிரங்க ஊழியர் மோசடியாக அல்லது தீயநோக்கத் துடன் கடமை திறம்பல்.

**164.** அரசாங்கத்தின் அஞ்சல் தொலைசெய்திப் போக்குவரத்து திணைக்களத்தின் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள பகிரங்க ஊழியராகவிருந்து கொண்டு அனுப்பிவைப்பதற்கென அவரிடம் சட்டப்படியாக ஒப்படைக்கப்பட்ட செய்தி எதனையும் மோசடியாக அல்லது தீயநோக்கத்தோடு இரகசியமாக கொண்டு செல்கின்ற அல்லது கவர்ந்து செல்கின்ற மாற்றுகின்ற அல்லது அனுப்பாது விடுகின்ற அல்லது மேற்சொல்லப்பட்டவாறான அவரது ஊழியத்தின் போது அவராற்பெறப்பட்ட ஏதேனும் செய்தியை மோசடியாக அல்லது தீயநோக்கத்தோடு அதனைப் பெறுவதற்கு அதிகாரமில்லாத வேறு ஆள் எவர்க்கேனும் வெளியிடுகின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல்.

அஞ்சல், தொலைச் செய்திப் போக்கு வரத்துத் திணைக்களப் பகிரங்க ஊழியரின் தீய ஒழுக்கம்.

**165.** அரசாங்கத்தின் அஞ்சல், தொலைச் செய்திப் போக்குவரத்துத் திணைக்களத்தில் வேலையிலமர்த்தப்பட்டுள்ள பகிரங்க ஊழியராகவிருந்து கொண்டு குடிவெறியினால், கவலையீனத்தினால் அல்லது வேறு தீய ஒழுக்கத்தினால் ஏதேனும் செய்தி கடிதம் அல்லது அஞ்சல் பொதி அனுப்பப்படுதலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்தேற்படுத்தும் அல்லது அதனைச் சுணக்கும் எவரும் மூன்று மாதம் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொரு வகை மறியலினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டிலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அஞ்சல், தொலைச் செய்திப் போக்கு வரத்துத் திணைக்களப் பகிரங்க ஊழியரின் மோசடி.

**166.** அரசாங்கத்தின் அஞ்சல் தொலைச் செய்தி போக்குவரத்துத் திணைக்களத்தில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள பகிரங்க ஊழியராக விருந்து கொண்டு ஏதேனும் தந்திச் செய்தியை அதற்கான விதிக்கப்பட்ட கட்டணத்தைப்பெற்றுக் கொள்ளாது அதனால் மோசடி செய்யும் கருத்துடன் தந்தி, மூலம் அனுப்பும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக் கப்படுதல் வேண்டும்.

அஞ்சல், தொலைச் செய்திப் போக்கு வரத்துத் திணைக்களப் பகிரங்க ஊழியரால் செய்தி முதலியவற்றுக்குப் புரியப்படும் ஊறு.

**167.** அரசாங்கத்தின் அஞ்சல், தொலைச்செய்தி போக்குவரத்துத் திணைக்களத்தில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள பகிரங்க ஊழியராக விருந்து கொண்டு ஏதேனும் தந்திச்செய்தியை அல்லது கடிதத்தை அல்லது அஞ்சல் பொதியைத் தமது கடமைக்கு முரணாக, இரகசியமாக எடுத்துச்செல்லும், அழிக்கும், சிதைக்கும் அல்லது திறக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டி னாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**168.** பகிரங்க ஊழியர் ஒருவராகத் தாம் அவ்விதம் பதவி வகிக்கவில்லை என அறிந்து கொண்டு பகிரங்க ஊழியர் ஒருவராக ஏதேனும் குறிப் பிட்ட பதவி வகிப்பதாக பாசாங்கு செய்து, அல்லது அவ்விதம் பதவி வகிக்கும் வேறு எவரேனும் ஆளைப் பொய்யாக ஆள்மாறாட்டம் செய்து, அவ்விதம் மேற்கொண்டுள்ள பண்பில் அத்தகைய பதவியின் போர்வையில் ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது செய்ய எத்த னிக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகை யிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டி னாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியர் ஒருவரை ஆள் மாறாட்டம் செய்தல்.

**169.** குறிப்பிட்ட வகுப்பொன்றைச் சேர்ந்த பகிரங்க ஊழியர் ஒருவர் எனத் தாம் நம்பப்படலாம் என்ற கருத்துடன் அல்லது அவ்விதம் நம்பப் படக்கூடும் என அறிந்து கொண்டு அவ்வகுப் பைச் சேர்ந்த பகிரங்க ஊழியராயிராமல் அவ் விதம் வகுப்பைச் சேர்ந்த பகிரங்க ஊழியரால் பயன்படுத்தப்படும் ஏதேனும் உடையை அணி கின்ற அல்லது அடையாளத்தை ஒத்த ஏதேனும் உடையை அல்லது அடையாளத்தை ஒத்த ஏதேனும் உடையை அணிகின்ற அல்லது தாங்குகின்ற எவரும், மூன்று மாதங்கள் வரை

மோசடியான கருத்துடன் பகிரங்க ஊழியரால் பயன்படுத்தப் படும் உடுப் பணிதல் அல்லது அடையாளம் தாங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யில் ஒருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.

## அத்தியாயம் IX அ

## தேர்தல்கள் தொடர்பான தவறுகள் பற்றி.

"அபேட்சகர்" "தேர்தலுரிமை" என்பன.

**169 அ.** இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்கென,

(அ) "அபேட்சகர்" என்பது ஏதேனும் தேர்த லுக்கென அபேட்சகராகப் பெயர் குறிப்பிடப் பட்ட ஆள் ஒருவர் எனப் பொருள்படுவதோடு தேர்தல் ஒன்றை நடாத்த எண்ணியுள்ள பொழுது அதில் தாம் முன்வரவிருக்கும் அபேட்சகர் ஒருவராக தம்மைக் காட்டிக்கொள்ளும் ஆள் ஒருவரையும் உள்ளடக்கும்.

எனினும் அத்தகைய தேர்தலின் அவர் அபேட் சகர் ஒருவராக பின்னர் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) "தேர்தலுரிமை" என்பது தேர்தல் ஒன் றின் அபேட்சகர் ஒருவராக நிற்பதற்கு அல்லது நில்லாது விடுவதற்கு அல்லது அபேட்சகரா தலை விட்டு நீங்குவதற்கு அல்லது வாக்களிப் பதற்கு அல்லது வாக்களியாது விடுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள் ஒருவருக்குள்ள உரிமை எனப்பொருள் படும்.

169 ஆ. (1) (அ). ஏதேனும் தேர்தல் உரிமையை பிரயோகிக்கும்படி எவரேனுமாளை அல்லது வேறாளை தூண்டுவதன் நோக்கமாக அல்லது அத்தகைய உரிமையை பிரயோகித்தற்காக ஆள் எவர்க்கேனும் வெகுமதியளிக்கும் நோக்கமாக எவரேனுமாளுக்கு அவாநிறை வொன்றைக் கொடுக்கின்ற அல்லது,

தேர்தல் ஒன்று தொடர்பிலான கைலஞ்சம்.

(ஆ). அத்தகைய ஏதேனும் உரிமையை பிரயோ கித்தற்கான அல்லது ஏதேனும் உரிமையை வேறு ஆள் எவரேனும் பிரயோகிக்கும்படி செய் யத் தூண்டுவதற்கான அல்லது தூண்ட எத்த னிப்பதற்கான வெகுமதியாகத் தமக்கென அல்லது வேறு ஆள் ஒருவருக்கென ஏதேனும் அவாநிறைவை, எவரும் கைலஞ்சத் தவறு புரிந்தவராவார். எனினும் பகிரங்க கொள்கை பற்றிய வெளிப்படுத்தல் அல்லது பொதுச் செயல் எதுவும் பற்றிய வாக்குறுதி இப்பிரிவின் கீழான தவறொன்றாதலாகாது.

(2) அவாநிறைவொன்றைக் கொடுக்க முனைகின்ற அல்லது இசைகின்ற அல்லது பெற்றுக் கொடுக்க முனைகின்ற அல்லது எத்தனிக் கின்ற ஆளொருவர் அவா நிறைவொன்றை கொடுத்தவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அவாநிறைவொன்றைப் பெறுகின்ற அல்லது ஏற்றுக்கொள்ள இசைகின்ற அல்லது பெற எத்தனிக்கின்ற ஆளொருவர் அவாநிறைவொன்றை ஏற்றுக்கொள்வதாக கருதப்படுதல் வேண்டும். அத்துடன் தாம் செய்யக் கருதியிராதவொன்றைச் செய்வதற்கான உந்தேதுவாக அல்லது அவர் செய்திராதவொன்றைச் செய்தமைக்கான வெகுமதி ஒன்றாக அவாநிறைவொன்றை ஏற்றுக்கொள்ளும் ஆளொருவர் வெகுமதி ஒன்றாக அவாநிறைவை ஏற்றுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

தேர்தல்களில் தகாத செல்வாக்கு

**169 இ.**(1). ஏதேனும் தேர்தல் உரிமை தங்குதடையின்றி பிரயோகிக்கப்படுவதில் வேண்டுமென்று தலையிடுகின்ற அல்லது தலையிட எத்தனிக்கின்ற எவரும் தேர்தல் ஒன்றில் தகாத செல்வாக்கைப் பிரயோகித்தல் என்னும் தவறினைப் புரிந்தவராவர்.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுத்தன்மைக்கு பங்கமின்றி.

(அ) ஏதேனும் வகையான ஊறு ஏற்படும் என எவரேனும் அபேட்சகரை அல்லது வாக்காளரை அல்லது அபேட்சகர் அல்லது வாக்காளர் ஒருவர் அக்கறை கொண்டுள்ள எவரேனும் ஆளைப் பயப்படுத்துகின்ற அல்லது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) எவரேனும் அபேட்சகர் அல்லது வாக்காளர் அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள எவரேனும் வேறு ஆள் எவரும் தெய்வீக வெறுப்புக்கு அல்லது ஆன்மீக நிந்தைக்கு ஆட்படக்கூடும் என அபேட்சகரை அல்லது வாக்காளரை நம்பும்படி செய்யத் தூண்டுகின்ற அல்லது தூண்ட எத்தனிக்கின்ற,

எவரும் ஓராம் உட்பிரிவின் பொருளுக்குட்பட அத்தகைய அபேட்சகர் அல்லது வாக்காளர் தேர்தலுரிமையைத் தங்கு தடையின்றி பிரயோகிப்பதோடு தலையிடுவதாக கருதப்படுதல் வேண்டும்.

(3) பகிரங்க கொள்கை பற்றிய வெளிப்படுத்தல் அல்லது பொதுச் செயல் எதுவும் பற்றிய வாக்குறுதி ஒன்று அல்லது தேர்தலுரிமை யொன்றில் தலையிடும் கருத்தின்றித் தனியே சட்ட உரிமையொன்றை பிரயோகித்தல் இப்பிரிவின் கருத்துக்குட்படத் தலையீடாகக் கருதப்படுதலாகாது.

தேர்தல்களில் ஆள் மாறாட்டம்

**169ஈ.** (1) உயிருடனிருக்கின்ற அல்லது இறந்துபோன வேறு ஆள் ஒருவரின் பெயரில் அல்லது உண்மையில்லாத பெயரில் தேர்தல் ஒன்றில் வாக்குச்சீட்டுக்கு விண்ணப்பிக்கின்ற அல்லது வாக்களிக்கின்ற எவரும், அல்லது அத்தகைய தேர்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில் வாக்களித்து விட்டு பின்னர் அதே தேர்தலில் தமது சொந்தப் பெயரில் வாக்குச்சீட்டுக்கு விண்ணப்பிக்கின்ற எவரும், அத்துடன் அத்தகைய வழியில் எவரேனும் ஆள் வாக்களிப்பதற்கு உடந்தையளிக்கின்ற அல்லது அவரைக் கொண்டு வாக்களிப்பிக்கின்ற அல்லது வாக்களிப்பிக்க எத்தனிக்கின்ற எவரும் தேர்தலில் ஆள்மாறாட்டம் செய்த தவறு புரிந்தவராவர்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்கெனத் "தேர்தல்" என்னும் சொல், ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் அல்லது அதன் கீழாக்கப்பட்ட எவையேனும் விதிகள் அல்லது ஒழுங்குவிதிகளின் கீழ் அல்லது அவற்றின் பயனாக, ஏதேனும் பிரச்சினை தொடர்பில் ஏதேனும் குறிப்பிட்ட ஆட்கள் கூட்டத்தின் பெரும்பான்மையினரின் அபிப்பிராயத்தை தெரிந்து கொள்வதற்கென நடைபெறும் வாக்கெடுப்பு அல்லது வாக்குச் சீட்டளிப்பை உட்படுத்திய ஏதேனும் நடவடிக்கையை உள்ளடக்கும்.

கைலஞ்சத்துக்கான தண்டனை.

**169 உ.** கைலஞ்சத் தவறு புரியும் எவரும் உடனடியாக குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

ஆயினும் விருந்தளித்தல் மூலமான கைலஞ்சம் இருநூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்: - "விருந்தளித்தல்" என்பது உணவு, குடி, களியாட்டு அல்லது பொருள் கள் அடங்கிய அவாநிறைவான அவ்வித கைலஞ்சம் எனப் பொருள்படும்.

**169 ஊ.** தேர்தல் ஒன்றில் தகாத செல்வாக்கு பயன் படுத்தும் தவறுபுரியும் எவரும் உடனடியாக குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும். அத்துடன் தேர்தல் ஒன் றில் ஆள்மாறாட்டத் தவறு புரியும் எவரும் உட னடியாக குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, முந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

தேர்தல் ஒன்றில் தகாத செல்வாக்குக் கான அல்லது ஆள் மாறாட்டத்துக்கான தண்டனை.

**169 எ.** தேர்தல் ஒன்றில் பெறுபேற்றினைப் பாதிக்கும் கருத்துடன் எவரேனும் அபேட்சகரின் சொந்தக் குணம் தொடர்பில் அல்லது நடத்தை தொடர் பில் பொய்யானதும், பொய்யானது என அவர் அறிந்து அல்லது நம்பும் அல்லது உண்மை யானது என அவர் நம்பாததுமான நிகழ்வு பற்றியதொரு கூற்று எனக்கொள்ளப்படும் ஏதே னும் கூற்றைச் செய்கின்ற அல்லது வெளியிடு கின்ற எவரும் தவறொன்றுக்கு குற்றவாளியா கிக் குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தேர்தல் ஒன்று தொடர்பில் பொய்யான கூற்று.

**169 ஏ.** அக்காலத்து வலுவுடையதாயிருக்கும் ஏதே னும் சட்டத்தினால் அல்லது சட்டவலுவுள்ள

தேர்தல் கணக்குகளை வைத்திருக்கத் தவறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் விதியினால் ஏதேனும் தேர்தலில் அல்லது அது தொடர்பில் கூறப்பட்ட செலவுகள் பற்றிய கணக்குகளை வைத்திருக்கும்படி தேவைப்படுத்தப்பட்டவராய் இருந்து கொண்டு, அத்தகைய கணக்குகளை வைத்திருக்கத் தவறும் எவரும் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து முந்நூறு ரூபா வரை செல்லக் கூடிய குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் X

### பகிரங்க ஊழியரின் சட்டமுறை அதிகாரத்தை அவமதித்தல்

பகிரங்க ஊழியரின் அழைப்புக் கட்டளை முதலியன சேர்ப்பிக்கப் படாது தவிர்ப்பதற்கெனத் தலைமறைவாகவிருத்தல்.

**170.** அழைப்புக்கட்டளைகள், அறிவித்தல், கட்டளை என்பவற்றை விடுப்பதற்கு அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் சட்டமுறையான தகுதிவாய்ந்த எவரேனும் பகிரங்க ஊழியர் ஒருவரிடமிருந்து வரும் அழைப்புக் கட்டளை, அறிவித்தல் அல்லது கட்டளை தம் மீது சேர்க்கப்படுதலைத் தவிர்ப்பதெற்கெனத் தலை மறைவாகவிருக்கும் எவரும் ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரணமறியலினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும் அல்லது அவ்அழைப்புக்கட்டளை அல்லது அறிவித்தல் அல்லது கட்டளை நீதிமன்றம் ஒன்றில் நேரில் அல்லது முகவர்மூலம் தோன்றுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கானதாயின் அல்லது ஆவணம் ஒன்றைக் காண்பிப்பதாயின் ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரணமறிய லினால் அல்லது இவையிரண்டினாலும் தண் டிக்கப்படுதல் வேண்டும்.

அழைப்புக் கட்டளை முதலியன சேர்ப்பிக்கப் படுதலைத் தடுத்தலும், அவை வெளியிடப் படுதலைத் தடுத்தலும்.

**171.** அழைப்புக்கட்டளைகள், அறிவித்தல், கட்டளை என்பவற்றை விடுப்பதற்கு அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் சட்டமுறையான தகுதிவாய்ந்த எவரேனும் பகிரங்க ஊழியர் ஒருவரிடமிருந்து வரும் அழைப்புக்கட்டளை, அறிவித்தல் அல்லது கட்டளை தம்மீது அல் லது வேறு ஆள் எவர் மீதும் சேர்க்கப்படு தலை எவ்வகையாலேனும் கருதித்தடுக்கின்ற எவரும்,

அல்லது அத்தகைய அழைப்புக்கட்டளை, அறிவித்தல் அல்லது கட்டளை ஏதேனுமிடத் தில் ஒட்டப்படுத்தலை கருதித்தடுக்கின்ற எவ ரும்,

அல்லது அத்தகைய அழைப்புக்கட் டளை அறிவித்தல் அல்லது கட்டளை சட்ட முறை யாக ஒட்டப்பட்ட இடத்திலிருந்து அவற் றைக் கருதி அகற்றுகின்ற எவரும்,

அல்லது அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் அத்தகைய பிரகடனம் செய்யப் படுதலை பணித்தற்குச் சட்டமுறையான தகுதி வாய்ந்த எவரேனும் பகிரங்க ஊழியரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தின் கீழ் ஏதேனும் பிரகடனம் செய்யப்படுதலை கருதித்தடுக்கும் எவரும்,

ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான சாதாரண மறியலினால் அல்லது ஐம்பது ரூபாவரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினா லும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அல்லது அவ்வழைப்புக்கட்டளை, அறிவித்தல் அல்லது கட்டளை அல்லது பிரகடனம் நீதி மன்றம் ஒன்றில் நேரில் அல்லது முகவர் மூலம் தோன்றுவதற் கானதாயின் அல்லது ஆவணம் ஒன்றைக் காண்பிப் பதற்கானதாயின் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல் லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியர் ஒருவரின் கட்டளைக் குக் கீழ்ப் படிந்து சமூகமளி யாமை.

**172.** பகிரங்க ஊழியர் ஒருவர் என்ற தன்மையில் அவற்றை விடுவிப்பதற்குச் சட்டமுறையான தகுதிவாய்ந்த பகிரங்க ஊழியரிடமிருந்து வரும் அழைப்புக்கட்டளை, அறிவித்தல், கட் டளை அல்லது பிரகடனத்திற்குக் கீழ் படிந்து குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் நேரில் அல்லது முகவர் மூலம் சமூகமாயிருப்பதற் குச் சட்டப்படி கட்டுப்பட்டவராய் இருந்து கொண்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடயத்திலும் நேரத்திலும் சமூகமளிக்கக் கருதித் தவறும் அல்லது அவர் அவ்விதம் அங்கிருந்து புறப்படுவதற்குரிய சட்டமுறை யான நேரத்தின் முன்னர், அவர் சமூகமாயி ருக்க கட்டுப்பட்டுள்ள இடத்திலிருந்து புறப் படும் எவரும்,

ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான சாதாரண மறியலினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அல்லது, அவ்அழைப்புக்கட்டளை, அறிவித் தல், கட்டளை, அல்லது பிரகடனம் நீதிமன்றம் ஒன்றில் நேரில் அல்லது முகவர் மூலம் தோன்று வதற்கான தாயின், ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல் லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை யிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ).அழைப்புக் கட்டளை ஒன்றிற்கு கீழ்ப் படிந்து கொழும்பிலுள்ள உயர் நீதிமன் றத்தில் தோன்றுவதற்கு சட்டப்படிக் கட் டுப்பட்டவரான "அ" அத்தகைய கருத்து டன் தோன்றாது விடுகின்றார். இப்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள தவறினை "அ" புரிந் துள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(ஆ). மாவட்ட நீதிபதியினால் விடுக்கப் பட்ட அழைப்புக் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து சாட்சியொருவராக மாவட்ட நீதி பதி முன்னர் தோன்றுவதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டவரான "அ" அத்தகைய கருத்துடன் தோன்றாது விடுகின்றார். இப் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள தவறினை "அ" புரிந்துள்ளார்.*

பகிரங்க ஊழியர் ஒருவருக்கு ஆவணத் தைக் காண்பிப் பதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டு ள்ள ஆள் ஒருவர் அதனைக் காண்பிக்கத் தவறுதல்.

**173.** பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் அவரிடம் ஏதேனும் ஆவணத்தை காண்பிப்பதற்கு அல் லது ஒப்படைப்பதற்கு சட்டப்படி கட்டுப்பட்ட வராய் இருந்துகொண்டு அதனைக்கருதி காண்பியாதுவிடும் அல்லது ஒப்படையாதுவிடும் எவரும் ஒருமாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அல்லது அத்தகைய ஆவணமானது நீதிமன்றம் ஒன்றின் முன்னர் காண்பிக்கப்பட வேண்டியது அல்லது ஒப்படைக்கப்படவேண்டியதொன்றா யின் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தி னால் அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டு

*நீதவான் நீதிமன்றம் ஒன்றின் முன்னர் ஆவணமொன்றைக் காண்பிப்பதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ளவரான "அ" கருதிக் காண்பியாது விடுகிறார். இப்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள தவறினை "அ" புரிந்துள்ளார்.*

**174.** பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் அவருக்கு ஏதேனும் விடயம் தொடர்பில் ஏதேனும் அறிவித்தலை அல்லது தகவலைக் கொடுக்கச் சட்டப்படி கட்டுப்பட்டவராய் இருந்துகொண்டு சட்டத்தினால் பணிக்கப்பட்ட முறையாகவும் அந்நேரத்திலும் அத்தகைய அறிவித்தலை அல்லது தகவலை கருதிக் கொடுக்காதுவிடும் எவரும் ஒருமாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரணமறியலினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியருக்கு அறிவித்தல் அல்லது தகவல் கொடுக்கச் சட்டப்படி கட்டுப் பட்டுள்ள ஆளொருவர் அதனைக் கொடுக்காது விடல்.

அல்லது கொடுக்கும்படி பணிக்கப்பட்ட அறிவித்தல் அல்லது தகவல் தவறொன்று புரியப் படுதல் தொடர்பிலானதாயின் அல்லது தவறொன்று புரியப்படுதலை தடுப்பதற்கு தேவையானதாயின் அல்லது தவறாளர் ஒருவரைப் பிடித்தற்கானதாயின் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினாலும் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறான தகவலைக் கொடுத்தல்.

**175.** பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் அவருக்கு ஏதேனும் விடயம் தொடர்பில் தகவல் கொடுக்கச் சட்டப்படி கட்டுப்பட்டவரானவராய் இருந்துகொண்டு அவ்விடயம் தொடர்பில் பொய்யானதென அவர் அறிந்து அல்லது பொய்யானது என அவர் அறிவதற்கு நியாயமுள்ள தகவலை உண்மையானதெனக் கொடுக்கும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரணமறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக் கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அல்லது அவர் கொடுப்பதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள அத்தகவல் தவறொன்று புரியப்படுதல் தொடர்பிலான தாயின் அல்லது தவறொன்று புரியப்படுதலை தடுப்பதற்கு தேவையானதாயின் அல்லது தவறாளர் ஒருவரைப் பிடிப்பதற்கானதாயின் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*"அ" என்னும் காணிச் சொந்தக்காரர் தமது தோட்டத்தின் எல்லைகளுள் கொலை புரியப்பட்டுள்ளது என அறிந்து கொண்டு அம்மரணம் பாம்புக் கடியின் விளைவினால் தற்செயலாக நிகழ்ந்ததென அப்பிரிவு நீதிவானுக்கு வேண்டு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மென்று பிழையான தகவலைக் கொடுக் கிறார். "அ" இப்பிரிவில் விபரிக்கப்பட் டுள்ள தவறுக்குக் குற்றவாளியாவார்.*

**176.** அவ்விதம் கட்டுப்படும்படி பணிப்பதற்குச் சட் டப்படி தகுதிவாய்ந்த பகிரங்க ஊழியர் ஒரு வரால் உண்மையை எடுத்துக்கூறுவதற்கு சத் தியத்தின் மூலம் அல்லது உறுதியுரை மூலம் அவர் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டு மென பணிக்கப்பட்டவிடத்து அவ்விதம் செய்ய மறுக்கும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல் லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியரொரு வரால் சத்தியஞ் செய்துகொள்ள முறைப்படி பணிக்கப்படு மிடத்துச் சத்தியஞ்செய்ய மறுத்தல்.

**177.** பகிரங்க ஊழியர் ஒருவரின் சட்டமுறையான தத்துவங்களை பிரயோகிப்பதில் அத்தகைய பகிரங்க ஊழியரினால் ஏதேனும் விடயம் தொடர்பில் கேட்கப்படும் கேள்விகளுக்கு எவ ரேனும் பகிரங்க ஊழியர்களுக்கு ஏதேனும் விடயம் தொடர்பில் உண்மை கூறுவதற்கு சட்டப்படி கட்டுப்பட்டவராய் இருந்து கொண்டு விடயளிக்க மறுக்கும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரணமறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல் லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கேள்வி கேட்பதற்கு அதிகாரமுள்ள பகிரங்க ஊழியருக்கு விடை அளிக்க மறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்று ஒன்றுக்கு ஒப்பமிட மறுத்தல்.

**178.** தம்மால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்றுக்கு, அவர் ஒப்பமிடல் வேண்டும் எனத் தேவைப்படு தற்குச் சட்டப்படி தகுதிவாய்ந்த பகிரங்க ஊழி யர் ஒருவரால் அதற்கு ஒப்பமிடும்படி பணிக் கப்பட்ட பொழுது ஒப்பமிட மறுக்கும் எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல் லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியருக்கு அல்லது சத்தியத்தை எடுத்தோது வதற்கு அதிகார முள்ள ஆளுக்குச் சத்தியத்தின் மீதான பொய்க் கூற்று.

**179.** எவரேனும் பகிரங்க ஊழியருக்கு அல்லது சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத் தோதுவதற்குச் சட்டத்தினால் அதிகாரமளிக் கப்படும் வேறு ஆளுக்கு ஏதேனும் விடயம் தொடர்பில் உண்மையைக் கூறுவதற்கு சத்தியத்தினால் அல்லது உறுதியுரை யினால் சட்டப்படி கட்டுப்பட்டவராய் இருந்து கொண்டு முன் சொல்லப்பட்டவரான பகிரங்க ஊழிய ருக்கு அல்லது வேறு ஆளுக்கு அவ்விடயம் தொடர்பில் பொய்யான அல்லது பொய்யான தென அவர் அறிந்த அல்லது அவர் நம்புகின்ற அல்லது உண்மையானது என அவர் நம்பாத ஏதேனும் கூற்றினைச் செய்யும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**180.** பகிரங்க ஊழியர் ஒருவரை அவரின் சட்ட முறையான தத்துவத்தை எவரேனுமாளுக்கு ஊறினை அல்லது மனக்குலைவை விளைக்கும் வகையிற் பிரயோகிக்கச் செய்யும் அல்லது எவ்விடயம் தொடர்பில் அச்செய்தி கொடுக்கப்படுகின்றதோ அதன் உண்மையான நிகழ்வின் நிலமை அவரால் அறியப்பட்டிருப்பின் அவர் செய்திருக்கக்கூடாத அல்லது செய்யாது விட்டிருக்கக் கூடாத எதனையும் செய்யும்படி அல்லது செய்யாதுவிடும்படி செய்யும் கருத்துடன் அல்லது அதனால் தாம் அவ்விதம் செய்யக்கூடும் என்ற அறிவுடன் பொய்யானது என அவர் அறிந்த அல்லது நம்புகின்ற ஏதேனும் தகவலை பகிரங்க ஊழியருக்கு கொடுக்குமெவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்ககூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது ஆயிரம் ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வோறொருவருக்கு ஊறு விளைவிக்கும் வகையில் பகிரங்க ஊழியரை அவரின் சட்டமுறைத் தத்துவத்தைப் பயன்படுத்தச் செய்யும் கருத்துடன் பொய்த்தகவல் கொடுத்தல்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) "க" என்னும் பொலிஸ் அலுவலர் கடமையில் அலட்சியமாய் இருத்தலுக்கு அல்லது தீய ஒழுக்கத்திற்கு குற்றவாளி யாவாரென அத்தகைய தகவல் பொய் யானதென அறிந்தும் அத்தகவல் "க" வைப் பொலிஸ் பரிசோதகர் தலைமைய திபதி வேலைநீக்கம் செய்ய வகைசெய்ய லாமென அறிந்துகொண்டும் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கு "அ"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தகவல் கொடுக்கிறார். "அ" இப்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள தவறினை புரிந்துள்ளார்.*

*(ஆ) "க"இரகசியமான இடமொன்றில் சட்ட விரோதமாக உப்புச்சேர்த்து வைத் துள்ளார் என அத்தகைய தகவல் பொய் யானது என அறிந்தும் அத்தகைய தகவ லின் விளைவு "க" வின் வளவுகள் தேடு தலிடப்படுதலும் அதனால் "க" விற்கு மனக்குலைவு ஏற்படுதலும் ஆகலாமென அறிந்துகொண்டும் பகிரங்க ஊழியரொரு வருக்கு "அ" பொய்யாகத் தகவல் கொடுக் கின்றார். "அ" பிரிவில் விபரிக்கப்பட் டுள்ள தவறினைப் புரிந்துள்ளார்.*

பகிரங்க ஊழியரொரு வரின் சட்ட முறையான அதிகாரத்தின் மீது ஆதனமெடுக் கப்படுதலை எதிர்த்தல்.

**181.** எவரேனும் பகிரங்க ஊழியரின் சட்டமுறை யான அதிகாரத்தின் மீது ஏதேனும் ஆதனம் எடுக்கப்படுவதற்கு அவர் அத்தகைய பகிரங்க ஊழியர் என்பதனை அறிந்துகொண்டு அல் லது நம்புவதற்கு நியாயமிருந்து கொண்டு எதிர்க்கும் எவரும் ஆறு மாதங்கள்வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல் லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியரொரு வரின் அதிகாரத்தின்

**182.** பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் அவரின் சட்டமுறையான அதிகாரத்தின் மீது விற்க முனையப்படும் ஏதேனும் ஆதனத்தின் விற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனையைக்கருதித் தடைசெய்யும் எவரும் ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கீழ் விற்க முனையப்படும் ஆதனத்தின் விற்பனையைத் தடை செய்தல்.

**183.** எவரேனும் பகிரங்க ஊழியர் அல்லது அத்தகைய பகிரங்க ஊழியரின் சட்டமுறையான கட்டளைகளின் கீழ்ச் செயலாற்றும் எவரேனுமாள் அவரது பகிரங்கப்பணிகளை நிறைவேற்றுவதில் வேண்டுமென்று அவரைத் தடை செய்யும் எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியர் அவரது பகிரங்கப் பணிகளை நிறைவேற்றுவதில் தடை செய்தல்.

**184.** எவரேனும் பகிரங்க ஊழியர் அவரது பகிரங்கக் கடமையைப் புரிவதில் அவருக்கு உதவி கொடுக்க அல்லது அளிக்கச் சட்டப்படி கட்டுப்பட்டவராயிருந்து கொண்டு கருத்துடன் அத்தகை உதவியைக் கொடுக்காதுவிடும் எவரும் ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்;

பகிரங்க ஊழியருக்கு உதவியளிக்கச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள பொழுது உதவியளிக்காது விடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், நீதிமன்றமொன்றில் சட்டமுறையாக விடுக்கப்பட்ட அழைப்புக்கட்டளை முதலிய வற்றுள் எதனையேனும் நிறை வேற்றுவதற்காக அல்லது தவறொன்று புரியப்படுதலை தவிர்ப்ப தற்காக அல்லது கலகம் சட்டவிரோதமான கூட்டம் அல்லது பொதுவிடச் சண்டையினை அடக்குவதற்காக அல்லது குற்றம் சாட்டப் பட்டுள்ள அல்லது தவறுக்கு குற்றவாளியாக வுள்ள அல்லது சட்டமுறைக்கு தப்பியோடச் செய்வதற்காக அத்தகைய உதவியைக் கோரு வதற்குச் சட்டப்படி தகுதிவாய்ந்த பகிரங்க ஊழியரொருவரால் அத்தகைய உதவி கோரப் பட்டிருப்பின் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒருகாலத்திற்கான சாதாரணமறியலி னால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினா லும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியர் ஒருவரால் முறைப்படி வெளிப்படுத் தப்பட்ட கட்டளைக்குக் கீழ்ப்படி யாமை.

**185.** கட்டளையொன்றை வெளிப்படுத்துவதற்குச் சட்டமுறைத் தத்துவமுள்ள பகிரங்க ஊழிய ரொருவரால் வெளிப்படுத்தப்பட்ட கட்டளை யொன்றின் மூலம் குறித்த செயலொன்றைப் புரியா திருக்கும்படி அல்லது தமதுடமையி லுள்ள அல்லது அவரது முகாமையின் கீழுள்ள குறிப்பிட்ட ஆதனம் தொடர்பில் குறிப்பிட்ட கட்டளை ஏற்கும்படி தாம் பணிக்கப்பட்டுள்ளா ரென அறிந்து கொண்டு அத்தகைய பணிப்புக் குக்கீழ்ப்படியாதுவிடும் எவரும்;

அத்தகைய கீழ்படியாமை சட்டப்படி வேலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமர்த்தப்பட்டுள்ள எவரேனுமாட்களுக்குத் தடை, மனக் குலைவு அல்லது ஊறு அல்லது தடை மனக் குலைவு அல்லது ஊறு பற்றிய அபா யத்தை விளைத்தால் அல்லது விளைக்குமா யிருந்தால், ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான சாதாரண மறியலினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக் கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டி னாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அத்துடன் அத்தகைய கீழ்ப்படியாமை மனிதவு யிருக்கு, உடனலத்திற்கு அல்லது பாதுகாப் பிற்கு அபாயம் விளைவித்தால் அல்லது விளை விக்குமாயிருந்தால் அல்லது கலகத்தை அல் லது பொதுவிடச் சண்டையை விளைத்தால் அல்லது விளைவிக்கு மாயிருந்தால் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான சாதாரண மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக் கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்;

விளக்கம் :- தவறாளர் தீங்கு விளைவிக்கக் கருதியிருக்க வேண்டுமென்பதோ அவரது கீழ்ப்படியாமை தீங்கு விளைவிக்கக்கூடும் என்று நினைத் திருக்க வேண்டும் என்பதோ அவ சியமில்லை. அவர் கீழ்ப்படியா திருக்கின்ற கட்டளை உண்டு என்பதை அறிந்திருப்பதும் அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்படியாமை தீங்கை ஏற்படுத்து தல் அல்லது ஏற்படுத்தியிருந்தால் மட்டும் போதுமானது.

**எடுத்துக்காட்டு**

*குறிப்பிட்ட ஒரு வீதி வழியாகச் சமய ஊர்வலமொன்று செல்லக்கூடாதெனப் பணிக்கும் கட்டளையொன்று, அக்கட்ட ளையை வெளிப்படுத்துவதற்கு சட்டமுறைத் தத்துவமுள்ள பகிரங்க ஊழியரொருவ ரால் வெளிப்படுத்தப்பட்டது. அக்கட்ட ளையை அறிந்துகொண்டு அதனை "அ" கீழ்ப்படியாமல், அதனால் கலகம் ஏற்படும் ஆபத்தினை விளைக்கிறார். இப்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள தவறினை "அ" புரிந் துள்ளார்.*

பகிரங்க ஊழியருக்கு ஊறு ஏற்படுத்துவதற்கு அச்சுறுத்தல்

**186.** பகிரங்க ஊழியரொருவரின் பகிரங்க பணி களைப் பிரயோகிப்பதனோடு சம்பந்தப்பட்டுள்ள ஏதேனும் செயலைச் செய்யும் படி அல்லது செய்யாது விடும்படி அல்லது சுணக்கும்படி அப் பகிரங்க ஊழியரை தூண்டுவதற்காக எவரே னும் பகிரங்க ஊழியருக்கு அல்லது அப்பகி ரங்க ஊழியர் அக்கறை கொண்டிருப்பதாக அவர் நம்பும் வேறாளுக்கு ஊறு ஏற்படுவதாக அச்சுறுத்துமெவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒருகாலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**187.** ஏதேனும் ஊறுக்கெதிரான பாதுகாப்பிற்கெனப் பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் அத்தகைய பாதுகாப்பை அளித்தற்கு அல்லது அத்தகைய பாதுகாப்பு அளிக்கப்படுவதற்குச் சட்டப்படி தத்துவமுள்ள எவரேனும் பகிரங்க ஊழியருக்கு சட்டமுறை விண்ணப்பமொன்றை செய்து தரும்படி அல்லது செய்யாது விடும்படி ஆளொருவரை தூண்டும் நோக்கத்திற்காக அவ்வாளுக்கு ஊறு ஏற்படுத்துவதாக அச்சுறுத்துமெவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒருகாலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியர் பாதுகாப்புக் கோரி விண்ணப்பியாது தடுப்பதைத் தூண்டுவதற்கு ஊறு ஏற்படுத்துவதாக அச்சுறுத்தல்.

## அத்தியாயம் XI

## பொய்ச்சான்று பொது நீதிக்கெதிரான தவறுகள் என்பன

**188.** உண்மையைக் கூறுவதற்குச் சத்தியத்தினால் அல்லது உறுதியுரையினால் அல்லது சட்டத்தின் ஏதேனும் வெளிப்படையான ஏற்பாட்டினால் சட்டப்படி கட்டுப்பட்டவராக இருந்து கொண்டு அல்லது ஏதேனும் விடயத்தின் மீது வெளிப்படுத்தல் ஒன்றைச் செய்வதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டவரய் இருந்து கொண்டு பொய்யானதும் பொய்யானதென அவர் அறிகின்ற அல்லது நம்புகின்ற அல்லது உண்மையானதென அவர் நம்பாததுமான ஏதேனும்

''பொய்ச் சான்று'' அளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றைச் செய்கின்ற எவரும், "பொய்ச்சான்று" அளிப்பதாகச் சொல்லப்படும்.

ஏதேனும் சட்டவாக்கத்தில் "பொய்ச்சாட்சியம்" என்ற சொல்லுத் தோன்றும் இடமெல்லாம், "பொய்ச்சாட்சியம்" என்ற சொல்லுக்குப் பதிலாக "பொய்ச்சான்றளித்தல்" என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாற் போன்று அது வாசிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம் 1: கூற்றொன்று வாய்மூலமாக வேனும் அல்லது வேறு வகையாயினும் செய்யப்பட்டிருப்பின் இப்பிரிவின் பொருளுக்குட்படும்.

விளக்கம் 2: அத்தாட்சிப்படுத்தும் ஆள்கொண்டுள்ள நம்பிக்கை பற்றிய பொய்க்கூற்றொன்று இப்பிரிவின் பொருளுக்குட்படும். அத்துடன் அவர் நம்பர் ஒன்றை நம்புவதாக கூறுதல் மூலம் அவர் அறியாத ஒன்றை அறியாததாக கூறுவதன் மூலம் ஆளொருவர் பொய்ச்சான்றளிப்பதற்கு குற்றவாளியாவாராம்.

**எடுத்துக்காட்டுக்கள்**

*(அ) ஆயிரம் ரூபாவிற்கு "க" வுக்கு எதிராக "ஆ" கொண்டுள்ள நியாயமான கோரிக்கை ஒன்றை ஆதரிக்கும் முகமாக "அ" என்பவர் விளக்கமொன்றில் "ஆ" வினுடைய கோரிக்கையின் நேர்மை பற்றி "க" ஒத்துக் கொண்டுள்ளதைத் தான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுள்ளதாகப் பொய்யாகச் சத்தியம் செய்கிறார். "அ" பொய்ச்சான்றளித்துள்ளார்.

(ஆ) உண்மையைக் கூறுவதற்குச் சத்தியத்தினால் கட்டுப்பட்டவராயிருந்து கொண்டு "அ" என்பவர் குறிப்பிட்ட ஒப்பமொன்றை "க" வின் கையெழுத்தெனதான் நம்புவதாக, "க" வின் கையெழுத்து என அவர் நம்பாத பொழுது கூறுகிறார். இங்கு "அ" பொய்யாதென அறிந்த ஒன்றினை அவர் கூறுவதனால் பொய்ச் சான்றளிக்கின்றார்.

(இ) "க" வின் கையெழுத்திற் பொது பண்பினை அறிந்தவரான "அ" குறிப்பிட்ட ஒப்பமொன்றை "க"வின் கையெழுத்தெனத் தாம் நம்புவதாக, அது அவ்விதந்தானென நல்லெண்ணத்துடன் "அ" நம்பி கூறுகின்றார். இங்கு "அ" வின் கூற்று அவரின் நம்பிக்கையைப் பற்றியதும் நம்பிக்கையளவில் உண்மையானதுமாகும். ஆதலால் ஒப்பம் "க" வின் கையெழுத்து இல்லாவிடினும் "அ" பொய்ச் சான்றளிக்கவில்லை.

(ஈ) உண்மையைக் கூறுவதற்கு சத்தியத்தினால் கட்டுப்பட்டவராய் இருந்து கொண்டு "அ" என்பவர் குறிப்பிட்ட ஒரு நாளில் குறிப்பிட்ட ஒரிடத்தில் "ச" இருந்ததாக, அது பற்றி எதுவுமே அறியாமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தாம் அறிவதாக கூறுகின்றார். குறிப்பிட்ட நாளில் "ச" அந்த இடத்தில் இருந்திருந் தாலும் சரி இல்லாவிட்டாலும்சரி "அ" பொய்ச் சான்றளிக்கின்றார்.*

*(உ) உண்மையாகப் பேச்சு மொழி பெயர்க்க அல்லது மொழிபெயர்க்கச் சத் தியத்தினால் கட்டுப்பட்ட பேச்சு மொழி பெயர்ப்பாளர் அல்லது மொழிபெயர்ப் பாளர் ஒருவர், அவ்வித உண்மையான பேச்சு மொழிபெயர்ப்பு அல்லது மொழி பெயர்ப்பு அல்லாததும் அவர் அவ்விதம் நம்பாததும் ஆன ஒன்றைக் கூற்றொன் றின் அல்லது ஆவணத்தின் உண்மை யான பேச்சுமொழிபெயர்ப்பென அல்லது மொழிபெயர்ப்பெனக் கொடுக்கிறார் அல் லது அத்தாட்சிப்படுத்துகிறார். "அ" பொய்ச் சான்றளித்துள்ளார்.*

"பொய்ச் சான்று புனைதல்"

**189.** ஏதேனும் சூழ்நிலை, பொய்ப்பதிவு அல்லது பொய்க்கூற்று நீதிமுறை நடவடிக்கையொன் றில் அல்லது பகிரங்க ஊழியர் என்ற தன்மை யில் அவர் முன்னிலையில் அல்லது நடுத் தீர்ப்பாளர் ஒருவர் முன்னிலையில் சட்டத்தின் படி எடுக்கப்படும் நடவடிக்கையொன்றில் சான் றாகத் தோன்றக்கூடும் எனவும் சான்றில் அவ் வாறு தோன்றும் அத்தகைய சூழ்நிலை, பொய்ப் பதிவு அல்லது பொய்க்கூற்று அந்தச் சான்று மூலம் அபிப்பிராயம் ஒன்றை அத்தகைய நடவடிக்கைகளில் கொள்வதற்குரிய எவரேனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளை அத்தகைய நடவடிக்கைகளின் பய னுக்கு முக்கியமான எதுவும் பற்றிப் பிழை யான கருத்தைக் கொண்டிருக்கச்செய்யும் என வும் கருதி ஏதேனும் சூழ்நிலை உண்டாகுமாறு செய்யும் அல்லது ஏதேனும் புத்தகத்தில் அல் லது பதிவேட்டில் பொய்யான பதிவைச்செய்யும் அல்லது பொய்யான கூற்றைக் கொண்டுள்ள ஏதேனும் ஆவணத்தை உண்டாக்கும் எவரும் "பொயச்சான்று புனைவதாக" ச் சொல்லப்படும்.

**எடுத்துக்காட்டுக்கள்**

*(அ)'க"வுக்குச் சொந்தமான பெட்டியொன் றில் அந்நகைகள் காணப்படலாம் எனவும் அச்சூழ்நிலையில் "க" திருட்டுக் குற்ற வாளியாகத் தீர்க்கலாம் எனவும் கருதி "க" விற்குச் சொந்தமான பெட்டியினுள் "அ" நகைகளைப் போடுகின்றார். "அ" பொய்ச்சான்று புனைந்துள்ளார்.*

*(ஆ) நீதிமன்றம் ஒன்றில் உறுதிப்படுத்தும் சான்றாக பயன்படுத்துவதற்கென "அ" தனது கடைப் புத்தகத்தில் பொய்ப் பதி வொன்றைச் செய்கிறார். "அ" பொய்ச் சான்று புனைந்துள்ளார்.*

*(இ) குற்றமுறைச் சதியில் "க" குற்றவாளி யாகக் காணப்பட வேண்டுமென்ற கருத்து டன் "அ", "க" வின் கையெழுத்தை ஒத்த சாயலில், அத்தகைய குற்றமுறைச் சதி யில் உடன் குற்றவாளியாகும் ஒருவருக்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவரியிடப்பட்டதாகக் கொள்ளப்படும் வகையில் கடிதம் ஒன்றை எழுதிப் பொலிசு அலுவலர்கள் அவ்விடத்தை தேடக்கூடும் என அவர் அறிந்த ஓரிடத்தில் அக்கடி தத்தை போடுகிறார். "அ" பொய்ச்சான்று புனைந்துள்ளார்.

பொய்ச்சான்று அளித்தலுக்கு அல்லது புனைதலுக்குத் தண்டனை.

**190.** நீதி முறை நடவடிக்கையொன்றில் எந்நிலை யிலேனும் கருதி பொய்ச் சான்றளிக்கும் எவ ரும் அல்லது நீதிமுறை நடவடிக்கையொன் றில் எந்நிலையிலேனும் பயன்படுத்தப்படுவ தற்கென பொய்ச்சான்று புனையும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறி யலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்ப தோடு குற்றப்பணத்திற்கு அவர் ஆளாதல் வேண்டும்.

அத்துடன் வேறு எவ்விடயத்திலேனும் கரு திப் பொய்ச் சான்றளிக்கும் அல்லது பொய்ச் சான்று புனையும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத் திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

விளக்கம் 1: நியாயசபை அல்லது படை விண் ணப்ப நீதிமன்றம் ஒன்றின் முன்ன ரான விளக்கம் நீதிமுறை நடவ டிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் 2: நீதிமன்றம் ஒன்றின் முன்னரான நடவடிக்கைக்கு ஆரம்ப நிலையான சட்டத்தினால் பணிக்கப்பட்ட நுண் ணாய்வொன்று அந்நுண்ணாய்வு நீதி மன்றமொன்றின் முன் நடைபெற வில்லையாயினும் நீதிமுறை நடவ டிக்கையொன்றின் ஒரு நிலையாகும்.

**எடுத்துக்காட்டு**

*விளக்கத்திற்கென "க" பாரப்படுத்தப்பட வேண்டுமா என்பதனைத் துணியும் நோக் கத்திற்காக நீதிவான் ஒருவர் முன்னிலை யிலான விசாரணையில் அவர் பொய்யான தென அறிந்த கூற்றொன்றை "அ" சத்தி யத்தின் மேல்செய்கிறார். இவ்விசாரனை நீதிமுறை நடவடிக்கையின் ஒரு நிலையா தலில் "அ" பொய்ச் சான்றளித்துள்ளார்.*

விளக்கம் 3: சட்டத்திற்கிணங்க நீதிமன்றமொன் றில் பணிக்கப்பட்டு நீதிமன்ற அதி காரத்தின் கீழ் நடைபெறும் நுண் ணாய்வொன்று அந்நுண்ணாய்வு நீதிமன்றமொன்றில் முன் நடைபெற வில்லையாயினும் நீதிமுறை நடவ டிக்கையொன்றின் ஒரு நிலையாகும்.

**எடுத்துக்காட்டு**

*காணியின் எல்லைகளை அவ்விடத்தி லேயே தீர்மானித்தற்கென நீதிமன்றமொன் றினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒருவர் முன்னரான விசாரணையொன்றில், அவர் பொய்யானதென அறிந்த கூற்றொன்றை "அ" சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது எடுத்துக்கூறுகிறார். இவ்விசாரனை நீதிமுறை நடவடிக்ககையின் ஒரு நிலையாதலின் "அ" பொய்ச் சான்றளித்துள்ளார்.*

மரண தண்டனைக் கான குற்றத் தீர்ப்பைப் பெறும் கருத்துடன் பொய்ச் சான்றளித்தல் அல்லது பொய்ச் சான்று புனைதல்.

**191.** இச்சட்டக் கோவையினால் அல்லது இங்கிலாந்து சட்டத்தினால் மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய தவறொன்றுக்கு எவரேனுமாளை குற்றவாளியாகக் காணப்படச் செய்யும் கருத்துடன் அல்லது அதனால் தாம் அவ்விதம் செய்யக்கூடுமென்ற அறிவுடன் பொய்ச் சான்றளிக்கும் அல்லது பொய்ச்சான்று புனையும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு கடூழிய மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்;

அத்துடன் அத்தகைய பொய்ச்சான்றின் விளைவாக குற்ற மற்றவரான ஆளொருவர் குற்றவாளியாகக் காணப்பட்டு தூக்கிலிடப்பட்டிருந்தால் அத்தகைய பொய்ச் சான்றளிக்கும் ஆளுக்கு மரணதண்டனை விதிக்கப்படுதல் வேண்டும்.

குற்றமற்றவரான ஆள் அதனால் குற்றவாளி

**192.** இச்சட்டக்கோவையினால் அல்லது இங்கிலாந்து சட்டத்தினால் மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய தவறல்லாது ஏழு ஆண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அதற்கு மேற்பட்ட மறியலினால் தண் டிக்கப்படக்கூடிய தவறுக்கு எவரேனுமாளை குற்றவாளியாகக் காணப்படச்செய்யும் கருத்து டன் அல்லது அதனால் தாம் அல்லது அவ் விதம் செய்யக்கூடும் என்ற அறிவுடன் பொய்ச் சான்றளிக்கும் அல்லது பொய்ச்சான்று புனை யும் எவரும் அத்தவறுக்கு குற்றவாளியாகக் காணப்படும் ஆளொருவர் தண்டிக்கப்பட வேண் டிய விதமாக தண்டிக்கப்படுதல் வேண்டும்.

யாகக் காணப்பட்டுத் தூக்கிலிடப் படின்.

**எடுத்துக்காட்டு**

*"க" வைக் கொள்ளைக்குக் குற்றவாளி யாகக் காணப்படச்செய்யும் கருத்துடன் "அ" நீதிமன்றம் ஒன்றின் முன்னர் பொய்ச் சான்றளிக்கின்றார். கொள்ளைக்குத் தண்டனை குற்றப்பணத்துடன் அல்லது குற்றப்பணமில்லாமல் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான கடுழிய மறியல். "அ" குற்றப்பணத்துடன் அல்லது குற்றப்பணமில்லாமல் அத்த கைய மறியல் விதிக்கப்படக்கடவர்.*

**193.** பொய்யானது அல்லது புனையப்பட்டது என அவர் அறிந்த ஏதேனும் சான்றினை உண்மை யான அல்லது கலப்பற்ற சான்றாக ஊழல் வழியிற் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த எத்தனிக்கும் எவரும் அவர் பொய்ச்சான்றளித்தி ருந்தால் அல்லது பொய்ச்சான்று புனைந்திருந் தால் போன்று அதேமுறையாகத் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

பொய்யானதென அறிந்த சான்றைப் பயன்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்ச் சான்றிதழை வழங்கல் அல்லது ஒப்பமிடுதல்.

**194.** சட்டத்தினால் கொடுக்கும்படி அல்லது ஒப்பமிடும் படி பணிக்கப்பட்ட, அல்லது அத்தகைய சான்றிதழ் ஏதேனும் சட்டத்தினால் சான்றில் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஏதேனும் நிகழ்வு பற்றிய ஏதேனும் சான்றிதழை அத்தகைய சான்றிதழ் ஏதேனும் முக்கியமான விடயத்தில் பொய்யானது என அறிந்து அல்லது நம்பி அதனை வழங்கும் அல்லது ஒப்பிடும் எவரும் அவர் பொய்ச்சான்று அளிந்திருந்தால் போன்று அதே முறையாக தண்டிக்கப்படுதல் வேண்டும்.

முக்கியமானதொரு விடயத்தில் பொய்யான சான்றிதழை உண்மையானதெனப் பயன்படுத்தல்

**195.** முக்கியமானதொருவிடயத்தில் பொய்யான தென அறிந்து கொண்டு அத்தகைய சான்றிதழை ஊழல் வழியிற் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த எத்தனிக்கும் எவரும் அவர் பொய்ச் சான்றளித் திருத்தாற் போன்று அதேமுறை யாகத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஏதொன்றாகச் சட்டத்தினால் ஏற்றுக்கொள் ளக்கூடிய ஏதேனும் வெளிப்படுத்து தலில் செய்யப்படும் பொய்க்கூற்று.

**196.** ஏதேனும் நீதிமன்றம் அல்லது எவரேனும் பகிரங்க ஊழியர் அல்லது வேறு ஆள் சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளும்படி கட்டுப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்டதும் அவரால் ஆக்கப்பட்ட அல்லது ஒப்பமிடப்பட்டதுமான ஏதேனும் வெளிப்படுத்தலில், அவ்வெளிப்படுத்தல் ஆக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்படும் நோக்கம் தொடர்பிலான முக்கியமான விடயம் பற்றி பொய்யான அல்லது பொய்யானதென அவர் அறிந்த அல்லது நம்புகின்ற அல்லது உண்மையானது என நம்பாத ஏதேனும் கூற்றைச் செய்கின்ற எவரும் அவர் பொய்ச்சான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றளித் திருந்தாற் போன்று அதே முறையாகத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**197.** முக்கியமானதொரு விடயத்தில் பொய்யான தென அறிந்து கொண்டு அத்தகைய வெளிப் படுத்தலை ஊழல் வழியிற் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த எத்தனிக்கும், எவரும், அவர் பொய்ச் சான்றளித்திருந்தாற் போன்று அதேமுறையாகத் தண்டிக்கப்படுதல் வேண் டும்.

பொய்யானதென அறியப்பட்ட அத்தகைய வெளிப்படுத்தலை உண்மையாகப் பயன்படுத்தல்.

விளக்கம் : படிமுறையின்மை என்ற காரணத் தினால் மட்டும் ஏற்றுக்கொள்ள லாகாத வெளிப்படுத்தலொன்று பிரிவுகள் 196, 197 என்பவற்றின் பொருளுக்குட்பட வெளிப்படுத்த லாகும்.

**198.** தவறொன்று புரியப்பட்டுள்ளது என்பதனை அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாய முள்ளவராய் இருந்து கொண்டு தவறாளரை சட்டமுறைத் தண்டனையிலிருந்து மறைக்கும் கருத்துடன் அத்தவறு புரியப்பட்டதற்கான ஏதே னும் சான்றை இல்லாது கெடுக்கும் அல்லது-

தவறாளரை மறைப் பதற் கெனப்புரியப் பட்ட தவறு பற்றிச் சான்றை இல்லாது கொடுத்தல் அல் லது அது பற்றிப் பொய்த் தகவல் கொடுத்தல்.

அத்தகைய கருத்துடன் அத்தவறு தொடர்பில் அவர் பொய்யானது என அறிந்த அல்லது பொய்யானது என நம்புகின்ற ஏதேனும் தகவ லைக்கொடுக்கும் எவரும், மரண தண்டனை விதிக்கப்படக் கூடியதாயின் ஏழு ஆண்டுகள்

மரண தண்டன விதிக்கப்படக் கூடிய தவறாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை புரியப்பட்டதென அவர் அறியும் அல்லது நம்பும் தவறு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப்படக் கூடிய தவறாகும்.

அத்துடன் அத்தவறு பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய மறியலினால் தண்டிக்கப்படக் கூடியதாயின் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பத்தாண்டுக்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப்படக் கூடியதாகும்.

அத்துடன் அத்தவறு பத்து ஆண்டுகள் வரை நீடிக்காத ஒரு காலத்திற்கான மறியலினால் தண்டிக்கப்படக் கூடியதாயின் அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆகக்கூடிய காலத்தின் நாலிலொருபாகத்திற்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவ்விவரணத்தைக் கொண்ட மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*"க" என்பவரை "ஆ" என்பவர் கொலை செய்துள்ளார் என அறிந்துகொண்டு "ஆ" வைத் தண்டனை பெறுவதிலிருந்து மறைக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் கருத்துடன் அவ்வுடலை மறைத்து விட "ஆ" விற்கு "அ" உதவி அளிக்கிறார். ஏழாண்டு கால இருவகையிலொருவகை மறியலுக்கும் குற்றப்பணத்திற்கும் "அ" ஆளாவார்.

தகவல் தரக்கட்டுப்பட்ட ஆள் ஒருவர் தவறு பற்றிய தகவலைக் கருதித்தராது விடல்.

**199.** தவறொன்றுபுரியப்பட்டுள்ளது என்பதனை அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாய முள்ளவராய் இருந்துகொண்டு அத்தவறு பற்றி அவர் தரச்சட்டப்படி கட்டுப்பட்டவரான ஏதேனும் தகவலை கருதி தராது விடும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை யிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

புரியப்பட்ட தவறொன்று தொடர்பில் பொய்க் தகவல் அளித்தல்.

**200.** தவறொன்றுபுரியப்பட்டுள்ளது என்பதனை அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்கு நியாய முள்ளவராய் இருந்து கொண்டு அத்தவறு தொடர் பில் பொய்யானதென அவர் அறிந்த அல்லது நம்புகின்ற ஏதேனும் தகவலையளிக்கும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய லினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சான்றாகக் காண்பிக்கப்படுவத னைத் தடுப் பதற்காக ஆவண மொன்றை அழித்தல்.

**201.** நீதிமன்றம் ஒன்றில் அல்லது பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் அவர் முன்னிலையில் சட் டப்படி நடைபெறும் ஏதேனும் நடவடிக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றாகக் காண்பிக்கும்படி அவர் சட்டப்படி கட்டாயப்படுத்தப்படக்கூடிய ஏதேனும் ஆவ ணத்தை மேற்சொல்லப்பட்ட அத்தகைய நீதி மன்றத்தின் முன்னர் அல்லது பகிரங்க ஊழிய ரின் முன்னர் அது காண்பிக்கப்படாது அல்லது சான்றாகப் பயன்படுத்தப்படாது தடுக்கும் கருத் துடன் அல்லது அந்நோக்கத்திற்கென அத னைக் காண்பிக்கும்படி சட்டப்படி அழைக்கப் பட்ட பின் அல்லது பணிக்கப்பட்டபின் இரகசிய மாக மறைத்து வைக்கும் அல்லது அழிக்கும் அல்லது அத்தகைய ஆவணத்தின் முழுமை யையும் அல்லது அதன் ஏதேனும் பகுதியைச் சிதைக்கும் அல்லது தெளிவற்றதாக்கும் எவ ரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.

வழக்கொன்றில் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கையின் நோக்கத்துக்காகப் பொய் ஆள் மாறாட்டம் செய்தல்.

**202.** ஏதேனும் வழக்கில் அல்லது குற்ற வழக்குத் தொடுப்பில் வேறொருவரைப் பொய்யாக ஆள் மாறாட்டம் செய்து அவ்விதம் மேற்கொண்ட தன்மையில் ஏதேனும் ஒப்புதலை அல்லது கூற்றை அல்லது தீர்ப்பு ஒப்புக் கொள்ளு தலைச் செய்யும் அல்லது அழைப்புக்கட் டளை ஆகியன விடுக்கச்செய்யும் அல்லது பிணையளிக்கும் அல்லது பிணையாக நிற்கும் அல்லது வேறெச்செயலையும் செய்யும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

203. நீதிமன்றமொன்றால் அல்லது வேறு தகுதி வாய்ந்த அதிகாரியினால் கூறப்பட்ட அல்லது கூறப்படக்கூடும் என அவர் அறிந்த குற்றத் தீர்ப்பின் கீழான குற்றப்பணத்தை திருப்தி செய்வதற்கென அல்லது இழப்பீடொன்றாக அல்லது குடியியல் வழக்கொன்றில் நீதிமன்ற மொன்றினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக் கூடும் என அவர் அறிந்த தீர்வையை அல்லது கட்டளையை நிறைவேற்றுவதில் ஏதேனும் ஆதனம் அல்லது அதன் கண்ணுள்ள அக்கறை எடுத்துக் கொள்ளப்படுவதனைத் தடுக்கும் கருத்துடன் ஏதேனும் ஆதனத்தை அல்லது அதன் கண்ணுள்ள அக்கறையை மோசடியாக அகற்றுகின்ற அல்லது மறைத்து வைக்கின்ற அல்லது வேறொருவருக்கேனும் மாற்றுகின்ற அல்லது ஒப்படைக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஆதனமொன்று பறிமுதலொன்றாக அல்லது தீர்வை நிறைவேற்றுவதற்காகப் பற்றப்படுவதைத் தவிர்ப்பதற்கென அதை மோசடியாக அகற்றல் அல்லது மறைத்தல்.

204. நீதிமன்றமொன்றால் அல்லது வேறு தகுதி வாய்ந்த அதிகாரியினால் கூறப்பட்ட அல்லது கூறப்படக்கூடுமென அவர் அறிந்த குற்றத் தீர்ப்பின் கீழான குற்றப்பணத்தை திருப்தி செய்வதற்கென அல்லது பறிமுதலொன்றாக அல்லது குடியியல் வழக்கொன்றில் நீதிமன்ற மொன்றி

ஆதனமொன்று பறிமுதலொன்றாக அல்லது தீர்வை நிறைவேற்றுவதற்காகப் பற்றப்படுவதைத் தடுப்பதற்கென மோசடியாக அதனை உரிமை கோரல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக் கூடும் என அவர் அறிந்த தீர்வையை அல்லது கட்டளையை நிறைவேற்றுவதில் ஏதேனும் ஆதனம் அல்லது அதன் கண்ணுள்ள அக்கறை எடுத்துக் கொள்ளப்படுவதனைத் தடுக்கும் கருத்துடன் அவ்வாதனத்தில் அல்லது அக்கறையில் தமக்கு ஏதேனும் உரிமை அல்லது உரிமைப்படியான கோரிக்கை இல்லை என் பதை அறிந்து கொண்டு ஏதேனும் ஆதனத்தை அல்லது அதன் கண்ணுள்ள அக்கறையை மோசடியாக ஏற்கின்ற, பெறுகின்ற அல்லது கோருகின்ற அல்லது ஏதேனும் ஆதனத்தின் அல்லது அதிலுள்ள அக்கறையின் உரிமை தொடர்பில் ஏதேனும் வஞ்சனையைக் கையாளுகின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

போகுமதியில்லாத தொகைக்கு மோசடியாகத் தீர்வையாக்கிவிடல்

205. எவரேனுமாளின் வழக்கின் மீது, அவருக்கு போகுமதியல்லாத ஒரு தொகைக்கு அல்லது அத்தகைய ஆளுக்கு போகுமதியான தொகைக்கு மேலானதொரு தொகைக்கு அல்லது அவ்வாள் உரித்துடையரல்லாத ஏதேனும் ஆதனத்திற்கு அல்லது அவ்வாதனத்தின் கண்ணுள்ள அக்கறைக்குத் தீர்வை அல்லது கட்டளையொன்றைத் தமக்கெதிராக இடுவிக்கும் அல்லது இடப்படவிட்டிருக்கும் அல்லது அத்தகைய தீர்வை அல்லது கட்டளை திருப்தி செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டபின்னர் அல்லது அதனால் திருப்தி செய் யப்பட்ட எதனதும் தொடர்பில் தமக்கு எதிராக தீர்வை அல்லது கட்டளையொன்றை மோசடி யாக நிறைவேற்றுவிக்கும் அல்லது நிறை வேற்ற விட்டிருக்கும் எவரும் இரண்டு ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல் லது குற்றப் பணத்தினால் அல்லது இவை யிரண்டிலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*"க"வுக்கு எதிராக "அ" வழக்கொன்று தொடருகிறார். தனக்கு எதிராக "அ" தீர்வைப் பெறக்கூடும் என அறிந்து "க", "அ" வினது தீர்வையின் கீழ் "க" வின் ஆதனத்தை விற்பதனால் வரும் வருமதியில் "ஆ" தன் கணக்கில் அல்லது "க"வின் நன்மைக்காகப் பங்கு கொள்ளலாம் என்பதற்காக எதுவித கோரிக்கையுமில்லாத "ஆ"வினால் தொடரப்பட்ட வழக்கில் கூடிய தொரு தொகைக்கு தமக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்ட மோசடியாக விட்டிருக் கிறார். "க" இப்பிரிவின் கீழான தவறொன் றைப் புரிந்துள்ளார்.*

206. பொய்யானதென அவர் அறிந்த ஏதேனும் கோரிக் கையை நீதிமன்றமொன்றில் எவரேனுமாளுக்கு ஊறு விளைவிக்கும் அல்லது மனக்குலைவு ஏற்படுத்தும் கருத்துடன் மோசடியாக அல்லது நேர்மையீனமாகச் செய்யும் எவரும் இரண்டு

நீதிமன்ற மொன் றில் மோசடியாக அல்லது நேர்மை யீனமாகப் பொய்க் கோரிக்கை யொன்றைச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

போகுமதி இல்லாத தொகைக்கு மோசடியாக தீர்வை பெறுதல்

**207.** போகுமதியில்லாத ஒரு தொகைக்கு அல்லது போகுமதியான தொகைக்கு மேலான ஒரு தொகைக்கு அல்லது அவர் உரித்துக் கொண் டிராத ஏதேனும் ஆதனத்திற்கு அல்லது அதி லுள்ள அக்கறைக்கு எவரேனுமாளுக்கெதிராக மோசடியாகத் தீர்வை அல்லது கட்டளை பெறும் அல்லது தீர்வை அல்லது கட்டளை திருப்தி செய்யப்பட்ட பின்னர் அல்லது அதனை திருப்தி செய்யப்பட்ட எதனதும் தொடர்பில் எவரேனு மாளுக்கு எதிராக மோசடியாக தீர்வையை அல்லது கட்டளையை நிறைவேற்றிவிக்கும் அல்லது தம் பெயரில் அத்தகைய செயல் எதனையும் மோசடியாக செய்யவிட்டிருக்கும் அல்லது அனுமதிக்கும் எவரும் இரண்டு ஆண் டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை யிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வேறுபடுத்தும் அத்துடன் செய்யப்படும் ஊறு பற்றிய பொய்ச் சாட்டு

**208.** எவரேனுமாளுக்கு எதிராக ஏதேனும் நட வடிக்கை எடுப்பதற்கு அல்லது குற்றச்சாட்டுச் செய்வதற்கு நியாயமான அல்லது சட்டமுறை யான காரணம் இல்லையென அறிந்துகொண்டு அவ்வாளுக்கு ஊறு விளைவிக்கும் கருத்துடன் அவ்வாளுக்கெதிராக ஏதேனும் குற்றவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கை எடுக்கின்ற அல்லது எடுக்கச் செய்கின்ற அல்லது தவறொன்று புரிந்துள்ளதாக ஆள் எவர் மீதும் பொய்ச்சாட்டு செய்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.

அத்துடன், அத்தகைய குற்றவியல் நடவடிக்கை மரண தண்டனை விதிக்கப்படக் கூடிய அல்லது ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கான மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்று பற்றியதாயின் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

**209.** தவறொன்று புரியப்பட்டிருக்குமிடத்து, தவறாளரென அவர் அறிந்த அல்லது நம்புவதற்கு நியாயமுள்ள ஆளொருவரை, சட்டமுறையான தண்டனையிலிருந்து மறைக்கும் கருத்துடன், அவருக்கு புகலளிக்கின்ற அவரை மறைத்து வைக்கின்ற, அவருக்கு உதவியளிக்கின்ற அல்லது அவரை பேணுகின்ற எவரும், (தவறாளருக்குப் புகலளித்தல்)

மரண தண்டனை விதிக்கக்கூடிய தவறொன்றானால் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை (மரண தண்டனை விதிக்கக்கூடிய தவறானால்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தானால்.

பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய மறிய லினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றா னால் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளா தல் வேண்டும்.

பத்தாண்டுகளுக்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தானால்.

பத்தாண்டுக்கல்லாது, ஓராண்டு வரை நீடிக்கக் கூடிய மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவ றொன்றானால் அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ஆகக்கூடிய காலத்தின் நாலிலொரு பாகத்திற்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ள அவ்விவரணத்தைக் கொண்ட மறியலி னால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டிலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விதிவிலக்கு: புகலளித்தல் அல்லது மறைத்து வைத் தல் தவறாளரின் கணவரால் அல்லது மனைவியினால் புரியப்படும் எவ்விடயத் திற்கும் இவ்வேற்பாடு விரிவுபடுத்தலா காது.

**எடுத்துக்காட்டு**

*"ஆ" கொள்ளை புரிந்துள்ளாரென அறிந்து கொண்டு அவரை சட்டமுறைத் தண்டனை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யில் இருந்து மறைப்பதற்கென "அ" அறிவுடன் "ஆ" வை மறைத்து வைக்கின்றார். இங்கு "ஆ", பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய மறியலுக்கு ஆளாவதனால் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலுக்கு "அ" ஆளாதலோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாவார்.*

**210.** தவறொன்றை மறைப்பதற்கான அல்லது ஏதேனும் தவறுக்கான சட்டமுறை தண்டனையிலிருந்து எவரேனுமாளை மறைப்பதற்கான அல்லது சட்டமுறைத் தண்டனைக்கு கொண்டுவருவதற்கென ஆளெவர்க்கும் எதிராக அவர் நடவடிக்கையெடாது விடுதற்கான பிரதிபலனாகத் தமக்கு அல்லது வேறாளெவருக்கேனும் அவா நிறைவெதனையும் ஏற்கின்ற அல்லது பெற எத்தனிக்கின்ற அல்லது ஏற்க இசைகின்ற அல்லது தமக்கு அல்லது வேறாளெவருக்கேனும் ஆதனம் எதனையும் மீளப்பெறுகின்ற எவரும்,

தவறாளரைத் தண்டனையிலிருந்து மறைப்பதற்கென அவா நிறைவு முதலியன பெறல்.

மரண தண்டனை விதிக்கக்கூடிய தவறொன்றானால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒருகாலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

மரண தண்டனை விதிக்கக் கூடிய தவறானால்

பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றாதனால்

பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தானால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பத்தாண்டுகளுக்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப் படக்கூடியதானால்.

அத்துடன் அத்தவறு பத்து ஆண்டுகள் வரை நீடிக்காத ஒரு காலத்திற்கான மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றானால் அத் தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆகக்கூடிய காலத்தின் நாலிலொரு பாகத்திற்கு நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவ்விவரணத்தைக் கொண்ட மறியலினால் அல்லது குற்றப்பணத் தினால் அல்லது இவை யிரண்டினாலும் தண் டிக்கப்படுதல் வேண்டும்.

குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படக் கூடியதாகும்.

குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படக்கூடிய தவ றொன்றானால் குற்றப்பணத்தினால் தண்டிக் கப்படுதல் வேண்டும்.

தவறாளரை மறைப்பதற்காக அவா நிறைவைக் கொடுக்க, அல்லது ஆதனத்தை மீள அளிக்க முனைதல்

**211.** ஆளொருவர் தவறொன்றை மறைப்பதற்கான அல்லது எவரேனும் ஆளை ஏதேனும் தவறுக் காக சட்டமுறைத் தண்டனை பெறுவதிலிருந்து மறைப்பதற்கான அல்லது சட்டமுறைத் தண்ட னைக்கு கொண்டுவருவதற்கென ஆளெவர்க் கும் எதிராக அவர் நடவடிக்கை யெடாது விடுதற்கான பிரதிபலனாக எவரேனுமாளுக்கு ஏதேனும் அவாநிறைவைக் கொடுக்கின்ற அல் லது கொடுப்பிக்கின்ற அல்லது கொடுக்க அல் லது கொடுப்பிக்க முனைகின்ற அல்லது இசை கின்ற அல்லது எவரேனுமாளுக்கு ஏதேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதனத்தை மீளக்கொடுக்கின்ற அல்லது மீளக் கொடுப்பிக்கின்ற எவரும்,

மரண தண்டனை விதிக்கக்கூடிய தவறொன்றானால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

மரண தண்டனை விதிக்கக் கூடிய தவறானால்

பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றானால் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தானால்

அத்துடன் அத்தவறு பத்து ஆண்டுகள் வரை நீடிக்காத ஒரு காலத்திற்கான மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றானால் அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆகக்கூடிய காலத்தின் நாலிலொரு பாகத்திற்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவ்விவரணத்தைக் கொண்ட மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பத்தாண்டுகளுக்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தானால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படக் கூடியதாகும்.

குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றானால் குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விதிவிலக்கு: தவறு சட்ட முறையாக இணக்கப்படக்கூடிய ஏதேனும் விடயத்திற்கு 210, 211 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் விரிவுபடா.

களவாடப் பட்ட ஆதனம் முதலியவற்றை மீட்க உதவி செய்வதற்கென அவாநிறைவு பெறுதல்.

**212.** இச்சட்டக்கோவையின்கீழ் தண்டிக்கப்படக்கூடிய ஏதேனும் தவறொன்றின் மூலம் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை இழந்துள்ள ஆள்ளொருவருக்கு உதவி செய்வதற்காக அல்லது உதவி செய்வதாகப் பாசாங்கு செய்து ஏதேனும் அவாநிறைவைப் பெறுகின்ற அல்லது பெற இசைகின்ற அல்லது சம்மதிக்கின்ற எவரும், தவறாளர் கைதுசெய்யப்பட்டு அத்தவறுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதற்கு அவரின் ஆற்றலிலுள்ள எல்லா வழிவகைகளையும் பயன்படுத்தினாலன்றி, இரண்டு ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கட்டுக்காவலிலிருந்து தப்பியோடிய அல்லது அவர் கைது செய்யப்படும்படி கட்டளை

**213.** தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்ட அல்லது குற்றம்சாட்டப்பட்ட எவரேனும் அத்தவறுக்கென சட்டமுறை கட்டுக்காவலில் உள்ளவராயிருந்து அத்தகைய கட்டுக்காவலிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிச் செல்லுமிடத்து அல்லது அத்தகைய பகிரங்க ஊழியர் அல்லது சட்டமுறையான அதிகாரத்தைப் பிரயோகித்து தவறொன்றுக் காக குறிப்பிட்ட ஆளொருவரை கைதுசெய்யும் படி கட்டளையிட்டிருக்குமிடத்து அத்தகைய தப்பிச் செல்லுதலை அல்லது கைதுசெய்ததற் கான கட்டளையை அறிந்து கொண்டு அவ் வாள் கைதுசெய்யப்படுவதைத் தடுக்கும் கருத் துடன் அவ்வாளுக்கு புகலளிக்கும் அல்லது அவரை மறைத்து வைக்குமெவரும் பின்வரும் முறையாக தண்டிக்கப்படுதல் வேண்டும். அதா வது, அவ்வாள் கட்டுக்காவலிலிருந்து அல்லது

யிடப்பட்டுள்ள தவறாளருக்குப் புகலளித்தல்

கைதுசெய்யப்படும்படி கட்டளையிடப்பட்ட தவறு மரணதண்டனை விதிக்கக்கூடிய தவறொன் றானால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப்பணத்திற்கு அவர் ஆளாதல் வேண்டும்.

மரண தண்டனை விதிக்கக் கூடிய தவறானால்

பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய மறியலி னால் தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றானால் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறி யலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தானால்

பத்தாண்டுக்கல்லாது ஓராண்டு வரை நீடிக்கக் கூடிய மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவ

பத்தாண்டு களுக்குக் குறைந்த மறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லினால் தண்டிக்கப்படக் கூடியதானால்

றொன்றானால் அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ஆகக்கூடிய காலத்தின் நாலிலொரு பாகத்திற்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவ்விவரணத்தைக் கொண்டஎன்ற தன்மையில் தாம் நடந்து கொள்ள வேண்டிய வழிபற்றிய ஏதேனும் சட்டப்பணிப்பை அறிந்து கீழ்ப்படி யாது விடும் எவரும் இரண்டு ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொரு வகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விதிவிலக்கு : புகலளித்தல் அல்லது மறைத்து வைத்தல் கைது செய்யப்படவேண்டிய ஆளின் கணவரால் அல்லது மனைவியினால் புரியப்படும் எவ்விடயத்திற்கும் இவ்வேற்பாடு விரிவுபடுத லாகாது.

தண்டனையிலிருந்து ஆளை அல்லது இழப்பீட்டிலிருந்து ஆதனத்தைக் காக்கும் கருத்துடன் பகிரங்க ஊழியர் சட்டப் பணிப்பொன்றுக்குக் கீழ்ப்படியாமை.

**214.** பகிரங்க ஊழியரொருவராய் இருந்து கொண்டு சட்டமுறையான தண்டனையிலிருந்து எவரேனுமாளை அதனால் தான் காப்பாற்றும் கருத்துடன் அல்லது அதனால் காப்பாற்றக்கூடுமென அறிந்துகொண்டு அல்லது அவர் பெறக்கடவரான தண்டனைக்குக் குறைந்த தண்டனைக் குட்பட்டவராக செய்வததெற்கென அல்லது ஏதேனும் ஆதனத்தை இழப்பீட்டிலிருந்து அல்லது அது சட்டப்படி உட்படும் ஏதேனும் பொறுப்பிலிருந்து காப்பாற்றும் கருத்துடன் அல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லது அதனால் தாம் காப்பாற்றக்கூடும் என்ற அறிவுடன் அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் தாம் நடந்து கொள்ள வேண்டிய வழிபற்றிய ஏதேனும் சட்டப்பணிப்பை அறிந்து கீழ்ப்படியாது விடும் எவரும் இரண்டு ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண் டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தண்டனையிலிருந்து ஆளை அல்லது இழப்பீட்டிலிருந்து ஆதனத்தைக் காக்கும் கருத்துடன் பகிரங்க ஊழியர் சரியல்லாத பதிவேட்டை அல்லது எழுத்தைத் தயாரித்தல்.

**215.** பகிரங்க ஊழியரொருவரிலிருந்து கொண்டு அத் தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் ஏதேனும் பதிவேடு அல்லது வேறு எழுத்தி னைத் தயாரிக்கும் பொறுப்புடையவராய்யிருந்து பொது மக்களுக்கு அல்லது எவரேனுமாளுக்கு நட்டம் அல்லது ஊறுவிளைவிக்கும் கருத்து டன் அல்லது அதனால் தாம் விளக்கக்கூடு மென்ற அறிவுடன் அல்லது எவரேனுமாளைச் சட்டமுறையான தண்டனையிலிருந்து அதனால் காப்பாற்றும் கருத்துடன் அல்லது அதனால் தாம் காப்பாற்றக்கூடும் என்ற அறிவுடன் அல் லது ஏதேனும் ஆதனத்தை இழப்பீட்டிலிருந்து அல்லது அது சட்டப்படி உட்படும் வேறு பொறுப் பிலிருந்து காப்பாற்றும் கருத்துடன் அல்லது அதனால் காப்பாற்றக் கூடும் என்ற அறிவுடன் தாம் சரியற்றது என்று அறிந்த ஒரு முறையில் அப்பதிவேட்டை அல்லது எழுத்தை தயாரிக் கின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது குற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்..

கைது செய்வதற்கு சட்டப்படி கடப்பட்டுள்ள பகிரங்க ஊழியர் ஒருவர் கருதிக் கைது செய்யாது விடல்.

**216.** பகிரங்க ஊழியரொருவராய் அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் தவறொன்றுக்குக்குற்றம் சாட்டப்பட்டுள்ள அல்லது அதற்கு கைதுசெய்யப்பட வேண்டிய எவரேனுமாளை கைது செய்வதற்கு அல்லது அடைத்து வைப்பதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ளவராய் இருந்து கொண்டு அத்தகைய ஆளைக் கருதிக் கைது செய்யாதுவிடுகின்ற அல்லது அத்தகைய அடைத்து வைத்தலிலிருந்து அத்தகைய ஆளைத் தப்பியோடக் கருதி விட்டிருக்கின்ற அல்லது அத்தகைய ஆள் தப்பிச்செல்லுவதில் அல்லது தப்பிச்செல்ல எத்தனிப்பதில் கருத்துடன் உதவிபுரிகின்ற எவரும் பின்வருமாறு தண்டிக்கப்படுதல் வேண்டும்,

அதாவது:-

தண்டனை

(அ) அவ்விதம் அடைத்துவைத்திருக்கப்படும் அல்லது கைதுசெய்யப்பட வேண்டிய ஆள் மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய தவறொன்றுக்கு குற்றம் சாட்டப்பட்டுள்ளவரானால் அல்லது அதற்கு கைது செய்யப்படவேண்டியவரானால் குற்றப்பணத்துடன் கூடிய அல்லது கூடாத ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியல் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அவ்விதம் அடைத்துவைத்திருக்கப் படும் அல்லது கைதுசெய்யப்படவேண்டிய ஆள் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான மறியலினால் தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்பட்டுள் ளவரானால் அல்லது அதற்குக் கைதுசெய் யப்பட வேண்டியவரானால் குற்றப்பணத்துடன் கூடிய அல்லது கூடாத மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகை யிலொருவகை மறியல் அல்லது

(இ) அவ்விதம் அடைத்து வைத்திருக்கப் படும் அல்லது கைதுசெய்யப்படவேண்டிய ஆள் பத்து ஆண்டுகளுக்குக் குறைந்த ஒரு காலத்திற் கான மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவ றொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவரா னால் அல்லது அதற்குக் கைதுசெய்யப்பட வேண்டியவரானால், குற்றப் பணத்துடன் கூடிய அல்லது கூடாத இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியல்.

குற்றத்தீர்ப்புப் பெற்ற அல்லது சட்டமுறை யாகப் பாரப் படுத்தப்பட்ட ஆளொருவரைக் கைது செய்வ தற்குச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள பகிரங்க ஊழியர் ஒருவர் கருதிக் கைதுசெய்யாது விடல்.

**217.** பகிரங்க ஊழியரொருவராய் அத்தகைய பகி ரங்க ஊழியர் என்ற தன்மையில் ஏதேனும் தவ றொன்றிற்கான நீதிமன்றமொன்றில் குற்றத் தீர்ப் பின் கீழ் உள்ள எவரேனுமாளைக் கைது செய் வதற்கு அல்லது அடைத்து வைத்திருப்பதற்கு அல்லது அத்தகைய ஆள் சட்டமுறையாகக் கட்டுக்காப்புக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தால் கைதுசெய்வதற்கு அல்லது அடைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டவராக இருந்துகொண்டு அத்தகைய ஆளைக் கருதி கைதுசெய்யாது விடுகின்ற அல்லது அத்த கைய அடைத்து வைத்தலிலிருந்த அத்தகைய ஆளை தப்பியோடக் கருதி விட்டிருக்கின்ற அல்லது அத்தகைய ஆள் தப்பிச் செல்லுவ தில் அல்லது தப்பிச்செல்ல எத்தனிப்பதில் கருதி உதவிபுரிகின்ற எவரும் பின்வருமாறு தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அதாவது -

தண்டனை

(அ) அடைத்து வைத்திருக்கப்பட்ட அல்லது கைதுசெய்யப்பட வேண்டிய ஆள் மரணதண் டனை விதிக்கப்பட்டவரானால், குற்றப்பணத்து டனான அல்லது இல்லாத பதினாங்கு ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியல் அல்லது.

(ஆ) அடைத்து வைத்திருக்கப்பட்ட அல்லது கைதுசெய்யப்பட வேண்டிய ஆள் நீதிமன்ற மொன்றில் குற்றத் தீர்ப்பின்படி அல்லது. அத் தகைய குற்றத் தீர்ப்பை மாற்றியமைத்ததன் பயனாகப் பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டவொரு காலத்திற்கான மறியலுக்குட் பட்டவரானால் குற்றப்பணத்துடனான அல்லது இல்லாத ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியல் அல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) அடைத்து வைத்திருக்கப்பட்ட அல்லது கைது செய்யப்பட வேண்டிய ஆள் நீதிமன்றம் ஒன்றின் குற்றத்தீர்ப்பின் படி பத்து ஆண்டுகள் வரை நீடிக்காத ஒரு காலத்திற்கான மறியலுக்குட்பட்டவரானால் அல்லது அவ்வாள் சட்ட முறையாகக் கட்டுக்காப்புக்குப் பாரப்படுத்தப்பட்டவரானால் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இவையிரண்டும்.

பகிரங்க ஊழியர் ஒருவர் கவலையீனமாக விட்டமையினால் அடைத்து வைத்தலிலிருந்து அல்லது கட்டுக்காப்பிலிருந்து தப்பிச் செல்லல்.

**218.** பகிரங்க ஊழியர் ஒருவரால் அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் ஏதேனும் தவறு சாட்டப்பட்டுள்ள அல்லது தவறுக்கு குற்றவாளியாகக் காணப்பட்ட அல்லது கட்டுக்காப்புக்குச் சட்டமுறையாக பாரப்படுத்தப்பட்ட எவரேனுமாளை அடைத்து வைத்திருக்கச் சட்டப்படி கட்டுப்பட்டவராயிருந்து கொண்டு அத்தகைய அடைத்து வைத்ததிலிருந்து அவ்வாள் தப்பிச் செல்லக் கவலையீனமாக விட்டிருக்கும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சட்டமுறையாகக் கைதுசெய்யப் படுவதற்கு ஆளொருவர் எதிர்த்தல் அல்லது தடுத்தல்.

**219.** அவர் சாட்டப்பட்டுள்ள அல்லது குற்றவாளியாகக் காணப்பட்ட ஏதேனும் தவறுக்காகச் சட்டமுறையில் கைதுசெய்யப்படுவதற்கு கருதி ஏதேனும் எதிர்ப்பு அல்லது சட்டவிரோதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை ஏற்படுத்துகின்ற அல்லது அத்தகைய தவறு எதற்கும் அவர் சட்டப்படி தடுத்து வைக் கப்பட்டுள்ள ஏதேனும் கட்டுக்காவலிலிருந்து தப்பிச் செல்லும் அல்லது தப்பிச்செல்ல எத்த னிக்கும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை யிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்: :- கைதுசெய்யப்பட வேண்டிய அல்லது கட்டுக்காவலில் தடுத்து வைக்கப்பட்ட ஆள், அவர் சாட்டப்பட்ட அல்லது குற்றவாளியாக காணப்பட்ட தவறுக் குரியதண்டனையோடும் இப்பிரிவின் கீழான தண்டனை மேலதிகமானதா கும்.

குடியியல் அழைப்புக் கட்டளை ஆகியனவற்றின் கீழ் சட்டமுறையாக கைது செய்யப்படுதை எதிர்த்தல் அல்லது தடுத்தல்

**219.அ.** ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட ஏதேனும் குடியியல் அழைப்புக் கட்டளை ஆகியனவற்றின் மேல் அவர் அல்லது வேறு எவரேனுமாள் சட்ட முறையில் கைது செய்யப்படுவதற்கு கருதி ஏதேனும் எதிர்ப்பு அல்லது சட்டவிரோதமான தடை ஏற்படுத்து கின்ற அல்லது ஏதேனும் அத்தகைய அழைப் புக்கட்டளை ஆகியனவற்றின் மேல் அவர் சட்டப்படி தடுத்துவைக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டுக் காவலிலிருந்து தப்பிச் செல்லுகின்ற அல்லது தப்பிச் செல்ல எத்தனிக்கின்ற அல்லது அத்தகைய அழைப்புக்கட்டளை ஆகியவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் அவ்வாள் சட்டப்படி தடுத்து வைக்கப் பட்டுள்ள ஏதேனும் கட்டுக்காவலிலிருந்து அத் தகைய வேறாளை மீட்கின்ற அல்லது மீட்க எத்தனிக்கின்ற எவரும் தவறொன்றுக்குப் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு குற்ற வாளியாக காணப்படுமிடத்து, நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மிகாதவொரு காலத்திற்கு சாதாரண அல்லது கடூழிய மறியலுக்கு அல் லது இவையிரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

தண்டனை

220. தவறொன்றுக்காக வேறெவரேனும்மாள் சட்ட முறையில் கைதுசெய்யப்படுவதற்கு கருதி ஏதே னும் எதிர்ப்பு அல்லது சட்டவிரோதமான தடை ஏற்படுத்துகின்ற அல்லது தவறொன்றுக்காக அவர் சட்டப்படி தடுத்துவைக்கப்பட்டுள்ள ஏதே னும் கட்டுக்காவலிலிருந்து அவரை மீட்கின்ற அல்லது மீட்க எத்தனிக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இரு வகையிலொருவகை மறியலி னால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண் டும்:

வேறோராள் சட்டமுறையாகக் கைதுசெய் யப்படுதலை எதிர்த்தல் அல்லது தடை செய்தல்.

தண்டனை

அல்லது கைதுசெய்யப்படவேண்டிய ஆள் அல் லது மீட்கப்பட்ட அல்லது மீட்க எத்தனிக்கப் பட்ட ஆள் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான மறியலினால் தண் டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்கு குற்றஞ்சாட் டப்பட்டுள்ளவராய் அல்லது கைது செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படற்குரியவராயிருந்தால் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒருகாலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப் படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற் கும் அவர் ஆளாதல் வேண்டும்

அல்லது கைதுசெய்யப்பட வேண்டிய ஆள் அல்லது மீட்கப்பட்ட அல்லது மீட்க எத்தனிக் கப்பட்ட ஆள் மரணதண்டனை விதிக்கப்படக் கூடிய தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வராயின் அல்லது கைது செய்யப்படற்குரிய வராயிருந்தால் ஏழு ஆண்டுகள்வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளா தல் வேண்டும்:

அல்லது கைதுசெய்யப்படவேண்டிய அல்லது மீட்கப்பட்ட அல்லது மீட்க எத்தனிக்கப்பட்ட ஆள் நீதிமன்ற குற்றத்தீர்ப்பொன்றின் கீழ் அல் லது அத்தகைய குற்றத்தீர்ப்பினை மாற்றிய மைத்ததன் பயனாக பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட ஒருகாலத்திற்கான மறியலுக் காட்பட்டவராயிருந்தால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொவகை மறியல் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளா தல் வேண்டும்:

அல்லது கைதுசெய்யப்படவேண்டிய ஆள் அல் லது மீட்கப்பட்ட அல்லது மீட்க எத்தனிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட ஆள் மரணதண்டனை விதிக்கப்பட்டவராயிருந்தால் பத்து ஆண்டுகளுக்கு மிகாத ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படாத விடயங்களில் எதிர்த்தல், தடைசெய்தல், தப்பிச்செல்லல் அல்லது மீட்டல்.

**220 அ.** 219, 219அ, 220 என்னும் பிரிவுகளில் அல்லது அப்போதைக்கு வலுவிலிருக்கும் வேறெதேனும் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிராத வேறுவிடயத்தில், அவர் அல்லது வேறெவரேனுமாளின் சட்டப்படி கைதுசெய்யப்படுவதற்கு கருதி ஏதேனும் எதிர்ப்பு அல்லது சட்டவிரோதமான தடை ஏற்படுத்துகின்ற , அல்லது அவர் சட்டப்படி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் கட்டுக் காவலிலிருந்து தப்பிச்செல்லுகின்ற அல்லது தப்பிச்செல்ல எத்தனிக்கின்ற அல்லது அவ்வாள் சட்டப்படி தடுத்துவைக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டுக்காவலிலிருந்து அத்தகைய வேறாளை மீட்கின்ற அல்லது மீட்க எத்தனிக்கின்ற எவரும் ஆறுமாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒருகாலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சட்டமுறையாக கட்டுக்காவலில் இருந்து தப்பிச் செல்லல்

**221.** சமாதானம் காக்க அல்ல நன்னடத்தையுடையவராய் இருப்பதற்கென நற்பினை கொடுக்க தவறுவதற்காக அவர் சட்டப்படி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் கட்டுக்காவலிலிருந்து தப்பிச்செல்லுகின்ற அல்லது தப்பிச்செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயலுகின்ற எவரும் ஓராண்டுவரை நீடிக்கக் கூடிய ஒருகாலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத் தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக் கப்படுதல் வேண்டும்.

தண்டனைக் குறைப்பு நிபந்தனையை மீறுதல்.

**222.** நிபந்தனையோடு கூடிய ஏதேனும் மன்னிப் பினை அல்லது தண்டனைக்குறைப்பை ஏற் றுள்ளவராயிருந்துகொண்டு அத்தகைய குறைப்பு வழங்கப்பட்ட ஏதேனும் நிபந்தனையை அறிந்து மீறும் எவரும், அவர்மரண தண்டனை விதிக்கப் பட்ட ஒருவராயிருந்தால், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய இருவகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல்வேண்டும். அவ ரின் குற்றத்திற்கு மரணதண்டனை அல்லாதி ருந்தால் அத்தண்டனையின் எப்பாகத்தேனும் அவர் ஏற்கனவே அனுபவித்திராவிடின் அவர் முதலில் விதிக்கப்பட்ட அத்தண்டனையினாலும் ஏதேனும் பாகத்தினை அவர் அனுபவித்திருந் தால், அவர் அனுபவித்திருக்காத அத்தண்ட னையின் அத்துனையளவினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

நீதிமுறை நடவடிக்கைகளில் எந்நிலையிலேனும் அமர்ந்துள்ள பகிரங்க ஊழியரைக் கருதி நிந்தனை செய்தல் அல்லது இடையீடு செய்தல்.

**223.** எவரேனும் பகிரங்க ஊழியர் நீதிமுறையில் நடவடிக்கை யொன்றில் எந்நிலையிலேனும் இருக்கும்போது கருதி அவரை நிந்தனை செய் யும் அல்லது அவருக்கு இடையீடு ஏற்படுத்தும் எவரும் ஆறுமாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல்லது ஆயிரம் ரூபா வரை செல்லக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டி னாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

224. தேர்ந்தனுப்பப்பட்ட, குழாத்திற் சேர்த்துக்கொள் ளப்பட்ட அல்லது சத்தியஞ் செய்துகொள்ள அவர் சட்டப்படி உருத்துடையவரல்லர் என அவரறியும் ஏதேனும் விடயத்தில் யூரரொருவ ராக அல்லது மதிப்பீட்டாளராக ஆள்மாறாட் டத்தின் மூலம் அல்லது வேறுவகையாக தாம் தேர்ந்தனுப்பப்பட்ட குழாத்திற் சேர்க்கப்பட்ட அல்லது சத்தியஞ்செய்துகொள்ளக் கருதிச் செய்விக்கும் அல்லது அறிந்துகொண்டு விட்டி ருக்கும் அல்லது சட்டத்திற்கு முரணாகத் தாம் அவ்விதம் தேர்ந்து அனுப்பப்பட்டுள்ளார். குழாத் திற்குற் சேர்க்கப்பட்டுள்ளார். அல்லது சத்தியஞ் செய்துள்ளார். என அறிந்து கொண்டு அத்த கைய யூரி சாயலில் அல்லது மதிப்பீட்டாளராக வேண்டுமென்று சேவை செய்யும் ஆள் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய லினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

யூரரொருவரை அல்லது ஆள் மாறாட்டம் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XII

## நாணயங்கள் அரசாங்க முத்திரைகள் தொடர்பான தவறுகள் பற்றி

"நாணயம்" "புழக்கத்தி லுள்ள நாணயம்" என்பவற்றின் பொருள்.

**225.** "நாணயம்" என்பது அரசாங்கத்தினது அதிகாரத்தினால் பணமாகப் பயன்படுத்தப்படுவதற்கென அல்லது ஏதேனும் பிறநாட்டு அரசாங்கத்தினது அதிகாரத்தினால் அவ்விதம் பயன்படுவதற்கென அல்லது 1941 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க நாணயத்தாள்கள் கட்டளைச் சட்டத்தின் அல்லது நிதிச் சட்டத்தின் கீழ் அல்லது நடைமுறையில் உள்ள நாணயங்களை வெளியிடும் சட்டத்தின் கீழ் முத்திரையிட்டு வழங்கப்பட்ட உலோகமாகும்.

"புழக்கத்திலுள்ள நாணயம்" என்பது இலங்கையின் ஏதேனும் பாகத்தில் அல்லது ஏதேனும் பிறநாட்டில் சட்டமுறையாக புழக்கத்திலிருக்கும் நாணயம் எனப் பொருள்படும்.

**எடுத்துக்காட்டுக்கள்**

*(அ) சோகிகள் நாணயமல்ல.*

*(ஆ) முத்திரையிடப்படாத உலோகக்கட்டிகள் அல்லது பாளங்கள் பணமாகப் பயன்படுத்தப்பட்டாலும் நாணயமல்ல.*

*(இ) பதக்கங்கள், அவைபணமாக பயன்படுத்த கருதப்படாமையின் நாணயமல்ல*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**226.** நாணயத்தின் போலிபுனைகின்ற அல்லது போலி புனைவதற்கான செய்முறையின் எப்பாகத் தேனும் அறிந்து கொண்டு புரிகின்ற எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறிய லினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

நாணயத்தின் போலி புனைதல்

விளக்கம் : வஞ்சனைபுரியும் கருத்துடன் அல்லது அதனால் வஞ்சனை புரியப்படக்கூடும் என அறிந்துகொண்டு உண்மையான நாணயம் ஒன்று வேறொரு நாணயம் போன்று தோன்றும் படி செய்யும் ஆள் ளொருவர் இத்தவற்றை புரிகிறார்.

**227.** புழக்கத்திலுள்ள நாணயத்தின் போலிபுனை கின்ற அல்லது போலிபுனைவதற்கான செய் முறையின் எப்பாகத்தை யேனும் அறிந்து கொண்டு புரிகின்ற எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப் படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற் கும் அவர் ஆளாதல் வேண்டும்.

புழக்கத்திலுள்ள நாணயத்தின் போலி புனைதல்

**228.** நாணயத்தை போலிபுனையும் நோக்கத்திற்காக பயன் படுத்துவதற்கென அல்லது பயன்படுத் தப்படக் கருதப்பட்டுள்ளது என அறிந்து கொண்டு அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாய முள்ளவராயிருந்து கொண்டு ஏதேனும் சாயத்தை அல்லது சாதனத்தை தயாரிக்கின்ற அல்லது

நாணயத்தைப் போலிபுனைதற்கான சாதனத்தைத் தயாரித்தல் அல்லது விற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்துகின்ற அல்லது தயாரிக்கும் அல்லது திருத்தும் செய்முறையின் ஏதேனும் பாகத்தை புரிகின்ற அல்லது வாங்குகின்ற, விற்கின்ற அல்லது கையாளுகின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

புழக்கத்திலுள்ள நாணயத்தைப் போலி புனைதற்கான சாதனத்தைத் தயாரித்தல் அல்லது விற்றல்

**229.** புழக்கத்திலுள்ள நாணயத்தை போலிபுனையும் நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கென அல்லது பயன்படுத்தப்படக் கருதப்பட்டுள்ளது என அறிந்து கொண்டு அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாயமுள்ளவராயிருந்து கொண்டு ஏதேனும் சாயத்தை அல்லது சாதனத்தை தயாரிக்கின்ற அல்லது திருத்துகின்ற அல்லது தயாரிக்கும் அல்லது திருத்தும் செய்முறையின் ஏதேனும் பாகத்தை புரிகின்ற அல்லது வாங்குகின்ற விற்கின்ற அல்லது கையாளுகின்ற எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவரை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

நாணயத்தைப் போலிபுனைவதற்கெனப் பயன் படுத்தும் நோக்கமாகச் சாதனத்தை அல்லது பொருளை உடைமையில் வைத்திருத்தல்.

**230.** நாணயத்தை போலிபுனைவதற்கான ஏதேனும் சாதனத்தை அல்லது பொருளை அவ்விதம் பயன்படுத்துவதற்கென அந் நோக்கத்திற்கென அது பயன்படுத்த கருதப்பட்டுள்ளது என அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமுள்ளவராயிருந்து கொண்டு அதனை தம்முடமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கு மெவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொரு வகை மறியலினால் தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத் திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

அத்துடன் போலிபுனையப்பட்டதற்கான நாண யம் புழக்கத்திலுள்ள நாணயமாயின் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான இருவகை யிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேணடும்.

**231.** இலங்கையிலுள்ளவராயிருந்து கொண்டு, இலங்கைக்கு வெளியே நாணயம் போலிபுனை யப்பட உடந்தையளிக்கும் எவரும், அவர் இலங்கையின் அத்தகைய நாணயம் போலி புனைபட உடந்தை யளித்திருந்தாற் போன்று அதேமுறையாக தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நாணயம் இலங்கைக்கு வெளியே போலி புனையப்படுவதற்கு இலங்கையில் உடந்தைய ளித்தல்.

**232.** ஏதேனும் போலி நாணயத்தை அது போலியா னது என அறிந்து கொண்டு அல்லது நம்புவ தற்கு நியாயமுள்ளவராயிருந்து கொண்டு இலங்கையினுள் இறக்குமதி செய்யும் அல்லது இங்கிருந்து ஏற்றுமதி செய்யும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

போலி நாணயத்தை இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழக்கத்திலுள்ள நாணயங்களின் போலிகளை இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல்.

**233.** ஏதேனும் புழக்கத்திலுள்ள போலி நாணயத்தை, அது போலியானது என அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமுள்ளவராயிருந்து கொண்டு இலங்கையினுள் இறக்குமதி செய் கின்ற அல்லது இங்கிருந்து ஏற்றுமதி செய்யும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

போலியானதென்ற அறிவுடன் உடைமையில் வைத்திருக்கப்படும் போலி நாணயத்தை வேறொருவரிடம் ஒப்படைத்தல்

**234.** ஏதேனும் போலிநாணயம் அவரது உடமையில் வரும் பொழுது அது போலியானது என அவர் அறிந்திருந்த ஏதேனும் போலிநாணயத்தை உடையவராக இருந்து கொண்டு மோசடியாக அல்லது மோசடி புரியப்படலாம் என்ற கருத் துடன் வேறெவரேனுமாளுக்கு அதனை ஒப்ப டைக்கின்ற அல்லது அதனை ஏற்கும்படி ஆளெ வரையேனும் தூண்ட எத்தனிக்கின்ற எவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய லினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவராளாதல் வேண்டும்.

போலியானதென்ற அறிவுடன் உடைமையில் வைத்திருக்கப்படும் புழக்கத்திலுள்ள நாணயத்தை ஒப்படைத்தல்

**235.** ஏதேனும் புழக்கத்திலுள்ள போலி நாணயம் அவரது உடமையில் வரும்பொழுது அது போலியானது என அவர் அறிந்திருந்த ஏதே னும் புழக்கத்திலுள்ள போலி நாணயத்தை உடையவராயிருந்துகொண்டு மோசடியாக அல் லது மோசடி புரியப்படலாம் என்ற கருத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறெவெறேனுமாளுக்கு அதனை ஒப்படைக்கின்ற அல்லது அதனை ஏற்கும்படி ஆளெவரையேனும் தூண்ட எத்தனிக்கின்ற எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவராளாதல் வேண்டும்.

**236.** ஏதேனும் போலிநாணயம் போலியானதெனத் தமது உடமையில் அதனைக் கொண்ட பொழுது அறியாததும் பின்னர் போலியானதுமானதென அறிந்ததுமான ஏதேனும் போலிநாணயத்தை உண்மையானதென வேறாள் எவரிடமும் ஒப்படைக்கின்ற அல்லது வேறாள் எவரையும் அது உண்மையானதென ஏற்கும் படி தூண்ட எத் தனிக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது போலி புனையப்பட்ட நாணயத்தின் பெறுமதியின் பத்து மடங்குவரை நீடிக்கக்கூடிய ஒரு தொகையான குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நாணயத்தைப் போலியானதென அறியாது முதலில் உடமையில் வைத்திருந்தவர் அதனை உண்மையானதென வேறொருவரிடம் ஒப்படைத்தல்

**237.** ஏதேனும் நாணயம் போலியானதென அதனை உடமையிற்கொண்ட நேரத்தில் அறிந்திருந்து கொண்டு மோசடியாக அல்லது மோசடி புரியப் படலாம் என்ற கருத்துடன் போலிநாணயத்தை தாம் உடமையில் வைத்திருக்கும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய

போலி நாணயத்தை உடைமையிற் கொண்டபோது அது போலியானதென அறிந்த ஆளொருவானால் போலி நாணயத்தை உடைமையில் வைத்திருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

போல நாணயத்தை உடமையில் கொண்டபோது அது போலியானதென அறிந்த ஆளொருவரால் புழக்கத்திலுள்ள போலிநாணயம் உடமையில் வைத்திருக்கப்படுதல்

238. ஏதேனும் நாணயம் போலியானதென அதனை உடமையிற் கொண்ட நேரத்தில் அறிந்து கொண்டு மோசடியாக அல்லது மோசடி புரியப் படலாம் என்ற கருத்துடன் புழக்கத்திலுள்ள போலி நாணயத்தை தம் உடமையில் வைத்திருக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

மோசடியாக அல்லது நேர்மை யீனமாக ஏதேனும் நாணயத்தின் நிறையைக் குறைத்தல் அல்லது சேர்க்கையை மாற்றுதல்.

239. ஏதேனும் நாணயத்தின் நிறையைக்குறைக் கின்ற அல்லது செயற்கையை மாற்றுகின்ற ஏதேனும் செயற்பாட்டை அந்நாணயத்தில் மோசடியாக அல்லது நேர்மையீனமாக புரிகின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

விளக்கம்:- நாணயத்தின் பகுதியைக் குடைந்தெடுத்துவிட்டு அவ்வெற்றிடத்தில் வேறெதையும் புகுத்தும் ஆளொருவர் அந்நாணயத்தின் சேர்க்கையை மாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

240. ஏதேனும் புழக்கத்திலுள்ள நாணயத்தின் நிறையைக் குறைக்கின்ற அல்லது சேர்க்கையை மாற்றுகின்ற ஏதேனும் செயற்பாட்டை அந்நாணயத்தில் மோசடியாக அல்லது நேர்மையீனமாக புரிகின்ற எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப்பணத்திற்கு அவர் ஆளாதல் வேண்டும்.

மோசடியாக அல்லது நேர்மையீனமாக ஏதேனும் புழக்கத்திலுள்ள நாணயத்தின் நிறையைக் குறைத்தல் அல்லது சேர்க்கையை மாற்றுதல்.

241. ஏதேனும் நாணயம் வேறொரு விவரணத்தைக் கொண்ட நாணயமொன்றாக இருத்தல் வேண்டு மென்ற கருத்துடன் அந்நாணயத்தின் தோற்றத்தை மாற்றும் ஏதேனும் செயற்பாட்டை அதிற் புரிகின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பிறிதொரு விவரணத்தைக் கொண்ட நாணயமொன்றாக அது இருத்தல் வேண்டுமென்ற ஏதேனும் நாணயத்தின் தோற்றத்தை மாற்றுதல்.

242. ஏதேனும் புழக்கத்திலுள்ள நாணயம் வேறொரு விவரணத்தைக் கொண்ட நாணயமொன்றாக இருத்தல் வேண்டுமென்ற கருத்துடன் அந்நாணயத்தின் தோற்றத்தை, மாற்றும் ஏதேனும் செயற்பாட்டை அதிற் புரிகின்ற எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பிறிதொரு விவரணத்தைக் கொண்ட நாணயமொன்றாக அதுஇருத்தல் வேண்டுமென்ற கருத்துடன் எதேனும் புழக் கத்திலுள்ள நாணயத்தின் தோற்றத்தினை மாற்றதுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமடைந்துள்ளது என்ற அறிவுடன் உடைமையில் வைத்திருக்கப்பட்ட நாணயம் வேறொருவரிடம் ஒப்படைக்கப்படல்.

**243.** பிரிவு 239 அல்லது பிரிவு 241இல் விபரிக்கப்பட்ட தவறு அது தொடர்பில் புரியப்பட்டுள்ள நாணயத்தை தம்முடமையில் உடையவராயும் அத்தகைய நாணயத்தை தமதுடமையில் கொண்ட பொழுது அது தொடர்பில் அத்தகைய தவறுபுரியப்பட்டுள்ளது என்பதனை அறிந்த வராயும் இருந்துகொண்டு மோசடியாக அல்லது மோசடி புரியப்படலாம் என்ற கருத்துடன் அத்தகைய நாணயத்தை வேறு எவரேனுமாளுக்கு ஒப்படைக்கின்ற அல்லது அதனையேற்கும்படி ஆள் எவரேனும் தூண்ட எத்தனிக்கின்ற எவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

மாற்றமடைந்துள்ளது என்ற அறிவுடன் நாணயத்தை ஒப்படைத்தல்

**244.** பிரிவு 240 அல்லது பிரிவு 242 இல் விபரிக்கப்பட்ட தவறு அது தொடர்பில் புரியப்பட்டுள்ள நாணயத்தை தம்முடமையில் உடையவராயின் அத்தகைய நாணயத்தை தமதுடமையில் கொண்டபொழுது அது தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டுள்ளது என்பதனை அறிந்தவராய் இருந்து கொண்டு மோசடியான அல்லது மோசடி புரியப்படலாம் என்ற கருத்துடன் அத்தகைய நாணயத்தை வேறு எவரேனுமாளுக்கு ஒப்படைக்கின்ற அல்லது அதனை ஏற்கும்படி ஆளெவரையேனும் தூண்ட எத்தனிக்கின்ற எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவரளாதல் வேண்டும்.

**245.** பரிவு 239 அல்லது பிரிவு 241 இல் விபரிக்கப் பட்ட தவறு அது தொடர்பில் புரியப்பட்டுள்ள நாணயத்தை, அத்தகைய நாணயத்தை தமது டமையில் கொண்ட பொழுது அது தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டுள்ளது என்ப தனை அறிந்தவராயிருந்து கொண்டு மோசடி யான அல்லது மோசடி புரியப்படலாம் என்ற கருத்துடன் தமதுடமையில் வைத்திருக்கின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

உடைமையிற் கொண்ட பொழுது அது மாற்றமடைந்த தென அறிந்த ஆளொருவரினால் மாற்றமடைந்த நாணயம் உடமையில் வைத்திருக் கப்படுதல்.

**246.** பிரிவு 240,அல்லது பிரிவு 242 இல் விபரிக்கப் பட்ட தவறு அது தொடர்பில் புரியப்பட்டுள்ள புழக்கத்திலுள்ள நாணயத்தை அத்தகைய நாணயத்தை தமதுடமையில் கொண்ட பொழுது அது தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட் டுள்ளது என்பதனை அறிந்தவராயிருந்து கொண்டு மோசடியாக அல்லது மோசடி புரியப்படலாம் என்ற கருத்துடன் தமதுடமையில் வைத்திருக் கின்ற எவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளா தல் வேண்டும்.

உடைமையிற் கொண்ட பொழுது அது மாற்றமடைந்த தென அறிந்த ஆளொருவரி னால் புழக் கத்திலுள்ள நாணயம் உடைமையில் வைத்திருக் கப்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமையிற் கொண்ட பொழுது அது மாற்றமடைந் துள்ளதென் பதனை அறியாது நாணயத்தை உண்மையானதென வோறொருவரிடம் ஒப்படைத்தல்.

**247.** பிரிவுகள் 239,240,241 அல்லது 242 இல் குறிப் பிட்ட விதமான அத்தகைய ஏதேனும் செயற் பாடு அது தொடர்பில் புரியப்பட்டுள்ளது என அவர் அறிந்துள்ளதும் ஆனால் அதனை அவர் தமதுடமையில் கொண்ட பொழுது அதுதொடர் பில் அத்தகைய செயற்பாடு புரியப்பட்டுள்ளது என்பது அறியப்படாததுமான ஏதேனும் நாண யத்தை உண்மையானதென, அல்லது அது உண்மையிலிருப்பதற்கு வேறானதொரு விபர ணத்தை கொண்டநாணயமொன்றாக வேறாளெ வரிடமும் ஒப்படைக்கின்ற அல்லது உண்மை யானதென அல்லது அது உண்மையிலிருப்ப தற்கு வேறானதொரு விவரணத்தைக் கொண்ட நாணயமொன்றாக ஆளெவரேனும் ஏற்கும்படி தூண்ட எத்த னிக்குமெவரும், இரண்டு ஆண்டு கள்வரை நீடிக்கக்கூடிய இருவகையிலொரு வகை மறியலினால், அல்லது மாற்றமடைந் துள்ள நாணயம் எந்த நாணயத்திற்கென ஆக் கப்பட்டதோ அல்லது ஆக்க எத்தனிக்கப்பட் டதோ அந்நாணயத்தின் பெறுமதியின் பத்து மடங்கு வரை நீடிக்கக்கூடிய ஒரு தொகை யான குற்றப்பணத்தினால் அல்லது இவையிர ண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அரசாங்க முத்திரை யொன்றைப் போலி புனைதல்.

**248.** *அரசிறை நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் முத்திரையில் போலி புனைகின்ற அல்லது போலி புனைவதற்கான செய்முறையின் எப்பாகத்தையேனும் அறிந்து கொண்டு புரிகின்ற எவரும் பதினைந்து ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒருகாலத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத் திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

விளக்கம் :- ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த உண் மையான முத்திரையொன்று பிறி தொரு வர்க்கத்தைச் சேர்ந்த உண்மை யான முத்திரையொன்று போன்று தோன்றச் செய்வதன் மூலம் போலி புனையுமாள் இத்தவறு புரிகின்றார்.

249. *அரசிறை நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் முத்திரையை போலி புனையும் நோக்கத்திற்கான ஏதேனும் சாத னத்தை அல்லது பொருளை அவ்விதம் பயன் படுத்துவதற்கென அல்லது அந்நோக்கத்திற் கென அது பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது என அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமுள்ளவராயிருந்து கொண்டு தம்முடமை யில் வைத்திருக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப் படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற் கும் அவர் ஆளாதல் வேண்டும்.

அரசாங்க முத்திரை யொன்றைப் போலிபுனையும் நோக்கத்துக்கான சாதனத்தைத் அல்லது பொருளை உடைமையில் வைத்திருத்தல்

250. *அரசிறை நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் முத்திரையை போலி னையும் நோக்கத்திற்காக பயன்படுத்துவதற் கென அல்லது பயன்படுத்தப்படக் கருதப்பட் டுள்ளது என அறிந்துகொண்டு அல்லது அவ்

அரசாங்க முத்திரை யொன்றைப் போலி புனையும் நோக்கத் துக்கான சாதனத் தைத் தயாரித்தல் அல்லது விற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு நம்புவதற்கு நியாயமுள்ளவராயிருந்து கொண்டு ஏதேனும் சாதனத்தை தயாரிக்கின்ற அல்லது தயாரிக்கும் செய்முறையின் எப்பாகத்தையேனும் புரிகின்ற அல்லது வாங்குகின்ற அல்லது விற்கின்ற அல்லது கையாளுகின்ற எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

போலி அரசாங்க முத்திரையினை விற்றல்.

251. *அரசிறை நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் முத்திரை போலியானதென அவர் அறிந்த அல்லது அவர் நம்புவதற்கு நியாயமுள்ள ஏதேனும் முத்திரையை விற்கின்ற அல்லது விற்க முனைகின்ற எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

போலி அரசாங்க முத்திரையை உடைமையில் வைத்திருத்தல்.

252. *அரசிறை நோக்கத்திற்கான அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் முத்திரையின் போலியென அவர் அறிந்த ஏதேனும் முத்திரையை உண்மையான முத்திரையொன்றாக அதைப் பயன்படுத்தும் அல்லது கையாளும் கருத்துடன் அல்லது உண்மையான முத்திரையொன்றாக அது பயன்படுத்தப்படுவதற்காக தம்முடைமையில் வைத்திருக்கும் எவரும் ஏழு ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேணடும்.

**253.** *அரசிறை நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் முத்திரையின் போலியென அறிந்துகொண்டு உண்மையான முத்திரையொன்றாக ஏதேனும் முத்திரையைப் பயன்படுத்தும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

போலியானதென அறியப்பட்ட அரசாங்க முத்திரை யொன்றை உண்மையானதெனப் பயன்படுத்தல்.

**254** *மோசடியாக அல்லது அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தும் கருத்துடன் அரசிறை நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் முத்திரையினை தாங்கியுள்ள ஏதேனும் பதார்த்தத்திலிருந்து அத்தகைய முத்திரை பயன்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் எழுத்தை அல்லது ஆவணத்தை அகற்றுகின்ற அல்லது சிதைக்கின்ற அல்லது அத்தகைய எழுத்தில் அல்லது ஆவணத்தில் பயன்படுத்தப்பட்ட முத்திரையொன்று வேறோர் எழுத்திற்கு அல்லது ஆவணத்திற்கு பயன்படுத்தப்படலாம் என்பதற்காக அத்தகைய முத்திரையை ஏதேனும் எழுத்தில் அல்லது ஆவணத்திலிருந்து அகற்றுகின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்

அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தும் கருத்துடன் அரசாங்க முத்திரையொன்று தாங்கியுள்ள பதார்த்தத்திலிருந்து ஏதேனும் எழுத்தைச் சிதைத்தல் அல்லது ஆவணமொன்றுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள முத்திரையை அதிலிருந்து அகற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

முன்னர் பயன்படுத்தப் பட்டதென அறியப்பட்ட அரசாங்க முத்திரையைப் பயன்படுத்தல்.

**255.** * மோசடியாக அல்லது அரசாங்கத்திற்கு நட்ட மேற்படுத்துங் கருத்துடன், அரசிறை நோக்கத் திற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதே னும் முத்திரையினை முன்னர் பயன்படுத்தப் பட்டதென அறிந்துகொண்டு ஏதேனும் நோக் கத்துக்காகப் பயன்படுத்தும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொரு வகை மறியலி னால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

முத்திரை பயன்படுத்தப்பட் டுள்ளது என்பதனை குறிப்பிடும் குறியை அழித்தல்.

**256.** *மோசடியாக அல்லது அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தும் கருத்துடன் அரசிறை நோக்கத்திற் காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் முத்திரையிலிருந்து அது பயன்படுத்தப்பட்ட தென்பதனை குறிப்பிடுவதற்காக அத்தகைய முத்திரையில் இடப்பட்ட அல்லது அழுத்தப் பட்ட ஏதேனும் குறியை அழிக்கின்ற அல்லது அகற்றுகின்ற - இருவகையிலொருவகை மறிய லினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண் டும். அல்லது மோசடியாக அல்லது அத்த கைய கருத்துடன் ஏதேனும் அத்தகைய குறியை மாற்றுகின்ற அல்லது அத்தகைய குறி அதிலி ருந்து அழிக்கப்பட்ட அல்லது அகற்றப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அதில் அத்தகைய குறி மாற்றப்பட்டுள்ள ஏதேனும் அத்தகைய முத்திரையை அறிந்து தம்முடைமையில் வைத்திருக்கின்ற விற்கின்ற அல்லது பயன்படுத்தப்பட்டதாக அவர் அறியும் ஏதேனும் அத்தகைய முத்திரையை விற்கின்ற அல்லது கையாளுகின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

* (அரசிறை நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட முத்திரைகளுக்கு அவ்வேற்பாடுகள் ஏற்புடையதாகும் அம்முறையாக 248 முதல் 256 வரையுள்ள பிரிவுகள் சேமிப்பு முத்திரைகளுக்கும் ஏற்புடையனவாகும்:- சேமிப்புச்சான்றிதழ்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 (3).)

**256** **அ.** 248 முதல் 256 வரை (இரு பிரிவுகளுக்கு முட்பட) உள்ள பிரிவுகள் "அரசாங்கம்" என்னும் சொல் அஞ்சல் விகிதமொன்றைக் குறிப்பிடும் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட ஏதேனும் முத் திரை தொடர்பில் அல்லது அது சம்பந்தமாக பயன்படுத்தப்படுமிடத்து 14ஆம் பிரிவிலுள்ள எது எப்படியிருப்பினும், அரசாங்கத்தை இலங்கையிலுள்ள எப்பகுதியினதும் அல்லது ஏதேனும் பிறநாட்டின் அரசாங்கத்தையும் உள்ளடக்குவதாக கருதப்படுதல் வேண்டும்.

248 முதல் 256 வரையுள்ள 'அரசாங்கம்' என்பதன் விரிவெல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்: "முத்திரை" என்னுஞ் சொல் இவ்வத்தி யாயத்திற் பயன்படுத்தப்படுமிடத்து அஞ்சல் முத்திரைகளையும் உள்ளடக்கும்.

## அத்தியாயம் XIII

### நிறுவைகள் அளவைகள் தொடர்பான தவறுகள் பற்றி

பொய்யான நிறுக்கும் அல்லது அளக்கும் சாதனங்களை மோசடியாகப் பயன்படுத்தல்.

**257.** பொய்யானதென அவர் அறிந்த ஏதேனும் நிறுக்கும் அல்லது அளக்கும் சாதனத்தை மோசடி யாகப் பயன்படுத்தும் எவரும் ஓராண்டுவரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொரு வகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்

பொய் நிறையை அல்லது அளவினை மோசடியாகப் பயன்படுத்தல்.

**258.** ஏதேனும் பொய் நிறையை அல்லது பொய் யான நீட்டல் அல்லது முகத்தில் அளவினை மோசடியாக பயன்படுத்துகின்ற அல்லது ஏதே னும் நிறையை அல்லது நீட்டல் அல்லது முகத்தல் அளவினை அது உண்மையாக இருக்கும் நிறை அல்லது அளவிலிருந்து வேறொன்றாக மோசடியாகப்பயன்படுத்தும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய லினால் அல்லது குற்றப் பணத்தினால் அல் லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**259.** ஏதேனும் பொய்யான நிறுக்கும் அல்லது அளக்கும் சாதனத்தை அல்லது ஏதேனும் பொய்யான நிறையை அல்லது பொய்யான நீட்டல் அல்லது முகத்தல் அளவினை, அது மோசடியாகப் பயன்படுத்தலாம் என்ற கருத்து டன் தம்வசம் வைத்திருக்கும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல் லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பொய் நிறுவைகளை அல்லது அளவைகளை உடைமையில் வைத்திருத்தல்

**260.** பொய்யானது என அவர் அறிந்த ஏதேனும் நிறுக்கும் அல்லது அளக்கும் சாதனத்தை அல்லது நிறையை அல்லது நீட்டல் அல் லது முகத்தல் அளவினை, அது உண்மை யானது என பயன்படுத்தப்படுவதற்காக அல் லது அது உண்மையானது என பயன்படுத் தப்படக்கூடும் என்ற அறிவுடன் தயாரிக்கும் விற்கும் அல்லது கையாளும் எவரும் 3 ஆண்டு கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற் கான இருவகையில் ஒரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பொய் நிறுவைகளை அல்லது அளவைகளை தயாரித்தல் அல்லது விற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XIV

## பொது மக்கள் உடல் நலம் பாதுகாப்பு வசதி நல்லொழுக்கம் நன்னடத்தை என்பவற்றில் பாதிக்கும் தவறுகள் பற்றி

பொதுத் தொல்லை.

**261.** பொதுமக்களுக்கு அல்லது அயலில் வசிக்கின்ற அல்லது ஆதனத்தில் குடியிருக்கின்ற மக்களுக்கு பொதுவாக ஏதேனும் பொது ஊறினை, ஆபத்தினை அல்லது மனக்குலைவை ஏற்படுத்துகின்ற அல்லது ஏதேனும் பொது உரிமையை பயன்படுத்தும் சந்தர்ப்பம் உள்ள ஆட்களுக்கு ஊறு, தடை, ஆபத்து அல்லது மனக்குலைவை அவசியமாக ஏற்படுத்துகின்ற ஏதேனும் செயலைச் செய்யும் அல்லது சட்ட விரோதமான செய்யாமைக்கு குற்றவாளியாகும் ஆளொருவர் பொதுத் தொல்லைக்கு குற்றவாளியாகிறார்.

பொதுத்தொல்லை ஒன்று ஓரளவு வசதியை அல்லது அனுகூலத்தை விளைக்கின்றது. என்ற காரணத்தினால் மன்னிக்கப்படுதல் ஆகாது.

உயிர்வாழ்வுக் காபத்தான ஏதேனும் நோய் பரவுதலை ஏற்படுத்தக் கூடிய கவலையீனமான செயல்.

**262.** உயிர்வாழ்வுக்கு ஆபத்தான ஏதேனும் நோயைப் பரப்புகின்றதும் பரப்பக்கூடும் என அவர் அறிந்த அல்லது நம்புவதற்கு நியாயம் உள்ள ஏதேனும் செயலைச் சட்டவிரோதமாக அல்லது கவலையீனமாக செய்கின்ற எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையில் ஒரு வகை மறியலினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

263. உயிர்வாழ்வுக்கு ஆபத்தான ஏதேனும் நோயைப் பரப்புகின்றதும் பரப்பக்கூடும் என அவர் அறிந்த அல்லது நம்புவதற்கு நியாயம் உள்ள ஏதேனும் செயலைக் கெடுநோக்குடன் செய்யும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையில் ஒரு வகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

உயிர்வாழ்வுக் காபத்தான ஏதேனும் நோய்பரவுதலை ஏற்படுத்தக் கூடியகெடு நோக்கான செயல்.

264. நோய்த்தடைநிலையில் ஏதேனும் கலனை வைத்திருத்தற்கு அல்லது கரையுடன் அல்லது வேறு கலன்களுடன் நோய்த்தடை நிலையில் கலன்களில் தொடர்புகளை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது தொற்றுநோய் ஒன்று நிலவுகின்ற இடத்திற்கும் வேறு இடங்களிற்கும் இடையிலான தொடர்பினை ஒழுங்குபடுத்துவதற்கு என அரசாங்கத்தினால் ஆக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஏதேனும் விதியை அறிந்து கீழ்ப்படியாது விடுகின்ற எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நோய்த் தடுப்பு விதிக்குக் கீழ்ப்படியாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கக் கருதப்பட்டுள்ள உணவை அல்லது பானத்தைக் கலந்து கெடுத்தல்.

**265.** ஏதேனும் உணவுப்பொருளை அல்லது பானப் பொருளை உணவாக அல்லது பானமாக அத் தகைய பொருளை விற்கும் கருத்துடன் அல் லது அது அவ்வாறு உணவாக அல்லது பான மாக விற்கப்படக்கூடும் என்ற அறிவுடன் அப் பொருளை கேடு உண்டாக்கும் உணவாக அல்லது பானமாக ஆக்கும் வண்ணம் கலந்து கெடுக்கும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையில் ஒரு வகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல் லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கேடு உண் டாக்கும் உணவை அல்லது பானத்தை விற்றல்.

**266.** கெடுக்கப்பட்ட அல்லது கெட்டுப்போன அல் லது உண்பதற்கு அல்லது குடிப்பதற்கு தகுதி யற்ற நிலையிலுள்ள ஏதேனும் பொருளை உணவாக அல்லது பானமாக அப்பொருள் கெடுதியானது என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாயம் இருந்து கொண்டு அதனை உணவாக அல்லது பானமாக விற்கின்ற அல் லது விற்க முனைகின்ற அல்லது வெளிக்காட்டி வைக்கின்ற எவரும் ஆறுமாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையில் ஒரு வகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல் லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**267.** ஏதேனும் ஔடதம் அல்லது மருந்து தயாரிப்பு அத்தகைய கலப்பினை செய்திராதது போன்று ஏதேனும் மருத்துவ தேவைக்காக விற்கப்பட வேண்டும் அல்லது பயன்படுத்தப்பட வேண்டும். என்ற கருத்துடன் அல்லது அது விற்கப்படக் கூடும் அல்லது பயன்படுத்தக்கூடும் என்ற அறிவு டன் அதன் ஆற்றலைக் குறைக்கும் அல்லது செயற்பாட்டை மாற்றும் அல்லது அது கெடுதி உண்டாக்கக் கூடிதாகச் செய்யும் அத்தகைய முறையாக அவ் ஔடதத்தை அல்லது மருந்து தயாரிப்பை கலக்கும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடியதான ஒரு காலத்திற்கான இருவகையில் ஒரு வகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத் தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக் கப்படுதல் வேண்டும்.

ஔடதங்களைக் கலத்தல்.

**268.** எதேனும் ஔடதம் அல்லது மருந்து தயாரிப்பு அதன் ஆற்றல் குறையும் வகையில் அல்லது செயற்பாடு மாறும் வகையில் அது கெடுதியா னது ஆகும். அத்தகைய முறையில் கலந்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்து கொண்டு அது கலப்புறாததாக அதனை விற் கின்ற அல்லது விற்கமுனைகின்ற அல்லது வெளிக்காட்டி வைக்கின்ற அல்லது மருத்துவத் தேவைக்காக ஏதேனும் மருத்துவசாலையிலி ருந்து அதனை வழங்கும் அல்லது அக்கலப் பினை அறியாத எவரேனுமாளை மருத்துவத் தேவைக்காக அதனைப் பயன்படுத்தச்

கலப்புற்ற ஔடதங்களை விற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல் லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல்.

ஏதேனும் ஔடதத்தை வேறொரு ஔடதமாக அல்லது தயாரிப்பாக விற்றல்.

**269.** ஏதேனும் ஔடதத்தை அல்லது மருந்துத் தயாரிப்பை வேறோர் ஔடதமாக அல்லது மருந்து தயாரிப்பாக விற்கின்ற அல்லது விற்க முனைகின்ற அல்லது வெளிக்காட்டி வைக் கின்ற அல்லது மருத்துவத் தேவைக்காக ஏதே னும் மருத்துவச்சாலையிலிருந்து அதனை வழங்குகின்ற எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை யிரண்டினாலும் தண்டிக்கப்படு தல்.

பொது நீரூற்றின் அல்லது நீர்த்தேக்கத் தின் நீரைக் கெடுத்தல்.

**270.** ஏதேனும் பொது நீருற்றில் அல்லது நீர்த்தேக் கத்தின் நீரினை அது சாதாரணமாகப் பயன் படும் நோக்கத்திற்கு தகுதி குறைந்ததாகும். வகையில் வேண்டுமென்று ஊழலாக்கும் அல்லது கெடுக்கும் எவரும் மூன்று மாதங்கள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

271. ஏதேனுமிடத்திலுள்ள பவனத்தை அவ்விடத்திற்கு அயலில் வசிக்கின்ற அல்லது தொழில் நடாத்துகின்ற அல்லது பொது வழியொன்றிற் செல்லுகின்ற ஆட்களின் உடனலத்திற்குப் பொதுவில் கேடு விளைக்கக்கூடிய வகையில் வேண்டுமென்று பழுதுபடுத்துகின்ற எவரும் நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பவனத்தை உடல் நலத்துக்கு கேடு உண்டாக்குவ தாக்கல்.

272. மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அல்லது வேறு ஆள் ஒருவருக்கு காயம் அல்லது ஊறு ஏற்படக்கூடிய அவ்வித அசட்டுத் துணிவான அல்லது கவலையீனமான முறையில் ஏதேனும் பொது வழியில் ஏதேனும் ஊர்தியை ஓட்டுகின்ற அல்லது சவாரி செய்கின்ற எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால்அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பொதுவழி ஒன்றில் அசட்டுத்துணிவாக ஓட்டுதல் அல்லது சவாரி செய்தல்.

273. மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அல்லது வேறு ஆள் ஒருவருக்கு காயம் அல்லது ஊறு ஏற்படக்கூடிய அவ்வித அசட்டுத் துணிவான அல்லது கவலையீனமான முறையில் ஏதேனும் கலத்தை செலுத்துகின்ற எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது

கலம் ஒன்றை அசட்டுத் துணிவாகச் செலுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பொய்யான வெளிச்சம், குறி அல்லது மிதப்பியை வெளிக்காட்டி வைத்தல்.

274. எவரேனும் கலம் ஓட்டியை அவ்வித வெளிக்காட்டல் பிழையான வழியுட்படுத்தும் என்ற கருத்துடன் அல்லது பிழையான வழியுற்படுத்தக்கூடும் என்ற அறிவுடன், ஏதேனும் பொய்யான வெளிச்சத்தை அல்லது குறியை அல்லது மிதப்பியை வெளிக்காட்டி வைக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அளவில் மிஞ்சிப் பாரமேற்றப்பட்டுள்ள அல்லது பாதுகாப்பற்ற கலத்தில் நீர்மீது வாடகைக்கு ஆளை ஏற்றிச் செல்லல்.

275. ஏதேனும் கலம் ஆளொருவரின் உயிருக்கு ஆபத்தேற் படுத்தக்கூடிய அத்தகைய நிலையிலுள்ள பொழுது அல்லது அவ்விதம் அளவில் மிஞ்சிப் பாரமேற்றப்பட்டுள்ள பொழுது, வாடகைக்கென அக்கலத்தின் மூலம் அவ்வாளை அறிந்து கொண்டு அல்லது கவலையீனமாக நீர் மீது ஏற்றிச்செல்கின்ற அல்லது ஏற்றிச் செல்ல செய்விக்கின்ற எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பொதுவழி ஒன்றில் அல்லது

276. ஏதேனும் செயல் மூலம், அல்லது தமது உடமையிலுள்ள அல்லது பொறுப்பிலுள்ள ஏதேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதனம் தொடர்பில் முறையான ஒழுங்கு களைச் கடைப்பிடியாது விடுவதன் மூலம் ஏதேனும் பொது வகையில் அல்லது கலத்தின் பொது பாதையில் எவரேனும் ஆளுக்கு ஆபத்தினை, தடையை அல்லது ஊறினை விளைவிக்கும் எவரும் நூறு ரூபாவரை செல்லக் கூடிய குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கலத்தின் பாதையில் ஆபத்து அல்லது தடை ஏற்படுத்தல்.

11157

**277.** மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அல்லது வேறு ஆள் ஒருவருக்கு காயம் அல்லது ஊறு ஏற்படக்கூடிய அவ்வித அசட்டுத் துணிவான அல்லது கவலையீனமான முறையில் ஏதேனும் செயலை ஏதேனும் நச்சுப் பதார்த்தம் தொடர்பில் செய்கின்ற,

ஏதேனும் நச்சுப்பதார்த்தம் தொடர்பில் கவலையீனமான நடத்தை.

அல்லது தமதுடமையிலுள்ள ஏதேனும் நச்சுப் பதார்த்தம் தொடர்பில் அத்தகைய நச்சு பதார்த்தத்தினால் மனித உயிருக்குண்டாகத்தகும் ஆபத்திலிருந்து காப்பதற்குப் போதுமான அத்தகைய ஒழுங்கினை அறிந்து கொண்டு அல்லது கவலையீனமாகக் கடைப்பிடிக்காது விடுகின்ற

எவரும் ஆறுமாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் தீ அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள் தொடர்பில் கவலையீனமான நடத்தை

**278.** மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அல்லது வேறு ஆள் ஒருவருக்கு காயம் அல்லது ஊறு ஏற்படக்கூடிய அவ்வித அசட்டுத் துணிவான அல்லது கவலையீனமான முறையில் ஏதேனும் செயலைத் தீ தொடர்பில் அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய ஏதேனும் பொருள் தொடர்பிற் செய்கின்ற,

அல்லது ஏதேனும் தீ தொடர்பில் அல்லது தமது உடமையிலுள்ள எளிதில் தீ பற்றக் கூடிய பொருள் தொடர்பில் அத்தீயிலிருந்து அல்லது தீ பற்றக்கூடிய பொருளிலிருந்த மனித உயிருக்கு ஏற்படத்தகும் ஆபத்திலிருந்து அல்லது வேறு ஆள் எவர்க்கேனும் உண்டாகத் தகும் காயம் அல்லது ஊறிலிருந்து காப்பதற்கு போது மான அத்தகைய ஒழுங்கினை அறிந்து கொண்டு அல்லது கவலையீனமாகக் கடைப் பிடிக்காது விடுகின்ற,

எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல் லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஏதேனும் வெடிப் பொருள் தொடர்பில் கவலையீனமான நடத்தை.

**279.** மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அல்லது வேறு ஆளொருவருக்குக் காயம் அல்லது ஊறு ஏற்படக்கூடிய அவ்வித அசட்டுத் துணிவான அல்லது கவலையீனமான முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஏதேனும் செயலை ஏதேனும் வெடிப் பொருள் தொடர்பில் செய்கின்ற அல்லது தமது உடமையிலுள்ள ஏதேனும் வெடிப்பொருள் தொடர்பில் அத்தகைய வெடிப்பொருளினால் மனித உயிருக்குண்டாகத்தகும் ஆபத்திலிருந்து காப்பதற்குப் போதுமான அத்தகைய ஒழுங்கினை அறிந்துகொண்டு அல்லது கவலையீனமாகக் கடைப்பிடிக்காது விடுகின்ற எவரும் ஆறுமாதங்கள்வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக் கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**280.** மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அல்லது வேறு ஆளொருவருக்கு காயம் அல்லது ஊறு ஏற்படக்கூடிய அவ்வித அசட்டுத் துணிவாக அல்லது கவலையீனமான முறையில் ஏதேனும் செயலை ஏதேனும் பொறித் தொகுதி தொடர்பில் செய்கின்ற, அல்லது தமதுடமையில் அல்லது தமது கவனத்திலுள்ள ஏதேனும் பொறித் தொகுதி தொடர்பில் செய்கின்ற,-

தவறாளரின் உடைமையில் அல்லது பொறுப்பிலுள்ள ஏதேனும் பொறித் தொகுதி தொடர்பில் கவலையீனமான நடத்தை.

அத்தகைய பொறித் தொகுதியினால் மனித உயிருக்குண்டாகத்தகும் ஆபத்திலிருந்து காப்பதற்குப் போதுமான அத்தகைய ஒழுங்கினை அறிந்து கொண்டு அல்லது கவலையீனமாகக் கடைப்பிடிக்காது விடுகின்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல் லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவை யிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கட்டடங்களை இடித்து வீழ்த்தல் அல்லது பழுதுபார்த்தல் தொடர்பான கவனமின்மை.

**281.** ஏதேனும் கட்டடத்தை இடித்து வீழ்த்தலில் அல்லது பழுதுபாத்தலில் அத்தகைய கட்டடம் தொடர்பில், அக்கட்டடம் அல்லது அதன் ஏதே னும் பாகம் வீழ்வதினால் மனித உயிருக் குண்டாகத்தகும் ஆபத்திலிருந்து காப்பதற்குப் போதுமான அத்தகைய ஒழுங்கினை அறிந்து கொண்டு அல்லது கவலையீனமாகக் கடைப் பிடிக்காது விடுகின்ற எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தி னால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக் கப்படுதல் வேண்டும்.

ஏதேனும் விலங்கு தொடர்பிலான கவனமின்மை.

**282.** தமது உடமையிலுள்ள ஏதேனும் விலங்கு தொடர்பில் அத்தகைய விலங்கினால் மனித உயிருக்கு ஏற்படுத்தகும் ஆபத்திலிருந்து அல் லது ஏற்படத்தக்க கடும்காய ஆபத்திலிருந்து காப்பதற்குப் போதுமான அத்தகைய ஒழுங் கினை அறிந்து கொண்டு அல்லது கவலையீன மாக கடைப்பிடிக்காது விடுகின்ற எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டி னாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

283. இச்சட்டக்கோவையினால் வேறுவகையில் தண் டிக்கப்பட முடியாத ஏதேனும் விடயத்தில் பொதுத்தொல்லை விளைக்கும் எவரும் ஐம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது மூன்று மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய இருவகையிலொருவகை மறியலினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.

வேறுவகையில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்களில் பொதுத் தொல்லைக்கான தண்டனை.

284. தடையாணையை விடுத்தற்குச்சட்டமுறையான அதிகாரமுடைய பகிரங்க ஊழியர் ஒருவரினால் அத்தகைய பொதுத்தொல்லையை மீண்டும் புரியவேண்டாம் அல்லது தொடர்ந்து வைத்தி ருந்து வரவேண்டாம். எனத் தடையாணை விடு விக்கப்பட்ட பின்னரும் அத்தொல்லையை மீண் டும் புரியும் அல்லது தொடர்ந்து வைத்திருந்து வரும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலி னால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நிறுத்துவதற்கான தடையாணைக்குப் பின்னர் தொல்லை தொடர்ந்திருந்து வரல்.

285. ஏதேனும் ஆபாசப்புத்தகம் துண்டுப்பிரசுரம் தாள் வரைதல் வர்ணப்படம், புகைப்படம் எடுத்துக் காட்டு அல்லது உருவத்தை விற்கின்ற அல்லது பகிர்ந்தளிக்கின்ற விற்பனைக்கென அல்லது வாடகைக்கென இறக்குமதி செய்கின்ற

ஆபாசப் புத்தகங்கள் முதலியன விற்றல் அத்துடன் இன்னோரன்ன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பொதுமக்கள் காட்சிக்கு வேண்டுமென்று வைக்கின்ற அல்லது அவ்விதம் செய்ய எத்தனிக்கின்ற அல்லது முனைகின்ற எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விற்பனைக்காக அல்லது பொதுமக்கள் காட்சிக்காக ஆபாசப் புத்தங்கள் முதலியனவற்றை உடமையில் வைத்திருந்தல்.

**286.** இறுதியாக மேற்போந்த பிரிவினில் குறிப்பிடப் பட்ட விதமான ஏதேனும் அத்தகைய ஆபாசப் புத்தகத்தை அல்லது வேறு பொருளை விற்பனைக்கென பகிர்ந்தளிப்பதற்கென அல்லது பொதுமக்கள் காட்சிக்கெனத் தம்முடைமையில் வைத்திருக்கும் எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படல் வேண்டும்.

சிறுவர்கள் தொடர்பிலான ஆபாசமான வெளியீடு, கண்காட்சி முதலியன. பி2,1995இன்22

**286அ** (1) (அ)ஏதேனும் பிள்ளையை ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் தோன்றுவதற்கு அல்லது நடிப்பதற்கு அல்லது ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான புகைப்படத்திற்கு அல்லது திரைப்படத்திற்கு தோற்ற நிலையை அமைவிப்பதற்கு உருநிலைப்படிவம் கொள்ளுவதற்கு என வாடகைக்கெடுக்கின்ற, தொழிலுக்கமர்த்துகின்ற, உதவுகின்ற, தூண்டுகின்ற, பயன்படுத்ததுகின்ற தூண்டுதல் அளிக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது வலுக்கட்டாயப்படுத்துகின்ற அல்லது விற்பனை செய்கின்ற, அல்லது விநியோகிக்கின்ற அல்லது வேறு வகையில் வெளியிடுகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் புகைப்படத்தை அல்லது திரைப் படத்தை தம்மகத்தே வைத்திருக்கின்ற அல்லது

(ஆ) பிள்ளையொன்றின் பெற்றோராக, பாதுகாவலராக அல்லது அதனைக் கட்டுக்காப்பில் வைத்திருக்கின்ற ஆளொருவராக இருக்கையில் ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் பங்கு பற்ற அல்லது அதற்குத்தோற்ற நிலையை அமை விக்க அல்லது (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய புகைப்படத்தில் அல்லது திரைப்படத்தில் தோற்றுவதற்கு அத்தகைய பிள்ளையை தொழிலுக்கமர்த்தப்பட, அல்லது பங்குபற்றச் செய்கின்ற அல்லது அனுமதிக்கின்ற

(இ) (i) பிள்ளையின் ஏதேனும் ஆபாசமான புகைப்படத்தைப் பிடிக்கின்ற அல்லது பிடிக்க உதவுகின்ற அல்லது

(ii) அத்தகைய புகைப்படங்கள் அடங்கிய ஏதேனும் அத்தகைய புகைப் படத்தை அல்லது ஏதேனும் வெளியீட்டை விநியோகிக்கின்ற அல்லது காண்பிக்கின்ற அல்லது

(iii) ஏதேனும் அத்தகைய புகைப்படத்தை அல்லது வெளியீட்டை விநியோகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கென அல்லது காண்பிப்பதற்கெனத் தம்மகத்தே வைத்திருக்கின்ற அல்லது

(iv) ஏதேனும் புகைப்படத்தை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச் செய்விக்கின்ற அல்லது விளம்பரத்தில் குறிப்பிடப்படுகின்ற, விநியோகிக்கின்ற செய்தியை எடுத்துரைக்கும் ஆற்றலுடைய ஏதேனும் விளம்பரத்தை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச் செய்விக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் புகைப்படத்தை அல்லது வெளியீட்டை வெளியிடுகின்ற அல்லது அவ்வாறு செய்ய முன்னுகின்ற,

ஆளெவரும் சிறுவர்கள் சார்பில்ஆபாசமான வெளியீடு மற்றும் கண்காட்சி என்னும் தவறைப் புரிகின்றார் என்பதுடன் அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையி லொருவகை மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் தண்டிக்கவும் படலாம்.

பி2, 1998இன் 29 (2) புகைப்படங்களின் அல்லது நிழற்படச்சுருள்களின் உருவிளக்கப்படுத்துவதற்காகத் தமக்குத் தரப்பட்ட புகைப்படம் அல்லது நிழற்படச் சுருள் எதுவும், அல்லது பிள்ளையொன்றின் ஆபாசமான புகைப்படமாக அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழற்படச் சுருளாக இருக்கின்றதெனக் காணு கின்றவரான ஆள் எவரும், அவ்வாறு கண்டு பிடித்ததும், தம்வசம் அத்தகைய புகைப்படம் அல்லது நிழற்படச்சுருள் இருக்கின்றதென மிகச் சமீபத்தில் இருக்கின்ற பொலிசு நிலை யத்துக்குப், பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) புகைப்படங்களின் அல்லது நிழற்படச்சுருள்க ளின் உருவிளக்கப்படுத்துநர் ஒருவராக இருந்து கொண்டு, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறி நடக்கின்ற ஆள் எவரும், இரண்டு ஆண்டு களுக்கு நீடிக்கக் கூடிய காலமொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனை யினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவ்விரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண் டும். பி2, 1998இன் 29

(4) இப்பிரிவில் பி2, 1995இன் 22

"பிள்ளை" என்பது பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.

அத்துடன்

"திரைப்படம்" என்பது ஏதேனும் விதமான கட்புல ஒளிப்பதிவையும் உள்ளடக்கும்.

கணினிமூலம் சேவை வழங்கும் ஆளுக்கு ஒரு பிள்ளையின் பாலியல் துஷ்பிர யோகத்தைத்

**286ஆ** (1) கணனியொன்றின் வாயிலாக சேவை யொன்றை வழங்கும் ஆளொருவர் அத்தகைய கணனி வசதியானது பிள்ளையொன்றின் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்பதற்கான கடமை (பி3,2006இன் 16)

றொன்று அமையும் செயலொன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லா நடபடிகளையும் எடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் அத்தகைய கணனி வசதியானது பிள்ளையொன்றின் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான தவறொன்றாக அமையும் செயலொன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என அறிந்திருப்பவரான (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர், உடனடியாக அந்நிகழ்வை அருகிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள அலுவலருக்கு அறிவித்தலும் அத்தகைய செயல் தொடர்பில் தம்மகத்தே இருக்கக் கூடியவாறான அத்தகைய தகவலையும் குற்றஞ்சார்த்தப்பட்ட தவறாளரின் ஆளடையாளத்தையும் கொடுத்தலும் வேண்டும்

(3) ஓராம் அல்லது (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டணைக்கு அல்லது ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) இப்பிரிவின் "பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.

**286இ**. (1)ஏதேனும் வளவு பிள்ளைத் துஷ்பிரயோக மாக அமைகின்ற செயலொன்றைப் புரிவதற் குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை அறிந்திருக்கின்றவரான அத்தகைய வளவு களின் பொறுப்பை, பராமரிப்பை, கட்டுப் பாட்டை அல்லது ஆட்சியுடைமையைக் கொண் டுள்ள ஆளெவரும், அத்தகைய நிகழ்வுபற்றி அருகிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

வளவுகள் பிள்ளை துஷ்பிரயோகத்துக்கு பயன்படுத்தப் படுவதைப் பற்றி அறிவிப்பதற்கான கடமை. (பி3 2006 இன் 16

(2) பிள்ளையொன்றின் துஷ்பிரயோகமாக அமை யும் செயலொன்றைப் புரிவதற்கு அத்தகைய வளவு பயன்படுத்தப்படுகின்றது என்ற நிகழ் வைப்பற்றி அருகிலுள்ள பொலிசு நிலையத் திற்குப் பொறுப்பாயுள்ள அலுவலருக்கு அறி விக்கத் தவறுகின்றவரான (1)ஆம் உட்பிரி வில் குறிப்பீடு செய்யப்படுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன் மீது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறி யற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணமொன் றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண் டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இப்பிரிவின் "பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஆள் என்று பொருள் படும்.

ஆபாசப் பாடல்கள்

**287.** ஏதேனும் பொது இடத்தில் அல்லது அதற்கு அண்மையில் மற்றையோருக்கு மனக்குலை வேற்படும்விதத்தில் ஏதேனும் ஆபாசப் பாடலை, கதைப்பாடலை, அல்லது சொற்களை பாடு கின்ற, கூறுகின்ற அல்லது சொல்லுகின்ற எவ ரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.

பிள்ளைகளைப் பிச்சையெடுக்கச் செய்வித்தல் அல்லது கூட்டி விடுதல். (பி3,1998இன் 29)

**288.** (1) பிச்சை எடுக்கும் அல்லது யாசகப் பொருள் பெற்றுக்கொள்ளும் நோக்கங் களுக்காக அல்லது யாசகப்பொருள் கொடுக்கப்படுவதைத் தூண்டும் நோக் கங்களுக்காக (பாடுதல், விளையாட் டுக்காட்டல், கேளிக்கை நிகழ்ச்சி நடாத் துதல், எதனையும் விற்பனை செய்வ தற்காகக் கொடை முனைதல் அல்லது வேறு வகையில் செய்வதென்ற பாசாங்கு எதுவும் இருந்தாலென்ன, இல்லாவிட் டாலென்ன) பிள்ளை ஒன்றை ஏதேனும் தெருவில், வளவுகளில் அல்லது இடத் தில் நிற்கச்செய்கின்ற அல்லது கூட்டி விடுகின்ற ஆள் எவரும், குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன் மேல், ஐந்தாண்டு களை விஞ்சாதவொரு காலத்துக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவகையில் ஒருவகையான மறியற் தண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர், குற்றப் பணமொன்றுக்கும் ஆளாகலாம்.

(2) இப்பிரிவில் "பிள்ளை: என்பது பதி னெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொ ருவர் எனப் பொருள்படும்.

**288அ.**(1) சட்டவிரோதமான உடலுறவுக்கென ஆளெவரையும் கூட்டி விடுவதற்காகத் தெரிந்துகொண்டே பிள்ளையொன்றை வாடகைக்கு அமர்த்துகின்ற, வேலைக்கு அமர்த்துகின்ற, இசையச்செய்கின்ற, பயன்படுத்துகின்ற தூண்டுகின்ற அல் லது பலவந்தப்படுத்துகின்ற ஆள் எவ ரும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான கால மொன்றுக்கான இருவகையில் ஒரு வகை மறியற்தண்டனையால் தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம்.

உடலுறவுக்குக் கூட்டிவிடுபவர் களாகச் செயற்படுவதற்குப் பிள்ளைகளை வாடகைக்கு அல்லது ஊழியத்துக்கு அமர்த்துதல். பி3.1998இன்29

(2) இப்பிரிவில் "பிள்ளை: என்பது பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

**288ஆ**(1) ஏதேனும் தடைசெய்யப்பட்ட பொருட் களைக் கொண்டு செல்லுவதற்குத் தெரிந்துகொண்டே பிள்ளையொன்றை

தடை செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு செல்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை வாடகைக்கு அல்லது வேலையில் அமர்த்துதல் (பி 3, 1998 இன் 29)

வாடகைக்கு அமர்த்துகின்ற, வேலைக்கு அமர்த்துகின்ற, இசையச்செய்கின்ற, பயன்படுத்துகின்ற, தூண்டுகின்ற அல்லது பலவந்தப்படுத்துகின்ற ஆள் எவரும், ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் ஏழாண்டுகளை விஞ்சாததுமான கால மொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற்தண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர் குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாகலாம்.

(2) இப்பிரிவில்- "பிள்ளை: என்பது பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் எனப்பொருள்படும்:

"தடைசெய்யப்பட்ட பொருள்" என்பது, (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள் அபின் மற்றும் ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப் பட்டிருக்கும் பொருளைக் கொண்டிருக்கும்:

"கொண்டுசெல்லுதல்" என்பது, விற்பனை செய்தல்,கொடுத்தல்,பெறுதல், களஞ்சியப்படுத்தல், இடுதல், எடுத்துக் கொண்டு செல்லுதல், அனுப்புதல், ஒப்படைத்தல் அல்லது விநியோகித்தல் எனப் பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

289. இதுவரை ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படவுள்ள ஏதேனும் சட்டவாக்கத்தினால் அல்லது நியதிச்சட்டத்தினால் தம்மீது சுமத் தப்பட்டுள்ள ஏதேனும் கடமையை வேண்டு மென்று அலட்சியம் செய்கின்றமைக்கு அல் லது புரியாது விடுகின்றமைக்கு அல்லது அத் தகைய சட்டவாக்கத்தின் அல்லது நியதிச் சட்டத்தின் ஏற்பாடு எதனையும் வேண்டுமென்று கீழ்ப்படியாது - விடுகின்றமைக்கு அல்லது கீழ்ப்படியாது மீறுகின்றமைக்கு இச்சட்டக் கோவையினால் அல்லது ஏதேனும் சட்ட வாக்கத்தினால் அல்லது வேறுசட்டவாக்கத்தி னால் அல்லது ஏதேனும் நியதிச் சட்டத்தினால் தண்டனையானது வேறு வகையாக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிராத அல்லது செய்யப்பட மாட்டாத அத்தகைய அலட்சியத்தை வேண்டு மென்று புரிகின்ற அல்லது கடமையை வேண்டுமென்று புரியாது விடுகின்ற அல்லது கீழ்ப்படியாமையை அல்லது மீறுகையை வேண்டுமென்று புரிகின்ற எவரும் குற்றப்பணம் ஒன்றினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சட்டமுறை யான கடமையை வேண்டு மென்று புரியாது விடல்.

# அத்தியாயம் XV

## சமய சம்பந்தமான தவறுகள் பற்றி

290. ஆட்கள் வகுப்பு எதனதும் சமயத்தை நிந்திக் கும் கருத்துடன், அல்லது ஆட்கள் வகுப்பு எது வும் அத்தகைய அழிவுசெய்தலை சேதமேற் படுத்தலை அல்லது தூய்மைகெடுத்தலைத் தமது சமயத்துக்கான நிந்தனை என

ஏதேனும் வகுப்பினரின் சமயத்தை நிந்திக்கும் கருத்துடன் வழிபாட்டிடம் ஒன்றை ஊறுபடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அல்லது தூய்மை கெடுத்தலும் | எண்ணக்கூடும். என்ற அறிவுடன் ஏதேனும் வழிபாட்டிடத்தை அல்லது ஆட்கள் வகுப்பு எதனாலும் பரிசுத்தமானதென போற்றப்படும் ஏதேனும் பொருளை அழிக்கின்ற அல்லது சேதப்படுத்துகின்ற அல்லது தூய்மைகெடுக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். |
| ஏதேனும் வகுப்பினரின் சமயத்தை நிந்திக்கும் கருத்துடன் வழிபாட்டிடம் முதலிய தொடர்பிலான செயல்கள். | **290 அ.** ஆட்கள் வகுப்பு எதனதும் சமய உணர்வினைப் புண்படுத்தும் கருத்துடன் அல்லது ஆட்கள் வகுப்பு எதுவும் அத்தகைய செயல் தமது சமயத்துக்கான நிந்தனை என எண்ணக்கூடும் என்ற அறிவுடன் வழிபாட்டிடம் அல்லது ஆட்கள் வகுப்பு எதனாலும் பரிசுத்தமானதென அல்லது வணக்கத்திற்குரியதென போற்றப்படும் பொருள் எதிலும் அல்லது அதன் மீது அல்லது அதன் அயலில் ஏதேனும் செயலைச் செய்யும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். |
| சமயக்கூட்டம் ஒன்றைக் குழப்புதல். | **291.** சமய வழிபாடு அல்லது சமயச் சடங்குகளை புரிவதில் சட்டப்படி ஈடுபட்டுள்ள ஏதேனும் கூட்டத்திற்கு வேண்டுமென்று குழப்பம் விளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒருகாலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**291அ.** ஆள் எவரதும் சமய உணர்வுகளை புண்படுத்த வேண்டும் என்ற திட்டமான கருத்துடன் அவ்வாள் கேட்கக்கூடியதாக ஏதேனும் சொல்லைச் சொல்லுகின்ற அல்லது ஓசையை எழுப்புகின்ற அல்லது அவ்வாள் காணக்கூடியதாக ஏதேனும் அங்க அசைவைச் செய்கின்ற அல்லது அவ்வாள் காணக்கூடியதாக ஏதேனும் பொருளை வைக்கின்ற எவரும் ஓராண்டு வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சமய உணர்வுகளைப் புண்படுத்த வேண்டும் என்ற திட்டமான கருத்துடன் சொற்கள் முதலியன வற்றைச் சொல்லுதல்.

**291ஆ.** ஆட்கள் வகுப்பு எதனதும் சமய உணர்வுகளைப் பாதிக்க வேண்டும். என்ற திட்டமான கெடுநோக்கமான கருத்துடன் பேசப்படும் அல்லது எழுதப்படும் சொற்களின் மூலம் அல்லது கட்புலக்காட்சிகள் மூலம் அவ்வகுப்பின் சமயத்தை அல்லது சமய நம்பிக்கைகளை நிந்தைசெய்ய எத்தனிக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒருகாலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அவ்வகுப்பின் சமயத்தை அல்லது சமய நம்பிக்கைகளை நிந்தை செய்வதன்மூலம் ஏதேனும் வகுப்பின் சமய உணர்வுகளைப் பாதிக்கக்கருதப் பட்டதிட்டமான அல்லது கெடுநோக்கான செயல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கத் தலங்கள் முதலியன மீது அத்துமீறல்.

**292.** ஆள் எவரதும் உணர்வுகளைப் புண்படுத்தும் அல்லது ஆள் எவரதும் சமயத்தை நிந்தை செய்யும் கருத்துடன், அல்லது ஆள் எவரதும் உணர்வுகள் புண்படலாம் அல்லது ஆளெவரதும் சமயம் அதனால் நிந்தை பண்ணப்படலாம் என்ற அறிவுடன்,

ஏதேனும் வழிபாட்டிடத்தில் அல்லது கல்லறை அடக்க தலத்தில் அல்லது மரண கிரிகைகளை புரிவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள அல்லது இறந்தோரை அடக்கம் செய்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனுமிடத்தில் அத்துமீறுகின்ற, அல் லது ஏதேனும் மனித பிரேதத்திற்கு மரியாதைக் குறைவு காண்பிக்கின்ற, அல்லது மரணச் சடங்குகள் செய்வதற்கென கூடியுள்ள எவரேனும் ஆட்களுக்கு குழப்பம் விளைவிக்கின்ற,

எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XVI

## மனித உடலைப்பாதிக்கும் தவறுகள் பற்றி

## உயிரைப் பாதிக்கும் தவறுகள் பற்றி

**293.** மரணத்தை விளைக்கும் கருத்துடன் அல்லது மரணத்தை விளைக்கக்கூடிய அத்தகைய உடலூறினை ஏற்படுத்தும் கருத்துடன் அல்லது அத்தகைய செயல் மூலம் தாம் மரணத்தை விளைக்கக்கூடும் என்ற அறிவுடன் செயலொன்றைச் செய்வதினால் மரணத்தை விளைக்கும் எவரும் குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கும் தவறினை புரிந்தவராவார்

குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கல்

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) மரணத்தை விளைக்கும் கருத்துடன் அல்லது அதனால் மரணம் விளைக்கக்கூடும் என்ற அறிவுடன் "அ" குழியொன்றின் மேல் தடிகளையும் புற்கற்றைகளையும் பரப்பிவிடுகிறார். நிலம் உறுதியானதென நம்பி "க" அதன்மேல் நடந்து அதனுள் விழுகிறார். இதனால் அவர் கொல்லப்படுகிறார். குற்றத்திற்கு இடமான மனித உயிர் போக்கும் தவறினை "அ" புரிந்துள்ளார்.*

*(ஆ) பற்றையொன்றின் பின்னர் "க" இருப்பதனை "அ" அறிவார். "ஆ" இதனை அறியார் "க" வின் மரணத்தை விளைக்கும் கருத்துடன் அல்லது அதனால் மரணம் விளைக்கக்கூடும் என அறிந்து கொண்டு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அப்பற்றையை நோக்கிச் சுடும்படி "ஆ" வை "அ" தூண்டுகிறார். "ஆ" சுட்டு "க" வை கொல்கிறார். "ஆ" எத்தவறிற்கும் குற்ற மற்றவராகலாம் ஆனால் "அ" குற்றத் திற்கு இடமான மனித உயிர் போக்குத் தவறினை புரிந்தவராவார்.*

*(இ) கோழி ஒன்றினைக் கொன்று அத னைத் திருடும் நோக்கத்துடன் அதனை நோக்கி சுடுவதன் மூலம் "அ" பற்றை யொன்றின் பின்னால் இருக்கும் "ஆ" வினை, அவர் அங்கே இருப்பதை "அ" அறியாது கொல்கிறார். இங்கு "அ" சட்ட விரோதமான செயலொன்றை செய்திருந் தாலும் கூட "ஆ" வைக் கொல்ல, அல் லது அதனால் மரணம் விளைக்கக் கூடும் என அவர் அறிந்து செயலொன்றைச் செய்வதன் மூலம் மரணத்தை விளைக்க, அவர் கருதியிராத படியினால் அவர் குற் றத்திற்கிடமான மனித உயிர் போக்கும் தவறுக்குக் குற்றவாளி ஆகவில்லை.*

விளக்கம்: 1 ஒரு கோளாறினால், வியாதியினால் அல்லது உடற் பலவீனத்தால் வருந் தும் வேறு ஒருவருக்கு உடலூறு விளைப்பதன் மூலம் அவ்வாளின் மரணத்தை விரைவுபடுத்தும் ஆளொ ருவர் அந்த வேறு ஆளின் மரணத்தை விளைத்தவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்: 2 உடலூறினால் மரணம் விளையும் இடத்து அம்மரணமானது தகுந்த பரிகாரங்களையும் திறன் மிகுந்த சிகிச்சைகளையும் நாடுவதன் மூலம் தடுக்கப்பட்டிருக்கலாமேனும், அத்தகைய உடலூறினை விளைத்த ஆள் அம்மரணத்தை விளைத்தவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

விளக்கம்: 3 தாயின் கருப்பையினுள் பிள்ளையொன்றின் மரணத்தை ஏற்படுத்துதல் மனித உயிர் போக்கலல்ல. ஆனால் அப்பிள்ளை சுவாசிக்காவிட்டால் அல்லது முழுவதாக பிறந்திராவிட்டாற்கூட, அப்பிள்ளையின் ஏதாவது பகுதி வெளிக்கொணரப்பட்டால், உயிர் உள்ள பிள்ளையொன்று மரணத்தை விளைத்தல், குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கலாகலாம்.

**294.** இதனகத்துப்பின்னர் விதிவிலக்களிக்கப்பட்ட விடயங்களில் தவிர கொலை

முதலாவதாக - மரணத்தை விளைத்த செயல், மரணத்தை விளைக்கும் கருத்துடன் செய்யப்பட்டால், அல்லது

இரண்டாவதாக - அத்தகைய உடலூறு, தீங்கு விளைக்கப்பட்ட ஆளுக்கு மரணத்தை விளைக்கக் கூடியதென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாளர் அறிந்து உடலூறினை விளைக்கும் கருத்துடன் அது செய்யப்பட்டால், அல்லது

மூன்றாவதாக - எவரேனும் ஆளுக்கு உடலூறு விளைக்கும் கருத்துடன் அது செய்யப்பட்டதாயின் உண்டாக்கப் பட்ட அந்த உடலூறு சாதாரண இயற்கைப் போக்கில் மரணத்தை விளைக்கப் போதியதாயின் இருந்தால், அல்லது

நான்காவதாக - அச்செயலிற்குரிய ஆள் அது அத்தகைய தவிர்க்க இயலாத அபாயமுள்ளதாதலால் தவறானது மரணத்தை அல்லது மரணத்தை விளைக்கக்கூடிய அத்தகைய உடலூறினை விளைக்க வேண்டியதென அறிந்து மரணத்தை அல்லது மேற் சொல்லப்பட்ட அத்தகைய ஊறினை விளைக்கும் அபாயத்தினை மேற் கொள்வதற்கு எக்காரணமும் இன்றி அச்செயல் புரியப்பட்டால் அதனால் ஏற்படும் குற்றத்திற்கிடமான மனித உயிர்போக்கல் கொலையாகும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) "அ" என்பவர் "க" வைக் கொல்லும் கருத்துடன் அவரைச் சுடுகிறார் அதன் விளைவாக "க" இறக்கிறார். "அ" கொலை புரிந்துள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஓரடியே மரணத்தை ஏற்படுத்தக்கூடிய அத்தகைய நோயை "க" வுடையவரென அறிந்துகொண்டு "அ" உடலூறு ஏற்படுத்தும் கருத்துடன் அவரை அடிக்கிறார் அடியின் விளைவாக "க" இறக்கிறார் செம்மையான உடல்நல நிலையிலுள்ள ஆளொருவரின் மரணத்தினைச் சாதாரண இயற்கைப்போக்கில் விளைக்க அந்த அடி போதியதாயிராதுவிடினும் கூட "அ" கொலைக்கு குற்றவாளியாவார். ஆனால், ஏதேனும் நோயினை "க"வுடையவர் என்பதனை "அ" அறியாது செம்மையான உடல் நல நிலையிலுள்ள ஆளொருவரைச் சாதாரண இயற்கைப் போக்கில் கொல்ல மாட்டாத அத்தகைய அடியொன்றைக் கொடுத்தால், "அ" உடலூறினை ஏற்படுத்தக் கருதியிருந்தாலும் கூட அவர் மரணத்தை அல்லது சாதாரண இயற்கைப் போக்கில் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய உடலூறினை ஏற்படுத்த அவர் கருதியிராது விடின் கொலைக்கு குற்றவாளியல்லர்.

(இ) சாதாரண இயற்கைப்போக்கில் மனிதரொருவருடைய மரணத்தை விளைக்கப் போதுமான வாள் வெட்டு அல்லது தடியடிப் புண்ணை "க" விற்கு "அ" கருதி ஏற்படுத்துகிறார். இதன் விளைவாக "க" இறக்கிறார் "க" வின் மரணத்தை விளைக்க அவர் கருதியிராவிடினும் கூட "அ" கொலைக் குற்றவாளியாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(ஈ) காரணமெதுவுமின்றி "அ" வெடிமருந் தேற்றப்பட்ட துவக்கொன்றை மக்கள் கூட்ட மொன்றுள் சுட்டு அவர்களிலொருவரைக் கொல்லுகிறார். எவரேனும் குறிப்பிட்ட ஆளொருவரை கொல்லுவதற்கு முன்னா லோசனையான சூழ்ச்சி உடையராயிருந் திராவிடினும் கூட "அ" கொலைக்கு குற்ற வாளியாவார்.*

குற்றத்திற்கிட மான மனித உயிர் போக்கல் எப்பொழுதும் கொலையாகாது

விதிவிலக்கு 1 பாரதூரமான திடீராத்திர மூட்டப்பட்ட தனால் தன்னடக்க ஆற்றலை இழந்த நிலையில் தவறாளர் தமக்கு ஆத்திர மூட்டிய ஆளினது மரணத்தை விளைத் தால் அல்லது பிழையினால் அல்லது தற்செயலினால் வேறெவரேனும் ஆளி னது மரணத்தை விளைத்தால், அத னால் உண்டாகும் குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கல் கொலையா காது. மேற்போந்த விதிவிலக்கு பின் வரும் காப்பு வாசகங்களுக்கு அமைந் தாகும்:-

முதலாவதாக - எவரேனும் ஆளை கொல்வதற்கான அல்லது எவரேனும் ஆளுக்கு தீங்கு விளைப்பதற்கான ஒரு சாட்டாக ஆத் திரமூட்டப்படுதல் தவறாளரால் நாடப் பட்டதாக அல்லது வேண்டு மென்று ஆத்திரமூட்டப்பட்டதாக இருத்தலா காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக - அவ்வாத்திரமூட்டப்படுதல் சட்டத்திற்குப் பணிந்து நடப்பதன் காரணமாக அல்லது பகிரங்க ஊழியரொருவரால் அத்தகைய ஊழியரின் தத்துவங்களைச் சட்டமுறையில் பயன்படுத்தும் பொழுது செய்யப்பட்ட எதனாலேனும் ஏற்பட்டதாக இருத்தலாகாது.

மூன்றாவதாக - தற்காப்புரிமையைச் சட்டமுறை யில் பிரயோகிப்பதில் செய்யப்பட்ட எதனாலும் அந்த ஆத்திரமூட்டப்படல் ஏற்பட்டதாக இருத்தலாகாது.

விளக்கம் :- அத்தவறினைக் கொலையாதலிலிருந்து தவிர்ப்பதற்கு அந்த ஆத்திரமூட்டல் போதிய பாரதூரமானதும் திடீரானதுமா என்பது நிகழ்வுப் பிரச்சினையொன்றாகும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) "அ" என்பவர் "க" வினால் உண்டாக்கப்பட்ட ஆத்திரமூட்டலினால் உண்டான உணர்ச்சியில் தாக்கத்தின் கீழ் "க" வின் பிள்ளையான "ங" வைக் கருத்துடன் கொல்லுகிறார். ஆத்திர மூட்டல் அப்பிள்ளையினால் உண்டாக் கப்படாமையினாலும் ஆத்திரமூட்டலினால் செய்யப்பட்ட ஏதேனும் செயலினால் உண்டான தற்செயல் அல்லது துரதிட்டத்தினால் அப்பிள்ளையின் மரணம் ஏற்படாமையினாலும் இதுகொலையாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) "ங" என்பவர் "அ" விற்கு பாரதூரமான திடீராத்திரமூட்டுகிறார். அவ்வாத்திரமூட்டலினால் "அ" என்பவர் தனக்கு அண்மையில் ஆனால் கண்ணில் படாது இருக்கும் "க" என்பவரைக் கொல்லும் கருத்தின்றி அதனால் தாம் கொல்லக்கூடுமென அறியாது "ங" வை நோக்கிச் சுடுகிறார். அதனால் "அ", "க"வைக் கொல்கிறார். இங்கே "அ" கொலைபுரியவில்லை ஆனால் அது குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கலேயாகும்.

(இ) "அ" என்பவர் ஒரு பிசுக்கால் அலுவலரான "க" என்பவரால் சட்டப்படி கைது செய்யப்படுகிறார். அவ்விதம் அவர் கைது செய்யப்பட்டதினால் உண்டான திடீரான கடுமுணர்சியினால் ஆவேசமடைந்தார் ஆதலால் "அ", "க" வினை கொல்கிறார். இந்த ஆத்திரமூட்டப்படல் பகிரங்க ஊழியரொருவரால் தமது தத்துவங்களை பிரயோகிப்பதில் செய்யப்பட்ட ஒன்றால் ஏற்பட்டதாதலின் இது கொலையாகும்.

(ஈ) "அ" என்பவர் நீதிவான் ஒருவரான "க" வின் முன்னர் சாட்சியாக தோன்றுகிறார் "அ"வின் வாக்குமூலத்தின் ஒரு சொல்லையும் தாம் நம்பவில்லையெனவும், "அ" பொய்ச்சான்று அளித்துள்ளார் எனவும் "க" கூறுகிறார். இச்சொற்களின் காரணமாகக் திடீருணர்ச்சியினால் தாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட "அ", "க" வைக் கொல்கிறார். இது கொலையாகும்.

(உ) "அ" என்பவர் "க" வினுடைய மூக்கைப் பிடித்திழுக்க எத்தனிக்கிறார். "க" தற்காப்புரிமையைப் பிரயோகித்து அவ்விதம் செய்வதிலிருந்து "அ" வைத் தவிர்ப்பதற்காக "க" அவரைப் பிடிக்கிறார். இதன் விளைவாக "அ", திடீரான கடு முணர்சியினால். தாக்கப்பட்டு "க" வைக் கொல்கிறார். தற்காப்புரிமையைப் பிரயோ கிப்பதில் செய்யப்பட்ட ஒன்றினால் ஆத் திரமூட்டல் உண்டானமையின், இது கொலை யாகும்.

(ஊ) "ஆ" வை "க" அடிக்கிறார். "ஆ", இந்த ஆத்திரமூட்டலினால் கடுங் கோபத் திற் காளாகிறார். அயலில் நிற்கும் "அ" என்பவர் "ஆ" வினுடைய இந்தக் கோபத்தை அனுகூலப்படுத்தி "க" வைக் கொல்விக்கக் கருதி அந்நோக்கத்திற்காக "ஆ" வின் கையில் கத்தியொன்றினை இடுகிறார். அக்கத்தி கொண்டு "க"வை "ஆ" கொல்கிறார். இங்கே "ஆ" குற்றத் துக் கிடமான மனிதவுயிர்ப்போக்கலாம், ஆனால் "அ" கொலைக் குற்றவாளியாவார்.

விதிவிலக்கு 2 தவறாளர், உடலை அல்லது ஆதனத் தைக் காக்கும் தற்காப்புரிமையை நல் லெண்ணத்துடன் பிரயோகிக்கையில் சட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தால் தமக்களிக்கப்பட்ட தத்துவத்தை மிஞ்சி முன்னாலோசனையின்றியும் அத்தகைய காப்புக்குப் போதுமானதைவிடக் கூடிய தீங்கைப்புரியும் எக்கருத்தின்றி யும் அத்தகைய தற்காப்புரிமையை. எவர்க்கெதிராகப் பிரயோகிக்கின்றாரோ அவரின் மரணத்தை விளைத்தால், குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கல் கொலையாகாது.

**எடுத்துக்காட்டு**

*'அ" வுக்குக் கடும் காயம் ஏற்படுத்தும் அத்தகைய முறையாகவன்றி "க" என்பவர் "அ" வினைக் குதிரைச் சவுக்கால் அடிக்க எத்தனிக்கிறார். "அ" துப்பாக்கியை வெளி எடுக்கிறார். "க" தாக்குதலில் தொடர்ந்து ஈடுபடுகிறார். வேறெவ்வகையிலும் சவுக்கடியிலிருந்து தம்மைத் தப்பித்துக் கொள்ள முடியாதென நல்லெண்ணத்துடன் நம்பி, "அ" "க" வைச் சுட்டுக்கொல்கிறார். "அ" கொலை புரியவில்லை. வெறும் குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கலையே புரிந்துள்ளார்.*

விதிவிலக்கு 3: தவறாளர் பகிரங்க ஊழியரொருவராய் அல்லது பொது நீதியை நிலைநாட்டுவதில் செயலாற்றும் பகிரங்க ஊழியரொருவருக்கு உதவிசெய்பவராய் இருந்துகொண்டு சட்டத்தால் அவர்க்களிக்கப்பட்ட தத்துவங்களை மிஞ்சி அத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் அல்லது சட்டமுறையானது என அவர் நல்லெண்ணத்துடன் நம்பும் அச்செயலை, எவரின் மரணம் விளைக்கப்பட்டதோ அவ்வாளுக்கெதிரான வெறுப்பின்றிச் செய்வதன்மூலம் மரணத்தை விளைத்தால் அதனாலேற்படும் குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கல் கொலையாகாது.

விதிவிலக்கு 4: திடீரென மூண்டதொரு சச்சரவில் உணர்ச்சி வேகத்தில் எழுந்த திடீர் சண்டையில் முன்னாலோசனை இல்லாமலும் தவறாளர் முறையில்லாத அனுகூலத்தைப் பயன்படுத்திச் செயலாற்றாமலும் கொடுமையான அல்லது வழக்கத்துக்கு மாறான வகையில் நடந்து கொள்ளாமலும் இருக்க மரணம் விளைவிக்கப்பட்டிருப்பின் குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கல் கொலையாகாது.

விளக்கம் : அத்தகைய சந்தர்ப்பங்களில் எக்கட்சி ஆத்திர மூட்டலை மேற்கொண்டது என்பதோ முதல் தாக்குதலைப் புரிந்தது என்பதோ முக்கியமில்லை.

விதிவிலக்கு5: தவறாளர் பன்னிரண்டுமாதங்களுக்குட்பட்ட பிள்ளையொன்றின் தாயாய், அப்பிள்ளையைப் பெற்ற நோவிலிருந்து முற்றாகக் குணமடையாத காரணத்தினால் அல்லது அப்பிள்ளை பிறந்ததன்மீது பாலூட்டலின்விளைவான காரணத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் மனம் நிலைகுலைந்திருக்கும் பொழுது அதன் மரணத்தை விளைத்தால் குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கல் கொலையாகாது.

மரணம் விளைக்கக் கருதப்பட்ட ஆளல்லாத வேறு ஆளொருவரின் மரணத்தை விளைத்தல் மூலமான குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கல்.

**295.** ஆளொருவர், மரணம் விளைக்கும் எனக் கருதிய அல்லது மரணம் விளைக்கக்கூடும் என அறிந்த எதனையும் செய்வதனால் அவர் மரணத்தினை ஒருபோதும் விளைக்கக் கருதாத அல்லது விளைக்கக்கூடும் என அறியாத எவரேனுமாளின் மரணத்தை விளைத்தல் மூலம் குற்றத்திற் கிடமான மனிதவுயிர்போக்கலைப் புரிந்தால், தவறாளரால் புரியப்பட்ட குற்றத்திற் கிடமான அந்த மனிதவுயிர்போக்கல் அவர் மரணத்தை விளைக்கக் கருதிய அல்லது தாம் அவரின் மரணத்தை விளைக்கக் கூடும் என அறிந்த அவ்வாளின் மரணத்தை விளைத்திருந்தால் எவ் விவரணத்தையுடைய தாயிருந்திருக்குமோ அவ் விவரணத்தைக் கொண்டதாகும்.

கொலைக்குத் தண்டனை

**296.** கொலைபுரியும் எவர்க்கும் மரணதண்டனை விதிக்கப்படுதல் வேண்டும்.

கொலையாகாத குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கலுக்கான தண்டனை.

**297.** கொலையாகாத குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கலைப் புரியும் எவரும் மரணம் விளைத்த செயல் மரணத்தை விளைக்குங் கருத்துடன் அல்லது மரணத்தை விளைக்கக்கூடிய அத்தகைய உடலூறினை ஏற்படுத்துங் கருத்துடன் செய்யப்பட்டால், இருபது ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை மறியலினால் தண்டிக்கப்பட வேண்டு மென்பதோடு அவர் குற்றப்பணத்திற்குமாளா தல் வேண்டும், அல்லது அச்செயல் மரணம் விளைக் கக்கூடும் என்ற அறிவுடன் ஆனால் மரணம் விளைக்கும் அல்லது மரணம் விளைக் கும் அல்லது மரணம் விளைக்கக்கூடிய அத்த கைய உடலூறினை விளைக்கும் கருத்தெதுவு மின்றியும் செய்யப்பட்டால் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டி னாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கவனமின்மையால் மரணம் விளைத்தல்

298. ஏதேனும் அசட்டையான அல்லது கவனமில் லாத செயலினால் எவரேனுமாளுக்குக் குற்றத் திற்கிடமான மனிதவுயிர்போக்கலாகாத மர ணத்தை ஏற்படுத்தும் எவரும் ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல் லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தற்கொலைக்கு உடந்தை யளித்தல்.

299. ஆளெவரேனும் தற்கொலைபுரிந்தால் அத்தற் கொலை புரிதலுக்கு உடந்தையளிக்கும் எவ ருக்கும் மரணதண்டனை விதிக்கப்படுதல் வேண்டும்.

கொலை எத்தனம்.

300. செயலொன்றின் மூலம் மரணத்தை விளைத் திருந்தால் அவர் கொலைக் குற்றவாளியா யிருக்கவேண்டிய ஏதேனும் செயலை அத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைய கருத்து அல்லது அறிவுடனும் அத்த கைய சூழ்நிலைகளிலும் செய்யும் எவரும் பத்து ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறிய லினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப் பணத்திற்கும் ஆளாதல் வேண் டும். அத்துடன் அத்தகைய செயலினால் ஆளெ வருக்கேனும் காயம் உண்டானால் தவறாளர் இருபது ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறிய லினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப்பணத்திற்குமாளாதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) செயலொன்றினால் மரணம் விளைத் திருப்பின் "அ" கொலைக்குக் குற்றவாளி யாயிருக்கக்கூடிய அத்தகைய சூழ்நிலை களில்.:"க"வைக் கொல்லும் கருத்துடன் "அ" சுடுகிறார். இப்பிரிவின் கீழ் "அ" தண்டனைக்குரியர்.*

*(ஆ) நொய்ந்த வயதுடைய பிள்ளை யொன்றின் மரணத்தை விளைக்கும் கருத்துடன் "அ" அதனை மனிதநட மற்றவோரிடத்தில் கைவிட்டுவிடுகிறார். அப்பிள்ளையின் மரணம் உண்டாகா விடினுங்கூட இப்பிரிவினால் வரை விலக் கணங்கூறப்பட்ட தவறினை "அ" புரிந் துள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) "க" வைக் கொல்லுங் கருத்துடன் "அ" துவக்கொன்றினை வாங்கி வெடிப் பொருள் ஏற்றுகிறார். "அ" இதுவரை தவறு புரியவில்லை. "க" வை நோக்கி "அ" சுடுகிறார். இப்பிரிவில் விபரிக்கப்பட்ட தவறினை "அ" புரிகிறார். அத்தகைய சுடுதலினால் அவர் "க" வுக்குக் காயத்தினை ஏற்படுத்தினால் இப்பிரிவின் பிற்பாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தண்டனைக்கு அவர் ஆளாவார்.

(ஈ) நஞ்சூட்டல் மூலம் "க" வைக் கொல்லக் கருதி, "அ" நஞ்சை வாங்கித் தனது பொறுப்பில் இருக்கும் உணவில் அதனைக் கலக்கிறார். "அ" அதுவரை இப்பிரிவில் விபரிக்கப்பட்ட தவறினைப் புரியவில்லை. "அ" அவ்வுணவினை "க" வின் மேசையில் இடுகிறார் அல்லது "க" வின் மேசையில் வைக்கும்படி "க"வின் ஏவலாளரிடம் ஒப்படைக்கிறார். இப்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள தவறினை "அ" புரிந்துள்ளார்.

**301.** செயலொன்றின் மூலம் மரணத்தை ஏற்படுத்தியிருந்தால் அவர் கொலையாகக் குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கலுக்குக் குற்றவாளியாயிருக்கவேண்டிய ஏதேனும் செயலை அத்தகைய கருத்து அல்லது அறிவுடனும் அத்தகைய சூழ்நிலைகளிலும் செய்யும் எவரும் மூன்றாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இரு வகையிலொருவகை மறியலினால்

குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கலைப் புரிதற்கு எத்தனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படல் வேண்டும். அத்துடன் அத்தகைய செயலினால் ஆளெவருக்கேனும் காயம் உண்டானால் ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

*அத்தகைய செயலினால் அவர் மரணம் ஏற்படுத்தியிருப்பின் கொலையாகாக் குற்றத்திற்கிடமான மனிதவுயிர்போக்கலுக்கு அவர் குற்றவாளியாயிருக்கக்கூடிய அத்தகைய சூழ்நிலைகளில் "க" வை நோக்கி "அ" பாரதூரமான திடீராத்திரமூட்டலினால் துப்பாக்கியினால் சுடுகிறார். இப்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்ட தவறினை "அ" புரிந்துள்ளார்.*

**302.** நீக்கப்பட்டுள்ளது. (பி4 1998ம் ஆண்டின் 28ம் இலக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருச்சிதைவேற்படுத்தல், பிறவாத பிள்ளைகளுக்கு ஊறுகள் செய்தல், சிசுக்களைக் கைவிடுதல், பிள்ளைப்பேற்றை மறைத்தல் என்பன பற்றி

**303.** பிள்ளையைக் கருவுற்றுள்ள பெண் ஒருத்தியின் கருவை வேண்டுமென்று சிதையச்செய்கின்ற எவரும் அத்தகைய கருச்சிதைவு அப்பெண் ணின் உயிரைக் காப்பாற்றும் நோக்கமாக நல்லெண்ணத்துடன் செய்யப்படாவிடின் மூன்று ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கு இருவகையிலொருகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினா லும் தண்டிக்கப்படல் வேண்டும். அத்துடன் அப்பெண் உயிர்ப்புடன் துடிக்கும் கருவினை உடையவளாய் இருந்திருந்தால் ஏழு ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கு இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்குமாளாதல் வேண்டும். கருச்சிதை வேற்படுத்தல்.

விளக்கம்: : தமக்குத்தாமே கருச்சிதைவை ஏற்படுத்திக் கொள்ளும் பெண்ணொ ருத்தியும் இப்பிரிவின் கருத்தினுள் அடங்குவார்.

**304.** பெண்ணொருத்தி உயிர்ப்புடன் துடிக்கும் கரு வினையுடையவளாய் இருப்பினுஞ்சரி இல்லா விடினுஞ்சரி, அவளின் சம்மதமின்றி இறுதி பெண்ணின் சம்மதமின்றிக் கருச்சிதை வேற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக முற்போந்த பிரிவில் வரைவிலக்கணங் கூறப்பட்ட தவறினைப் புரியும் எவரும் இருபது ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கு இருவகையிலொருகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்குமாளாதல் வேண்டும்.

கருச்சிதை வேறபடுத்து தல் கருத் துடன் செய்யப்பட்ட ஒரு செயலினால் மரணம் விளைத்தல்.

**305.** பிள்ளையைக் கருவுற்றுள்ள பெண் ஒருத்திக் குக் கருச்சிதைவை ஏற்படுத்துங் கருத்துடன் ஏதேனும் செயலைச் செய்து அத்தகைய பெண் ணின் மரணத்தை விளைவிக்கும் எவரும் இரு பது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கு இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்குமாளாதல் வேண்டும்.

விளக்கம்: தவறாளர் அச்செயல் மரணத்தினை ஏற்படுத்தக்கூடும் என்று அறிந்திருக்க வேண்டுமென்பது இத்தவறுக்கு அத்தி யாவசியமானதல்ல.

பிள்ளை உயிருடன் பிறப்பதைத் தவிர்க்கும் கருத்துடன் அல்லது பிறந்த பின்னர் இறக்கச் செய்யும் கருத்துடன் செய்யப் படுஞ்செயல்

**306.** ஏதேனும் பிள்ளை பிறப்பதற்குமுன் ஏதேனும் மூலம் அப்பிள்ளை உயிருடன் பிறப்பதனைத் தவிர்க்கும் அல்லது பிறந்தபின்னர் இறக்கச் செய்யும் கருத்துடன் ஏதேனும் செயல் செய்து அச்செயலின்மூலம் அப்பிள்ளை உயிருடன் பிறப்பதனைத் தவிர்க்கின்ற அல்லது பிறந்த பின்னர் இறக்கச்செய்கின்ற எவரும். செயலா னதுதாயின் உயிரைக் காப்பாற்றும் நோக்கத் திற்கு நல்லெண்ணத்துடன் செய்யப்படாவிடின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து ஆண்டுகள்வரை அல்லது கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறிய லினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**307.** செயலொன்றின்மூலம் மரணம் விளைத்திருப்பின் குற்றத்திற்கிடமான மனிதவுயிர்போக்கலுக்கு அவர் குற்றவாளியாக அத்தகைய சூழ்நிலை களின்கீழ் அச்செயலைச் செய்து அச்செயலின் மூலம் உயிர்ப்புள்ள பிறக்காத பிள்ளையின் மரணத்தை விளைக்கும் எவரும் பத்து ஆண்டு கள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இரு வகையிலொரு வகை மறியலினால் தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத் திற்கும் ஆளாதல் வேண்டும்.

குற்றத்திற் கிடமான மனிதவுயிர் போக்கலாகக் கூடிய செயல் ஒன்றினால் உயிர்ப்புள்ள பிறக்காத பிள்ளையின் மரணத்தை ஏற்படுத்துதல்

**எடுத்துக்காட்டு**

*"அ" என்பார் கருவுற்றிருக்கும் பெண் ஒருத்தியின் மரணத்தை ஏற்படுத்தக்கூடுமென அறிந்துகொண்டு அச்செயலினால் பெண் ணின் மரணத்தை ஏற்படுத்தியிருந்தால் குற்றத்திற்கிடமான மனிதவுயிர்போக்கலாக அமையக்கூடிய செயலொன்றைச் செய்கி றார். அவள் ஊறடைகிறாளேயொழிய இறக்கவில்லை. ஆனால் அவள் கருவுற்றி ருந்த உயிர்ப்புடன் கூடிய பிறக்காது பிள்ளை யொன்று அதன் காரணமாக இறக் கிறது. இப்பிரிவில் வரைவிலக்கணங் கூறப் பட்ட தவறுக்கு "அ" குற்றவாளியாகிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு வயதிற்குட்பட்ட பிள்ளையொன்று அதன் பெற்றோரால் அல்லது அதனைக் கவனிப்பதற்குப் பொறுப்பான ஆளால் விட்டு நீக்கப்படுதலும் கைவிடப்படுதலும்.

**308.** பன்னிரண்டு வயதிற்குட்பட்ட பிள்ளையொன்றின் தகப்பனாக அல்லது தாயாக அல்லது அப்பிள்ளையைக் கவனித்தற்குப் பொறுப்பாயுள்ளவராயிருந்து கொண்டு அத்தகைய பிள்ளையை முற்றாகக் கைவிட்டு நீங்கும் கருத்துடன் ஏதேனும் இடத்தில் அப்பிள்ளையை விட்டு நீங்குகின்ற அல்லது விட்டுவிடுகின்ற எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம் : அப்பிள்ளையைவிட்டு விலகலின் விளைவாக அப்பிள்ளை இறப்பின் அத்தவறாளர் கொலைக்கு அல்லது விடயத்திற்கேற்பக் குற்றத்திற்கிடமான மனிதவுயிர் போக்கலில் விளங்கப்படுத்தலைத் தடுக்க இப்பிரிவு கருதப்படவில்லை.

பிள்ளைகளைக் கொடுமைப் படுத்தல் (பி3,1995இன் 22)

**308அ** (1) பதினெட்டு வயதிற்குக்கீழ்ப்பட் எவரேனும் ஆளைக்கட்டுக்காப்பில், பொறுப்பில் அல்லது பராமரிப்பில் வைத்திருக்கும் எவரும் அத்தகைய ஆளை (கண் பார்வைக்கு அல்லது செவிப்புலனுக்கு அல்லது அவயத்திற்கு அல்லது உடலுறுப்பிற்கு ஊறு அல்லது கண்பார்வை இழப்பு அல்லது ஏதேனும் உளவியல் சீர்குலைவு உட்பட) துயரத்தை, அல்லது உடல்நலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியமுள்ள முறையொன்றில் வேண்டுமென்றே தாக்கு கின்ற, துன்புறுத்துகின்ற அசட்டை செய் கின்ற, கைவிடுகின்ற அல்லது அத்த கைய ஆளை தாக்குவிக்க, துன் புறுத்து விக்க, கைவிடப்படுவிக்கச் செய்விக்கின்ற ஆள் எவரும் பிள்ளை களைக் கொடு மைப்படுத்தல் என்னும் தவறைப் புரி கின்றார்.

(2) பிள்ளைகளைக் கொடுமைப்படுத்துதல் என்னும் தவறைப்புரிகின்ற ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும், என்பதுடன் குற்றப்பணத்துட னும், தண்டிக்கப்படலாம் அத்துடன் எந்த ஆள்தொடர்பில் தவறுபுரியப்பட்டதோ அந்த ஆளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊறு களுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப் பட்ட தொகையைக் கொண்ட நட்ட ஈடொன்றைச் செலுத்துமாறு கட்டளையி டவும் படலாம்.

விளக்கம் "ஊறுகள்" என்பது உளவி யல் அல்லது மனக்கிலேசத்தை உள் ளடக்கும். பி4.2006இன்16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவுடலை இரகசியமாகக் கையாளல் மூலம் பிறப்பினை மறைத்தல்.

**309.** பிள்ளையொன்று பிறக்குமுன்னரேனும் அல்லது பின்னரேனும் அல்லது பிறக்கும் பொழுதேனும் அப்பிள்ளை இறந்ததால், அப்பிள்ளையின் இறந்தவுடலைப் புதைப்பதன்மூலம் அல்லது வேறு வகையாகக் கையாளுதலின்மூலம் இரகசியமாக அப்பிளையின் பிறப்பினைக் கருத்துடன் மறைக்கின்ற அல்லது மறைக்க முயலுகின்ற எவரும் இரண்டு ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலுமம தண்டிக்கப்படு தல் வேண்டும்.

"காயம் விளைத்தல்"

**310.** எவரேனுமாளுக்கு உடல்நோவு, நோய் அல்லது பலவீனம் விளைக்கும் எவரும் காயம் விளைவிப்பதாகச் சொல்லப்படுவர்.

"கடும் காயம்" பி2. 1995இன் 22

**311.** பின்வரும் வகையினதான காயங்கள் மட்டுமே "கடுமையானவை"யாக குறித்துரைக்கப்படுகின்றன:-

(அ) ஆண்மையழித்தல்.

(ஆ) இரு கண்களுள் ஒன்றில் நிரந்தரமான பார்வைச் சீர்குலைவு அல்லது பாதிப்பு.

(இ) இரு செவிகளுள் ஒன்றில் நிரந்தரமான செவிப்புல சீர்குலைவு அல்லது பாதிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) ஏதேனும் உறுப்பின் அல்லது மூட்டின் சீர்குலைவு.

(உ) ஏதேனும் உறுப்பின் அல்லது மூட்டின் வலிமைகள் அழிக்கப்படல் அல்லது நிரந்தரப்பாதிப்பு.

(ஊ) தலை அல்லது முகம் நிரந்தரமாக உருக்குலைவு.

(எ) எலும்பு, கசியிழையம் அல்லது பல் வெட்டப்படுதல் அல்லது முறிவு அல்லது எலும்பு மூட்டு அல்லது பல்லின் இடப் பெயர்வு, அல்லது தளர்வு.

(ஏ) உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய ஏதே னும் ஊறு அல்லது எந்த ஊறின் விளைவாக இருதய, வயிற்றில் அல் லது மண்டையோட்டு அறைகள் திறக்கப்பட வேண்டிய சத்திரசிகிச்சை யொன்று புரியப்படுகின்றதோ அந்த ஏதேனும் ஊறு.

(ஐ) காயப்பட்டவர்களுக்கு ஊறின் காரண மாக அல்லது ஊறினால் அவசியப் படுத்தப்பட்ட ஏதேனும் சத்திரசிகிச்சை யால் இருபது நாட்களைக் கொண்ட வொரு காலப்பகுதிக்கு கடுமையான உடல் நோவை ஏற்படுத்துகின்ற அல் லது அவரது வழமையான அலுவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை செய்ய முடியாத நிலையை ஏற்படுத்துகின்ற ஏதேனும் ஊறு.".

வேண்டுமென்று காயம் விளைத்தல்"

**312.** எவரேனுமாளுக்கு அதனால் காயம்விளை விக்கும் கருத்துடன் அல்லது எவரேனுமாளுக்கு அதனால் தாம் காயம் விளைவிக்கக்கூடும் என்ற அறிவுடன் ஏதேனும் செயலை செய்து அதனால் எவரேனுமாளுக்கு காயம்விளைவிக்கும் எவரும் "வேண்டுமென்று காயம் விளைப்பதாகச்" சொல்லப்படுகிறார்.

வேண்டுமென்று கடும் காயம் விளைத்தல்"

**313.** ஆளொருவர் விளைக்கக்கருதும் அல்லது தாம் விளைக்கக் கூடுமென அறியும் காயம் கடும் காயமாயும் அவர் விளைத்த காயம் கடும்காயமாயிருப்பின், அத்தகைய காயம் வேண்டுமென்று விளைக்கக் கருதும் எவரும் "வேண்டுமென்று கடும் காயம் விளைவிப்பதாகச்" சொல்லப்படுகிறார்.

விளக்கம் - ஆளொருவர் கடுங்காயம் விளைவிப்பதோடு கடும் காயம் விளைக்க அவர் கருதி னால் அல்லது தாம் விளைக்கக் கூடுமென அறிந்தால் தவிர அவர் வேண்டுமென்று கடுங்காயம் விளைவிப்பதாக சொல்லப்படமாட்டார். ஒரு வகையான கடுங்காயத்தை விளைக்கக் கருதியிருந்து அல்லது தாம் விளைக்கக் கூடுமென்று அறிந்து கொண்டு வேறொரு வகையான கடுங்காயத்தை உண்மையாக விளைத்தால் அவர் வேண்டுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுங்காயம் விளைவிப்பதாகச் சொல்லப்படுகிறார்.

**எடுத்துக்காட்டு**

*"அ" என்பவர் "க" வினுடைய முகத்தினை நிரந்தரமாக உருவழிக்கக்கருதி அல்லது அவ்விதம் செய்யக்கூடுமென அறிந்து "க" வை அடிக்கிறார். அது "க" வினுடைய முகத்தை நிரந்தரமாக உருவழிக்காது "க" வினை இருபது நாட்காலத்திற்கு கடுமையான உடல் நோவினுட்பட்டிருக்கச் செய்கிறது "அ" வேண்டுமென்று கடுங்காயம் விளைத்துள்ளார்.*

**314.** முந்நூற்றிருபத்தைந்தாம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்திற்றவிர வேண்டுமென்று காயம் விளைவிக்கும் எவரும் ஓராண்டுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது ஓராயிரம் ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வேண்டுமென்று காயம் விளைவித்தற்கான தண்டனை

**315.** முந்நூற்றிருபத்தைந்தாம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்திற்றவிர சுடுதல், குத்துதல், அல்லது வெட்டுதலுக்கான ஏதேனும் கருவியினால் அல்லது தாக்கும் ஆயுதமொன் றாகப் பயன்படுத்தப்படின்

அபாயகரமான ஆயுதங்களினால் அல்லது வழிகளினால் வேண்டுமென்று காயம் விளைவித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தை விளைக்கக்கூடிய ஏதேனும் கருவியினால் அல்லது தீயினால் அல்லது காய்ச்சப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தினால் அல்லது ஏதேனும் நஞ்சினால் அல்லது ஏதேனும் அரித்துத்தின்னும் பதார்த்தத்தினால் அல்லது ஏதேனும் வெடிப்பொருள் பதார்த்தங்களினால் அல்லது மனித உடலினுள் சுவாசித்தற்கு அல்லது உட்கொள்தலுக்கு அல்லது இரத்தத்தினுள் ஏற்றுக்கொள்வதற்கு குந்தகமான ஏதேனும் பதார்த்தத்தினால் அல்லது ஏதேனும் விலங்கினால் வேண்டுமென்று காயம் விளைவிக்கும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வேண்டுமென்று கடும் காயம் விளைவித்தற்கான தண்டனை
பி3 2005 இன் 23

**316.** முந்நூற்றிருபத்தாறாம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்திற்றவிர, வேண்டுமென்று கடுங்காயம் விளைக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அபாயமான ஆயுதங்களினால் அல்லது வழிகளினால் வேண்டுமென்று கடும்காயம்

**317.** முந்நூற்றிருபத்தாறாம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்திற்றவிர, சுடுதல், குத்துதல், அல்லது வெட்டுதலுக்கான ஏதேனும் கருவியினால் அல்லது தாக்கும் ஆயுதமொன்றாகப் பயன்படுத்தப்படின் மரணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைக்கக்கூடிய ஏதேனும் கருவியினால் அல்லது தீயினால் அல்லது காய்ச்சப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தினால் அல்லது ஏதேனும் நஞ்சினால் அல்லது ஏதேனும் அரித்துத் தின்னும் பதார்த்தத்தினால் அல்லது ஏதேனும் வெடிப்பொருள் பதார்த்தங்களினால் அல்லது மனித உடலினுள் சுவாசித்தற்கு அல்லது உட்கொள்ளுதற்கு அல்லது இரத்தத்தினுள் ஏற்றுக்கொள்வதற்கு குந்தகமான ஏதேனும் பதார்த்தத்தினால் அல்லது ஏதேனும் விலங்கினால் வேண்டுமென்று படுகாயம் விளைக்கும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும். விளைத்தல். பி3,2005இன்23

318. அவதிக்குட்பட்டவரிடமிருந்து அல்லது அவதிக்குட்பட்டவர் மீது அக்கறை கொண்ட வேறு ஆளிடமிருந்து ஏதேனும் ஆதனத்தை அல்லது பெறுமதியான பிணையை அச்சுறுத்திப்பெறும் நோக்கத்திற்காக அல்லது அவதிக்குட்பட்டவரை அல்லது அத்தகைய அவதிக்குட்பட்டவர் மீது அக்கறை கொண்ட எவரேனுமாளை ஏதேனும் சட்டவிரோதமானதை அல்லது தவறொன்று புரியப்படுதற்கு வசதியளிக்கக்கூடியதைச் செய்யக் கட்டாயப்படுத்தும் நோக்கத்திற்காக வேண்டுமென்று காயம் விளைக்கும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை

ஆதனத்தை அச்சுறுத்திப் பெறுதற்காக அல்லது சட்டவிரோதமான செயலைக் கட்டாயப்படுத்துவதற்காக வேண்டுமென்று காயம் விளைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

தவறுபுரியும் நோக்கத்துடன் நஞ்சு முதலியன மூலம் காயம் விளைத்தல்.

**319.** எவரேனும் ஆளுக்கு காயம் விளைக்கும் கருத்துடன் அல்லது தவறொன்று புரியும் அல்லது புரியப்படுதற்கு வசதியளிக்கும் கருத்துடன் அல்லது அதனால் தாம் காயம் விளையக்கூடும் என்ற அறிவுடன் ஏதேனும் நஞ்சினை அல்லது ஏதேனும் உணர்வை கெடுக்கும் அல்லது போதையூட்டும் அல்லது உடல் நலத்திற்கொவ்வாத ஔடதத்தை அல்லது வேறு ஏதேனும் பொருளை அத்தகைய ஆளுக்கு ஊட்டுகின்ற அல்லது அவரை உட்கொள்ளச்செய்கின்ற எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான மறியலினால் தண் டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

ஆதனத்தை அச்சுறுத்திப் பெறுவதற்காக அல்லது சட்டவிரோதமான செயலைக் கட்டாயப் படுத்துவதற்காக வேண்டுமென்று கடும் காயம் விளைத்தல். பி3,2005இன்23

**320.** அவதிக்குட்பட்டவரிடமிருந்து அல்லது அவதிக் குட்பட்டவரின் மீது அக்கறை கொண்ட வேறு ஆளிடமிருந்து ஏதேனும் ஆதனத்தை அல்லது பெறுமதியான பிணையை அச்சுறுத்தி பெறும் நோக்கத்திற்காக அல்லது அவதிக் குட்பட்டவரை அல்லது அத்தகைய அவதிக் குட்பட்டவர் மீது அக்கறை கொண்ட எவரேனு மாளை ஏதேனும் சட்டவிரோதமான அல்லது தவறொன்று புரியப்படுதற்கு வசதியளிக்கக் கூடியதைச் செய்யக் கட்டாயப்படுத்தும் நோக் கத்திற்காக வேண்டுமென்று கடுங்காயம் விளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

321. அவதிக்குட்பட்டவரிடமிருந்து அல்லது அவரின் மீது அக்கறை கொண்ட வேறு ஆளிடமிருந்து ஏதேனும் குற்ற ஒப்புதலை அல்லது ஏதேனும் தவறு அல்லது பிழையான நடத்தையினைக் கண்டுபிடித்தற்கு இட்டுச்செல்லக்கூடிய ஏதே னும் தகவலை அச்சுறுத்திப் பெறுவதற்காக அல் லது அவதிக்குட்பட்டவரை அல்லது அவரின் மீது அக்கறை கொண்ட வேறு ஆளை ஏதேனும் ஆதனத்தை அல்லது பெறுமதியான பிணையை மீள ஒப்படைக்க அல்லது மீள ஒப்படைப்பிக்க அல்லது ஏதேனும் உரிமைக்கோரிக்கையை அல்லது கோரிக்கையை திருப்தி செய்ய அல் லது ஏதேனும் ஆதனத்தின் அல்லது பெறு மதியான பிணையின் மீள ஒப்படைத்தலுக்கு இட்டுச்செல்லக்கூடிய தகவலை அளிக்கக் கட் டாயப்படுத்தும் நோக்கத்திற்காக வேண்டு மென்று காயம் விளைவிக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப் படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற் கும் அவர் ஆளாதல் வேண்டும்.

குற்ற ஒப்புதலை அச்சுறுத்திப் பெறுவதற்காக அல்லது ஆதனத்தை மீள ஒப்படைக்கக் கட்டாயப்படுத் துவதற்காக வேண்டுமென்று காயம் விளைத்தல்.

**எடுத்துக்காட்டுக்கள்**

*(அ) "அ" என்னும் பொலிசு அலுவலர் "க" வினை அவர் குற்றமொன்று புரிந் துள்ளாரென குற்ற ஒப்புதலொன்றைச்*

1157



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய "க" வைத் தூண்டும் நோக்கமாக "க" வைச் சித்திரவதை செய்கிறார். "அ", இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கு குற்ற வாளியாவார்.

(ஆ) "அ" என்னும் பொலிசு அலுவலர் களவெடுக்கப்பட்ட சில பொருட்கள் எங்கே வைக்கப்பட்டுள்ளன என்பதனை காண்பிக் கும் படி தூண்டுவதற்காக "ஆ" சித்திர வதை செய்கிறார். "அ" இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாகிறார்.

(இ) "அ" என்னும் அரசிறை அலுவலர் ஒருவர் "க" விடமிருந்து வரவேண்டிய அரசிறை நிலுவைகள் சிலவற்றை செலுத் தும் படி அவரை கட்டாயப்படுத்துவதெற் கென "க" வைச் சித்திரவதை செய்கிறார். "அ", இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாகிறார்.

(ஈ) "அ" என்னும் காணிச் சொந்தக்காரர் தனது வாடகைக் குடியிருப்பாளர் ஒரு வரை வாடகையை செலுத்தும்படி கட்டாயப் படுத்துவ தெற்கென அவரை சித்திரவதை செய்கிறார். "அ", இப்பிரிவின் கீழான தவ றொன்றுக்கு குற்றவாளியாகிறார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம். விசேட சேர்க்கைப் பகுதி

குற்றஒப்புதலை அச்சுறுத்திப் பெறுவதற்காக அல்லது

**322.** அவதிக்குட்பட்டவரிடமிருந்து அல்லது அவரின் மீது அக்கறை கொண்ட வேறு ஆளிடமிருந்து ஏதேனும் குற்ற ஒப்புதலை அல்லது ஏதேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு அல்லது பிழையான நடத்தையினைக் கண்டுபிடிப்பதற்கு இட்டுச் செல்லக் கூடிய ஏதேனும் தகவலை அச்சுறுத்திப் பெறுவதற்காக அல்லது அவதிக்குட்பட்டவரை அல்லது அவரின் மீது அக்கறை கொண்ட வேறு ஆளை ஏதேனும் ஆதனத்தை அல்லது பெறுமதியான பிணையை மீள ஒப்படைப்பிக்க அல்லது மீள ஒப்படைப்பிக்க ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அல்லது கோரிக்கையை திருப்தி செய்ய அல்லது ஏதேனும் ஆதனத்தின் அல்லது பெறுமதியான பிணையின் மீள ஒப்படைத்தலுக்கு இட்டுச்செல்லக்கூடிய தகவலை அழிக்கக் கட்டாயப்படுத்தும் நோக்கத்திற்காக வேண்டுமென்று கடும் காயம் விளைக்கும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

ஆதனத்தை மீள ஒப்படைக்கக் கட்டாயப்படுத்துவதற்காக வேண்டுமென்று கடும் காயம் விளைத்தல்.

**323.** பகிரங்க ஊழியர் என்றமுறையில் அவர்க்குள்ள கடமையை நிறைவேற்றுவதில் பகிரங்க ஊழியராய் இருக்கும் எவரேனுமாளுக்கு அல்லது அந்த ஆளை அல்லது வேறு எவரேனும் பகிரங்க ஊழியரை அத்தகைய பகிரங்க ஊழியரென்ற முறையில் அவர்க்குள்ள கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தடுக்கும் அல்லது விளக்கும் கருத்துடன் அல்லது அவ்வாளினால் அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையிலான அவரது கடமையை சட்டமுறையில்

பகிரங்க ஊழியரை அவரது கடமையிலிருந்து விலக்குவதற்கென வேண்டுமென்று காயம் விளைவித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுவதில் செய்யப்பட்ட அல்லது செய்ய எத்தனிக்கப்பட்ட எதனதும் விளைவாக வேண்டுமென்று காயம் விளைக்கும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியரை அவரது கடமையிலிருந்து விலக்குவதற்கென வேண்டுமென்று கடும் காயம் விளைவித்தல்

**324.** அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற முறையில் அவர்குள்ள கடமையை நிறைவேற்றுவதில் பகிரங்க ஊழியராயிருக்கும் எவரேனுமாளுக்கு அல்லது அந்த ஆளை அல்லது வேறு எவரேனும் பகிரங்க ஊழியரை அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற முறையில் அவர்க்குள்ள கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தடுக்கும் அல்லது விலக்கும் கருத்துடன் அல்லது அவ்வாளினால் அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையிலான அவரது கடமையைச் சட்ட முறையில் நிறைவேற்றுவதில் செய்யப்பட்ட அல்லது செய்ய எத்தனிக்கப்பட்ட எதனதும் விளைவாக வேண்டுமென்று கடுங்காயம் விளைக்கும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

ஆத்திர மூட்டப்படுதலின் மீது வேண்டுமென்று காயம் விளைத்தல்.

**325.** பாரதூரமான திடீர் ஆத்திரமூட்டப்படுதலினால் வேண்டு மென்று காயம் விளைக்கும் எவரும் ஆத்திரமூட்டலை ஏற்படுத்திய ஆளைத்தவிர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஆள் எவர்க்கேனும் காயம் ஏற்படுத்தக் கருதியிராவிடின் அல்லது தாம் ஏற்படுத்தக்கூடு மென அறிந்திராவிடின் ஒரு மாதகாலம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது நூற்றி யைம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**326.** பாரதூரமான திடீராத்திரமூட்டப்படுதலினால் வேண்டுமென்று கடுங்காயம் விளைக்கும் எவ ரும் ஆத்திரமூட்டலை ஏற்படுத்திய ஆளை தவிர்ந்த வேறு ஆள் எவர்க்கேனும் கடுங்காயம் ஏற்படுத்தக் கருதியிராவிடின் நான்கு ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியலினால் அல் லது இரண்டாயிரம் ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண் டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஆத்திரமூட்டப் படுதலின் மீது வேண்டுமென்று கடும் காயம் விளைத்தல்.

விளக்கம் : 325, 326 ஆகிய பிரிவுகள் 294 ஆம் பிரிவின் 1ஆம் விதிவிலக் கைப் போன்ற அதே காப்பு வாச கங்களுக்கு அமைந்தனவாகும்.

**327.** மனிதவுயிருக்கு அல்லது பிறரின் காப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அவ்விதமான அசட் டையாக அல்லது கவனமின்மையாக எச்செய லையும் புரியும் எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை

உயிரினை அல்லது பிறரின் காப்பினை ஆபத்துக்குட் படுத்துஞ் செயலுக்கான தண்டனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

உயிரினை அல்லது பிறரின் காப்பினை ஆபத்துக்குட் படுத்துஞ் செயலினால் காயம் விளைத்தல்.

**328.** மனிதவுயிருக்கு அல்லது பிறரின் காப்புக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அவ்விதமாக அசட்டையாக அல்லது கவனமின் மையாக ஏதேனும் செயலைச் செய்வதன் மூலமாக எவரேனுமாளுக்கு காயம் விளைக்கும் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

உயிரினை அல்லது பிறரின் காப்பினை ஆபத்துக்குட்படுத்துஞ் செயலினால் கடும்காயம் விளைத்தல்.

**329.** மனித உயிருக்கு அல்லது பிறரின் காப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அவ்விதமாக அசட்டையாக அல்லது கவனமின்மையாக ஏதேனும் செயலை செய்வதன் மூலம் எவரேனுமாளுக்கு கடுங்காயம் விளைவிக்கும் எவரும் இருவகையிலொருவகை மறியலினால் அல்லது ஆயிரம் ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைகேடாகத் தடுத்துவைத்தலும் முறைகேடாக அடைத்து வைத்தலும் பற்றி

**330.** எவரேனுமாளொருவரை அவ்வாள் செய்வதற்கு உரிமையுடைய ஏதேனும் நெறியில் செல்வதிலிருந்து அவ்வாளைத் தடுப்பதற்காக வேண்டுமென்று தடையேற்படுத்தும் எவரும் அவ்வாளை முறைகேடாகத் தடுத்துவைப்பதாக கூறப்படும்.

"முறைகேடாகத் தடுத்து வைத்தல்"

விதிவிலக்கு :- தமக்குத் தடைசெய்யச் சட்டமுறையான உரிமையுண்டு என நல்லெண்ணத்துடன் நம்பும் ஒருவர் நிலத்தின் மேலான அல்லது நீரின் மேலான தனிப்பட்ட வழியொன்றினைத் தடைசெய்தல் இப்பிரிவின் கருத்தினுட்படத் தவறென்றாகாது.

**எடுத்துக்காட்டு**

*அதனூடாக "க" வுக்குச் செல்லும் உரிமையுடைய வழியை "அ"தமக்கு அவ்வழியினை நிறுத்துவதற்கு உரிமையுண்டென்று நல்லெண்ணத்துடன் நம்பாமல் தடைசெய்கிறார். இதனால் "க" மேற்சொல்வதிலிருந்து தடுக்கப்படுகிறார். "க"வை "அ" முறைகேடாகத் தடுத்துவைக்கிறார்.*

**331.** எவரேனுமாளொருவரைக் குறிப்பிட்ட சுற்றமைவுள்ள எல்லைக்கப்பால் அவ்வாள் செல்

"முறைகேடாக அடைத்து வைத்தல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாது தடுக்கும் அத்தகைய முறையாக அவரை முறைகேடாகத் தடுத்துவைக்கும் எவரும் அவ் வாளை முறைகேடாக அடைத்துவைப்பதாக கூறப்படும்.

**எடுத்துக்காட்டுகள்**

*அ. "அ" என்பவர் "க" வை சுவர்கள் உள்ள ஓர் இடத்தினுள் போகச் செய்து "க" வினை அதனுள் விட்டுப் பூட்டுகிறார். அச்சுவரின் சுற்றமைவினை விட்டு அப்பால் எத்திசையிலும் செல்வதிலிருந்து அதனால் "க" தடுக்கப்படுகிறார். "க" வை "அ" முறைகேடாக அடைத்து வைக்கிறார்.*

*ஆ. "அ" என்பவர் கட்டடம் ஒன்றின் வாயில்களில் துப்பாக்கிகளோடு மனிதர் களை நிறுத்தி "க" அக்கட்டிடத்தைவிட்டு வெளியேற எத்தனித்தால் அவர்கள் "க" வைச் சுடுவர் என "க"விடம் கூறுகிறார். "க" வை "அ" முறைகேடாக அடைத்து வைக்கிறார்.*

"முறைகேடாகத் தடுத்து வைத்தல்"

**332.** எவ்வாளையேனும் முறைகேடாக தடுத்து வைக்கும் எவரும் ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது ஐம்பது ரூபாவை செல லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

முறைகேடாக அடைத்து

**333.** எவ்வாளையேனும் முறைகேடாக அடைத்து வைக்கும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது ஆயிரம் ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வைத்தற்கான தண்டனை

**334.** மூன்று நாட்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட எவ்வாளையினும் முறைகேடாக அடைத்து வைக்கும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் முறைகேடாக அடைத்து வைக்கப் படுதல்.

**335.** பத்து நாட்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட எவ்வாளையேனும் முறைகேடாக அடைத்து வைக்கும் எவரும் மூன்று ஆண்டுகள் வரையும் நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்பணத்திற்கும் அவராளாதல் வேண்டும்.

பத்து அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் முறைகேடாக அடைத்து வைக்கப்படுதல்.

**336.** ஆளொருவரின் விடுதலைக்காக எழுத்தாணை ஒன்று முறைப்படியாக வழங்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்து கொண்டு அவ்வாளை முறைகேடாக அடைத்து வைக்கும் எவரும் இச்சட்டக்கோவையின் வேறேதேனும் பிரிவின் கீழ் அவர் ஆளாகக்கூடிய ஏதேனும் மறியற்காலத்தோடு கூட இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு

அவரின் விடுதலைக்காக எழுத்தாணை யொன்று வழங்கப்பட்டுள்ள ஆளை. முறைகேடாக அடைத்து வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

இரகசியமாக. முறைகேடாக அடைத்து வைத்தல்.

**337.** அவ்விதம் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆளில் அக்கறை கொண்டுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது யாரேனும் பகிரங்க ஊழியருக்கு அத்தகைய ஆள் அடைத்து வைக்கப் பட்டிருக்கிறார். என்பது தெரியப்படாமல் இருக்க வேண்டும். அல்லது இதன் அகத்து முன்னர் சொல்லப்பட்ட அத்தகைய ஆளினால் அல்லது பகிரங்க ஊழியரினால் அத்தகைய அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் அறியப்படாமல் இருக்கவேண்டும் அல்லது கண்டுபிடிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்ற கருத்தை காட்டக்கூடிய அத்தகைய முறையாக எவரேனும் ஆளை முறைகேடாக அடைத்து வைக்கும் எவரும் அத்தகைய முறை கேடான அடைத்து வைத்தலுக்கு அவராளாகக் கூடிய வேறேதேனும் தண்டனை உடனும் கூட இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஆதனத்தை அச்சுறுத்திப் பெறுவதற்காக அல்லது சட்டவிரோதமான செயலைக் கட்டாயப்படுத்துவதற்காக முறைகேடாக அடைத்து வைத்தல்.

**338.** அடைத்து வைக்கப்பட்ட ஆளிடமிருந்து அல்லது அடைத்துவைக்கப்பட்ட ஆளின் மீது அக்கறையுள்ள வேறெவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் ஆதனத்தை அல்லது பெறுமதியான பிணையை அச்சுறுத்திப் பெறும் நோக்கத்திற்காக அல்லது அடைத்து வைக்கப் பட்ட ஆளை அல்லது அத்தகைய ஆளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது அக்கறை கொண்ட வேறு ஆளைச் சட்ட விரோதமானது எதனையும் செய்ய அல்லது ஒரு தவறு புரியப்படுத்தலுக்கு வசதியளிக் கும் ஏதேனும் தகவலைத் தரக் கட்டாயப் படுத்தும் நோக்கத்திற்காக எவரே னுமாளை முறைகேடாக அடைத்து வைக்கும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய லினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப் பணத்திற்கும் அவராளா தல் வேண்டும்.

**339.** அடைத்து வைக்கப்பட்ட ஆளிடமிருந்து அல்லது அடைத்து வைக்கப்பட்ட ஆளின்மீது அக்கறை கொண்ட எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் குற்ற ஒப்புதலை அல்லது ஏதேனும் தவறு அல்லது பிழையான நடத்தையினை கண்டுபிடிப்பதற்கு இட்டுச் செல்லக்கூடிய ஏதேனும் தகவலை அச்சுறுத்தி பெறுவதற்காக அல்லது அடைத்து வைக்கப்பட்ட ஆளின்மீது அக்கறை கொண்ட வேறு ஆளை ஏதேனும் ஆதனத்தை அல்லது பெறுமதியான பிணையை மீள ஒப் படைக்க அல்லது மீள ஒப்படைப்பிக்க அல்லது ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அல்லது கோரிக்கையை திருப்தி செய்ய அல்லது ஏதேனும் ஆதனத்தில் அல்லது பெறுமதியான பிணையினை மீள ஒப்படைத்தலுக்கு இட்டுச் செல்லக் கூடிய தகவலை அளிக்க கட்டாயப்படுத்தும் நோக்கத்திற்காக ஆளெ வரையும் முறைகேடாக அடைத்து வைக்கும்

குற்ற ஒப்புதலை அச்சுறுத்திப் பெறுவதற்காக அல்லது ஆதனத்தை மீள ஒப்படைக்கப் படுவதற்காக முறைகேடாக அடைத்து வைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்பணத்திற்கும் அவராளாதல் வேண்டும்.

## குற்றமுறை வலோத்காரமும் தாக்குதலும் பற்றி

வலோற்காரம்.

**340.** ஆளொருவர் வேறொருவருக்கு அசை வினை அல்லது அசைவின் மாற்றத்தினை அல்லது அசைவின் முடிவினை ஏற்படுத்தினால் அல்லது ஏதேனும் பதார்த்தத்திற்கு அத்தகைய பதார்த் தத்தினை மற்றவர் உடைய உடம்பின் எப் பாகத்தினோடும் அல்லது மற்றவர் அணிந்தி ருக்கும் அல்லது தாங்கியிருக்கும் எதனோடும் அல்லது அதன் சம்பந்தம் மற்றவருடைய உணர்ச்சியினை பாதிக்கக் கூடிய அத்தகைய விதமாக அமைந்துள்ள வேறு எத னோடும் சம்பந்தப்படுத்தப்படக்கூடிய விதமாக அசை வினை அல்லது அசைவின் மாற்றத்தினை அசைவின் முடிவினை ஏற்படுத்தினால் அவர் வேறொருவருக்கு வலோத்காரத்தை பிரயோகிப்ப தாக சொல்லப்படுகிறார்.

ஆயினும் அசைவினை அல்லது அசைவின் மாற்றத்தினை அல்லது அசைவின் முடிவினை ஏற்படுத்துமாள் இதனகத்துப் பின்னர் விவரிக் கப்பட்டுள்ள மூன்று வழிகளில் ஒன்றின் மூலம் அந்த அசைவினை அல்லது அசைவின் மாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றத்தினை அல்லது அசைவின் முடிவினை ஏற்படுத்துதல் வேண்டும்.

முதலாவதாக : தனது சொந்த உடலாற்றலினால்

இரண்டாவதாக : ஏதேனும் பதார்த்தத்தினை, அந்த அசைவின் மாற்றம் அல்லது அசைவின் முடிவு அவராயினும் வேறு ஆள் எவராயினும் மேற்கொண்ட மேலும் செயலைச் செய்யாது நிகழும் கையாளுதல் மூலம்.

மூன்றாவதாக : ஏதேனும் விலங்கினை அசையும்படி அல்லது அசைவினை மாற்றும்படி அல்லது அசைவை நிறுத்தும்படி தூண்டுதல் மூலம்.

**341.** எவரேனுமாளுக்கு அவ்வாளின் சம்மதமின்றி ஏதேனும் தவறினைப் புரிவதற்கு அல்லது அத்தகைய வலோத்காரத்தை பிரயோகிப்பதன் மூலம் வலோத்காரம் பிரயோகிக்கப்பட்ட ஆளிற்கு ஊறு, பயம், அல்லது மனக்குலைவை சட்ட விரோதமாக ஏற்படுத்தும் கருத்துடன் அல்லது அத்தகைய வலோத்காரத்தை பிரயோகிப்பதன் மூலம் தாம் அவ்விதம் சட்டவிரோதமாக ஏற்படுத்தக்கூடும் என்ற அறிவுடன் வலோத்காரத்தினை குற்றமுறை வலோற்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துடன் பிரயோகிக்கும் எவரும் அந்த மற்ற ஆளுக்கு குற்றமுறையான வலோத்காரத்தை பிரயோகிப்பதாகச் சொல்லப்படுகிறார்.

**எடுத்துக்காட்டுக்கள்**

*(அ) ஆற்றில் நங்கூரம் இட்டுள்ள வத்தை ஒன்றில் "க" உட்கார்ந்திருக்கின்றார். "அ" நங்கூரத்தினை அவிழ்த்துவிட்டு அதனால் அவ்வத்தையை ஆற்றின் போக்கில் செல்லும் படி கருதி செய்கிறார். இங்கு "அ" கருத்துடன் "க" வின் அசைவினை ஏற்படுத்துகின்றார். இதனை அவர் பதார்த்தம் ஒன்றினை வேறெவரேனும் ஆளினதும் வேறெச்செயலுமின்றி அசைவு உண்டாக்கக்கூடிய அத்தகையவிதமாகக் கையாளுதல் மூலம் செய்கிறார். ஆகவே*

*"அ" கருத்துடன் "க"வின் மீது வலோத்காரத்தை பிரயோகித்துள்ளார். அவர் "க"வினுடைய சம்மதமின்றி ஏதேனும் தவறைப்புரிவதற்கென அல்லது "க" விற்கு இவ்வலோத்காரத்தைப் பிரயோகித்தல் ஊறு, பயம், அல்லது மனக் குலைவை உண்டாக்கும் என்று கருதி அல்லது உண்டாக்கக் கூடும் என அறிந்து அவ்விதம் செய்திருந்தால் "க"விற்கு "அ" குற்றமுறையான வலோத்காரத்தைப் பிரயோகித்துள்ளார்.*

*(ஆ) "க"வண்டியொன்றில் சவாரி செய்கின்றார். "க"வினுடைய குதிரைக்கு "அ"சவுக்கடி கொடுத்து அதனால் அவற்றின் வேகத்தை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவுபடச் செய்கிறார். இங்கே அவ் விலங்கு களை அவற்றின் அசைவை மாற்றத் தூண்டு வதன் மூலம் "க" வின் அசைவில் "அ" மாற் றத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே "க"வின் மீது "அ" வலோத்காரத்தை பிரயோகித்துள் ளார். இதனை "க"வினுடைய சம்மதமின்றி அதனால் "க"வை ஊறுபடுத்த அல்லது பயன் படுத்த அல்லது மனக்குலைவு கொள்ளச் செய்யக்கருதி அல்லது அவ்விதம் செய்யக் கூடும் என அறிந்துகொண்டு "அ" செய்திருந் தால் "க" வுக்கு "அ" குற்றமுறையான வலோத் காரத்தை பிரயோகித்துள்ளார்.

(இ) "க" பல்லக்கொன்றில் செல்கிறார். "க" வை கொள்ளையடிக்கக் கருதி "அ" காவுதடி யைப் பற்றிப் பல்லக்கை நிறுத்துகிறார். இங்கு "க"விற்கு அசைவின் முடிவினை "அ" ஏற் படுத்தியுள்ளார். அவர் அதனை தம் உடல் ஆற்றலினால் செய்துள்ளார். எனவே "க" விற்கு "அ" வலோத்காரத்தை பிரயோகத்துள்ளார். இவ்விதமாக "க" வினுடைய சம்மதமில்லா மல் தவறொன்றைப் புரிவதற்கென கருத்து டன் "அ" செயலாற்றியுள்ளதனால் "க"வின் மீது "அ" குற்றமுறையான வலோத்காரத்தை பிரயோகித்துள்ளார்.

(ஈ) தெருவில் "க" என்பவருக்கெதிராக "அ" தன்னைத் தானே தள்ளிக் கொள்கிறார். இங்கு "அ" தனது உடலாற்றலினால் தம்மை "க"வினுடன் சம்மந்த முறச் செய்யும் வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் தனது உடலை அசைத்துள்ளார். எனவே "க" விற்கு எதிராக அவர் கருத்துடன் வலோத்காரம் பிரயோகித்துள்ளார். அத்துடன் அவர் "க" வின் சம்மதமில்லாமலும் "க" வினை அதனால் ஊறுபடுத்த அல்லது பயப்படுத்த அல்லது மனக்குலைவு கொள்ளச் செய்ய கருதியிருந்தால் அல்லது அவ்விதம் செய்யக் கூடுமென அறிந்து "அ" செய்திருந்தால் "க"விற்கு "அ" குற்றமுறையான வலோத்காரத்தை பிரயோகித்துள்ளார்.

(உ) "க" உடன் அல்லது "க"வின் உடைகளுடன் அல்லது "க" தாங்கியிருக்கும் எதனுடனும் சம்பந்தம் கொள்ளும் என அல்லது அது நீரில் அடித்து நீரினை "க"வின் உடையில் அல்லது "க"வினால் தாக்கப்படும் எதிலும் தெறிக்கும் எனக்கருதி அல்லது அவ்விதம் கூறக்கூடும் என அறிந்து "அ" கல்லொன்றை எறிகிறார். இங்கு அக்கல்லினை எறிதல் ஏதேனும் பதார்த்தத்தினை "க"வுடன் அல்லது "க"வின் உடைகளுடன் சம்மந்தமுறைச் செய்யக்கூடுமாயின் "க" விற்கு "அ" வலோத்காரம் பிரயோகித்துள்ளார். அவர் அவ்விதம் "க"வினுடைய சம்மதமில்லாமல் "க" வினை அதனால் ஊறுபடுத்த அல்லது பயப்படுத்த அல்லது மனக்குலைவு கொள்ளச் செய்ய கருதிச் செய்தி ருந்தால் "க"விற்கு "அ" குற்றமுறையான வலோத்காரத்தை பிரயோகித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) பெண்ணொருத்தியின் முக்காட்டினை "அ" கருதிப் பிடித்திருக்கிறார். இங்கு "அ" அவள் மீது கருத்துடன் வலோத்காரம் பிரயோகிக்கிறார். அவளின் சம்மதமின்றி அதனால் அவளை ஊறுபடுத்த அல்லது பயப்படுத்த மனக்குலைவு கொள்ளச் செய்யக்கருதி அல்லது அவ்விதம் செய்யக்கூடுமென அறிந்து கொண்டு "அ" செய்தால் அவள்மீது "அ" குற்றமுறையான வலோத்காரத்தை பிரயோகித்துள்ளார்.

(எ) "க" குளித்துக் கொண்டிருக்கிறார். சுவரின் தொட்டியில் "அ" கொதிக்கிறது என அறிந்து கொண்டு கொதி நீரினை ஊற்றுகிறார். "அ" தனது உடலாற்றலினால் அத்தகைய "க"வுடன் சம்பந்தப்படும் விதத்தில் அல்லது "க"வின் உணர்ச்சிகளை பாதிக்கக்கூடிய அத்தகைய நிலையிலுள்ள வேறு நீருடன் சம்மந்தப்படும் விதத்தில் அக்கொதி நீரில் அத்தகைய அசைவைக் கருதி உண்டாக்கியுள்ளார். எனவே "க"வுக்கு "அ" கருத்துடன் வலோத்காரத்தைப் பிரயோகித்துள்ளார். அவர் இதனை "க"வினுடைய சம்மதமின்றி அதனால் "க"விற்கு ஊறு, பயம் அல்லது மனக் குலைவு ஏற்படுத்தக் கருதி அல்லது அதனால் தாம் ஏற்படுத்தக் கூடும் என அறிந்து அதனைச் செய்திருந்தால் "க" விற்கு "அ" குற்றமுறையான வலோத்காரத்தை பிரயோகித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(ஏ) "க" வினுடைய சம்மதமில்லாமல் நாயொன் றைக் "க" வின் மீது பாயும் படி "அ" ஏவிவிடு கிறார். இங்கு "க" விற்கு ஊறு, பயம் அல்லது மனக்குலைவு ஏற்படுத்த "அ" கருதியிருந்தால் அவர் "க" விற்கு குற்ற முறையான வலோற் காரத்தைப் பிரயோகித்துள்ளார்.*

*(ஐ)"அ"என்ற ஓர் ஆசிரியர், ஆசிரியராகப் தமது தற்றுணிவினை நியாயமான அளவில் பிரயோகிக்கையில் மாணாக்கர்களில் ஒருவ ரான "ஆ"விற்குப் பிரம்படி கொடுக்கிறார். "ஆ"விற்கு பயத்தையும் மனக்குலை வையும் ஏற்படுத்த "அ" கருதினாலும் அவர் சட்ட விரோ தமாக வலோற்காரம் பிரயோகிக்காமையால் "ஆ" வின் மீது "அ" குற்றமுறையான வலோற் காரம் பிரயோகிக்கவில்லை.*

தாக்குதல்

**342.** ஏதேனும் அங்க அசைவு அல்லது ஏதேனும் முன்னேற்பாடு அத்தகைய அங்க அசைவினை அல்லது முன்னேற்பாட்டினை செய்யும் ஆள் அங்குள்ள ஆள்மீது குற்றமுறையான வலோற் காரத்தைப் பிரயோகிக்கப் போகிறார். என்று அந்த ஆளினை அஞ்சச் செய்யும் எனக் கருதி அல்லது அவ்விதம் செய்யக்கூடுமென அறிந்து அத்தகைய அங்க அசைவினை அல்லது முன் னேற்பாட்டினை செய்யும் எவரும் "தாக்குதல்" புரிவதாக சொல்லப்படுவார்.

விளக்கம் :- சொற்கள் தனியே தாக்குதலா வதில்லை எனினும் ஆள் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தும் சொற்கள் அவரது அங்க அசைவுகளுக்கு அல்லது முன்னேற்பாட்டினைத் தாக்குதலா கக்கூடிய அத்தகையதொரு பொருளை அளிக்கக்கூடும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) "அ" என்பவர் தாம் அவ்விதம் செய்தல் மூலம் "க" வினை அடிக்கப்போகிராரென "க"வை நம்பச் செய்யக்கூடுமென கருதி அல்லது அவ்விதம் செய்யக்கூடுமென அறிந்து கொண்டு "அ" தமது கைமுட்டியை அசைக்கி றார். "அ" தாக்குதலைப் புரிந்துள்ளார்.*

*(ஆ) "அ" என்பவர் தாம் அவ்விதம் செய்வத னால் "க" வின் மீது நாயை ஏவிவிடப் போகிறாரென "க" வை நம்பச்செய்யக்கூடுமென கருதி அல்லது அவ்விதம் செய்யக்கூடுமென அறிந்து "அ" மூர்க்கமான நாயின் வாய் மூடியைக் கழற்றத் தொடங்குகிறார். "க" வின் மீது "அ" தாக்குதலைப் புரிந்துள்ளார்.*

*(இ) "உனக்கு அடிப்பேன்" என்று "க" விடம் "அ" சொல்லிக்கொண்டு தடியொன்றை எடுக் கிறார். இங்கு "அ"வினால் பயன்படுத்தப் பட்ட சொற்கள் எவ்விடயத்தினும் தாக்குத லாக அமையாவாயினும் (அத்துடன் வேறச் சூழ்நிலைகளுடனுஞ் சாராத அங்க அசைவு கள் தனியே தாக்குதல் ஒன்றாக) அமையா வாயினும் அச்சொற்களினால் தெளிவாக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கப்படும் அந்த அங்க அசைவு தாக்குதலா கும்.*

பாரதூரமான திடீர் ஆத்திர மூட்டப்படுதல மீதன்றிக் குற்ற முறையான வலோற்காரத்தைப் பிரயோகிப் பதற்கான தண்டனை

**343.** ஆளொருவரினால் தரப்பட்ட பாரதூரமான திடீ ராத்திர மூட்டப்படுதல் மீதன்றி எவரையேனும் தாக்கும் அல்லது எவர் மீதும் குற்றமுறையான வலோற்காரத்தைப் பிரயோகிக்கும் எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டி னாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம் :- ஆத்திரமூட்டப்படுதல்தவறொன்றைப் புரிவதற்குச் சாட்டாக தவறாளரால் தேடப் பட்டதாக அல்லது வேண்டுமென்று ஏற் படுத்திக் கொண்டதாக இருப்பின்: அல் லது

அவ்வாத்திரமூட்டப்படுதல் சட்டத்திற்கு கீழ்ப்படிவதில் செய்யப்படும் எதனாலும் தரப்படின் அல்லது அத்தகைய பகிரங்க ஊழியரின் தத்துவங்களைச் சட்டமுறை யில் பிரயோகிக் கையில் பகிரங்க ஊழி யரொருவரால் தரப்படின்: அல்லது

தற்காப்புரிமையைச் சட்டமுறையில் பிர யோகிப்பதில் செய்யப்பட்ட எதனாலும் அவ்வாத்திரமூட்டல் உண்டாக்கப்படின்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரிவின் கீழான தவறு ஒன்றுக்குள்ள தண்டனையை பாரதூரமான திடீராத்திர மூட்டப்படல் தணிக்காது.

அத்தவறினை தணிப்பதற்கு அந்த ஆத்திர மூட்டப்படல் போதிய பாரதூரமானதும் திடீரானதுமா என்பது நிகழ்வுப் பிரச்சினை ஒன்றாகும்.

**344.** பகிரங்க ஊழியர் என்ற முறையில் அவர்க்குள்ள கடமையைப் புரிவதில் பகிரங்க ஊழியராயிருக்கும் எவரேனுமாளை அல்லது அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற முறையில் அவர்க்குள்ள கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தடுக்கும் அல்லது விலக்கும் கருத்துடன் அல்லது அத்தகைய பகிரங்க ஊழியர் என்ற தன்மையிலான அவரது கடமையைச் சட்ட முறையில் நிறைவேற்றுவதில் செய்யப்பட எத்தனிக்கப்பட்ட எதனதும் விளைவாகத் தாக்கும் அல்லது அவருக்குக் குற்றமுறையான வலோற்காரத்தை பிரயோகிக்கும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியரொருவரை அவரது கடமையை நிறைவேற்றுவதிலிருந்து விலக்குவதற்கெனக் குற்றமுறையானவலோற்காரத்தைப் பிரயோகித்தல்.

**345.** தாக்குதல் மூலம் அல்லது குற்றவியல் பலாத்காரத்தை உபயோகிப்பதன்மூலம் இன்னோர் ஆளுக்குப் பாலியல் தொல்லைகொடுக்கின்ற அல்லது, வார்த்தைகளை அல்லது செய்கைக

பாலியல் தொல்லை கொடுத்தல்
பி5,1995இன்22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைப் பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய இன்னோர் ஆளுக்குப் பாலியல் தொந்தரவை அல்லது தொல்லையைக் கொடுக்கின்ற எவரும் பாலியல் தொல்லை கொடுத்த தவறுக்குக் குற்ற வாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன் மேல் ஐந்தாண்டுகளுக்கு நீடிக் கக்கூடிய இருவகையிலொருவகை மறியற் றண்டனையால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது அத்தகைய மறியற் றண்டனை, குற் றப்பணம் ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படு தலும் வேண்டும், என்பதுடன் எந்த ஆள் தொடர் பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக அத்தகைய ஆளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றை நட்டஈடாகச் செலுத்துமாறு கட்டளையிடவும்படலாம்.

பி5, 2006இன் 16

**விளக்கம்1:** வேலை செய்யும் இடத்தில் அல்லது வேறு வகையில் அதிகாரத்தில் உள்ள ஆளொருவரினால் சொற்கள் மூலம் அல்லது செயல்மூலம் பயன்படுத்தப் படும் வரவேற்கத் தகாத பாலியல் அணுகல்கள், பாலியல் தொல்லைத் தவறாக அமைதல் வேண்டும்.

பி5, 2006இன் 16

**விளக்கம்2:** இப்பிரிவின் நோக்கங்களுக்காக தாக் குதல் என்பது, 363ஆம் பிரிவின் கீழ் கற்பழிப்பு அல்லது 365ஆ என்னும் பிரிவின் கீழ் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் எனக் கொள்ளத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்லாத செயல் எதனையும் உள்ள டக்கலாம்.'' அத்துடன்

**"விளக்கம்3"**: "ஊறுகள்"என்பது உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும்.'' பி5. 2006இன் 16

**346.** ஆளொருவரினால் தரப்பட்ட பாரதூரமான திடீராத்திர மூட்டப்படுதல் மீதன்றி எவரையேனும் அவமரியாதை செய்யும் கருத்துடன் தாக்கும் அல்லது எவர் மீதும் குற்றமுறையான வலோற்காரம் புரியும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பாரதூரமான திடீராத்திர மூட்டப்படுதல் மீதன்றி ஆளொருவரை அவமரியாதை செய்யும் கருத்துடன் தாக்குதல் அல்லது குற்றமுறையான வலோற்காரம் புரிதல்.

**347.** ஆளொருவர் அப்போது உடுத்திருக்கின்ற அல்லது எடுத்துச்செல்கின்ற ஏதேனும் ஆதனத்தைத் திருடும் எத்தனத்தில் அவரைத்தாக்கும் அல்லது அவர் மீது குற்றமுறையான வலோற்காரம் புரியும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஆளொருவரினால் எடுத்துச்செல்லப் படும் ஆதனத் தைத் திருடும் எத்தனத்தில் தாக்குதல் அல்லதுகுற்ற முறையான வலோற்காரம் புரிதல்.

**348.** ஆளொருவரை முறைகேடாக அடைத்து வைக்க எத்தனிப்பதில் அவரைத்தாக்கும் அல்லது அவர் மீது குற்றமுறையான வலோற்காரம் புரியும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய

முறைகேடாக ஆளை அடைத்து வைக்க எத்தனிப்பதில் தாக்குதல் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்ற முறையான வலோற்காரம் புரிதல்.

லினால் அல்லது ஓராயிரம் ரூபா வரை செல் லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை யிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பாரதூரமான திடீராத்திர மூட்டப்படுதலின் மீது தாக்குதல் அல்லது குற்ற முறையான வலோற்காரம் பிரயோகித்தல்.

**349.** ஆளொருவரினால் தரப்படும் பாரதூரமான திடீ ராத்திர முட்டப்படுதலின் மீது அவ்வாளைத்தாக் கும் அல்லது அவர் மீது குற்றமுறையான வலோற்காரத்தைப் பிரயோகிக்கும் எவரும் ஒரு மாதம் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற் கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை யிரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம் : 349ம் பிரிவு 343ம் பிரிவிற்கு தரப்பட்டுள்ள அதே விளக்கத்திற் கமைந்ததாகும்.

பி6 2006 இன் 16

.

## ஆட்கவருதல், ஆட்கடத்தல், அடிமைத்தனம் முதலியன

ஆட் கவருதல்

**350.** ஆட்கவருதல் இருவகைப்படும்:-
இலங்கையிலிருந்து ஆட்கவர்தலும்
சட்டமுறையான பாதுகாவலிலிருந்து ஆட் கவர்தலும்

இலங்கை யிலிருந்து ஆட்கவருதல்

**351.** எவரேனுமாளை அவ்வாளின் சம்மதமில்லா மல் அல்லது அவ்வாளின் சார்பில் சம்மத மளிக்கச் சட்ட முறையதிகாரமுள்ள வேறு ஆளின் சம்மதமில்லாமல் இலங்கையின் எல் லைகளுக்கப்பால் எடுத்துச்செல்லும் எவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாளை இலங்கையிலிருந்து கவர்ந்து செல்வதாக சொல்லப்படுகிறார்.

**352.** ஆணானால் பதினான்கு வயதிற்கும் பெண்ணானால் பதினாறு வயதிற்கும் உட்பட்ட சிறார் எவரையேனும் அல்லது சித்த சுவாதீனமற்ற ஆளெவரையேனும் அச்சிறாரின் அல்லது சித்த சுவாதீனமற்ற ஆளின் சட்டமுறையான பாதுகாவலரினது காப்பிலிருந்து அத்தகைய பாதுகாவலரின் சம்மதமின்றி எடுத்துச் செல்லும் அல்லது கவரும் எவரும் அத்தகைய சிறாரை அல்லது ஆளைச் சட்டமுறையான பாதுகாவலிலிருந்து கவர்ந்து செல்வதாகச் சொல்லப்படுகிறார்.

சட்டமுறையிலான பாதுகாவலில் இருந்த ஆட் கவருதல்

விளக்கம் : இப்பிரிவில் "சட்டமுறையான பாதுகாவலர்" என்னுஞ் சொற்கள் அந்தச் சிறாரை அல்லது வேறு ஆளைப் பேண அல்லது காப்பில் வைத்திருக்கச் சட்டமுறைப் பொறுப்புடைய எவ்வாளையும் உள்ளடக்கும்.

விதிவிலக்கு: சட்டமுறையானதல்லாத பிள்ளையொன்றின் தந்தை தானேயென நல்லெண்ணத்துடன் நம்பும் எவரேனும் ஆளினால் அல்லது அப்பிள்ளையின் சட்டமுறைக் காப்புக்கு தானே உரித்துடையவர் என நல்லெண்ணத்துடன் நம்பும் எவரேனுமாளினால் செய்யப்படும் செயலெதுவிற்கும், அத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் ஒழுக்கக்கேடான அல்லது சட்டவிரோதமான நோக்கத்திற்காக புரியப்பட்டிருந்தாலன்றி, இப்பிரிவு விரிவுடையதாகாது.

ஆட்கடத்தல்

**353.** எவரேனுமாளை ஏதேனுமிடத்திலிருந்து போகும்படி வலோற்காரத்தால் கட்டாயப்படுத்தும் அல்லது ஏதேனும் ஏமாற்று வழிகளினால் அல்லது அதிகாரத்தைப் பிழையாகப் பயன்படுத்துவதனால் (துர்ப்பிரயோகம்) அல்லது வேறு ஏதேனும் கட்டாயப்படுத்தும் வழிகளினால் தூண்டும் எவரும் அவ்வாளைக் ''கடத்துவதாக'' சொல்லப்படுகிறார்.

ஆட்கவர்தற்கான தண்டனை

**354**. இலங்கையிலிருந்து அல்லது சட்டமுறையான பாதுகாவலிலிருந்து எவரேனுமாளைக் கவர்ந்து செல்லும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

கொலைபுரிவதற்காக ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல்

**355.** எவரேனுமாள் கொலை செய்யப்படக்கூடியதாயிருப்பதற்கென அல்லது கொலை செய்யப்படலாம் என்ற அபாயத்தினுட்படுத்தும் வகையில் அவ்விதம் கையாளப்படக் கூடியதாயிருப்பதற்கென எவரேனுமாளை கவரும் அல்லது கடத்தும் எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலாரு வகை கடூழியமறியலினால் தண்டிக்கப்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

எடுத்துக்காட்டுக்கள்

*(அ) "க" என்பவர் திருவுரு ஒன்றின் முன்னர் பலியிடப்படலாம் என்ற கருத்துடன் அல்லது பலியிடப்படக்கூடும் என அறிந்து இலங்கையிலிருந்து "க" வை "அ" கவர்ந்து செல்லுகிறார். இப்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்ட தவறினை "அ" புரிந்துள்ளார்.*

*(ஆ) "ஆ" கொலை செய்யப்படக் கூடியவராயிருப்பதற்கென "ஆ"வை அவருடைய வீட்டிலிருந்து "அ" வலோற்காரமாகக் காவிச் செல்லுகின்றார், அல்லது கவர்ந்து செல்லுகிறார். இப்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்ட தவறினை "அ" புரிந்துள்ளார்.*

**356.** எவரேனுமாளை அவ்வாள் இரகசியமாகவும் முறைகேடாகவும் அடைத்துவைக்கப்படுதலைப் பெறும் கருத்துடன் கவர்ந்து செல்லும் அல்லது கடத்திச் செல்லும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

ஆளொருவரின் ரகசியமானவும் முறைகேடாகவும் அடைத்து வைக்கும் கருத்துடன் ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணை அவளின் திருமணம் முதலியவற்றை கட்டாயப்படுத்த ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல்

**357.** பெண்ணின் விருப்புக்கெதிராக ஆளெவரையே னும் திருமணம் செய்ய அவள் கட்டாயப்படுத் தப்படலாம் என்னும் கருத்துடன் அல்லது அவள் கட்டாயப்படுத்தப்பட நேரக்கூடும் என்ற அறிவு டன் அல்லது கள்ளமான உடலுறவுக்கு அவளை வலோற்காரப்படுத்த அல்லது மருட் டக் கூடிய தாயிருப்பதற்கு அல்லது கள்ளமாக உடலுறவுக்கு அவள் வலோற்காரப்படுத்தப்பட அல்லது மருட்டப்பட நேரக்கூடுமென அறிந்து எவரேனும் பெண்ணைக் கவர்ந்து செல்லும் அல்லது கடத்தி செல்லும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொருவகை மறியலி னால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண் டும்

கடும் காயம், அடிமைத் தொழில் முதலியவற் றுக்கு உட்படுத்து வதற்கென ஆட் கடத்தல் அல்லது கவர்தல்

**358.** எவரேனுமாளை, கடுங்காயத்திற்கு அல்லது அடிமைத் தொழிலிற்கு அல்லது ஆள் எவர தும் இயற்கைக்கு முரணான காமஇச்சைக்கு அவ்வாள் உட்படக் கூடியதாக இருப்பதற் கென அல்லது உட்படுத்தப்படும் அபாயத் துள் இருக்கும் வகையில் அவ்விதம் கையா ளப்படுவதற்கென, அத்தகைய ஆள் அவ் விதம் உட்படுத்தப்பட அல்லது கையாளப்பட நேரக்கூடுமென அறிந்து கவர்ந்து செல்லும் அல்லது கடத்திச் செல்லும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொருவகை மறியலி னால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

தனிச்சுத்தளை பிணிப்பு, வலோத்கார அல்லது கட்டாய ஊழியம், அடிமைத்தனம் அத்துடன் ஆயுதந் தாங்கிய போராட்டத்திற்காக பிள்ளைகளின் ஆட்திரட்டல் பி7,2006இன்16

**358அ(1)** (அ) எவரேனும் ஆளை தனிசுத் தளை அல்லது பிணிப்புக்கு உட்படுத்துகின்ற அல்லது உட்படுத்துவிக்கின்ற

(ஆ) எவரேனும் ஆளை வலோற்கார அல்லது கட்டாய ஊழியத்துக்குட்படுத்துகின்ற அல்லது உட்படுத்துவிக்கின்ற

(இ) எவரேனும் ஆளை அடிமைத்துவத்துக்கு உட்படுத்துகின்ற அல்லது உட்படுத்துவிக்கின்ற அல்லது

(ஈ) ஒரு பிள்ளையை ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் ஈடுபடுத்துகின்ற அல்லது அதில் பயன்படுத்தப்படுவதற்கென ஆட்திரட்டுகின்ற,

ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ)அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆளெவரும் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கும் குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும். (1)ஆம் உட்பிரிவின் (அ),(ஆ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் தவறுபுரியப்படுமிடத்து, முப்பது ஆண்டு களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்ட னைக்கும் அத்துடன் குற்றப்பண மொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவில்:-

"தனிசுத்தளை என்பது, தனிசொன் றுக்குப் பிணைப்பொறுப்பாக கடனாளி யொருவரின் அல்லது அவரது கட்டுப் பாட்டின் கீழுள்ள ஆளொருவரின் தனிப் பட்ட சேவைகளின், நியாயமாகக் கணிப்பீடு செய்யப்பட்டதான பெறுமதி தனிசை ஈடுசெய்து தீர்க்காதும் அத்து டன் அச்சேவைகளின் காலஅளவும் தன் மையும் வரைவிலக்கணப்படுத்தல் படா தும் இருப்பின், அச்சேவைகள் தனிசுக் கான பிணைப்பொறுப்பாக கடனாளி யால் உறுதியளிக்கப்பட்டதிலிருந்து எழும் கடனாளியொருவரின் நிலைவரம் அல்லது நிலைமை எனப் பொருள் படும்

"வலோத்கார அல்லது கட்டாய ஊழியம்" என்பது-

(அ) முற்றிலும் இராணுவ இயல்பினதான வேலையை அல்லது சேவையை கட்டாய இராணுவ சேவைத் தொடர்பில் அப்போதைக்கு வலு விலுள்ள ஏதேனும் சட்டத்தின் பயனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பெறப்படும் ஏதேனும் வேலையை அல்லது சேவையைப்

(ஆ) முற்றிலும் தன்னாட்சி கொண்ட நாட்டின் பிரசைகளின் சாதாரண குடியியற் கடப்பாடு களின் பாகமாக அமையும் ஏதேனும் வேலையை அல்லது சேவையை

(இ) வேலை அல்லது சேவை பகிரங்க அதிகார சபை யொன்றின் மேற்பார்வையின் கீழ் கட்டுப் பாட்டின் கீழும் மேற்காள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட ஆள் தனியாட் களுக்கு அல்லது தனியார் கம்பனிகளுக்கு அல்லது கழகங்களுக்கு வாடகைக்கு விடப் பட்டவராக அல்லது அவர்களின் அல்லது அவற்றின் பயன்பாட்டிற்கு விடப்பட்டவராக இருத்தலும் ஆகாது என்பதற்கிசைய, நீதி மன்றமொன்றினால் விதிக்கப்பட்ட தண்டனை யொன்றாக எவரேனும் ஆளிடமிருந்து பெறப் பட்ட ஏதேனும் வேலையை அல்லது சேவையை

(ஈ) அவசரகால நிலைமையின் விடயங்களில், அதாவது போர் அல்லது தீ, வெள்ளம், பஞ் சம், பூகம்பம், கொடிய விலங்குத் தொற்று நோய்கள், விலங்கினத்தின், பூச்சிகளின் அல் லது காய்கறிப் பீடைகளின் முற்றுகைப் பேரி டர் அல்லது அச்சுறுத்தும் பேரிடர் போன்ற விடயத்திலும் அத்துடன் பொதுவில் முழுக் குடிசனத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் ஆபத்து விளைவிக்கும் ஏதேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையில் பெறப்படும் ஏதேனும் வேலையை அல்லது சேவையைப்

(உ) சிறியசேவையை சமுதாயத்தின் உறுப்பினர் கள் அல்லது அவர்களது நேரடிப்பிரதிநிதி கள் அத்தகைய சேவைகளுக்கான தேவை தொடர்பாக கலந்தாலோசிக்கப்படுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டு மென்பதற்கிசைய, ஒரு சமுதாயத்தின் நேரடி நலனுக்கு என சொல்லப் பட்டசமுதாயத்தின் உறுப்பினர்களால் புரியப்படுவதும் அதன் மூலம் சமுதாய உறுப்பினர்கள் மீது சுமத்தப் பட்ட சாதாரண குடியியல் கடப்பாடு களாகக் கருதப்படுபவையுமான ஒரு வகை யினவான அத்தகைய சிறிய சேவையை,

தவிர ஏதேனும் தண்டத்தின் அச்சுறுத்தலின் கீழ் ஆளொருவரிடமிருந்து பெறப்பட்டதும் அதனைச் செய்வதற்கு அத்தகைய ஆள் தன்னிச்சையாக முன்வராததுமான ஏதேனும் வேலை அல்லது சேவை என்று பொருள்படும்

"பிணிப்பு" என்பது, வேறோர் ஆளுக்குரிய காணியில் வசிப்பதற்கும் ஊழியம் செய்வதற் கும் சன்மானத்திற்காயினுஞ் சரி அல்லாவிடி னுஞ்சரி ஏதேனுமொரு நிர்ணயிக்கப்பட்ட சேவையை அத்தகைய வேறு ஆளுக்கு வழங்குவதற்கு சட்டத்தால், சழக்காறல் அல் லது உடன்படிக்கையால் பிணிக்கப்பட்டவரும் அவரது நிலைவரத்தை மாற்றுவதற்குச் சுதந் திரமில்லாத வருமான வாடகையாளர் ஒருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் நிலைமை அல்லது நிலைவரம் என்று பொருள்படும்

"அடிமைத்துவம்" என்பது, எந்த ஆளின் மீது சொந்தத்தின் உரிமை சார்ந்த தத்துவங்கள் எவையும் அல்லது அனைத்தும் பிரயோகிக் கப்படுகின்றனவோ அந்த ஆளொருவரின் நிலை வரம் அல்லது நிலைமை என்று பொருள்படும் அத்துடன்

"பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.

359. ஆளெவரேனும் கவரப்பட்டுள்ளார் அல்லது கடத்தப்பட்டுள்ளார் என அறிந்து கொண்டு, அத்தகைய ஆளை முறைகேடாக மறைத்து வைக்கும் அல்லது அடைத்து வைக்கும் எவ ரும், அவர் எக்கருத்துடன் அல்லது அறிவுடன் அல்லது எந்நோக்கத்திற்காக அத்தகைய ஆளை மறைத்து வைத்தாரோ, அடைத்து வைத் தாரோ அக்கருத்துடன் அல்லது அறிவுடன் அல்லது அந்நோக்கத்திற்காகக் கவர்ந்து சென்றால் போன்று அல்லது கடத்திச் சென் றால் போன்று அதே முறையாகத் தண்டிக் கப்படல் வேண்டும்.

கவர்ந்து செல்லப்பட் ஆளை முறைகேடாக அடைத்து வைத்தல் அல்லது மறைத்து வைத்தல்

360. பத்து வயதிற்குட்பட்ட பிள்ளையொன்றை, அத் தகைய பிள்ளையின் உடம்பிலிருந்து ஏதே னும் அசைவுள்ள ஆதனத்தை நேர்மையின்றி எடுக்கும் கருத்துடன் கவர்ந்து செல்லும் அல்

பத்து வயதுக் குட்பட்ட பிள்ளை ஒன்றை, அத்தகைய பிள்ளையின் உடம்பிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை களவாடும் கருத்துடன் கவர்தல் அல்லது கடத்தல்

லது கடத்திச் செல்லும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

கூட்டிக் கொடுத்தல் பி7,1995 இன்22

**360அ**.(1) எத்தகைய வயதினராகிய ஆளெவரையும், அவர் ஆணாக இருந்தாலென்ன, பெண்ணாக இருந்தாலென்ன, அவர் இலங்கைக்குள் அல்லது வெளியே விலைமகன் ஒருவராக அல்லது விலைமகள் ஒருவராக அத்தகைய ஆளினுடைய சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ வருவதற்கு உதவிபுரியும் அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற.

(2) பதினாறு வயதுக்குக் குறைந்த ஆளெவரும், இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளுடன் சட்டவிரோதமாக உடலுறவு கொள்வதற்கு (அத்தகைய ஆளினுடைய சம்மதத்துடன் இருந்தாலும் சரி, சம்மதம் இல்லாமல் இருந்தாலும் சரி) இலங்கையை விட்டு வெளியே செல்வதற்கு உதவிபுரிகின்ற அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற அல்லது, சொல்லப்பட்ட நோக்கத்துக்காக அத்தகைய எவரேனும் ஆளை (அத்தகைய ஆளின் சம்மதத்துடன் இருந்தாலும் சரி,சம்மதம் இல்லாமல் இருந்தாலும் சரி) இலங்கை யிலிருந்து அகற்றிச் செல்கின்ற அல்லது அகற்றிச் செல்ல எத்தனிக்கின்ற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) எத்தகைய வயதினராகிய ஆளெவரையும் (அத்தகைய ஆளின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமில்லாமலோ) வேறு எங்காகிலுமுள்ள விபசாரவிடுதியொன்றில் அத்தகைய ஆள் உடனுறைபவராக வருவதற்கான அல்லது அத்தகைய ஆள் அத்தகைய விபசார விடுதிக்கு விஜயம் செய்வதற்கான முன்னத்துடன் இலங்கையைவிட்டுச் செல்ல உதவி புரிகின்ற அல்லது உதவிபுரிய எத்தனிக்கின்ற அல்லது சொல்லப்பட்ட நோக்கத்துக்காக அத்தகைய ஆள் எவரையும் (அவருடைய சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ) இலங்கையிலிருந்து அகற்றிச் செல்கின்ற அல்லது அகற்றிச் செல்ல எத்தனிக்கின்ற.

(4) பதினாறு வயதுக்குக் குறைந்த வயதுடைய ஆளெவரையும், அவர் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே வேறு எவரேனும் ஆணுடன் சட்டவிரோதமாக உடலுறவு கொள்ளும் நோக்கத்துடன் இலங்கைக்குள் கொண்டு வருகின்ற அல்லது கொண்டுவர எத்தனிக்கின்ற,

(5) எத்தகையவயதுடையவருமான ஆளெவரும் (அத்தகைய ஆளின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ) இலங்கைக்குள்ளாக அல்லது இலங்கைக்கு வெளியே சட்டவிரோதமான உடலுறவு கொள்ளும் நோக்குடன் இலங்கையிலுள்ள அத்தகைய ஆளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையான வசிப்பிடத்தைவிட்டு செல்வ தற்கு உதவி புரிகின்ற அல்லது உதவிபுரிய எத்தணிக்கின்ற

பி 5, 1998இன் 29

(6) ஆளெவரையும் அத்தகைய ஆளின் சம்மத மின்றி எவையேனும் வளவுகளில் சட்ட விரோத உடலுறவு கொள்ளும் அல்லது பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் நோக்குடன் தடுத்து வைக்கின்ற.

ஆளெவரும், கூட்டிவிடுதல் என்ற தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டு ஆண்டுக ளுக்குக் குறையாத, பத்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணமொன்றுடனும் தண்டிக்கப்படலாம்."

குழந்தை விபச்சாரம்
பி 8, 1995இன் 22

**360ஆ** (1)(அ)ஏதேனும் குழந்தையை, அக் குழந்தை யைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்விக் கின்ற அல்லது ஏதேனும் விதமான பாலியல் செயலில் அல்லது ஊதேனும் ஆபாசமான அல்லது இழிவான கண்காட்சியில் அல்லது காட்சியில் பங்குபற்றச் செய்விக்கின்ற நோக் கங்களுக்கென அக்குழந்தையை எவையே னும் வளவுகளுக்குள் பிரவேசிக்க அல்லது தங்கியிருக்க, வேண்டுமென்றே அனுமதிக் கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) பாலியல் உடலுறவின் நோக்கங்களுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ் பிரயோகத்திற்கு குழந்தையொன்றைக் கூட்டி வருபவராகச் செயல்படுகின்ற

(இ) அச்சுப்பிரதி அல்லது வேறு தொடர்பு சாதன ங்கள், வாய்மொழி விளம்பரங்கள் அல்லது அதேபோன்ற வேறுவழிகள் மூலம் பாலியல் உறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலி யல் துஷ்பிரயோகத்துக்கு குழந்தையொன் றின் வாடிக்கையாளர் ஒருவராக இருக்க ஆணொருவரைத் தூண்டிவிடுகின்ற

(ஈ) அத்தகைய குழந்தையை பாலியல் உடலுற வுக்கு அல்லது ஊதேனும் விதமான பாலி யல் துஷ்பிரயோகத்திற்குக் கூட்டி விடுவதற்கு, அத்தகைய குழந்தை மேல் தமக்குள்ள செல் வாக்கை அல்லது அக்குழந்தையிடம் தமக் குள்ள உறவை அனுகூலமாகப் பயன்படுத்து கின்ற

(உ) ஒரு குழந்தையை பாலியல் உடலுறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ் பிரயோகத்திற்குக் கூட்டிவிடுவதற்காக அக் குழந்தையைப் பயமுறுத்துவதன் மூலம் அல் லது அதன் மீது வன்முறை உபயோகிக் கின்ற அல்லது

(ஊ) ஒரு குழந்தையை பாலியல் உடலுறவுக்கு அல்லது ஏதேனும் விதமான பாலியல் துஷ் பிரயோகத்திற்குக் கூட்டிவிடும் முன்னத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய குழந்தைக்கு அல்லது அதன் பொற்றோருக்குப் பணம், பொருட்கள் அல்லது வேறு நன்மை கொடுக்கின்ற

ஆளெவரும், குழந்தை விபச்சாரத் தவறு புரிகின்றார் என்பதுடன், அவர் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன் மேல், ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப் பணத்துடன் தண்டிக்கப்படலாம்.

(2) இப்பிரிவில் "குழந்தை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

விலைப்படுத்தல்
பி8, 2006இன் 16

**360இ (1) எவ்வாள்-**

(அ) பணத்திற்காக அல்லது வேறு ஏதேனும் பிரதிப்பயனுக்காக வேறோர் ஆளை வாங்குகின்றாரோ விற்பனை செய்கின்றாரோ அல்லது பண்டமாற்றுச் செய்கின்றாரோஅல்லது எவரேனும் ஆளை வாங்குவதற்கு, விற்பதற்கு அல்லது பண்டமாற்றுச் செய்வதற்குத் தூண்டுகின்றாரோ அல்லது எவரேனும் ஆளை வாங்குவதனை, விற்பதனை அல்லது பண்டமாற்றுச் செய்வதனை ஊக்குவிப்பதற்கு, வசதியளிப்பதற்கு அல்லது தூண்டுவதற்கு எதனையும் செய்கின்றாரேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) எவரேனும் ஆளை வலோத்காரமான அல்லது கட்டாய ஊழியத்தை அல்லது சேவைகளைப் பெறுகின்ற அல்லது அடிமைத்துவத்தின், சேவ கத்தின், உறுப்புகளை அப்புறப்படுத்துத லின், விபச்சாரத்தின் அல்லது வேறு விதங்க ளிலான பாலியற் பயன்நுகர்வின் அல்லது ஏதே னும் சட்டத்தின் கீழ்த் தவறொன்றாக அமை கின்ற வேறேதேனும் செயலின் நோக்கத்திற் காக ஆட்திரட்டுகின்றாரோ, ஏற்றிச் செல்லுகின் றாரோ, இடமாற்றுகின்றாரோ, அடைக்கலமளிக் கின்றாரோ அல்லது ஏற்றுக்கொள்ளுகின்றாரோ அல்லது அச்சுறுத்தலை, வலுக்கட்டாயத்தை, மோசடியை, ஏமாற்றுதலை அல்லது தூண்டு தலைப் பயன்படுத்தி அல்லது மற்றவரின் பலிக் குட்படுத்தும் தன்மையைப் பயன்நுகர்வதன் மூலம் வேறேதேனும் செயலைச் செய்கின் றாரோ அல்லது

(இ) பிள்ளையொன்றை அத்தகைய பிள்ளையின் சம்மதத்துடனாயினுஞ்சரி சம்மதமில்லா மலா யினுஞ்சரி, வலோத்காரமான அல்லது கட் டாய ஊழியத்தை அல்லது சேவைகளைப் பெறுகின்ற அல்லது அடிமைத்துவத்தின், சேவகத்தின் அல்லது உறுப்புகளை அப் புறப்படுத்துதலின், விபச்சாரத்தின் அல்லது வேறு விதங்களிலான பாலியற் பயன்நுகர் வின் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ்த் தவறொன்றாக அமைகின்ற வேறேதேனும் செயலின் நோக்கத்திற்காக ஆட்திரட்டுகின் றாரோ, ஏற்றிச் செல்லுகின்றாரோ, இடமாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றாரோ, அடைக்கலமளிக்கின்றாரோ அல்லது ஏற்றுக்கொள்ளுகின்றாரோ அல்லது வேறு ஏதேனும் செயலைச் செய்கின்றாரோ,

அவ்வாள் விலைப்படுத்துதல் என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) விலைப்படுத்துதல் என்னும் தவறுக்குக் குற்றவாளியாகும் ஆளெவரும் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன் மேல் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்குஇரு வகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப் பணத்துடன் தண்டிக்கப்படலாம். அத்துடன் அத்தகைய தவறு ஒரு பிள்ளை தொடர்பில் புரியப்படுமிடத்து, மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப் பணத்துடன் தண்டிக்கப்படலாம்.

(3) இப்பிரிவின்-"பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்

"வலோத்கார அல்லது கட்டாய ஊழியம்" என்பது, 358அ என்னும் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடிமைத்துவம்" என்பது,358அ என்னும் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும் அத்துடன்

"மற்றவரின் பலிக்குட்படுத்தும் தன்மையைப் பயன்நுகர்தல்" என்பது, ஆளொருவர் வேறொருவரை அத்தகைய வேறு ஆளின் பொருளாதார, கலாச்சார அல்லது வேறு சூழ்நிலைகளைச் சாதகமாக்கிக் கொள்வதன் மூலம் ஏதேனும் செயலுக்கு அடிபணியுமாறு நிர்ப்பந்தித்தல் என்று பொருள்படும்.

**360ஈ** எவரேனும் ஆளை மகவேற்புக்காக வைத்திருக்கும் நோக்கத்திற்கென - மகவேற்புத் தொடர்பிலான குற்றங்கள் பி9,2006இன்16

(i) பிள்ளையொன்று அதன் பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதமின்றி வெளிநாடொன்றுக்குப் பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்கின்ற அல்லது துணை புரிகின்ற

(ii) கர்ப்பம் தரித்திருக்கும் பெண் ஒருவரிடமிருந்து அத்தகைய பெண்ணின் இன்னமும் பிறக்காத பிள்ளையை பணத்துக்காக அல்லது வேறு பிரதிபயனுக்காக மகவேற்பு செய்வதற்காக அவரது சம்மதத்தை எழுத்திலாயினுஞ்சரி வாய் மூலமாயினுஞ்சரி பெறுகின்ற

(iii) குழந்தைகள் பெறுவதற்கென ஒரு பெண்ணை அல்லது ஆண், பெண் சோடியொன்றை அமர்த்துகின்ற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) பிறப்புக்கள் பதிவுடன் தொடர்புபட்ட ஆள் ஒரு வராக இருந்து கொண்டு பிறப்புகளைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதே னும் இடாப்பை ஏதேனும் அத்தகைய இடாப் பில் இடங்கியுள்ள ஏதேனும் பிறப்புப் பதிவை தெரிந்துகொண்டே பொய்ப்புனைதலை அனு மதிக்கின்ற

(எ) பணத்திற்காக அல்லது வேறு பிரதி பயனுக் காக ஆசுப்பத்திரிகளிலிருந்து, பெண்கள் புக லிடங்களிலிருந்து, சிகிச்சை நிலையங்களி லிருந்து, வளர்ப்பு நிலையங்களிலிருந்து, பகற்கவனிப்பு நிலையங்களிலிருந்து அல்லது வேறு பிள்ளைப் பராமரிப்பு நிறுவனங்களி லிருந்து அல்லது நலம் பேணல் நிலையங் களிலிருந்து பிள்ளைகளைப் பெறுவதில் ஈடு படுகின்ற அல்லது தாயை அல்லது வேறு எவரேனும் ஆளை மிரட்டுவதன் மூலம் அத்த கைய ஏதேனும் நிறுவனத்திலிருந்து அல்லது நிலையத்திலிருந்து மகவேற்புக்காக பிள்ளை யொன்றைப் பெறுகின்ற அல்லது

(vi) தாயை ஆள்மாறாட்டம் நெய்கின்ற அல்லது அத்தகைய ஆள்மாறாட்டத்திற்கு உதவி செய் கின்ற,

எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன் மேல் இருபது ஆண்டுகளை விஞ்சா ததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையி லொருவகை மறியற்றண்டனையால் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றப்பணத்தால் அல்லது அத்தகைய மறியற்றண்டணை, குற்றப்பணம் ஆகிய இரண்டாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்

(2) இப்பிரிவில் "பிள்ளை" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.

**360உ** (1)இலங்கைக்குள் ஆயினுஞ்சரி, இலங்கைக்கு வெளியிலிருந்தாயினுஞ் சரி எத்தன்மையதுமான வழிமுறையினால் - பிள்ளை யொன்றைப் பரிந்து கேட்டல் பி9 2006 இன் 16

(அ) பதினெட்டு வயதுக்குக் குறைவான ஆளொருவரை அல்லது

(ஆ) எவரேனும் ஆள் பதினெட்டு வயதுக்குக் குறைவானவர் என நம்பி அத்தகைய ஆளை,

பிள்ளையொன்றின் பாலியல் துஷ்பிரயோகத்தின் நோக்கத்துக்காக பரிந்துகேட்கின்ற எவரும், பிள்ளையொன்றின் பரிந்துகேட்கும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டணை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்".

பிரிவுகள் 361, 362 நீக்கப்பட்டுள்ளன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணொருவர் சட்டமுறையாக திருமணம் செய்துள்ளதாக நம்பிக்கையை வஞ்சனையால் தூண்டுவதன் மூலம் உண்டாகும் மனை வாழ்க்கை

**362.அ.** தம்மைச் சட்டப்படி மணஞ்செய்யாத பெண்ணொருத்தியைத் தம்மைச் சட்டப்படியாக அவர் மணத்துள்ளார் என வஞ்சனையால் நம்ப வைத்து அந்நம்பிக்கையின் காரணமாகத் தம்முடன் மனை வாழ்க்கை மேற்கொள்ள அல்லது பாலுறவு கொள்ளச் செய்யும் ஆண் ஒவ்வொருவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

கணவனோ மனைவியோ உயிருடன் இருக்கும் போது வேறு மணம்புரிதல்

**362ஆ.** கணவன் அல்லது மனைவி உயிருடனிருக்குமெவரும், அத்தகைய கணவனோ மனைவியோ உயிருடனிருக்கும் காலத்தில் நிகழ்கின்றது என்ற காரணத்தால் அத்தகைய திருமணம் வெற்றானதாகின்ற எவ்விடயத்திலும் திருமணம் செய்து கொண்டால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

விதிவிலக்கு : அத்தகைய கணவனுடன் அல்லது மனைவியுடனான அவரது திருமணம் தகுதி வாய்ந்த நியாயாதிக்கம் வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் வெற்றானதென எடுத்துக் கூறப்பட்டிருக்கின்ற, அல்லது முன்னைய கணவனோ மனைவியோ உயிருடனிருக்கும் காலத்தில், அத்தகைய பின்னைய திருமணத்தின் நேரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் தொடர்பாக ஏழு ஆண்டு காலத்திற்கு அத்தகைய ஆளிடமிருந்து பிரிந்தும் அத்த கைய காலத்தினுள் அவர் உயிருடனிருக்கிறார் என்பது பற்றி அத்தகைய ஆளிடமிருந்து அறி யப்படா மலுமிருப்பின் திருமணம் ஒன்றைச் செய்துகொள்கின்ற ஆளெவர்க்கேனும் இப் பிரி வில் விரிவுடையதாகாது.

எனினும், அத்தகைய பின்னைய திருமணம் செய்யும் ஆள் திருமணம் நடைபெறும் முன்னர், அவரது அல்லது அவளது அறிவுக்கெட்டிய வரையில், உண்மையான நிலை பற்றி, எவரு டன் தாம் திருமணம் செய்கிறாரோ அவருக்கு எடுத்துக் கூறுதல் வேண்டும்.

**362இ.** தாம் பின்னர் திருமணம் செய்து கொள்ளும் ஆளுக்கு, தமது முன்னைய திருமணம் பற்றி மறைத்து இறுதியாக முற்போந்த பிரிவில் விபரிக்கப்பட்ட தவறினை புரியும் எவரும் பத்து ஆண்டுகள்-

தாம் பின்னர் திருமணம் செய்துகொள்ளும ஆளுக்கு தமது முன்னைய திருமணம் பற்றி மறைத்துப் புரியும் தவறு.

வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப் படுதல் வேண்டும் என்பதோடு குற்றப் பணத் திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

**362.ஈ.** அவ்விதம் செய்து கொள்வதால் தாம் சட்ட முறையாக திருமணம் செய்து கொள்ளவில்லை என அறிந்துகொண்டு நேர்மையீனமாக அல் லது மோசடியான கருத்துடன் திருமணம் செய்து கொள்ளும் சடங்கினை நடாத்துவிக்கும் எவரும்

சட்டமுறையான திருமணம் இன்று மோசடியாக கருத்துடன் திருமணச் சடங்கு மேற்கொள்ளப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

## கற்பழிப்பும் முறையில்லாப் புணர்ச்சியும்

கற்பழிப்பு
பி 12 1995
இன் 22)

**363.** ஆண் ஒருவர் பின்வரும் விவரணங்களுள் எதன் கீழும் அடங்கும் சந்தர்ப்பங்களின்கீழ் பெண் ணொருவருடன் பாலுறவு கொண்டால் அவர் "கற்பழிப்பு" தவறைப் புரிந்தவராகச் சொல்லப் படுவார்.

(அ) சட்டரீதியில் பிரிந்திருகையில் அவளது சம் மதமில்லாமல் அத்தகைய பெண் அவரது மனைவியாக இருக்குமிடத்தும் கூட.

(ஆ) அவள் சட்ட முறையாக அல்லது சட்டமுறை யற்ற விதத்தில் தடுத்து வைக்கப்படும்போது அவளது சம்மதத்துடன் அல்லது வலோத் காரத்தை அல்லது மிரட்டலை உபயோ கித்து அல்லது தடுத்து வைக்கப்படுதல் என்ற பயமுறுத்தல் மூலம் அல்லது மரணம் அல்லது ஊறு விளைவிக்கப்படும் என்ற பயத்திற்கு அவளை உட்படுத்துவதன் மூலம் அவளின் சம்மதம் பெறப்பட்டிருக்கும் போது.

(இ) அவளது சம்மதத்துடன், அவளது சம்மதமா னது அவள் சித்தசுவாதீனம் அற்றவளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற நேரத்தில் அல்லது அந்த ஆளினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் அவளுக்குக் கொடுக்கப்பட்ட மதுசாரத்தின் மூலம் அல்லது மருந்துகளின் மூலம் ஊக்குவிக்கப்பட்ட மதுபோதை நிலையில் அவள் இருக்கும் போது அவளால் கொடுக்கப்பட்டிருந்தால்.

(ஈ) அவளது சம்மதத்துடன் ஆணுக்கு அவர் அவளின் கணவனல்ல என்று தெரிந்து கொண்டும் அத்துடன் அவள் தான் சட்டபூர்வமாக திருமணம் செய்துள்ள அல்லது செய்துள்ளதாக நம்பப்படும் வேறொரு ஆள் என்று நம்பிக்கொண்ட காரணத்தால் சம்மதம் கொடுக்கப்பட்டிருந்தால்.

(உ) அவனது மனைவியாகிய அப்பெண் 12 வயதுக்கு மேற்பட்டவராகவும் அவனிடமிருந்து சட்டரீதியாக பிரிந்திருந்தாலுமன்றி, பெண்ணின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ அவள் பதினாறு வயதிற்குக் குறைந்தவளாக இருக்கும்போது.

விளக்கம்

(i) கற்பழிப்புத் தவறிற்கு அவசியமான பாலுறவாக அமைவதற்கு யோனியில் உட் செலுத்தப்பட்டிருத்தல் போதுமானதாகும்.

(ii) பாலுறவானது சம்மதம் இல்லாமல் இடம் பெற்றது என்பதை நிரூபிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் ஏற்பட்ட வெளிக்காயங்கள் போன்ற எதிர்ப்புக்கான சான்று அவசிய மானதல்ல''.

தண்டனை
பி13,1995
இன் 22

**364. (1)** கற்பழிப்புத் தவறு ஒன்றைப் புரிகின்ற ஆளெவரும், (2) ஆம் (3) ஆம் உட் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட விடயங் களில் தவிர, ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான ஒரு காலப் பகு திக்கு கடூழிய மறியற்றண்டனையினா லும் குற்றப்பணத்தினாலும் தண்டிக் கப்படுதல் வேண்டும். அத்துடன் மேலும் எந்த ஆள் தொடர்பாகத்தவறு புரியப் பட்டதோ அத்தகைய ஆளுக்கு விளை விக்கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத் தினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகை யினதான நட்டஈட்டைச் செலுத்துமாறு கட்டளையிடப்படுதலும் வேண்டும்.

(2) (அ) ஒரு பகிரங்க அலுவலராக அல்லது ஓர் அதிகார நிலையிலுள்ள ஆளாக அவரது அலுவலக நிலையைச் சாதகமாக பயன்படுத்தித் தனது அலுவலகக் கட்டுக்காப்பிலுள்ள ஒரு பெண்மீது கற்பழிப்புப்புரிகின்ற அல்லது தவறாகத் தடுத்து வைத்து ஒரு பெண்மீது கற்பழிப்புப் புரிகின்ற,

(ஆ) ஒரு விளக்கமறியல் வீட்டில் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வேறு கட்டுக்காப்பு இடங்களில் அல்லது பெண்கள் அல் லது பிள்ளைகள் நிறுவனம் ஒன்றின் முகாமையிலிருந்து அல்லது பணியாட் டொகதியில் இருந்து, தனது நிலை மையை சாதகமாகப் பயன்படுத்தி அத் தகைய விளக்கமறியல் வீட்டில், இடத் தில் அல்லது நிறுவ னத்தில் உடன் வசிக்கும் எவரேனும் பெண்மீது கற் பழிப்புப் புரிகின்ற,

(இ) ஒரு வைத்தியசாலையின் முகாமை யிலிருந்து அல்லது பணியாட்டொகுதி யிலிருந்து, தனது நிலைமையை சாத கமாகப் பயன்படுத்தி அவ்வைத்திய சாலையிலுள்ள ஒரு பெண்மீது கற் பழிப்புப் புரிகின்ற,

(ஈ) ஒரு பெண் கர்ப்பமாகவிருக்கிறாள் என அறிந்து கொண்டு அவள்மீது கற்பழிப் புப் புரிகின்ற,

(உ) பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஒரு பெண்மீது கற்பழிப்புப் புரிகின்ற,

(ஊ) உடல்ரீதியாக அல்லது உளரீதியாக சுகவீனமுடைய ஒரு பெண்மீது கற் பழிப்புப் புரிகின்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எ) கூட்டமாகக் கற்பழிப்புப் புரிகின்ற,

- எவரேனும் ஆள், பத்து வருடங் களுக்குக் குறையாததும் அத்துடன் இருபது வருடங்களை விஞ்சாததுமான காலப்பகுதிக்கு கடூழியச் சிறைத் தண் டனையுடனும் அத்துடன் குற்றப்பணத் துடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிகமாக, எவர் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ, அவ ருக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக் காக நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப் படுகின்ற ஒரு தொகையை இழப்பீடா கச் செலுத்த வேண்டுமெனக் கட் டளையிடப்படுதலும் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், பதினாறு வய துக்குக் குறைந்த ஆளொருவர் தொடர் பில் தவறு புரியப்படுகின்ற விடத்து, நீதி மன்றமானது, தவறாளர் 18வயதுக்குக் குறைந்த ஓர் ஆளாக இருக்குமிடத்தும் அத்துடன் புணர்ச்சி அவ்வாளின் சம்ம தத்துடன் புரியப்பட் டிருக்கின்றவிடத் தும் பத்து ஆண்டுகளுக்குக் குறைவான காலப்பகுதிக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை விதித்தலும் வேண்டும்.

விளக்கம் 1

கற்பழிப்புத்தவறு, ஆட்களின் கூட்டமொன் றிலுள்ள ஓர் ஆளினால் அல்லது ஒன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கு மேற்பட்ட ஆட்களினால் புரியப்பட் டுள்ளவிடத்து, அத்தகைய தவறைப் புரி யும் அல்லது புரிய உடந்தையாயிருக் கும் அத்தகைய கூட்டத்திலுள்ள ஒவ்வோ ராளும் இவ்வுட்பிரிவின் கருத்தெல்லைக் குள் கூட்டமாகக் கற்பழிப்பு புரிந்துள்ளார் எனக் கருதப்படுதல்; வேண்டும்.

விளக்கம் 2

"பெண்களின் அல்லது பிள்ளைகளின் நிறுவனம்" என்பது எவ்விதத்திலும் விவ ரிக்கப்பட்ட பெண் அல்லது பிள்ளையை ஏற்றுக்கொண்டு பாராமரிப்பதற்கான ஒரு நிறுவனம் என்று பொருள்படும்.

விளக்கம் 3

"வைத்தியசாலை" என்பது, வைத்திய சாலையின் எல்லைக்குட்பட்ட பகுதி எனப் பொருள்படும் என்பதுடன் நோயிலிருந்து உடல்தேறும் காலத்திலுள்ள, ஆட்களை அல்லது வைத்திய கவனம் அல்லது மறு சீரமைப்புத் தேவைப்படும் ஆட்களை ஏற்று சிகிச்சையளிப்பதற்கான ஏதேனும் நிறுவ னத்தின் எல்லைப் பகுதியையும் உள்ள டக்குகிறது.

விளக்கம் 4

"ஊறுகள்" என்பது, உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும். பி10, 2006இன் 16

11157



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஒரு பெண்ணின்மீது கற்பழிப்புச் செய்கின்ற ஆளெவரும் அப்பெண் 364அ என்னும் பிரிவில் வரிசைப்படுத்திக் கூறப்படும் உறவுமுறைகளின் எவையேனும் தன்மைகளில் அந்த ஆளைச் சார்ந்திருக்குமிடத்து, அத்தகைய ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலப் பகுதிக்கு கடூழியசிறைத் தண்டனையாலும் அத்துடன் குற்றப்பணத்தாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படவேண்டுமென அவருக் குக்கட்டளையிடப்பட்ட நட்டவீட்டை எவரேனும் ஆள் செலுத்தத் தவறியிருக்குமிடத்து (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவர்மீது விதிக்கப்பட்ட மறியற்றண்டனைக்கு மேலதிகமாக இருவருடங்கள்வரை நீடிக்கப்படக் கூடிய மேலும் ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையிலான மறியற்றண்டனையால் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

முறையில்லா புணர்ச்சி (பி 15 1995 இன் 22)

**364அ.**(1) வரிசைப்படுத்திக் கூறப்படும் பின்வரும் உறவு முறைகளின் ஏதேனும் தன்மையில் அவரைச் சார்ந்திருக்கும் வேறோர் ஆளுடன், அதாவது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) இருதிறந்தனவர்களுள் ஒரு திறந்தவர் மற்ற வரின் நேரடிச் சந்ததி அல்லது மற்றவரின் சுவீ காரப் பெற்றோர், சுவீகாரப் பாட்டன், பாட்டி, சுவீகாரப்பிள்ளை அல்லது சுவீகாரப் பேரப் பிள்ளை, அல்லது

(ஆ) பெண், இனக்கலப்பில்லாமல் அல்லது ஓர ளவு இனக்கலப்பினால் அல்லது சுவீகாரத் தினால் ஆணின் சகோதரி அல்லது இனக் கலப்பில்லாமல் அல்லது ஓரளவு இனக் கலப்பினால் அல்லது சுவீகாரத்தினால் அவ ரது சகோதரனின் அல்லது சகோதரியின் மகள் அல்லது இருவருள் ஒருவரின் சந்ததி அல்லது வேறோர் தந்தையின் மூலம் அவ ரது மனைவியின் மகள் அல்லது தனது சொந்த மகனின் அல்லது பேரனின் அல்லது தந்தையின் அல்லது பாட்டனின் விதவை, அல்லது

(இ) ஆண் இனக்கலப்பில்லாமல் அல்லது ஓர ளவு இனக்கலப்பினால் அல்லது சுவீகாரத்தி னால் பெண்ணின் சகோதரன் அல்லது இனக் கலப் பில்லாமல் அல்லது ஓரளவு இனக் கலப்பினால் அல்லது சுவீகாரத்தினால் அவ ளது சகோதரனின் அல்லது சகோதரியின் மகன் அல்லது இருவருள் ஒருவரின் சந்ததி அல்லது வேறோரு தாயினால் அவளது கண வனின் மகன் அல்லது அவளது காலஞ் சென்ற மகனின் அல்லது பேத்தியின் அல் லது தாயின் அல்லது பாட்டியின் கணவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய எவருடனும் பாலியல் புணர்ச்சி கொள்ளு கின்ற ஆளெவரும் முறையில்லாப் புணர்ச்சி என்னும் தவறைப் புரிகின்றார்.

(2) முறையில்லாப் புணர்ச்சி என்னும் தவறானது, செல்லுபடியான ஒரு விவாகம் அல்லது சுவீகாரம் இல்லாமை போன்ற, இப்பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் உறவு முறையின் சட்டத்தன்மையில் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் பாதிக்கப் படுதலோ மறுக்கப்படுதலோ ஆகாது.

(3) (அ) முறையில்லாப் புணர்ச்சியைப் புரியும் ஆளெவரும் ஏழு ஆண்டுகளுக்குக் குறை யாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாதது மானவொரு காலப்பகுதிக்கு கடூழிய சிறைத் தண்டனையாலும் அத்துடன் குற்றப்பணத் தாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) முறையில்லாப் புணர்ச்சியைப் புரிய எத்தனிக்கின்ற ஆளெவரும் இரண்டு ஆண்டு களுக்கு நீடிக்கக் கூடிய இரு வகையி லொருவகை மறியற்றண்டனையால் தண் டிக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் தவறொன்றுக்கான வழக்கெது வும் சட்ட மா அதிபரின் எழுத்திலான வலு வளிப்புடன் தவிர தொடங்கப்படுதலாகாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கைக்குமாறான தவறுகளும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகமும்

பி16, 1995 இன் 22

**365.** எவரேனும் ஆணுடன் அல்லது பெண்ணுடன் அல்லது ஏதேனும் விலங்குடன் இயற்கை நியதிக்கு முரணாக வேண்டுமென்று உடலுறவு கொள்ளும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப்படத்துடனும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுடன் தவறானது பதின்னான்கு வயதுக்குக் குறைவான எவரேனும் ஆள் தொடர்பில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆள்ளொருவரால் புரியப்பட்டவிடத்து, பத்து ஆண்டுகளுக்கு குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப் பகுதிக்கு கடூழியச் சிறைத்தண்டைனையுடன் அத்துடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றின் இழப்பீடு ஒன்றை அத்தகைய ஆளுக்கு செலுத்துமாறு கட்டளையிடப்படுதலும் வேண்டும்.

இயற்கைக்கு மாறான தவறுகள் பி17.1995இன்22

விளக்கம் 1 : இப்பிரிவில் விபரிக்கப்பட்ட தவறாதற்குத் தேவையான உடலுறவாக அமைவதற்கு ஆண்குறி உட்செல்வதே போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி11, 2006 இன் 16

விளக்கம் 2 : -“ஊறுகள்” என்பது உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும்.

ஆட்களுக் கிடையில் மிக்க இழிவான செயல்கள்
பி18, 1995இன் 22

**365.அ.** பகிரங்கமாகவோ அல்லது தனிமையிலோ இன்னுமோர் ஆளுடன் மிக்க இழிவான செயலைப் புரிகின்ற அல்லது அதனைப் புரிவதில் ஒரு திறத்தவராக இருக்கின்ற அல்லது எவரேனும் ஆளினால் புரியப்படுவதைக் கூட்டிவைக்கின்ற கூட்டி வைக்க எத்தனிக்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் அவர் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் அல்லது குற்றப்பணத்துடன் அல்லது மறியத் தண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் தவறானது பதினாறு வயதுக்குக்குறைவான எவரேனும் ஆளுடன் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆளொருவரினால் புரியப்படுமிடத்து, அவர் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கு கடூழிய மறியத்தண்டனையுடனும் அத்துடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டை அவ்வாளுக்கு செலுத்துமாறு கட்டளையிடப்படவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் - "ஊறுகள்" என்பது, உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும்.

**365 ஆ** (1) பாலியல் அவா நிறைவுக்காக அவரது பிறப்புறுப்பை அல்லது மனித உடம்பில் வேறு ஏதேனும் பாகத்தை அல்லது ஏதேனும் சாதனத்தை வேறு எவரேனும் ஆளின் ஏதே னும் துவாரத்தில் அல்லது உடம்பில் ஏதேனும் பாகத்தில் பயன்படுத்தி பின்வரும் விவரணங்களின் கீழ்வரும் ஏதேனும் சந்தர்ப்பங்களில் அதாவது - பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் பி19 1995 இன் 22

(அ) மற்ற ஆளின் சம்மதமில்லாமல் பி7 1998இன் 29

(அஅ) மற்ற ஆளின் பதினாறு வயதுக்குக் குறைவாக இருக்கும்போது அவ்வாளின் சம்மதத்துடன் அல்லது சம்மதமில்லாமல்

(ஆ) அத்தகைய மற்ற ஆள் சட்ட முறையாக அல்லது சட்டமுறையற்ற விதத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் போது அவ்வாளின் சம்மதத்துடன் அல்லது அச்சம்பவமானது, வலோத்காரத்தை அல்லது மிரட்டலை அல்லது தடுத்து வைக்கப்படுதல் என்னும் பயமுறுத்தலை உபயோகப்படுத்துவதன் மூலம் அல்லது மரணம் அல்லது ஊறுவிளைவிக்கப்படும் என்னும் பயத்தை அத்தகைய மற்ற ஆளின் ஏற்படுத்துவதன் மூலம் பெறப்பட்டிருக்கின்ற பி7 1998இன் 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) மற்ற ஆளின் சம்மதத்துடன், அதாவது, மற்ற ஆள் சித்தசுவாதீன மற்றிருந்த நேரத்தில் அல்லது மதுசாரத்தால் அல்லது போதைப் பொருளினால் தூண்டிவிடப்பட்ட வெறி நிலை யிலிருந்த போது அத்தகைய சம்மதம் பெறப் பட்டு உள்ளவிடத்து

363 ஆம் பிரிவின் கீழ் கற்பழிப்பாக அமையாத செயலொன்றான ஏதேனும் செயலைப் புரிகின்ற ஆளெவரும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோ கத்தைப் புரிகின்றார்.

பி13 2006இன் 16

(2) (அ) பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்தைப் புரிகின்ற ஆளெவரும் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சா ததுமான ஒரு காலப்பகுதிக்கு கடுழிய மறியற் தண்டனையுடனும் அத்துடன் குற்றப்பணத்து டனும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட் டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப் பட்ட தொகையொன்றின் இழப்பீடு ஒன்றை அத் தகைய ஆளுக்குச் செலுத்துமாறு கட்டளை யிடப்படுதலும் வேண்டும்.

பி13 2006இன் 16

(ஆ) பதினெட்டு வயதுக்கு குறைந்த எவரேனும் ஆளின் மீது பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் புரியும் ஆளெவரும் ஏழு ஆண்டுகளுக்கு குறை யாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான வொரு காலப்பகுதிக்கு கடுழிய சிறைத் தண்ட னையுடனும் அத்துடன் குற்றப்பணத்துடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டிக்கப்படுதல் வேண்டும் அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகை யொன்றின் இழப்பீடு ஒன்றை அத்தகைய ஆளுக் குச் செலுத்துமாறு கட்டளை இடப்படுதலும் வேண்டும்.

விளக்கம் -"ஊறுகள்" என்பது உளவியல் அல்லது மனக்கிலேசத்தை உள்ளடக்கும். பி12, 2006இன் 16

## குறித்த சில தவறுகள் தொடர்பிலான விடயத்தை வெளியிடல்

பி20, 1995இன் 22

**365இ.**(1) இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் "பாதிப் புற்றவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் பிரிவு 345 அல்லது பிரிவு 360அ அல்லது பிரிவு 360ஆ அல்லது பிரிவு 363 அல்லது பிரிவு 364அ அல்லது பிரிவு 365 அல்லது பிரிவு 365அ அல்லது பிரிவு 365ஆ என்னும் பிரிவின் கீழ் எந்த ஆளுக்கெதிராக ஒரு தவறு சார்த்து ரைக்கப்பட்டதோ அல்லது குற்றம் புரிந்ததாகப் காணப்பட்டதோ அந்த எவரேனும் ஆளின் அடையாளத்தை அறியச் செய்யக்கூடியதாக பெயரை அல்லது ஏதேனும் விடயத்தை அச் சடிக்கும் அல்லது வெளியிடும் எவரேனும் ஒரு வர் இரண்டு ஆண்டுகளுக்குக் நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல்

குறித்த சில தவறுகள் தொடர்பிலான விவரத்தை வெளியிடல் பி21, 1995இன் 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதுடன், ஒரு குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ள எதுவும், பாதிப்புற்றவரின் அடையாளத்தை அறியச்செய்யும் பெயர் அல்லது ஏதேனும் விடயத்தை அச்சிடுதலுக்கு அல்லது வெளியிடுதலுக்கு அத்தகைய அச்சிடுதல் அல்லது வெளியிடுதல் பின்வருவோருக்குச் செய்யப்பட்டிருப்பின் ஏற்புடையதாதல் ஆகாது

(அ) அத்தகைய தவறைப் புலனாய்வு செய்கின்ற பொலிஸ் நிலையத்துக்குப்பொறுப்பான அலுவலரின் அல்லது அத்தகைய புலனாய்வு நோக்கத்திற்கு நல்லெண்ணத்துடன் செயலாற்றுகின்ற பொலிஸ் அலுவலரின் கட்டளையினால் அல்லது கட்டளையின் கீழ் அல்லது

(ஆ) பாதிப்புற்றவரின் எழுத்திலான அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்துடன் அல்லது

(இ) பாதிப்புற்றவரின் இறந்திருக்குமிடத்து அல்லது சித்தசுவாதீனமற்றவராக இருக்குமிடத்து பாதிப்புற்றவரின் அடுத்த உறவினரின் எழுத்திலான அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்துடன்,

ஆயின் அத்தகைய அதிகாரமெதுவும், அடுத்த உறவினரால் அரசினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நலன்புரி நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்பின் எவ்வாறேனும் விவரிக்கப்பட்ட தவிசாளர், செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது முகாமையாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்கு தரப்படக்கூடாது.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு தவறு தொடர்பாக, ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னரான அனுமதியின்றி, அத்தகைய நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு நடவடிக்கை தொடர்பில் ஏதேனும் விடயத்தை அச்சடிக்கும் அல்லது வெளியிடும் ஆளொருவரும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப் படக்கூடிய ஒருகாலப் பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

விளக்கம் - மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பை அச்சடித்தல் அல்லது வெளியிடுதல் இப்பிரிவின் கருத்தெல்லையினுள் ஒரு தவறாகக் கணிக்கப்படமாட்டாது.

## அத்தியாயம் XVII
## ஆதனம் பற்றிய தவறுகள்
### திருட்டு பற்றி

**366.** ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை எவரேனும் ஆளின் உடைமையிலிருந்து அவ்வாளின் சம்மதமில்லாமல் நேர்மையீனமாக எடுத்துக் கொள்ளும் கருத்துடன் அவ்விதம் எடுத்துக் கொள்வதற்காக அவ்வாதனத்தை அசைக் "திருட்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் எவரும் ''திருடு''வதாகச் சொல்லப்படும்.

விளக்கம் 1. ஒரு பொருள் அசைவுள்ள ஆதன மாயில்லாமல் நிலத்துடன் பிணக் கப்பட்டதாயிருக்கும் வரை திருடற் குரியதன்று; ஆனால் அது நிலத்தி லிருந்து பிரிக்கப்பட்டதும் திருடத் தகுந்தது ஆகின்றது.

விளக்கம் 2. பிரிவினை ஏற்படுத்தும் அந்த செய லினால் உண்டாகும் அசைவு திருட் டாகலாம்.

விளக்கம் 3. ஒரு பொருள் அசைவதைத் தடுத்து வைத்திருக்கும் தடை ஒன்றை அகற்றி விடுவதன் மூலம் அல்லது வேறு ஏதேனும் பொருளிலிருந்து பிரிப்பதன் மூலமும் உண்மையாகவே அதனை அசைப்பதன் மூலமும் ஆள் ஒருவர் ஒரு பொருளை அசைப்பதா கச் சொல்லப்படும்.

விளக்கம் 4. எவ்வகையாகவேனும் விலங்கொன்றை அசையச் செய்யும் ஆள் ஒருவர் அவ்விலங்கினை அசைப்பதாகவும் அவ்வித அசைவின் விளையவாக அந்த விலங்கினால் அசைக்கப் படும் ஒவ்வொரு பொருளையும் அசைப்பதாகவும் சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் 5. வரைவிலக்கணத்தில் குறிப்பிட்ட சம்மதமானது வெளிப்படையான தாகலாம் அல்லது உட்கிடையான தாகலாம். அத்துடன் அது உடைமையில் வைத்திருக்கும் ஆளினால் அல்லது அதற்கென வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரமுள்ள எவரேனும் ஆளினால் கொடுக்கவும் படலாம்.

**எடுத்துக்காட்டுக்கள்**

*(அ) கவின் சம்மதமில்லாமல் கவினுடைய உடைமையிலிருந்து நேர்மையீனமாக எடுக்கும் கருத்துடன் கவின் நிலத்திலுள்ள மரமொன்றை அ வெட்டுகிறார். இங்கே அவ்விதம் எடுத்தலின் பொருட்டு அ மரத்தினை நிலத்திலிருந்து வேறாக்கியதும் அவர் திருட்டினைப் புரிகிறார்.*

*(ஆ) நாய்களுக்கான ஓர் இரையை அ தனது சட்டைப்பையிலிருந்துவினுடைய நாயை அதனைப் பின்தொடர்ந்து வரும்படி தூண்டுகின்றார். இங்கே கவினுடைய சம்மதமின்றி கவின் உடமையிலிருந்து நேர்மையீனமாக அந்நாயை எடுத்துக்கொள்வது அ வின் கருத்தானால் கவினுடைய நாய் அவைப் பின்தொடரத் தொடங்கிய உடனேயே அ திருட்டினைப் புரிந்துள்ளார்.*

*(இ) பணப்பெட்டியொன்றைச் சுமந்துவரும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் எருதை அ சந்திக்கிறார். அப்பணத்தினை நேர்மையின்மையீனமாகத் தானெடுக்கலாமென்பதற்காக அந்த எருதினை ஒரு குறிப்பிட்ட திசையில் அ ஒட்டுகிறார். அந்த எருது அத்திசையில் அசையத் தொடங்கியவுடன் அ அப்பணத்தைத் திருடியவர் ஆகிறார்.

(ஈ) க வின் தட்டொன்றினைக் காக்கும்படி க வினால் நம்பவிடப் பட்டவனான அ என்னும் கவின் வேலையாள் க வின் சம்மதமின்றி நேர்மையீனமாக அத்தட்டுடன் ஓடிவிடுகிறார். இங்கே அ திருட்டினைப் புரிந்துள்ளார்.

(உ) பிரயாணமொன்றை மேற்கொண்டுள்ளவரான க, பண்டசாலைப் பொறுப்பாளரான அ விடம் தான் திரும்பிவரும் வரை வைத்திருக்கும்படி தனது தட்டினை ஒப்படைக்கிறார். அத்தட்டினை ஒரு பொற்கொல்லரிடம் எடுத்துச் சென்று விற்கிறார். அத்தட்டு கவின் உடைமையிலிருக்கவில்லையாதலால் கவின் உடைமையிலிருந்து எடுக்கப்படமுடியாது எனவே த திருடவில்லை அவர் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம் புரிந்தவராகலாம்.

(ஊ) க குடியிருக்கும் வீடொன்றில் ஒரு மேசையில் மேலிருக்கும் கவுக்குச் சொந்தமான மோதிரத்தை அ காண்கிறார் அம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதிரம் க வின் உடைமையிலிருப்பத னால் அ அதனை நேர்மையீனமாக எடுத் துச் சென்றால் அ திருடுபவராவார்.

(எ) எந்த ஆளிலும் உடைமையில்லாது பெரு வீதியொன்றில் கிடைக்கும் ஒரு மோதி ரத்தை அ காண்கிறார். அதனை எடுப்பதனால் அ குற்றமுறையான ஆதனக் கையாடலைப் புரிகிறாராயினும் அவர் திருடவில்லை.

(ஏ) க வின் வீட்டில் ஒரு மேசைமீது கிடக்கும் க வுக்குச் சொந்தமான மோதிர மொன்றை அ காண்கிறார். தேடிக் கண்டு பிடிக்கப்படலாமென்ற பயத்தினால் உட னடியாக அம்மோதிரத்தைக் கையாடத் துணியாது அது தொலைந்து விட்டது என்பது மறக்கப்பட்டப்பின்னர் அதனை அந்த மறைவிடத்திலிருந்து எடுத்து விற்கும் கருத்துடன் க வினால் காணப்படுதற்கு அரிய தோரிடத்தில் அதனை ஒளித்து வைக்கிறார். அம்மோதிரத்தை முதலில் அசைத்த நேரத்திலேயே அதனை அ திருடுகிறார்.

(ஐ) க என்னும் நகை வியாபாரியிடம் தனது கைக்கடிகாரத்தைச் சீராக்குவதற் கென அ ஒப்படைக்கிறார். க அதனைத் தமது கடைக்கு எடுத்துச் செல்கிறார். அந்த நகை வியாபாரிக்கு அ விடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்மதி எதுவும் இல்லாமையினால் பிணையாக அக்கடிகாரத்தை அந்நகை வியாபாரி சட்டமுறையாகத் தடுத்து வைத்திருக்க முடியாது. அ வெளிப்படையாகக் கடையுட் புகுந்து க வின் கையிலிருந்து வலோற்காரமாக அக்கைக்கடிகாரத்தை எடுத்துச் செல்கிறார். இங்கே அ குற்ற அத்துமீறலையும் தாக்குதலையும் புரிந்திருக்கலாமேனும் அவர் நேர்மையீனமாக எதனையும் செய்யாததனால் அவர் திருடவில்லை

(ஓ) அக்கடிகாரத்தைத் திருத்தியதற்காக அ பணஞ்செலுத்தாமலிருந்து அக்கடனுக்குப் பிணையாக க அக்கடிகாரத்தினைச் சட்டமுறையாகத் தடுத்துவைத்திருப்பின் அது கடனுக்குப் பிணையாதலிருந்து அபரிக்கும் கருத்துடன் க வின் உடைமையிலிருந்து அ எடுத்துச் சென்றால் அவர் நேர்மையீனமாக எடுப்பதன் காரணமாக அவர் அதனைத் திருடுகிறார்.

(ஓ) மேலும் க விடம் கைக்கடிகாரத்தை அ அடைவு வைத்துவிட்டுத் தாம் கடனாகப் பெற்றதனைத் திருப்பிக் கொடுக்காது க வின் சம்மதமின்றி க வின் உடையிலிருந்து அதனை அ எடுத்தால் அக்கைக் கடிகாரம் அவரது ஆதனமாயிருப்பினும் கூட அவர் நேர்மையீனமாக எடுப்பதன் காரணமாக அவர் அதனைத் திருடுபவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஔ) க வுக்குச் சொந்தமான ஒரு பொருளை எடுத்துப்பின் க வின் உடைமையிலிருந்து க வின் சம்மதமின்றி அதனைத் திருப்பிக் கொடுப்பதற்கு வெகுமதியாக க விடமிருந்து பணம் பெறும் வரை அதனை வைத்திருக் கும் நோக்கத்துடன் க வின் உடைமையி லிருந்து க வின் சம்மதமின்றி அ எடுத்துச் செல்கிறார். இங்கே அ நேர்மையினமாக எடுப்பதனால் அ அதனை திருடுகிறார்.

(க) க வினுடன் நட்புடைய அ,க இல்லாத நேரத்தில் க வின் நூலகத்துட் சென்று க வின் வெளிப்படையான சம்மதமின்றி நூலொன்றை வாசித்து விட்டுத் திருப்பிக் கொடுக்கும் கருத்துடன் எடுத்துச் செல்கிறார். க வின் நூலைப் பயன்படுத்துவதற்கு க வின் உட்கிடையான சம்மதம் தமக்குண்டு என அ ஒருபோது எண்ணியிருக்கக் கூடும் அதுதான் அ வின் எண்ணமாயிருந்தால் அ திருடவில்லை.

(ங) க வின் மனைவியிடமிருந்து அ பிச்சை கேட்கிறார். அவள் அ வுக்குப் பணம் உணவு உடுப்புகள் கொடுக்கிறாள். இவை அவளின் கணவனான க வுக்குச் சொந்த மானவை என அ வுக்குத் தெரியும் கவின் மனைவி இவற்றைக் கொடுக்க அதிகாரம் பெற்றவன் என அ எண்ணியிருக்கலாம். அதுதான் அ வின் எண்ணமாயிருந்தால் அ திருடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(ச) அ என்பவர் க வின் மனைவியின் கள்ளக் காதலர். அவள் அவருக்கு விலை யுயர்ந்த பொருள் ஒன்றைக் கொடுக்கிறாள். அது அவளின் கணவனான க வுக்குச் சொந்தமானது என்றும் கொடுக்கும்படி க வினால் அவள் அதிகாரமளிக்கப்படாத தொன்று என்றும் அ அறிவார். அ அந்தப் பொருளை நேர்மையீனமாக எடுத்தால் அவர் திருடுகிறார்.*

*(ஞ) க வுக்குச் சொந்தமான பொருளை அ தனது சொந்தப் பொருளென நல் லெண்ணத்துடன் நம்பி அப்பொருளை ஆ வின் உடமையிலிருந்து எடுத்துக் கொள் கிறார். இங்கு அ நேர்மையீனமாக எடுக்காமை யினால் அவர் திருடவில்லை.*

திருட்டுக்குத் தண்டனை

**367.** திருடும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினா லும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கால்நடை திருடுதல்

**368.** (அ) எருது, பசு, நாம்பன், எருமை, நாகு அல்லது கன்று எதனையும் திருடுகின்ற அல்லது

(ஆ) கனி,காய்கறி,அல்லது வேறு நிலத்து விளைபொருள் எதனையேனும் மனித அல்லது விலங்கு உணவாக, அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தாக அல்லது வடிப்பதில் அல்லது சாய மூட்டுவதில் அல்லது ஏதேனும் உற் பத்தியின் பொழுது பயன்படுத்தப்படும் அல் லது பயன்படுத்தக்கூடிய பயிர் செய்யப்பட்ட கிழங்கு அல்லது செடி எதனையும் திருடு கின்ற

எவரும் திருட்டுக்கான வேறு ஏதேனும் தண்ட னையுடனும் மேலதிகமாகச் சவுக்கடியினா லும் தண்டிக்கப்படலாம்.

**369.** மனிதவாழிடமொன்றாக அல்லது ஆதனங் களைக் கட்டுக்காவலில் வைத்திருப்பதற் கான இடமொன்றாகப் பயன்படுத்தப்படும் கட் டடம் கூடாரம் அல்லது மரக்கலாம். எதி லும் திருடும் எவரும் ஏழு ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகை யிலொருவகை மறியலினால்தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

வாழ்வீடு முதலியவற்றை திருடுதல்

**370.** எழுதுவினைஞர் அல்லது வேலையாள் ஒரு வராக அல்லது எழுதுவினைஞர் அல்லது வேலையாள் என்ற தன்மையில் வேலைக்கு வைக்கப்பட்டவர் ஒருவராக விருந்து கொண்டு அவரதுஎசமானின் அல்லது தொழில்தருநரின் உடைமையிலுள்ள ஏதேனும் ஆதனத்தைத் திருடும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படு

எழுதுவினை ஞர் அல்லது வேலையாள் உடமையிலுள்ள ஆதனத்தைத் திருடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

திருடும்பொருட்டு மரணம் அல்லது காயம் ஏற்பாடுசெய்த பின்னர் திருடுதல்

**371.** திருட்டினைப் புரியும் பொருட்டு அல்லது அத்திருட்டினைப் புரிந்துவிட்டுத் தப்பிச் செல்லும் பொருட்டு அல்லது அத்திருட்டினால் பெறப்பட்ட ஏதெனும் ஆதனத்தைத் தம்முடன் வைத்திருக்கும் பொருட்டு எவரேனும் ஆளுக்கு மரணம் காயம் அல்லது தடை ஏற்படுத்த அல்லது தடை உண்டாகும் என்ற பயத்தினை ஏற்படுத்த ஏற்பாடு செய்துவிட்டுப் பின்னர் திருடுகின்ற எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்குக் கடூழிய மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டுக்கள்**

*(அ) க வின் உடைமையிலுள்ள ஆதனத்தை அ திருடுகிறார். அத்திருட்டைப் புரியும் பொழுது வெடி மருந்தூட்டப்பட்ட துப்பாக்கியை அவரது உடையினுள் வைத்துக் கொள்கிறார். க எதிர்த்தால் க விற்குக் காயம் விளைப்பதே இதன் நோக்கம் இப்பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள தவறினை அ புரிந்துள்ளார்.*

*(ஆ) தாம் புரிந்து திருட்டினை ஒரு சமயம் க அறிய நேருந்து தம்மை எதிர்க்க அல்லது கைதுசெய்ய எத்தனித்தால் க வை அவர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தடுப்பதற்கெனத் தமக்குப் பக்கத்தில் பல தோழர்களை நிறுத்தி வைத்துவிட்டு க வின் சட்டைப்பையிலிருந்து அ திருடுகிறார். இப்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள தவறினை அ புரிந்துள்ளார்.*

**அச்சுறுத்திப் பெறுதல் பற்றி**

**372.** எவரேனும் ஆளை அவ்வாளுக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு ஏதேனும் ஊறு ஏற்படும் என்ற கருத்துடன் பயன்கொள்ள வைத்து அதனால் பயத்தினுட்பட்ட ஆளை எதேனும் ஆதனத்தை அல்லது பெறுமதியான பிணையை அல்லது பெறுமதியான பிணையாக மாற்றப்படக்கூடிய ஒப்பமிடப்பட்ட எதனையும் ஆள் எவரிடத்திலும் ஒப்படைக்கும்படி நேர்மையீனமாகத் தூண்டும் எவரும் அச்சுறுத்திப் பெறுவதாகச் சொல்லப்படும்.

அச்சுறுத்திப் பெறுதல்

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) க பணம் கொடாதுவிட்டால் க வைப் பற்றி அவதூறான வெளியீட்டைப் பிரசுரிக்கப் போவதாக அ அச்சுறுத்துகிறார். அதனால் தமக்குப் பணங்கொடுக் கும்படி க தூண்டுகிறார். அ அச்சுறுத்திப் பெறுதலை இதனால் புரிந்துள்ளார்.*

*(ஆ) அ வுக்குச் சில பணங்கள் கொடுப்பதாக க பொருந்தி வாக்குறுதிப்பத்திரமொன்றை க ஒப்பமிட்டு அ விடம் ஒப்படைக்காவிட்டால் க வின் பிள்ளையை முறை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடாக அடைத்துவைக்கப்போவதாக க வை அ அச்சுறுத்துகிறார். க அப்பத்திரத்தை ஒப்பமிட்டு ஒப்படைக்கிறார். அ அச்சுறுத்திப் பெறுதலை இதனால் புரிந்துள்ளார்.

(இ) கடும் காயம் ஏற்படும் என்ற பயனத்தினை க வுக்கு உண்டதக்கி வெறும் கடுதாசி ஒன்றில் ஒப்பமிட்டு அல்லது தமது இலச்சினையைப் பதித்து அ வுக்கு ஒப்படைக்கும்படி நேர்மையீனமாக க வை அ தூண்டுகிறார். இங்கே அவ்விதம் ஒப்பமிடப்பட்ட கடதாசி பெறுமதியான பிணையொன்றாக மாற்றப்படக்கூடும் ஆதலால் அச்சுறுத்திப் பெறுதலை இதனால் புரிந்துள்ளார்.

அச்சுறுத்திப் பெறுதலுக்குத் தண்டனை

373. அச்சுறுத்திப் பெறுதலைப் புரியும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

அச்சுறுத்திப் பெறுவதற்காக ஆள் ஒருவரைக் காயம் ஏற்படும் என்ற பயத்தினுட் படுத்தல்

374. அச்சுறுத்திப் பெறுவதற்காக எவரேனும் ஆளை ஏதேனும் ஊறுவிளையும் என்ற பயத்தினுட் படுத்துகின்ற அல்லது பயத்தினுட்படுத்த எத்தனிக்கின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

375. ஆளொருவருக்கு அல்லது வேறொருவருக்கு மரணம் அல்லது கடும்காயம் ஏற்படும் என ஆள் எவரையேனும் பயத்தினுட்படுத்தி அச்சுறுத்திப்பெறும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

ஆளொருவரை மரணம் அல்லது கடும் காயம் ஏற்படும் என்ற பயத்தினுட்படுத்தி அச்சுறுத்திப் பெறுதல்

376. அச்சுறுத்திப் பெறுவதற்காக அவ்வாளுக்கு அல்லது வேறொருவருக்கு மரணம் அல்லது கடும்காயம் ஏற்படும் என ஆள் எவரையேனும் பயத்தினுட்படுத்துகின்ற அல்லது பயத்தினுட்படுத்த எத்தனிக்கின்ற எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

அச்சுறுத்திப் பெறுவதற்காக ஆளொருவரை மரணம் அல்லது கடும் காயம் ஏற்படும் என்ற பயத்தினுட் படுத்தல்

**377.** மரண தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான மறியல் விதித்துத் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றைப் புரிந்துள்ளதாக அல்லது புரிய எத்தனித்துள்ள தாக அல்லது அத்தகைய தவறினை வேறு ஆளொருவர் புரிய அவ

மரணதண்டனையினால் அல்லது பத்தாண்டு மறியலினால் தண்டிக் கப்படக் கூடிய தவறொன்றைச் சாட்டிப் பயமுறுத்தி அச்சுறுத்திப் பெறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைத் தூண்ட எத்தனித்துள்ளதாக அவ் வாளுக்கு எதிராக அல்லது வேறொருவருக் கெதிராகச் சாட்டுதல் மூலம் எவரேனும் ஆளைப் பயத்தினுட்படுத்தி அச்சுறுத்திப் பெறும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அத் தவறு

365 ஆம் பிரிவின்கீழ்த் தண்டிக்கப்படற்குரிய தொன்றாயின் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான கடுழிய மறியலினால் தண்டிக்கப்படலாமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

அச்சுறுத்திப் பெறுவதற்காகத் தவறு பற்றிச் சாட்டி ஆளொருவரைப் பயதினுட் படுத்தல்

**378.** அச்சுறுத்திப் பெறுவதற்கென மரண தண் டனை அல்லது பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான மறியல் விதித்துத் தண்டிக்கக்கூடிய தவறொன்றைப் புரிந்துள்ளதாக அல்லது புரிய எத்தனித்துள்ளதாக அவ்வாளுக்கெதி ராக அல்லது ஆளைப் பயத்தினுட்படுத்து கின்ற அல்லது பயத்தினுட்படுத்த எத்தனிக் கின்ற எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஆளாதல் வேண்டும் அத்துடன் அத் தவறு 365 ஆம் பிரிவின் கீழ்த் தண்டிக்கப் படற்குரிய தொன்றாயின் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான கடுழிய மறியலினால் தண்டிக்கப்படலா மென்ப தோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

### கொள்ளை பற்றி

**379.** கொள்ளை யாவற்றிலும் திருட்டேதும் அச்சு றுத்திப் பெறுதலேனும் இருக்கும். கொள்ளை

திருட்டினைப் புரிவதற்கான அல்லது திருட்டி னைப் புரியும் பொழுது அல்லது திருட்டினால் பெறப்பட்ட ஆதனத்தை எடுத்துச் செல்வதில் அல்லது எடுத்துச் செல்ல எத்தனிப்பதில் தவறாளர் எவரேனும் ஆளுக்கு மரணத்தை அல்லது காயத்தை அல்லது முறைகேடான தடையை அல்லது உடனடி மரணம் அல்லது உடனடி காயம் அல்லது உடனடி முறை கேடான தடை ஏற்படும் என்ற பயத்தை வேண்டு மென்று விளைத்தால் அல்லது விளைக்க எத்தனித்தால் திருட்டுக் "கொள்ளை" ஆகும். எப்பொழுதும் திருட்டுக் கொள்ளையா கும்.

அச்சுறுத்திப் பெறுதலைப் புரிகின்ற நேரத் தில் தவறாளர் பயத்தினுட்படுத்தப்பட்டவரின் சமூகத்திலாய் அவ்வாளுக்கு அல்லது வேறோர் ஆளுக்கு உடனடி மரணம் உடனடி காயம் அல்லது உடனடி முறைகேடான தடை ஏற் படும் என்று அவ்வாளைப் பயத்தினுட்படுத்தி எப்பொழுதும் அச்சுறுத்திப் பெறுதல் கொள்ளை யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பயத்தினுட்படுத்தல் அச்சுறுத்திப் பெறப் படும் பொருளை ஒப்படைக்கும் தூண்டி அச்சு றுத்திப் பெறுதலைப் புரிந்தால் அச்சுறுத்திப் பெறுதல் "கொள்ளை" ஆகும்.

விளக்கம் - உடனடி மரணம் உடனடி காயம் அல்லது உடனடி முறைகேடான தடை ஏற்படும் என்று மாற்ற ஆளைப் பயத்தினுட்படுத்தப் போதிய அண்மையில் அவர் இருந்தால் தவறாளர் சமூகமாயி ருப்பதாகச் சொல்லப்படும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) க வைப் பிடித்து வைத்துக்கொண்டு அ என்பவர் க விடத்திலுள்ள பணத்தையும் நகை களையும் க வின் உடையிலிருந்து க வின் சம்மதமின்றி மோசடியாக எடுத்துக்கொள்ளு கிறார். இங்கு அ திருட்டுப் புரிந்துள்ளார். அத்து டன் அத்திருட்டைப் புரிவதற்கென க வேண்டு மென்று முறைகேடாகத் தடைசெய்துள்ளார். எனவே அ கொள்ளையைப் புரிந்துள்ளார்.*

*(ஆ) க வை அ பெருவழியொன்றில் கண்டு துப்பாக்கியைக் காட்டி க வின் பணப்பையைத் தரும்படி கேட்கிறார். அதன் பயனாக க தனது பையை ஒப்படைக்கிறார். உடனடி காயம் ஏற் படும் என்று பயப்படுத்தி க விடமிருந்து அ பணப்பையை அச்சுறுத்திப் பெற்றுள்ளார். அத்து டன் அச்சுறுத்திப் பெறுகின்ற அந்த நேரத்தில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவரின் சமூகத்தில் இருந்தபடியால் அ கொள் ளையைப் புரிந்துள்ளார்.*

*(இ) க வையும் க வின் பிள்ளைகளையும் அ ஒரு பெரும் தெருவில் சந்திக்கின்றார். அப்பிள் ளையை அ எடுத்துக்கொண்டு க வின் பணப் பையை க ஒப்படைத்தாலன்றி அப்பிள்ளையை ஆழ் குழியில் வீசப்போவதாகப் பயமுறுத்து கிறார். அதன் விளைவாக க தனது பணப் பையை ஒப்படைக்கிறார். அங்கே சமுகமாயுள்ள பிள்ளைக்கு உனழனடி காயம் ஏற்படும் என்று க வைப் பயப்படவைத்து க விடமிருந்து பணப் பையை அ அச்சுறுத்திப் பெற்றுள்ளார். எனவே க தொடர்பில் அ கொள்ளையைப் புரிந்துள்ளார்.*

*(ஈ) உமது கிள்ளை எனது கூட்டத்தாரிட முள்ளது. எங்களுக்குப் பத்தாயிரம் ரூபா நீர் அனுப்பினாலொழிய அப்பிள்ளை கொல்லப் படும் என்று சொல்லி க விடமிருந்து அ ஆத னத்தைப் பெறுகிறார். இது பயமுறுத்திப் பெறு தலாவதோடு அவ்வகையாகவே தண்டிக்கப் படக்கூடியது. ஆயினும் தனது பிள்ளைக்கு உடனடி மரண மேற்படும் என்று க பயத்தினுட் படுத்தப்பட்டிருந்தாலொழிய அது கொள்ளை யாகாது.*

**380.** கொள்ளை புரியும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான கடுழிய மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் — கொள்ளைக்குத் தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அக் கொள்ளை சூரியன் மறைவதற்கும் உதிப்ப தற்கும் இடையில் பெருவழியொன்றில் புரியப் பட்டால் மறியற்காலம் பதினான்கு ஆண்டு கள் வரை நீடிக்கலாம்.

கொள்ளைபுரிய எத்தணித்தல்

**381.** கொள்ளைபுரிய எத்தனிக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான கடூழிய மறியலினால் தண்டிக்கப் படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத் திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

கொள்ளை புரியவேண்டும் என்று காயம் விளைவித்தல்

**382.** கொள்ளைபுரிவதில் அல்லது கொள்ளை புரிய எத்தனித்தலில் எவரேனுமாள் வேண்டுமென்று காயம் விளைத்தால் அவ்வாளும் அத்த கைய கொள்ளைபுரிவதில் அல்லது கொள்ளை புரிய எத்தனிப்பதில் கூட்டாகச் சம்பந்தப்பட் டுள்ள வேறு எவரேனுமாளும் இருபது ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான கடூழிய மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப்பணத்திற்கு அவர் ஆளா தல் வேண்டும்.

மரணம் அல்லது கடுங்காயம் விளைவிக்கும் நோக்குடன் கொள்ளை

**383.** கொள்ளையைப் புரிகின்ற நேரத்தில் தவ றாளர் மரணம் விளைக்கக்கூடிய ஆயுதம் எதனையும் பயன்படுத்தினால் அல்லது ஆள் எவருக்கேனும் கடும் காயம் விளைத்தால் அல்லது ஆள் எவருக்கேனும் மரணம் அல் லது கடும் காயம் விளைக்க எத்தனித்தால் அத்தவறாளர் தண்டிக்கப்பட வேண்டிய மறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யற்காலம் இருபது ஆண்டுகள் வரை நீடிக் கலாம்.

384. கொள்ளையொன்றை புரிய எத்தனிக்கும் நேரத்தில் தவறாளர் மரணம் விளைக்கக் கூடிய ஏதேனும் ஆயுதத்தைத் தாங்கியிருந் தால் அத்தவறாளர் தண்டிக்கப்படவேண்டிய மறியற்காலம் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாம்.

மரணம் விளைவிக்கக் கூடிய ஆயுதம் கொள்ளை புரிய எத்தனித்தல்

385. திருட்டினை அல்லது கொள்ளையை வழக் கமாகப் புரிவதற்கெனச் சேர்ந்துள்ள ஏதே னும் அலைந்து திரியும் அல்லது வேறுவகை ஆட்கள் கூட்டத்தைச் சேரும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான கடூழிய மறியலினால் அல்லது குற் றப்பணத்தினால் அல்லது இவை இரண்டி னாலும் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்ப தோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

அலைந்து திரியும் திருடர் கூட்டத்தைச் சேர்ந்திருப்பதற்கான தண்டனை

## குற்ற முறையான ஆதனக் கையாடல்

386. ஏதேனும் அசைவுள்ள ஆனத்தை நேர்மை யீனமாகக் கையாளும் அல்லது தன் சொந் தப் பயனுக்கு மாற்றுமெவரும் இரண்ட ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல் லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டுகள்**

(அ) ஆதனமொன்றை எடுக்கும் நேரத்தில் தனக்குச் சொந்தமானது என நல்லெண்ணத்துடன் நம்பி அ என்பவர் க வுக்குச் சொந்தமான ஆதனத்தை க வின் உடைமையிலிருந்து எடுத்துக் கொள்ளுகின்றார். அ திருட்டுக் குற்றவாளியல்ல ஆனால் தனது பிழையை அறிந்த பின்னர் அவ்வாதனத்தைத் தனது சொந்தப் பயனுக்கு நேர்மையீனமாக உரித்தாக்கிக் கொண்டால் இப்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாவார்.

(ஆ) க வின் நண்பனான அ, க இல்லாத நேரத்தில் க வின் நூலகத்துற் சென்று கவின் வெளிப்படையான சம்மதமின்றிப் புத்தகமொன்றை எடுத்துச் செல்லுகிறார். அதனை வாசிப்பதற்கென எடுத்துச்செல்ல க வினுடைய உட்கிடையான சம்மதம் தமக்குண்டென அ எண்ணியிருந்தால் அ திருட்டுப்புரியவில்லை ஆனால் அதன்மேல் அ அப்புத்தகத்தைத் தன் நன்மைக்காக விற்றால் அவர் இப்பிரிவின் கீழான குற்றவாளியாவார்.

(இ) அ வும் ஆ வும் குதிரையொன்றின் கூட்டுச் சொந்தக்காரராயிருக்கையில் அதனைப் பயன்படுத்தும் கருத்துடன் ஆ வின் உடைமையிலிருந்து அ எடுத்துச் செல்லுகிறார். இங்கே குதிரையைப் பயன்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அ வுக்கு உரிமையியிருப்பதால் அவர் நேர்மையீனமாக அதனைக் கையாட வில்லை ஆனால் அ அக்குதிரையை விற்று அதனால் வந்த பொருள் முழு வதையும் தன் சொந்தப் பயனுக்கு உரித் தாக்கிக் கொண்டால் அவர் இப்பிரிவின் கீழான தவறொன்னைப் புரிந்தவராவார்.*

**விளக்கம் 1** ஒரு குறுகிய காலத்துக்கு நேர் மையீனமாகக் கையாடலும் இப்பிரி வின் பொருளுக்கு உட்படக் கையாட லேயாகும்.

**எடுத்துக்காட்டு**

*கொண்டுவருபவருக்கு கொடுபட வேண் டிய க வுக்குச் சொந்தமான வாக்குப்பத் திர (புரோ நோட்டு) மொன்றை அ கண் டெடுக்கிறார். அப்பத்திரம் க வுக்குச் சொந்தமான தென்பதை அ அறிந்து கொண்டு கவுக்குப் பின்னரொரு நேரத் தில் திரும்பக் கொடுக்கும் கருத்துடன் கடனொன்றுக்குப் பிணையாக அதனை வங்கியாளரொருவரிடம் ஈடு வைக்கின் றார். அ இப்பிரிவின் கீழான தவறொன் றைப் புரிகின்றார்.*

**விளக்கம் 2.**

(i) வேறு ஆள் எவரினதும் உடைமை யில்லாத ஆதனமொன்றை அதன் சொந்தக்காரருக்காகக் காப்பாற்றி மீள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படைக்கும் நோக்கமாக அவ்வாத னத்தை எடுத்துக்கொள்ளும் ஆளொ ருவர் அதனை நேர்மையீனமாக எடுப் பதுமில்லை கையாடுவதுமில்லை அவர் தவறான்றுக்குக் குற்றவாளியுமில்லை. ஆனால் அதன் சொந்தக்காரனை அவர் அறிந்து கொண்டு அல்லது தேடிக் காணக்கூடிய வழியுடைவராயிருந்து கொண்டு அல்லது சொந்தக்காரனைத் தேடிக்கண்டு அறிவித்தல் கொடுக்க நியாயமான வழிவகைகளைப் பயன் படுத்து முன்னரும் அதன் சொந்தக் காரன் அதனை உரிமைகோரவியலும் வகையில் நியாயமான காலத்துக்கு அவ்வாதனத்தை வைத்திருக் காமலும் அதனைத் தன் சொந்தப் பயனுக்கு உரித்தாக்கிக் கொண்டால் மேலே விப ரிக்கப்பட்ட தவறுக்கு அவர் குற்ற வாளியாவார்.

(ii) அத்தகைய ஒரு விடயத்தில் எவை நியாயமான வழிவகைகள் அல்லது எது நியாயமான காலம் என்பது நிகழ் வுப் பிரச்சினையொன்றாகும்.

(iii) ஆதனத்தைக் கண்டெடுப்பவர் அவ் வானத்தின் சொந்தக்காரர் யாரென்றோ குறிப்பிட்ட ஆளொருவருக் அதன் சொந் தக்காரரென்றோ அறிந்திருத்தல் அவ சியமில்லை அவ்வாதனத்தைத் தமக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரித்தாக்கிக் கொள்ளும் நேரத்தில் அது தன் சொந்தமானதென நம்பா திருந்தால் அல்லது உண்மையான சொந்தக்காரரைக் கண்டுபிடிக்க முடி யாது என நல்லெண்ணத்துடன் நம்பி னால் போதுமானது.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) ரூபா ஒன்றைப் பெருவழியில் அ காண்கிறார் அது யாருக்கச் சொந்தமான தென அவர் அறியார். அ அதனை எடுக் கிறார். இப்பிரிவில் விபரிக்கப்பட்ட தவறினை அ புரியவில்லை.*

*(ஆ) வங்கிப் பத்திரம் ஒன்றினைக் கொண் டுள்ள கடிதமொன்றை வீதியில் அ காண் கிறார். அக்கடிதத்தின் பணிப்பிலிருந்தும் உள்ளீட்டிலிருந்தும் அந்தப் பத்திரம் யாருக் குச் சொந்தமானதெனத் தெரிந்துகொள் கிறார். அவர் அப்பத்திரத்தைத் தனக்குரித் தாக்கிக் கொள்ளுகிறார். இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கு அவர் குற்றவாளியாவார்.*

*(இ) கொண்டுவருபவருக்குக் கொடுக்கப் படவேண்டிய காசோலையொன்றை அ காண்கிறார். அக்காசோலையை இழந்த வர் யாரென்று அ எவ்விதமேனும் ஊகித் தறியும் வழியில்லை. அக்காசோலையை வரைந்த ஆளின் பெயர் அதில் தோன்று கிறது. அக்காசோலை எவரின் பெயருக்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையப்பட்டுள்ளதோ அவ்வாள் தம்மை நெறிப்படுத்தக் கூடுமென அவர் அறிவார். சொந்தக்காரரைத் தேடிக்காண எத்தனிக் காமல் அந்தக் காசோலையை அ தமக் குரித்தாக்கிக் கொள்ளுகிறார். இப்பிரிவின் கீழான தவறுக்கு அவர் குற்றவாளியாவார்.

(ஈ) பணத்தினைக் கொண்ட தனது பணப் பையை க நழுவவிடுவதனை அ காண் கிறார். க வுக்குத் திருப்பிக்கொடுக்கும் கருத்துடன் அப்பணப்பையை அ எடுக்கி றார். ஆனால் அதன் பின்னர் அதனைத் தன் சொந்தப் பயனுக்கு உரித்தாக்கிக் கொள்ளுகிறார். அப்பிரிவின் கீழான தவ றொன்றை அ புரிந்துள்ளார்.

(உ) பணத்தோடு கூடிய பணப்பை ஒன்றை அ யாருக்குச் சொந்தமானதென்பதை அறியாமல் அ கண்டெடுக்கிறார். பின்னர் அ க வுக்குச் சொந்தமானதென அறிந்து கொண்டும் தன் சொந்தப்பயனுக்கு அதனை உரித்தாக்கிக் கொள்ளுகின்றார். இப்பிரி வின் கீழான தவறுக்கு அவர் குற்றவாளி யாவார்.

(ஊ) விலையுயர்ந்த மோதிரம் ஒன்றை அ கண்டெடுக்கிறார். அது யாருக்குச் சொந்தமான தென்பதை அவர் அறியார். அதன் சொந்தக்காரரைத் தேடியறிய எத்த னிக்காமல் உடனடியாக அதனை விற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விடுகிறார். இப்பிரிவின் கீழான தவறுக்கு அவர் குற்றவாளியாவார்.*

**387.** ஆளொருவர் இறக்கும் நேரத்தில் அவரின் உடைமையில் அவ்வாதன மிருந்ததெனவும் சட்டமுறையாக அவ்வுடைமைக்க உரித்துடைய ஆளொவரதும் உடைமையில் அதன் பின்னர் அது இருக்கவில்லையெனவும் அறிந்து கொண்டு அவ்வாதனத்தை நேர்மையீனமாகக் கையாடுகின்ற அல்லது தன் சொந்த நன்மைக்கு மாற்றுகின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும் அத்துடன் அத்தவறாளர் அத்தகைய ஆள் இறக்கும் நேரத்தில் எழுதுவினைஞர் ஒருவராக அல்லது வேலையாளொருவராக அவரால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தவரானால் மறியற்காலம் எழு ஆண்டுகள் வரை நீடிக்கலாம்.

இறக்கும் நேரத்தில் அவரின் உடமையிலிருந்தான இறந்தவரின் ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாடல்

**எடுத்துக்காட்டு**

*க என்பவர் தளபாடங்களும் பணமும் உடைமையில் வைத்திருந்து இறக்கிறார். அப்பதைத்தை உடைமையில் கொள்ளுதற்கு உரித்துடைய ஆள் எவரதும் உடைமைக்கு வருவதன் முன்னர் க வின் வேலையாளர் அ நேர்மையீனமாகக் கையாடுகிறார். இப்பிரிவில் விபரிக்கப்பட்ட தவறினை அ புரிந்துள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றமுறை யான நம்பிக்கைத் துரோகம்

**388.** ஆதனம், அல்லது ஆதனத்தின் மீதான எதேனும் ஆட்சி, எம்முறையிலேனும் நம்பி ஒப்படைக்கப்பட்டவராயிருந்து கொண்டு அவ்வாதனத்தை நேர்மையினமாக கையாடுகின்ற அல்லது தன் சொந்தப் பயனுக்கு மாற்றுகின்ற அல்லது அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பு நிறைவேற்றப்படவேண்டிய முறையை விதிக்கும் ஏதேனும் சட்ட நெறியை மீறி அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பு நிறைவேற்றப்படுதல் தொடர்பில் அவர் செய்துகொண்ட வெளிப்படையான அல்லது தொடர்பில் அவர் செய்துகொண்ட வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் சட்ட ஒப்பந்தத்தை மீறி நேர்மையீனமாக அவ்வாதனத்தைப் பயன்படுத்துகின்ற அல்லது கையாளுகின்ற அல்லது வேறு ஆள் எவரையும் தெரிந்து அவ்விதஞ் செய்ய வைக்கின்ற எவரும் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்தைப் புரிகிறார்.

**எடுத்துக்காட்டு**

*(அ) இறந்தாளொருவரின் இறுதிவிருப்ப வாணத் தத்துவகாரரான அ என்பவர் விருப்பாவணத்துக் கிணங்கப் பொருள்களைப் பங்கீடு செய்யும்படி அவரைப் பணிக்கும் சட்டத்தினை நேர்மையீனமாக மீறி அவற்றைத் தமது சொந்தப் பயனுக்கு உரித்தாக்கிக் கொள்கிறார். அ குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்தைப் புரிந்துள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அ என்பவர் ஒரு பண்டகசாலைக் காப்பாளர் பயணம் புறப்படும் க தனது தள பாடங்களை அ விடம் ஒப்படைக்கிறார். பண்டகசாலை இடத்துக்காகக் குறிப்பிட்ட தொகை கொடுக்கப்படுமிடத்து அவை திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்பது அவர்களுக் கிடையிலான ஒப்பந்தம் அ நேர்மையீனமாக அவற்றை விற்றுவிடுகிறார். அ குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்தைப் புரிந்துள்ளார்.

(இ) கொழும்பில் வதியும் அ இங்கிலாந்தில் வதியும் க வுக்கு முகவர் அ வுக்கு க அனுப்பும் தொகைகள் யாவும் க வின் பணிப்புக்கு இணங்க அ வினால் முதலீடு செய்யப்பட வேண்டு மென்பது அவர்கள் இருவருக் கிடையிலுமான வெளிப்படை அல்லது உட்கிடையான ஒப்பந்தம். கோப்பித் தோட்டங்களின் ஈட்டின் மீத முதலீடு செய்யும் படி அ வைப் பணித்து க பத்தாயிரம் ரூபாவை அ வுக்கு அனுப்பி வைத்தார் அ நேர்மையீனமாகப் பணிப்பினை மீறி அப்பணத்தைத் தன் சொந்த வியாபாரத்தில் பயன்படுத்துகிறார். அ குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்தைப் புரிந்துள்ளார்.

(ஈ) மேற்போந்த எடுத்துக்காட்டில் அ நேர்மையீனமாகவல்லாது கம்பனியொன்றினால் பங்குகள் பெறுதல் க வுக்கு அனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலம் கூடியது என நம்பி நல்லெண்ணத் துடன் க வின் பணிப்புகளை மிஞ்சி ஈட்டில் பணத்தை முதலீடு செய்வதற்குப் பதிலாக க வின் பெயரில் கம்பனிப் பங்குகளை வாங்கினால் அ நேர்மையீனமாகச் செய லாற்றாமையினால் குற்றமுறையான நம்பிக் கைத் துரோகம் புரியவில்லை. க நட்டம டைய நேர்ந்தால் அந்நட்டத்திற்காக அ வுக்கெதிராகக் குடியியல் வழக்கொன் றைக் கொண்டுவருவதற்கு உரித்துடைய ராகலாம்.

(உ) அரசிறையலுவலரொருவரான அ என்பவர் அரசாங்கத்துக்குச் சேர்மதியான பணத்துக்குப் பொறுப்புள்ளவர். அவர் வைத் திருக்க வேண்டிவரும் அரசாங்கப் பணம் யாவற்றையும் குறித்த கச்சேரியொன்றில் செலுத்துவதற்குச் சட்டத்தினால் பணிக் கப்பட்டவர் அல்லது அரசாங்கத்துடன் வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தமொன்றினால் கட்டுப்பட்டவராவார். அ நேர்மையீனமாக அப்பணத்தை உரித் தாக்கிக் கொள்ளுகிறார். அ குற்றமுறை யான நம்பிக்கைத் துரோகத்தைப் புரிந் துள்ளார்.

(ஊ) பொருட்களை ஏற்றி இறக்குபவரான அ என்பவரிடம் தரைவழியாக அல்லது கடல் வழியாக எடுத்துச்செல்லப்படுவதற் கென ஆதனம் க வினால் ஒப்படைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. அ நேர்மையீனமாக அவ்வாத னத்தை உரித்தாக்கிக் கொள்ளுகிறார். அ குற்றமுறையான நம்பிக்கைத் துரோ கத்தைப் புரிந்துள்ளார்.

389 குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம் புரியும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்துக்குத் தண்டனை

390. பொருட்களை ஏற்றியிறக்கபவர் கப்பற்றுத் துறை மேடை உரிமையாளர் அல்லது பண்டக சாலைக் காப்பாளர் என்ற தன்மையில் ஆதனம் ஒப்படைக்கப்பட்டிருந்து அத்தகைய ஆதனம் தொடர்பில் குற்றமுறையான நம்பிக் கைத் துரோகம் புரியும் எவரும் ஏழு ஆண்டு கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண் டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பொருட்களை ஏற்றி இறக்குபவர் முதலியோரால் புரியப்படும் குற்ற முறையான நம்பிக்கைத் துரோகம்

391. ஓர் எழுதுவினைஞர் அல்லது வேலையாட் களாக அல்லது எழுதுவினைஞராக அல்லது வேலையாட்களாக வேலைக்கமர்த்தப்பட் டுள்ளவரும் அத்தகைய தண்மையில் ஆத னம் அல்லது ஆதனத்தின் மீதான ஏதேனும் ஆட்சி எம்முறையிலேனும் ஒப்படைக்கப் பட் டுள்ளவருமாகவிருந்து கொண்டு அவ்வாதனம்

எழுதுவினைஞர் அல்லது ஊழியர் ஒருவரால் புரியப்படும் குற்ற முறையான நம்பிக்கைத் துரோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம் புரியும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத் திற்கும் அவர் ஆளாதல் வேண்டும். பகிரங்க ஊழியர், வங்கியாளர் வர்த்தகர் அல்லது முகவர் என்போரால் புரியப்படும் குற்றமுறை யான நம்பிக்கைத் துரோகம்.

பகிரங்க ஊழியர் வங்கியாளர், வர்த்தகர் அல்லது முகவர் என்பவரால் புரியப்படும் குற்றமுறையற்ற நம்பிக்கைத் துரோகம்

**392.** பகிரங்க ஊழியர் ஒருவரென்ற தன்மையில் அல்லது வங்கியாளர், வர்த்தகர், தரகு வணி கர், தரகர், அற்றோனி அல்லது முகவர் என் போரிடத்தில் அவரின் தொழில்முறையில் ஆத னம் அல்லது ஆதனத்தின் மீதான ஏதே னும் ஆட்சி எம்முறையிலேனும் ஒப்படைக் கப்பட்டவராகவிருந்துகொண்டு அவ்வாதனம் தொடர்பில் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம் புரியும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத் திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பணம் அல்லது பணத்தின் மீது தொடர்பில் பகிரங்க ஊழியரால் புரியப்படும் குற்ற முறையான நம்பிக்கைத் துரோகம்.

**392 அ.** பகிரங்க ஓழியர் ஒருவரென்ற தன்மை யில் ஏதேனும் பணம் நம்பி ஒப்படைக்கப்பட்ட வராக அல்லது அதன் ஆட்சியுடையவராக இருந்துகொண்டு அத்தகைய பகிரங்க ஊழி யராக அவரால் வைத்திருக்கப்படுவதாக அல் லது அவரிடமிருந்து வரவேண்டியதாக அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரால் வைத்திருக்கப்படும் அல்லது ஒப்பமிடப் படும் புத்தகங்களில் அல்லது கணக்குகளில் அல்லது விபரக்கூற்றுகளால் காண்பிக்கப் படும் ஏதேனும் பணத்தை அல்லது பணத் தின் மீதியைக் கொடுக்கும்படி அல்லது காண் பிக்கும்படி அவரது திணைக்களத் தலைவ ரால் அல்லது திறைசேரிச் செயலாளரால் அல்லது பிரதிச் செயலாளரால் கணக்காய் வாளர் தலைமையதிபதியினால் உதவி கணக்காய்வாளர் தலைமையதி பதியினால் அல்லது அவரின் திணைக்களக் கணக்கு களைச் சோதனையிடும் படி திறைசேரிச் செய லாளரால் சிறப்பாக நியமிக்கப்பட்ட எவரே னும் அலுவலரால் பணிக்கப்படுமிடத்து அவ் விதம் உடனேயே கொடுக்க அல்லது காண் பிக்க அல்லது அதற்காக முறைபடி கணக் குக் கொடுக்கத் தவறுகின்ற எவரும் குற்ற முறையான நம்பிக்கைத் துரோகத் தவறுகளுக் குக் குற்றவாளியாகிக் குற்றவாளியாகக் காணப் படுமிடத்து 392ஆம் பிரிவினால் ஏற்பாடு செய் யப்பட்ட தண்டனை இறுப்புக்கு ஆளாதல் வேண்டும்.

**392 ஆ.** வேறு எவரேனும் ஆள் ஒருவரால் முக வராகச் செயலாற்றுகின்றவராய் அல்லது செயலாற்றுவதாகக் கொள்ளப்படுபவராய் அத்தகைய வேறு ஆளுக்கு ஒப்படைக்கப்பட வுள்ள ஏதேனும் அஞ்சற்பொருளை அஞ்சல் அலுவலரொருவரிடமிருந்து பெற்று

அஞ்சற்பொருட்கள் தொடர்பில் முகவரால் புரியப்படும் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) வேண்டுமென்று எறிகின்ற அழிக்கின்ற வைத்துக்கொள்கின்ற அல்லது இரகசியமாக ஒளித்து வைக்கின்ற அல்லது.

(ஆ) நியாயமான காரணமின்றி (இதனை நிரூபிக்கும் பொறுப்பு அவர் மேலாதல் வேண்டும்) அத்தகைய பொருள் பற்றி முறையான விளக்கம் தரத் தவறுகின்ற அல்லது அதனை ஒப்படைக்க முறையற்ற தாமதம் செய்கின்ற,

ஆள் எவரும் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்திற்குகுற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு அதற்கென விதிக்கப்பட்ட தண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்.

**களவாடப்பட்ட ஆதனத்தைப் பெறுதல் பற்றி**

"களவாடப்பட்ட ஆதனம்"

**393.** திருட்டினால் அல்லது அச்சுறுத்திப் பெறுதலினால் அல்லது கொள்ளையினால் பொய் ஆவணம் ஆக்கலினால் அல்லது ஏமாற்றலினால் அதன் ஆட்சி மாற்றப்படுகின்ற ஆதனமும் குற்றமுறையாகக் கையாடப்பட்ட அல்லது அது தொடர்பில் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம் புரியப்பட்டுள்ளதான ஆதனமும் அத்தகைய மாற்றம் அல்லது கையாடல் அல்லது நம்பிக்கைத் துரோகம் இலங்கையிலேனும் அதற்கு வெளியிலும் புரியப்படினும் களவாடப்பட்ட ஆதனம் எனக் கட்டப்படும் எனினும் அத்தகைய ஆதனம் சட்டமுறையாக அதனை உடைமையில் வைத்திருக்க உரிமையுடைய ஆளொருவரின் உடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையில் பின்னர் வந்தால் அது களவாடப் பட்ட பொருளாதல் ஒழியும்.

394. ஏதேனும் களவாடப்பட்ட ஆதணத்தை அது களவாடப்பட்ட ஆதனம் என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமுள்ளவராயிருந்து கொண்டு நேர்மையீனமாகப் பெறுகின்ற அல்லது வைத்திருக்கின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

களவாடப்பட்ட ஆதனத்தை நேர்மையீனமாகப் பெறுதல்

395. களவாடப்பட்ட ஆதணம் என அவர் அறிந்து அல்லது நம்புவதற்கு நியாயமுள்ள ஆதனத்தை வழக்கமாகப் பெறுகின்ற அல்லது கையாளுகின்ற எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

வழக்கமாகக் களவாடப்பட்ட ஆதனங்களைக் கையாடல்

396. களவாடப்பட்ட ஆதணம் என அவர் அறிந்து அல்லது நம்புவதற்கு நியாயமுள்ள ஆதனத்தை ஒளித்து வைப்பதில் அல்லது கையாளுவதில் அல்லது அப்புறப்படுத்துவதில் வேண்டுமென்று உதவிப்புரிகின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால்

களவாடப்பட்ட ஆதனத்தை ஒளித்து வைப்பதில் உதவி புரிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

களவாடப்பட்ட கால்நடையை அல்லது நிலத்தில் விளை பொருளைப் பெறுதல்.

**397.** முற்போந்த மூன்று பிரிவுகளிலும் குறிப் பிடப் படுகின்ற களவாடப்பட்ட ஆதணம் 398 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விவரணங்களுள் எதனையேனும் கொண்டதாயின் தவறாளர் முற்போந்த மூன்று பிரிவுகளினால் விதிக்கப்பட்ட தண்டனைகளுடன் மேலதிகமாகச் சவுக்கடியினால் தண்டிக்கப்படலாம்.

## ஏமாற்றல் பற்றி

"ஏமாற்றல்"

**398.** ஆளெவரையேனும் வஞ்சித்தல் மூலம் ஏதேனும் ஆதணத்தை ஆளெவருக்கேனும் ஒப்படைக்கும் படி அல்லது எவரேனும் ஆள் ஏதேனும் ஆதணத்தை வைத்திருத்தற்குச் சம்மதிக்கும் படி மோசடியாக அல்லது நேர்மையீனமாகத் தூண்டுகின்ற அல்லது அவ் வாள் அவ்விதம் வஞ்சிக்கப்பட்டிராவின் அவர் செய்திருக்கமாட்டாத அல்லது செய்யாது விட்டிருக்கிமாட்டாததும் அவ்வாளுக்கு உடம் பில் மனதில் புகழில் அல்லது ஆதனத்திற் சேதத்தை அல்லது அரசாங்கத்துக்குச் சேதத்தை அல்லது நட்டத்தை விளைகின்ற அல்லது விளைக்கக் கூடிய ஒரு செயல் அல்லது செய்யாமையாக உள்ளதுமான எதனையும் செய்யும் படி அல்லது செய்யாது விடும்படி அவ்விதம் வஞ்சிக்கப்பட்ட ஆளைக் கருத்துடன் தூண்டுகின்ற எவரும் ஏமாற்றுவதாகச் சொல்லப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் - நிகழ்வுகளை நேர்மையீனமாக மறைத்தல் இப்பிரிவின் பொருளுக் குட்பட வஞ்சனையாகும்.

**எடுத்துக்காட்டு**

*(அ) சிவில் சேவையில் தரமுள்ளவராகப் பாசாங்கு பண்ணி அ என்பவர் க வை கருத் துடன் வஞ்சித்து அதன் மூலம் கடனில் பொருட் களைத் தமக்குக் கொடுக்கும் படி பணம் கொடுக்கும் எண்ணம் இன்றி க வை நேர்மை யீனமாகத் தூண்டுகின்றார். அ ஏமாற்றுகிறார்.*

*(ஆ) அ பொருளொன்றில் போலியடையாளம் ஒன்றையிட்டு அப்பொருள் புகழ்பெற்ற ஓர் உற்பத்தியாளரால் செய்யப்பட்டதென க வைக் கருத்துடன் நம்பும்படி ஏமாற்றுகிறார். மேலும் அதன் மூலம் அப்பொருளை விலைக்குப் பெற்றுப் பணத்தைக் கொடுக்கும் படி க வை நேர்மையீனமாகத் தூண்டுகிறார் அ ஏமாற்று கிறார்.*

*(இ) ஒரு பொருளின் பொய்யான மாதிரியொன்றை க விடம் காண்பிப்பதன் மூலம் அந்தப் பொருள் அந்த மாதிரியோடு ஒத்திருக்கின்றதென க வைக் கருத்துடன் நம்பும் படி ஏமாற்றுகிறார். அதன் மூலம் அப்பொருளை விலைக்குப் பெற் றுப் பணத்தைக் கொடுக்கும்படி க வை நேர்மை யீனமாகத் தூண்டுகிறார் அ ஏமாற்றுகிறார்.*

*(ஈ) அ பணம் போட்டு வைத்திருக்காத வங்கி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்றின் மீதான காசோலையொன்றைப் பொரு ளொன்றின் கொடுப்பனவுக்காக கொடுக் முன் வருகிறார் அக்காசோலை கௌரவிக்கப்படமாட் டாது என்பது அவர் எதிர்பார்த்ததாகும் அதன் மூலம் க வை கருத்துடன் ஏமாற்றி அப்பொரு ளுக்குப் பணம் கொடுக்கும் கருத்தின்றி அப் பொருளை ஒப்படைக்கும் படி க வை நேர்மை யீனமாகத் தூண்டுகிறார். அ ஏமாற்றுகிறார்.

(உ) வைரங்களல்ல என அவர் அறிந்தவற்றை வைரங்களாமெனப் பிணைவைப்பதன் மூலம் அ, க வைக் கருத்துடன் ஏமாற்றி அதன் மூலம் க வைப் பணம் இரவல் கொடுக்கும்படி க வை நேர்மையீனமாகத் தூண்டுகிறார். அ ஏமாற்று கிறார்.

(ஊ) க தமக்குக் கடனாகக் கொடுக்கப்போகும் எப்பணத்தையும் அ திருப்பிக்கொடுக்க எண்ணி யுள்ளார் எனக் கருத்துடன் க வை நம்பும் படி ஏமாற்றி அதனைத் திருப்பிக் கொடுக்கும் கருத்தின்றி தமக்குப் பணம் கொடுக்கும் படி க வை நேர்மையீனமாகத் தூண்டுகிறார். அ ஏமாற்றுகிறார்.

(எ) அவர் ஒப்படைக்க கருதாதிருந்தும் ஒரு தொகைக் கொடுப்பனவைக் க வுக்கு ஒப்படைக் கத் தாம் எண்ணியுள்ளதாக அ கருத்துடன் க வை நம்பும்படி ஏமாற்றி அத்தகைய ஒப் படைப்பின் நம்பிக்கையில் பணத்தை முற்பண மாகக் கொடுக்கும்படி க வை நேர்மையீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாகத் தூண்டுகிறார். அ ஏமாற்றுகிறார். ஆனால் இப்பணத்தைப் பெறும் நேரத்தில் அ கொப்ப றாவை ஒப்படைக்கக் கருதியிலிருந்து அதன் பின்னர் தமது ஒப்பந்தத்தை மீறி அதனை ஒப்படைக்காவிடின் அவர் ஏமாற்றவில்லை எனினும் ஒப்பந்த முறிவுக்காகக் குடியியல் வழக்குக்கு மட்டுமமே அவர் பொறுப்பாளியா வார்.*

*(ஏ) அவர் நிறைவேற்றாதாயிருந்தும் கவுட னான ஒப்பந்தத்தில் அ வுக்குரிய பங்கை அ நிறைவேற்றிவிட்டதாக க வைக் கருத்து டன் நம்பும்படி ஏமாற்றி அதனால் க வைப் பணங் கொடுக்கும்படி நேர்மையீனமாகத் தூண்டுகிறார். அ ஏமாற்றுகிறார்.*

*(ஐ) அ ஒரு தோட்டமொன்றை ஆ வுக்கு விற் றுக் கையளிக்கிறார். அத்தகைய விற்பனையின் விளைவாக அவ்வாதனத்தில் தமக்குரிமை யில்லை என அறிந்து கொண்டு அ,ஆ,வுக்கு முன்னர் செய்யப்பட்ட விற்பனையும் கைய ளித்தலையும் வெளிவிடாமல் அவ்வாதனத்தை க வுக்கு விற்று அல்லது ஈடுவைத்து ஆ விட மிருந்து அந்த விற்பனைப் பணத்தை அல்லது ஈட்டுப்பணத்தைப் பெற்றுக் கொள்கிறார். அ ஏமாற்றுகிறார்.*

**399.** வேறு ஆள் ஒருவரெனப் பாசாங்கு செய்வ தன் மூலம் அல்லது வேறொருவருக்காக ஒரு வரை அறிந்து பதிலிடுதல் மூலம் அல்லது

"ஆள்மாறாட்டஞ் செய்து ஏமாற்றுதல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரோ வேறு ஆள் ஒருவரோ உண்மை யாக அவர் அல்லது அத்தகைய வேறு ஆள் தவிர்ந்த வேறொருவராக எடுத்துரைத்தல் மூலம் ஏமாற்றினால் ஆள் ஒருவர் ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுவதைச் சொல்லப்படும்.

விளக்கம் - ஆள்மாறாட்டம் செய்யப்பட்டவர் உண்மையான ஆளாக அல்லது கற்பனையான ஆளொருவராக இருப் பினும் தவறு புரியப்பட்டதாகும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) அதே பெயர்கொண்ட குறிப்பிட்ட பணம் படைத்த வர்த்தகர் ஒருவரெனப் பாசாங்கு செய்து அ ஏமாற்றுகிறார். ஆள் மாறாட்டம் செய்தல் மூலம் அ ஏமாற்று கிறார்.*

*(ஆ) இறந்துபோன ஆள் ஒருவரான ஆ எனப் பாசாங்கு செய்து அ ஏமாற்றுகிறார். ஆள்மாறாட்டம் செய்தல் மூலம் அ ஏமாற்றுகிறார்.*

ஏமாற்றத்திற்குரிய தண்டனை

**400.** ஏமாற்றுமொருவரும் ஓர் ஆண்டுவரை நீடிக் கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினா லும் தண்டிக்கப்படுதல் வேண்டும். ஆளொரு வரின் அக்கறையைத் தவறாளர் பாதுகாக் கக் கட்டுப்பட்ட ஒருவருக்கு அதனால் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடான இழப்பு ஏற்படலாம் என்ற அறிவுடன் ஏமாற்றுதல்

401. ஏமாற்றம் சம்பந்தப்பட்டுள்ள அக்கொடுக்கல் வாங்கலினால் அவ்வாளுக்குரிய அக்கறையைச் சட்டத்தினால் அல்லது சட்டமுறையான ஒப்பந்தமொன்றினால் பாதுகாக்கக் கட்டுப்பட்ட ஒருவர் அவ்வாளுக்குத் தாம் முறைகேடான இழப்பினை அதனால் ஏற்படுத்தக் கூடும் என்ற அறிவுடன் ஏமாற்றினால் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஆளொருவரின் அக்கறையை தவறாளர் பாதுகாக்க கட்டுப்பட்ட ஒருவருக்கு அதனால் முறைகேடான இழப்பு ஏற்படலாம் என்ற அறிவுடன் ஏமாற்றுதல்

402 ஆள்மாறாட்டஞ் செய்து ஏமாற்றும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுவதற்கான தண்டனை

403. ஆளொருவரை ஏமாற்றி அவ்விதம் ஏமாற்றப்பட்ட ஆளை எவரேனம் ஆளுக்கு ஏதெனும் ஆதனைத்தை ஒப்படைக்கும் படி அல்லது பெறுமதியான பிணையொன்றின் அல்லது கையொப்பமிடப்பட்ட அல்லது இலச்சினையிடப்பட்டதும் பெறுமதியான பிணையொன்றாக மாற்றிக் கொள்ளக்கூடியதுமான ஏதாவ

ஏமாற்றலும் ஆதனம் ஒப்படைக்கும்படி நேர்மையீனமாகத் தூண்டுதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் முழுமையையும் அல்லது ஏதேனும் பகுதியை ஆக்கும்படி மாற்றும்படி அல்லது அழிக்கும்படி நேர்மையீனமாக ஏமாற்றுமொரு வரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டிய துடன் குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

## மோசடியான உறுதிகளும் ஆதனக் கையாளுதல்களும்

கடன்காரர்களுக் கிடையில் பகிர்ந்தளிக்கப் படுதலை தவிர்த்தற்காக ஆதனத்தை நேர்மையீனமாக அல்லது மோசடியாக அகற்றுதல் அல்லது மறைத்து வைத்தல்

404. ஏதேனும் ஆதணத்தைப் போதிய பிரதி பயனின்றி அவ்வாதனம் சட்டத்திற்கிணங்க அவரின் கடன்காரர்க்கிடையில் அல்லது வோறொருவரின் கடன்காரர்க்கிடையில் பகிர்ந் தளிக்கப்படுதலைத் தவிர்க்கும் நோக்கத்து டன் அல்லது அதனால் தாம் தவிர்க்கக் கூடு என்ற அறிவுடன் நேர்மையீனமாக அல்லது மோசடியாக அகற்றுகின்ற அல்லது மாற்று விக்கின்ற ஆளொருவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல் லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தவறுளர்க்கு வருமதியான கடனை அல்லது கோரிக்கையை அவரின் கடன் காரர்களுக்குத்

405. தனக்கு அல்லது வோறோராளுக்கு வர வேண்டியுள்ள ஏதேனும் கடன் அல்லது கோரிக்கை தமது கடன்களைக் கொடுப்பதற் காக அல்லது அத்தகைய வேறு ஆளின் கடன் களைக் கொடுப்பதற்கான சட்டத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணங்க கிடைக்கக் கூடியதாய் இருப்பதனை நேர்மையீனமாக அல்லது மோசடியாகத் தவிர்க்கின்ற எவரும் இரண்டு ஆண்டகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படதல் வேண்டும்.

கிடைத்தாதிருக்கும் வண்ணம் நேர்மையீனமாக அல்லது மோசடியாகத் தவிர்த்தல்

406. ஏதேனும் ஆதனத்தை அல்லது அதன் மீதான அக்கறையை மாற்றுவதாக அல்லது ஏதேனும் பொறுப்புக்குட்படுத்துவதாகக் கொள்ளப்படுவதும் அத்தகைய மாற்றம் அல்லது பொறுப்புக்கான பிரதிபயன் தொடர்பில் அல்லது எவரின் பயனுக்கு அல்லது நன்மைக்கு அது செயற்படவேண்டுமென்று உண்மையிற் கருதப்படுகின்றதோ அவ்வாள் அல்லது ஆட்கள் தொடர்பில் பொய்யான ஏதேனும் கூற்றைக் கொண்டிருப்பதுமான ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை நேர்மையீனமாக அல்லது மோசடியாக ஒப்பமிடுகின்ற நிறைவேற்றுகின்ற அல்லது அதற்குக் கட்சிக்காரராக எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டி னாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

பிரதிபயன் பற்றிப் பொய்யான கூற்றைக் கொண்டுள்ள மாற்றுதலுறுதியை நேர்மையீனமாக அல்லது மோசடியாக நிறைவேற்றுதல்

407. தனக்கு அல்லது வேறொருவரக்குச் சேர்ந்த ஏதெனும் ஆதனத்தை நேர்மையீனமாக அல்

ஆதனத்தை நோர்மையீனமாக அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசடி யாக அகற்றிச் செல்லல் அல்லது ஒளித்து வைத்தல் அல்லது கோரிக்கையை விட்டுவிடுதல்

லது மேசடியாக ஒளித்து வைக்கின்ற அல் லது அகற்றிச் செல்கின்ற அல்லது அது ஒளித்துவைக்கப்பட அல்லது அகற்றப்பட நேர் மையீனமாக அல்லது மோசடியாக உதவி செய்கின்ற அல்லது அவருக்குரித்து டைய ஏதேனும் கேளுரிமையை அல்லது கோரிக் கையை நேர்மையீனமாக விட்டுவிடுகின்ற எவ ரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

## சொத்தழிவும் அழிப்பாடுகளை சட்டவிரோதமாக அகற்றிச் செல்லலும் பற்றி

சொத்தழிவு

**408.** எவரேனுமாளுக்கு அல்லது பொதுமக்களுக்கு முறைகேடான நட்டம் அல்லது சேதம் விளைவிக்கும் கருத்துடன் அல்லது விளைக் கக் கூடுமென்று அறிந்து கொண்டு ஏதேனும் ஆதனத்துக்கு அழிவுவிளைக்கின்ற அல்லது அவ்வாதனத்தின் அல்லது அது இருக்கும் இடத்தில் அதன் பெறுமதியை அல்லது பயன் பாட்டை அழிக்கக்கூடிய அல்லது குறைக்கக் கூடிய அல்லது கேடுறும் முறையில் அதனைப் பாதிக்கக்கூடிய அத்தகைய ஏதேனும் மாற் றத்தை விளைக்கின்ற எவரும் ''சொத்தழிவு'' புரிகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் 1 - ஓறுபடுத்தப்படும் அல்லது அழிக்கப் படும் ஆதனத்தின் சொந்தக்கார னுக்கு நட்டம் அல்லது சேதத்தை விளைக்கத் தவறாளர் கருதியிருக்க வேண்டுமென்பது சொத்தழிவுத் தவ றுகள் அத்தியாவசியமானதல்ல ஏதே னும் ஆதனம் அவ்வாளுக்குச் சொந்த மானதாயிருப்பினுஞ் சரி இல்லாவிடி னுஞ்சரி ஈ அவ்வாதனத்தைத்துக்கு ஊறுவிளைப்பதன் மூலம் ஆளொரு வருக்கு முறைகேடான நட்டம் அல் லது சேதத்தை அவர் விளைவிக்கக் கருதினால் அல்லது அவர் விளைக் கக் கூடுமென்று அறிந்திருந்தால் போதுமானது.

விளக்கம்2. அச்செயலைப் புரிகின்ற ஆளுக்கு அல்லது அவ்வாளுக்கும் வேறு ஆட் களுக்கும் கூட்டாகச் சொந்தமா யுள்ள ஆதனத்தைப் பாதிக்குஞ் செயலொன்றன் மூலம் சொத்தழிவு புரியப்படலாம்.

**எடுத்துக்காட்டு**

*(அ) க வுக்கு முறைகேடான நட்டம் விளைக்குங் கருத்துடன் க வுக்குச் சொந்த மான பெறுமதியான பிணையொன்றை அ வேண்டுமென்று எரிக்கிறார். அ சொத்தழி வைப் புரிந்துள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) க வுக்கு முறைகேடான நட்டம் செய்யக் கருதி க வுக்குச் சொந்தமான பனிக்கட்டி தயாரிக்கும் இடத்தினுள் அ தண்ணீரைப் பாய்ச்சி அதனால் பனிக்கட்டியை உருகச் செய்கிறார். அ சொத்தழிவைப் புரிந்துள்ளார்.

(இ) க வுக்கு முறைகேடான நட்டத்தை அதன்மூலம் விளைக்கக் கருதி க வுக்குச் சொந்தமான மோதிரமொன்றை அ வேண்டுமென்று ஆற்றில் எறிகின்றார். அ சொத்தழிவைப் புரிந்துள்ளார்.

(ஈ) அ தன்னிடமுள்ள க வுக்குச் செல்லுதியாகவுள்ள ஒரு கடனைத் திருப்திப்படுத்துவதற்காகத் தன் சொத்துக்கள் நீதிமன்றத்தால் எடுக்கப்படவுள்ளன என அறிந்துகொண்டு க கடன் திருப்திபெறாது தவிர்த்து அதன் மூலம் க வுக்குச் சேதம் ஏற்படுத்தும் கருத்துடன் அச்சொத்துக்களை அழிக்கிறார். அ சொத்தழிவைப் புரிந்துள்ளார்.

(உ) அ என்பவர் கப்பலொன்றைக் காப்புறுதி செய்துகொண்டு காப்புறுதியாளருக்குச் சேதம் விளைவிக்கும் கருத்துடன் வேண்டுமென்று அக்கப்பல் சேதமுறும்படி செய்துவிடுகிறார். அ சொத்தழிவைப் புரிந்துள்ளார்.

(ஊ) கப்பல் படகு முறியொன்றில் கப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லொன்றின் மீதி கடன் கொடுத்துள்ளவரான க வுக்கு அதனால் சேதம் விளைக்கும் கருத்துடன் அக்கப்பல் சேதமுறும்படி அ செய்கிறார். அ சொத்தழிவைப் புரிந்துள்ளார்.*

*(எ) க வுடன் கூட்டுரிமையுள்ள குதிரையொன்றை அதன் மூலம் க வுக்கு முறைகேடான நட்டம் விளைக்கக் கருதி அ அக்குதிரையைச் சுட்டுக்கொள்ளுகிறார். அ சொத்தழிவைப் புரிந்துள்ளார்.*

*(ஏ) க வின் பயிருக்குச் சேதம் விளையும் என்று கருதியும் அல்லது அதனால் தான் விளைக்கக்கூடும் என்று அறிந்தும் கவுக்குச் சொந்தமான வயல் ஒன்றினுள் அ கால்நடைகளைப் புகவிடுகிறார் அ சொத்தழிவைப் புரிகிறார்.*

**409.** சொத்தழிவை புரியும் எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சொத்தழிவைப் புரிவதற்கான தண்டனை

**410.** சொத்தழிவைப் புரிந்து அதனால் ஐம்பது ரூபாவும் அதற்கு மேற்படவும் நட்டம் அல்லது சேதம் விளைக்கும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்

சொத்தழிவை புரிதலும் அதனால் ஐம்பது ரூபா சேதம் விளைவித்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பத்து ரூபா பெறுமதியுள்ள ஏதேனும் விலங்கைக் கொல்லல் அல்லது உறுப்புக்குறைத்தல் மூலமான சொத்தழிவு

411. பத்து ரூபா அல்லது அதற்கு மேற்படப் பெறுமதியுள்ள ஏதேனும் விலங்கை அல்லது எவையேனும் விலங்குகளைக் கொல்லல் நஞ் சூட்டல் உறுப்புக் குறைத்தல் அல்லது பய னற்றதாக்கல் மூலம் சொத்தழிவு புரியும் எவ ரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

கால்நடை முதலியவற்றை அல்லது ஐம்பது ரூபா பெறுமதியுள்ள ஏதேனும் விலங்கைக் கொல்லல் அல்லது உறுப்புக் குறைத்தல் மூலமான சொத்தழிவு

412. எப்பெறுமதியினையுடைய ஏதேனும் யானை, ஒட்டகம், குதிரை, கழுதை, கோவேறு கழுதை எருமை, எருது, பசு, அல்லது மாட்டை அல் லது ஐம்பது ரூபா அல்லது அதற்கு மேற் படப் பெறுமதியுள்ள வேறேதேனும் விலங் கைக் கொல்லல் நஞ்சூட்டல் உறுப்புக் குறைத் தல் அல்லது பயனற்றதாக்கல் மூலம் சொத் தழிவு புரியும் எவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டி னாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நீர்ப்பாசன வேலைகளுக்கு ஊறுவிளைத்தல் மூலமாக அல்லது முறைகேடாகத்

413. கமத்தொழில் நோக்கங்களுக்காக அல்லது மனிதரின் உணவுக்காக அல்லது குடி தேவைக்காக அல்லது ஆதனமாகவுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகளுக்காக அல்லது துப்பரவுக்காக அல்லது ஏதேனும் உற்பத்தித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக வழங்கப்படும் நீரில் குறைவேற்படுத்தும் அல்லது குறைவேற் படுத்தக் கூடும் என அவர் அறிந்த செயல் எதனையும் செய்வதன் மூலம் சொத்தழிவு புரியும் எவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினா லும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தண்ணீரை நெறிமாற்றல் மூலமான சொத்தழிவு.

414. ஏதேனும் பொது வீதியை பாலத்தை கப்ப லோடத்தக்க ஆற்றை அல்லது இயற்கை யான அல்லது செயற்கையான கப்பலோடத் தக்க கால்வாயைச் செல்ல முடியாததாக அல்லது போக்குவரத்துக்கு அல்லது ஆத னங்களை எடுத்துச் செல்வதற்கு இடையூ ருள்ளதாக ஆக்குகின்ற அல்லது ஆக்கக்கூட மென அவர் அறிந்து எதேனும் செயலைச் செய்வதன் மூலம் சொத்தழிவை புரியும் எவ ரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

பொது வீதி பாலம் அல்லது ஆற்றுக்கு ஊறு விளைத்தல் மூலமான சொத்தழிவு

415. ஏதேனும் பொதுவடிகாலுக்கு கூறு அல்லது சேதத்தோடு கூடின தேக்கத்தை அல்லது தடையை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்

பொதுவடி காலுக்குச் சேதத்தோடு கூடின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கம் அல்லது தடை மூலமான சொத்தழிவு

தக் கூடும் என அவர் அறிந்து செயல் எதனையும் செய்வதன் மூலம் சொத்தழிவு புரியும் எவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

வெளிச்ச வீட்டை அல்லது கடற்குறியை அழித்தல் இடம் பெயர்த்தல் அல்லது பயன் குறைந்ததாக்கல் மூலமான சொத்தழிவு

**416.** ஏதேனும் வெளிச்சவீட்டை, கடற்குறியாகப் பயன்படுத்தி வேறு வெளிச்சத்தை, அல்லது ஏதேனும் கடற்குறியை அல்லது மிதப்பியை அல்லது கப்பலோட்டிகளுக்கு வழிகாட்டி யொன்றாக வைக்கப்பட்டுள்ள வேறு பொருளை அழித்தல் மூலம் அல்லது இடம்பெயர்த்தல் மூலம் அல்லது அத்தகைய ஏதேனும் வெளிச்ச வீட்டை, கடற்குறியை, மிதப்பியை அல்லது முன்னர் சொல்லப்பட்டவாறுள்ள அத்தகைய ஏதேனும் பொருளைக் கப்பலோட்டிகளுக்கு வழிகாட்டியொன்றாகப் பயன்குற்றியதாக்கும் ஏதேனும் செயல்மூலம் சொத்தழிவு புரியும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

பகிரங்க ஊழியரொருவரின் அதிகாரத்தினால் நிறுவப்பட்ட நிலக் குறியை

**417.** பகிரங்க ஊழியரொருவரின் அதிகாரத்தினால் நிறுவப்பட்ட ஏதேனும் நிலக்குறியை அழிப்பதன் மூலம் அல்லது இம்பெயர்தல் மூலம் அல்லது அத்தகைய நிலக்குறி அவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதலில் பயன்குன்றியதாக்கும் ஏதேனும் செயல்மூலம் சொத்தழிவு புரியும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அழித்தல் அல்லது இடம் பெயர்த்தல் முதலியன மூலமான சொத் தழிவு

418. ஏதேனும் ஆதனத்திற்கு நூறு ரூபா அல்லது அதற்கு மேற்படச் சேதம் விளைக்கும் கருத் துடன் அல்லது அதன் மூலம் தாம் சேதம் விளைக்கக்கூடும் என்ற அறிவுடன் தீயினால் அல்லது ஏதேனும் வெடிப்பொருளினால் சொத்தழிவு புரியும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண் டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

நூறு ரூபாவுக்குச் சேதம் விளைக்கும் கருத்துடன் தீயினால் அல்லது வெடிப்பொரு ளினாலான சொத்தழிவு

419. வழிபாட்டிடமொன்றாக அல்லது மனிதவாழிட மொன்றாக அல்லது ஆதனக் கட்டுக்காப்புக் கான இடமாகச் சாதாரணமாகப் பயன்படுத் தப்படும் ஏதேனும் கட்டடத்திற்கு அழிவு விளை விக்கும் கருத்துடன் அல்லது அதன் மூலம் தாம் அழிவு விளைவிக்கக்கூடும் என்ற அறிவு டன் தீயினால் அல்லது ஏதேனும் வெடிப்பொரு ளினால் சொத்தழிவு புரியும் எவரும் பதினைந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

வீடு முதலியவற்றை அழிக்கும் கருத்துடன் தீயினால் அல்லது வெடிப்பொருளினா லான சொத்தழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளமுள்ள பத்துத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட சுமையுடைய கலம் ஒன்றை அழிக்கும் அல்லது ஆபத்தான தாக்கம் கருத்துடனான சொத்தழிவு

420. தளமுள்ள ஏதேனும் கலனை அல்லது பத்துத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட சுமையையுடைய ஏதேனும் கலனை அழிக்கும் அல்லது ஆபத்தானதாக்கும் கருத்துடன் அல்லது அதனால் தாம் அழிக்கக்கூடும் அல்லது ஆபத்தானதாக்கக்கூடும் என்ற அறிவுடன் அக்கலனுக்குச் சொத்தழிவு புரியும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

இறுதியான பிரிவினால் விபரிக்கப்பட்ட சொத்தழிவு தீயினால் அல்லது ஏதேனும் வெடிப் பொருளினால் புரியப்பட்டிருப்பின் தண்டனை.

421. இறுதியாக முற்போந்த பிரிவில் விபரிக்கப்பட்ட அத்தகைய சொத்தழிவைத் தீயினால் அல்லது ஏதேனும் வெடிப்பொருளினால் புரியும் அல்லது புரிய எத்தனிக்கின்ற எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றபணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

களவு முதலிய புரியுங் கருத்துடன் வேண்டு மென்று கலனைத் தரைதட்டுதல் அல்லது கரைக்குக் கொண்டு வருதல்.

422. ஏதேனும் கலத்தை அதிலுள்ள ஏதேனும் சொத்தைத் திருடுகின்ற அல்லது ஏதேனுமத்தகைய ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாடுகின்ற கருத்துடன் அல்லது அத்தகைய திருட்டு அல்லது கையாடல் புரியப்படலாமென்ற கருத்துடன் வேண்டுமென்று ஏதேனும் கலனைத் தரைதட்டுகின்ற அல்லது கரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் கொண்டு வருகின்ற எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

கலனொன்றைக் காப்பாற்றுவதற்குத் தடங்கல் செய்வதற்கான தண்டனை.

423. ஏதேனும் கடலின்மீது, அல்லது பெருக்க நீரின்மீது அல்லது அவற்றின் கரையோரமாகத் தரைதட்டியுள்ள, அல்லது தரைதட்டும் ஆபத்திலுள்ள, அல்லது வேறுவகையில் அல்லலிலுள்ள ஏதேனும் கலனை அல்லது அத்தகைய கலனிலுள்ள கப்பற்சரக்கின், அல்லது அதன் உபகரணத்தின் ஏதேனும் பாகத்தை அல்லது அதன் சேதப்பொருளைக் காப்பாற்றுவதிலிருந்து சட்டமுறையான காரணமின்றித் தடைசெய்ய அல்லது தடங்கல் செய்ய எவ்வகையிலேனும் முயற்சிக்கும் எவரும், ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கப்பற் சேதப்பொருளை அகற்றுவதற்கு அல்லது இரகசியமாக மறைத்து வைப்பதற்கான தண்டனை.

424. ஏதேனும் கடல் மீது அல்லது பெருக்குநீரின் மீது அல்லது அவற்றின் கரையோரமாகத் தரைதட்டியுள்ள அல்லது தரைதட்டும் ஆபத்திலுள்ள அல்லது வேறுவகையில் அல்லலிலுள்ள ஏதேனும் கலனின் ஏதேனும் பாகத்தை அல்லது அதற்கு கப்பற்சரக்கின் ஏரேனும் சேதப்பொருளைச் சட்டவிரோதமாக எடுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுகின்ற அல்லது அகற்றிச் செல்லுகின்ற எவரும், அத்துடன் ஏதேனும் கப்பற்சேதப்பொருளைச் சட்டவிரோதமாக மறைத்து வைக்கின்ற அல்லது அதன்மீதுள்ள ஏதேனும் குறியைத் தெளிவுபடுத்துகின்ற அல்லது உருவழிக்கின்ற எவரும், ஓராண்டுவரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

கப்பற்சேதப் பொருளை பிறநாட்டுத் துறை முகத்துக் கெடுத்துச் செல்லல்

425. இலங்கையில் கடற்கரைமீது அல்லது ஏதேனும் பெருக்கு நீரின் கரைமீது அல்லது ஆற்றின் அண்மையில் தரைதம்பியுள்ள, கைவிடப்பட்டுள்ள அல்லது வேறுவகையில் அல்லலிலுள்ள ஏதேனும் கலனை அல்லது அக்கலனின் கப்பற்சரக்கின் அல்லது உப கரணத்தின் ஏதேனும் பாகத்தை அல்லது மேற்சொல்லப்பட்ட அத்தகைய கடற்கரை மீது அல்லது கரைமீது அல்லது அதற்கண்மையில் காணப்படும் அதற்குச் சேர்ந்த எதனையும் அல்லது கப்பற்சேதப்பொருள் எதனையும் சட்டவிரோதமாக ஏதேனும் பிறநாட்டுத் துறைமுகத்திற்கு அல்லது இடத்திற்கு எடுத்துச் சென்று அங்கு அவற்றை விற்கின்ற எவரும், ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் - பிரிவுகள் 423, 424, 425 என்பவற்றில் பயன்படுத்தப்பட்ட கப்பற்சேதப்பொருள் என்பது, எறிசரக்கு, சேதமிதப்புப்பெருள், மூழ்கிய பொருள், கைவிடப்பட்ட பொருள் என்பவற்றை உள்ளடக்கும்.

மரணம் அல்லது காயம் விளைக்கும் முன்னேற்பாடு செய்தபின் புரியப்படும் சொத்தழிவு

**426.** எவரேனுமாளுக்கு மரணத்தை அல்லது காயத்தை அல்லது முறைகேடான தடையை அல்லது மரணம் அல்லது காயம் அல்லது முறைகேடான தடையேற்படுமென்ற பயத்தை விளைக்க முன்னேற்பாடு செய்துவிட்டு, சொத் தழிவு புரியும் எவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படு தல் வேண்டுமென்பதோடு, குற்றப் பணத்திற் கும் அவர் ஆளாதல் வேண்டும்.

குற்ற முறையான அத்துமீறல்

**427.** வேறோருவர் குடியிருக்கும் ஆதனத்தில். அல் லது அதன் மீது தவறொன்று புரியும், அல் லது அவ்வாதனத்தில் குடியிருக்கும் ஆளை அச்சுறுத்தும், அல்லது நிந்திக்கும் அல்லது மனக்குலைவுறச் செய்யும் கருத்துடன், அல் லது அத்தகைய ஆதனத்தினுள், அல்லது அதன் மீது சட்டமுறையாகப் புகுந்துவிட்டு, அத்தகைய எவரேனுமாளை அதன் மூலம் அச்சு றுத்தும், நிந்திக்கும் அல்லது மனக் குலைவு றச் செய்யும் கருத்துடன் அல்லது தவிறொன்று புரியுங் கருத்துடன் சட்ட விரோத மாக அங்கு தங்கிநிற்கும் எவரும் “குற்றமுறையான அத்து மீறலை” புரிவதாகச் சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடத்துமீறல்

**428.** மனிதவாழிடமொன்றாகப் பயன்படும் ஏதேனும் கட்டிடம், கூடாரம் அல்லது கலனுள், அல்லது வழிபாட்டுக்கான இடமொன்றாக அல்லது கட்டுக்காப்புக்கான இடமொன்றாகப் பயன் படும் ஏதேனும் கட்டிடத்துள் புகுதல் மூலம், அல்லது அங்கு தங்கிநிற்றல் மூலம் குற்ற முறையான அத்துமீறலைப் புரியும் எவரும் "வீடத்தமீறல்" புரிவதாகச் சொல்லப்படும்

விளக்கம் - குற்றமுறையாக அத்துமீறுபவரின் உடலினெப்பாகத்தையேனும் உட் புகுத்தல் வீடத்துமீறலாக அமைவ தற்குப் போதிய புகுதலாகும்.

பதுங்கி வீடத்துமீறல்

**429.** அத்துமீறலுக்குப் பொருளாயமைந்த கட்டிடம், கூடாரம் அல்லது கலணிலிருந்து அத்து மீறு பவரை வெளிநிறுத்துவதற்கு அல்லது வெளி யேற்றுவதற்கு உரிமையுடைய ஆளிடமிருந்து அத்தகைய வீடத்துமீறலை ஒளித்து வைப்ப தற்குக், காப்பேற்பாடு செய்த பின்னர் வீடத்து மீறும் எவரும் "பதுங்கி வீடத்துமீறல்" புரிவதா கச் சொல்லப்படும்.

இரவில் பதுங்கி வீடத்துமீறல்

**430.** சூரியன் மறைந்தபின்னரும் சூரியன் தோன்று முன்னரும் பதுங்கி வீடத்துமீறும் எவரும் "இரவில் பதுங்கி வீடத்துமீறல்" புரிவதாகச் சொல்லப்படும்

வலிந்து வீடுபுகுதல்

**431.** வீடத்துமீறலைப் புரியும் ஆளொருவர் இதன கத்துப் பின்னர் விவரிக்கப்படும் ஆறு வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுள் ஒரு வழியினால், வீட்டினுள் அல்லது அதன் ஏதேனும் பகுதியுள் புகுந்தால் அல்லது தவறொன்று புரிவதற்கென அவ்வீட்டில், அல்லது அதன் ஏதேனும் பகுதியில் இருந்தவராய், அல்லது அங்கு தவறொன்றைப் புரிந்துவிட்டு அத்தகைய ஆறு வழிகளுள் ஒரு வழியினால் அவ்வீட்டிலிருந்து அல்லது அதன் ஏதேனும் பகுதியிலிருந்து அவர் வெளியேறினால், அவர் வலிந்து வீடு புகுதலைப் புரிவதாகச் சொல்லப்படும் :-

**முதலாவதாக** :- அவ்வீடத்துமீரலைப் புரிவதற்காகத் தன்னால் அல்லது வீடத்துமீறலுக்கு எவரேனும் உடந்தை அளிப்பவரால் ஆக்கப்பட்ட நுழைவழி மூலம் அவர் உட்புகுந்தால் அல்லது வெளியேறினால்.

**இரண்டாவதாக** :- அவர், அல்லது அத்தவறுக்கு உடந்தையாளர் தவிர்ந்த வேறு ஆள் எவராலும் மனிதர்கான வழியாகக் கருதப்படாத ஏதேனும் நுழைவாயினால், அல்லது ஏதேனும் சுவரை அல்லது கட்டிடத்தை ஏறி அல்லது பாய்ந்து எய்தியுள்ள ஏதேனும் துணைவழியினால் அவர் உட்புகுந்தால் அல்லது வெளியேறினால்.

**மூன்றாவதாக**:- அவ்வீட்டில் குடியிருப்பவரால் அந்நுழைவாயில் எவ்வகையாகவேனும் திறக்கக் கருதப்படாததும் வீடத்துமீறலை புரிவதற்காக அவர் அல்லது வீடத்துமீற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுக்கு உடந்தையாளர் எவரும் திறந்துள்ள துமான ஏதேனும் நுழைவழியினால் அவர் உட்புகுந்தால் அல்லது வெளியேறினால்.

**நான்காவதாக** :- வீடத்துமீறலைப் புரிவதற்காக, அல்லது வீடத்துமீறலைப் புரிந்தபின் அவ்வீட்டை வீட்டு வெளியேறுவதற்காக ஏதேனும் பூட்டைத் திறப்பதன் மூலம் அவர் உட்புகுந்தால் அல்லது வெளியேறினால்.

**ஐந்தாவதாக** :- குற்றமுறையான வலோற்காரத்தைப் பிரயோகித்து அல்லது தாக்குதலைப் புரிந்து அல்லது எவரேனுமாளைத் தாக்குவதாக அச்சுறுத்தி அவர் உட்புகுந்தால் அல்லது புறப்பட்டால்.

**ஆறாவதாக** :- அத்தகைய புகுதலுக்கு அல்லது புறப்பாட்டுக்குத் தடையாகப் பிணைக்கப்பட்டுள்ளதெனவும், அவரால் அல்லதுஅத் தகைய வீடத்துமீறற்கான உடந்தையாளரால் அவிழ்க்கப்பட்டுள்ளதெனவும் அவர் அறிந்த ஏதேனும் நுழைவழியின் மூலம் அவர் உட்புகுந்தால் அல்லது வெளியேறினால்.

**விளக்கம்:-** ஒரு வீட்டோடு சேருக்கு குடியிருப்பிடமாக உள்ளதும் அவ்வீட்டிற்கும் அதற்குமிடையில் நெருங்கிய உட்தொடர்புள்ளதுமான புறவீடு எதுவும் இப்பிரிவின் பொருளுக்குட்பட வீட்டின் பாகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டுகள்**

அ) க வினது வீட்டுச் சுவரில் துவார மொன்றுண்டாக்கி ஈ அதனூடாகக் கையை நுழைப்பதன் மூலம், அ வீடத்துமீறுகிறார். இது வலிந்து வீடுபுகுதலாகும்.

ஆ) ஒரு கப்பலின் தளங்களுக்கிடையே யுள்ள பக்கத்துவாரத்தின் ஊடாக நுழை வதன் மூலம் அ வீடத்துமீறுகிறார். இது வலிந்து வீடு புகுதலாகும்.

இ) அ வினுடைய வீட்டின் யன்னலூடாகப் புகுதல் மூலம் அ வீடத்துமீறுகிறார். இது வலிந்து வீடுபுகுதலாகும்.

ஈ) க வினுடைய வீட்டின் பிணைக்கப்பட் டுள்ள கதவொன்றைத் திறந்துகொண்டு அதனூடாகப் புகுவதன் மூலம் அ வீடத்து மீறுகிறார். இது வலிந்து வீடுபுகுதலாகும்.

உ) க வினுடைய வீட்டின் கதவிலுள்ள துவாரத்தினூடாகக் கம்பியொன்றை விட்டுப் பூட்டை உயர்த்திவிட்டு, அக்கதவினூடாக நுழைவதன் மூலம் அ வீடத்துமீறுகிறார். அது வலிந்து வீடுபுகுதலாகும்.

ஊ) அ தொலைத்துவிட்டதான க வீட்டுக் கதவின் திறனை, அ கண்டெடுத்து, அத் திறப்பினால் கதவைத் திறந்து க வின் வீட்டினுள் புகுவதன் மூலம் அ வீடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீறுகிறார். இது வலிந்து வீடுபுகுதலாகும்.*

*ஏ) க தனது வீட்டுவாசலில் நிற்க, க வை அடித்து வீழ்த்தி க வின் வீட்டினுள் உட் புகுவதன் மூலம் அ வீடத்துமீறுகிறார். இது வலிந்து வீடு புகுதலாகும்.*

*ஏ) ங வின் பணிக்காப்பாளராக க, ங வின் வாயிலில் நிற்கின்றார். க வை அடிக்கப் போவதாக அச்சுறுத்தித் தமக்கு எதிர்ப்புக் காட்டுவதைத் தடுத்துவிட்டு, அ வீட்டினுள் புகுவதன் மூலம் வீடத்துமீறுகிறார். இது வலிந்த வீடுபுகுதலாகும்.*

இரவில் வலிந்து வீடுபுகுதல்

432. சூரியன் மறைந்தபின்னரும் சூரியன் தோன்று முன்னரும் வலிந்த வீடுபுகும் எவரும் இரவில் வலிந்து வீடுபுகுவதாகச் சொல்லப்படும்

குற்ற முறையான அத்து மீறலுக்கான தண்டனை

433. குற்றமுறையான அத்துமீறலைப் புரியும் எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வீடத்து மீறலுக்கான தண்டனை

434. வீடத்துமீறும் எவரும் ஓரண்டுவரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொரு வகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தி னால் அல்லது ஆயிரம் ரூபா வரை செல்லக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய குற்றப்பணத்தினால், அல்லது இவை இரண்டினாலும். தண்டிக்கப்படுதல் வேண்டும்.

435. மரணதண்டனை விதிக்கக்கூடிய தவறொன் றைப் புரிவதற்காக வீடத்துமீறும் எவரும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத் திற்குக் கடூழிய மறியலினால் தண்டிக்கப்படு தல் வேடுமென்பதோடு குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

மரண தண்டனை விதிக்கக்கூடிய தவ றொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறல்

436. பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவ றொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறும் எவ ரும் பத்து ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறிய லினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்ப தோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு மறியலினால் தண்டிக்கக் கூடிய தவறொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறல்

437. பத்து ஆண்டுகளுக்கு உட்பட்ட ஒரு காலத் திற்கு மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவ றொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளா தல் வேண்டும். அத்துடன் புரிவதற்குக் கரு தப்பட்ட தவறு திருட்டாயின் மறியற்றண்ட னைக்காலம் ஏழு ஆண்டுகள்வரை நீடிக்கலாம்.

பத்து ஆண்டுகளுக்கு உட்பட்ட ஒரு காலத்திற்கு மறியலினால் தண்டிக்கக் கூடிய தவறொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோனு மாளுக்குக் காயம் விளைப்பதற்கு முன்னேற்பாடு செய்தபின்னர் வீடத்துமீறல்.

**438.** எவரேனுமாளுக்குக் காயம் விளைப்பதற்கு அல்லது எவரையேனும் தாக்குவதற்கு அல்லது எவரையேனும் முறைகேடாகத் தடுத்து வைப்பதற்கு அல்லது காயம் அல்லது தாக்குதல் அல்லது முறைகேடான தடை ஏற்படும் என்று எவரையேனும் பயத்தினுட்படுத்த முன்னேறபாடு செய்துவிட்டு வீடத்துமீறும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவனை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பதுங்கி வீடத்துமீறல் அல்லது வீடு புகுவதற்கான தண்டனை

**439.** பதுங்கி வீடத்துமீறும் அல்லது வலிந்து வீடு புகும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு, குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

மறியலினால் தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றைப் புரிவதற்காக பதுங்கி வீடத்துமீறும் அல்லது வலிந்து வீடுபுகுதல்.

**440.** மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றைப் புரிவதற்காக பதுங்கிவீடத்துமீறும் அல்லது வலிந்து வீடுபுகும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும், அத்துடன் தவறு திருட்டாயின் மறியற்ற ண்டனைக்கலாம் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

441. எவரேனுமாளுக்குக் காயம் விளைப்பதற்கு அல்லது எவரையேனும் தாக்குவதற்கு அல்லது எவரையேனும் முறைகேடாகத் தடுத்து வைப் பதற்கு அல்லது காயம் அல்லது தாக்குதல் அல்லது முறைகேடான தடை ஏற்படும் என்று எவரையேனும் பயத்தினுட் படுத்த முன்னேற்பாடு செய்தவிட்டுப் பதுங்கி வீடத்துமீறும் அல்லது வீடுபுகும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

எவரேனு மாளுக்குக் காயம் விளைப்பதற்கு முன்னேற் பாடு செய்தபின்னர் பதுங்கி வீடத்துமீறல் அல்லது வலிந்து வீடுபுகுதல்.

442. இரவில் பதுங்கி வீடத்துமீறும், அல்லது இரவில் பதுங்கி வீடுபுகும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

இரவில் பதுங்கி வீடத்து மீறலுக்கு அல்லது இரவில் பதுங்கி வீடு புகுவதற்கான தண்டனை.

443. மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றைப் புரிவதற்காக இரவில் பதுங்கி வீடத்துமீறும் அல்லது இரவில் வலிந்து வீடு புகும் எவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும், அத்துடன் புரிவதற்குக் கருதப்பட்ட தவறு திருட்டாயின் மறி

மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தவறொன்றைப் புரிவதற்காக இரவில் பதுங்கி வீடத்து மீறும் அல்லது இரவில் வலிந்து வீடுபுகுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யற்றண்டனைக்காலம் பதினான்கு ஆண்டுகள் வரை நீடிக்கப்படலாம்.

எவரேனுமாளுக்குக் காயம் விளைப்பதற்கு முன்னேற்பாடு செய்த பின்னர் இரவில் பதுங்கி வீடத்துமீறல் அல்லது இரவில் வலிந்து வீடுபுகுதல்.

444. எவரேனுமாளுக்குக் காயம் விளைப்பதற்கு அல்லது எவரையேனும் தாக்குவதற்கு அல்லது எவரையேனும் முறைகேடாகத் தடுத்து வைப்பதற்கு அல்லது காயம் அல்லது தாக்குதல் அல்லது முறைகேடான தடை ஏற்படும் என்று எவரையேனும் பயத்தினுட்படுத்த முன்னேற்பாடு செய்துவிட்டு மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றைப் புரிவதற்காக இரவில் பதங்கி வீடத்துமீறும் அல்லது இரவில் வலிந்து வீடுபுகும் எவரும் பதினாஞ்கு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டு

பதுங்கி வீடத்துமீறலை அல்லது வலிந்து வீடு புகுதலைப் புரியும் பொழுது காயம் விளைத்தல்

445. பதுங்கி வீடத்துமீறலை அல்லது வலிந்து வீடுபுகுதலைப் புரியும் பொழுது எவரேனுமாளுக்குக் கடும் காயம் விளைக்கும் அல்லது எவரேனுமாளுக்கு மரணம் அல்லது கடும்காயம் விளைக்க எத்தனிக்கும் எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு தென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

446. இரவில் பதுங்கி வீடத்துமீறலை அல்லது இரவில் வலிந்து வீடுபுகுதலைப் புரியும் நேரத்தில், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகும் எவரேனுமாள், எவரேனுமாளுக்கு மரணம் அல்லது விளைக்க எத்தனித்தால், அத்தகைய இரவில் பதுங்கி வீடத்துமீறலை அல்லது இரவில் வலிந்து வீடுபுகுதலைப் புரிதலில் கூட்டாக ஈடுபட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவனை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

இரவில் பதுங்கி வீடத்துமீறலில் அல்லது இரவில் வலிந்து வீடுபுகுதலில் கூட்டாக ஈடுபட்டுள்ள ஆட்கள் எல்லோரும் அவர்களுளொருவரால். புரியப்பட்ட மரணத்திற்கு, அல்லது கடும் காயத்திற்கு தண்டித்தற் குரியராதல்

447. ஏதேனும் ஆதனத்தைக் கொண்டுள்ளதான அல்லது கொண்டுள்ளதாக அவர் நம்பும் ஏதேனும் மூடப்பட்ட கொள்கலனை நேர்மையீனமாக அல்லது சொத்தழிவுபுரியும் கருத்துடன் வலிந்து திறக்கும் அல்லது கட்டவிழ்க்கும் எவரும் இரண்டு ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஆதனத்தைக் கொண்டுள்ளதான அல்லது கொண்டுள்ளதாக எண்ணப்படும் மூடப்பட்ட ஏதேனும் கொள்கலனை நேர்மையீனமாக வலிந்து திறத்தல்.

448. ஏதேனும் ஆதனத்தைக் கொண்டுள்ளதான அல்லது கொண்டுள்ளதாக அவர் நம்பும் ஏதேனும் மூடப்பட்ட கொள்கலனை நம்பி ஒப்படைக்கப்பட்டவராய், அதனைத் திறப்பதற்கு அதிகாரமில்லாமல் அக்கொள்கலனை நேர்மை

கட்டுக்காப்பு நம்பி ஒப்படைக்கப்பட்ட ஆளினால் அத்தவறு புரியப்படுமிடத்துத் தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யீனமாக அல்லது சொத்தழிவு புரியும் கருத்துடன் வலிந்து திறக்கும் அல்லது கட்டவிழ்க்கும் எவரும் மூன்றாண்டுள்ளவரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வலிந்து வீடுபுகுவதற்கான கருவியைச் சட்ட விரோதமாக உடைமையில் வைத்திருத்தல் அல்லது தீங்கு விளைக்கும் ஆயுதத் தாங்கியிருத்தல்.

**449.** வலிந்து வீடுபுகுதற்கான ஏதேனும் கருவியைத் தமது கட்டுக்காப்பில் அல்லது உடைமையில் சட்டமுறையான விளக்கமின்றி, (அதனை நிரூபிக்கும் பொறுப்பு அவர் மேலதாகும்) வைத்திருக்க அல்லது ஏதேனும் சட்டவிரோதமான செயலைப் புரியுங் கருத்துடன் ஏதேனும் அபாயமான அல்லது தீங்கு விளைக்கும் ஆயுதத்தைத் தாங்கியிருக்கக் காணப்படும். எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொரு மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய கருவி அல்லது ஆயுதம் முடிக்கு இழக்கப்படுதல் வேண்டும்.

சட்ட விரோதமான நோக்கத்துக் காகக் கூட்டம் முதலியவற்றில் காப்படுதல்.

**450.** ஏதேனும் சட்டவிரோதமான நோக்கத்துக்காக ஏதேனும் கட்டடத்தில் அல்லது அடைப்பில் அல்லது அதன் மீது காணப்படும் எவரும், ஏதேனும் கட்டடத்தில் அல்லது அடைப்பில் அல்லது அதன் மீது காணப்படவராய் தன்னைப் பற்றித்திருப்திகரமான விளக்கந்தரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறும் எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் அல்லது ஐம் பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத் தினால் அல்லது இவை இரண்டினாலும் தண் டிக்கப்படுதல் வேண்டும்.

451 பெயர்பெற திருடனாகி, திருட்டை அல்லது வேறு ஏதேனும் சட்டவிரோதமான செயலைப் புரியும் கருத்துடன் ஏதேனும் பகிரங்க இடம் அல்லது சரக்குமேடை அல்லது பண்டக சாலை அல்லது ஏதேனும் துறைமுகத்தில் அல்லது நீர்நிலையில் உள்ள ஏதேனும் கலன் என்பவற்றுக்குச் சமீபமாக அமைந்து திரியும் அல்லது பதுங்கித்திரியும் எவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையலொருவகை மறி யலினால் அல்லது ஐம்பது ரூபாவுக்கு மேற் படாத குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பெயர் பெற்ற திருடன் அலைந்து திரிதல்

## அத்தியாயம் XVIII

ஆவணங்கள், ஆதனக்குறிகள், நாணயத்தாள்கள், வங்கிப்பத்திரங்கள் என்பன தொடர்பிலான தவறு கள் பற்றி

452. பொதுமக்களுக்கு அல்லது எவரேனுமா ளுக்கு அல்லது அரசாங்கத்துக்குச் சேதம் அல்லது ஊறு அ விளைக்கும் அல்லது ஏதே

பொய் ஆவணம் புனைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் கோரிக்கைக்கு அல்லது உரித்துக்கு ஆதரவளிக்கும் கருத்துடன் அல்லது எவரேனுமாளை ஆதனத்தை அளிக்கும்படி அல்லது ஏதேனும் வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளும்படி செய்யும் கருத்துடன் அல்லது மோசடியைப் புரியும் அல்லது மோசடி புரியப்படலாம் என்ற கருத்துடன் ஏதேனும் மெய் ஆவணத்தை அல்லது அதன் பாகத்தை ஆக்கும் எவரும் பொய் ஆவணம் புனைவதாகச் சொல்லப்படும்.

பொய் ஆவணம் ஆக்கல்

**453. முதலாவதாக** - ஆவணமொன்று அல்லது அதன் பாகம், ஆள் ஒருவரால் அல்லது அவரின் அதிகாரத்தின் மீது ஆக்கப்படவில்லை. ஒப்பமிடப்படவில்லை, இலச்சினையிடப்படவில்லை அல்லது நிறைவேற்றப்படவில்லை என்பதனை அறிந்துகொண்டு அவ்வாளினால் அல்லது அவர் அதிகாரத்தின்மீது அந்நேரத்தில் ஆக்கப்பட்டது, ஒப்பமிடப்பட்டது. இலச்சினையிடப்பட்டது அல்லது நிறைவேற்றப்பட்டது என நம்பப்படச்செய்யும் கருத்துடன் ஆவணமொன்றை அல்லது ஆவணமொன்றன் பாகத்தை நேர்மையீனமாக அல்லது மோசடியாக ஆக்குகின்ற, ஒப்பமிடுகின்ற, இலச்சினையிடுகின்ற அல்லது நிறை வேற்றுகின்ற அல்லது ஓர் ஆவணம் நிறைவேற்றப்பட்டதாகக் காட்டும் ஏதேனும் குறியை ஆக்குகின்ற எவரும், அல்லது

இரண்டாவது - தம்மால் அல்லது வேறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரால் செய்யப்பட்டபின்னர் அல்லது நிறைவேற்றப்பட்ட பின்னர் சட்ட முறையான அதிகாரமில்லாமல் நேர்மையீனமாக அல்லது மோசடியாக ஆவணமொன்றை அழிப்பதன் மூலம் அல்லது வேறு வகையாக அத்தணைய மாற்றஞ்செய்யும் நேரத்தில் அந்த வேறு ஆள் உடனிருப்பினும் சரி இறந்திருந் தாலும் சரி அதன் ஏதேனும் முக்கிய பாகத்தில் மாற் றஞ்செய்கின்ற எவரும்,

அல்லது

**மூன்றாவதாக** - ஆவணத்தின் உள்ளடக் கத்தை அல்லது மாற்றத்தின் தன்மையை ஆளொருவர் சித்தசுவாதீனமின்னை காரண மாக அல்லது குடிபோதை காரணமாக அவ ருக்கு அறியமுடியாதென அல்லது அவர் மேல் புரியப்பட்ட வஞ்சனை காரணமாக அறி யாரென அறிந்துகொண்டு நேர்மையீனமாக அல்லது மோசடியாக ஆளொருவரை எதே னும் ஆவணத்தை ஒப்பமிடுவிக்கும் இலச்சிண யிடுவிக்கும் நிறைவேற்றுவிக்கும் அல்லது மாற்றுவிக்கும் எவரும்,

பொய்யாவணம் ஆக்குவதாகச் சொல்லப்படு.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) க வினால் ஆ மீது எழுதப்பட்ட 10,000 ருபாவுக்கான நாணயக்கடிதத்தை அ வைத்தி ருக்கிறார். ஆ வை மோசடி செய்வதற்காக, க அவ்வாறாக எழுதினாரென ஆ வினால் நம்பப்படலாம் என்னுங் கருத்துடன் 10,000க்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சைவரைச் சேர்ந்த 100,000 ஆக்குகிறால். அ பொள் ஆவணம் புனைந்துள்ளார்.

(ஆ) அ என்பவர் க வின் தோட்டத்தை ஆவுக்கு விற்று ஆ விடமிருந்து விலைப் பணத்தைப் பெறுங் கருத்துடன் க வினால் அ வுக்கு அத் தோட்டத்தை மாற்றுவதற்காக கொள்ளப்படும் ஆவணத்துக்கு க வினது இலச்சினை க வினது அதிகாரமின்றிப் பொறிக்குகிறார். அ பொய் ஆவணம் புனைந்துள்ளார்.

(இ) வங்கியாளர் ஒருவர் மீது வரையப்பட்டதும், தொகை எதுவும் குறிப்பிடப்படாததும் கொண்டுவருபவருக்குக் கொடுபட வேண்டியதும், ஆ வினால் ஒப்பமிடப்பட்டதுமான காசோலையொன்றை அ கண்டெடுக்கிறார். அந்தக் காசோலையில் பத்தாயிரம் ரூபாவை எழுதுவதன் மோசடியாக அதனை நிரப்புகிறார். அ பொய் ஆவணம் புனைகிறார்.

(ஈ) தமது முகவரான ஆ என்பவரிடம், வங்கியாளர் மீது வரையப்பட்டுத் தொகை குறிப்பிடப்படாத காசோலை யொன்றை அ ஒப்பமிட்டுச் சில கொடுப்பனவுகளுக்காகப் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகையை எழுதும்படி அ வை அதிகாரமளித்துக் கொடுக்கிறார். இருபதினாயிரம் ரூபாத் தொகையை எழுதுவதன் மூலம் ஆ மோசடியாக அக்கா சோலையினை நிரப்புகிறார். ஆ பொய் ஆவணம் புனைகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) வங்கியாளரொருவரிடம் உண்மையான உண்டியல் என அக்காலப் பெறுமதி பெறும் கருத்துடனும் ஆ முதிர்வடையும் பொழுது அதனை எடுக்குங் கருத்துடனும் ஆ வின் அதிகாரமில்லாது ஆ வின் பெயரில் தம்மீது அ மாற்றுண்டியலொன்றை வரைகிறார். ஆ வின் பிணை தமக்கு உண்டென எண்ணச் செய்து அதன்மூலம் உண்டியலைப் பெறுமதி யானதாக எண்ணும்படி செய்து வங்கியாளரை வஞ்சிக்கும் கருத்துடன் அ உண்டியலை வரைந் துள்ளதனால் அ பொய் ஆவணம் புனைந்த தற்குக் குற்றவாளியாவார்.

(ஊ) ''எஞ்சியுள்ள எனது ஆதனங்கள் அ, ஆ, இ என்பவர்களுக்குக் கிடையே சமமாகப் பங்கிடப்படவேண்டுமென நான் பணிக்கிறேன்' என்னுஞ் சொற்களை க வினுடைய விருப் பாவணம் கொண்டுள்ளது. அ, அவ்வாதனம் எல்லாம் தமக்கு இ யுக்கும் மட்டுமே விடப்பட் டுள்ளதென நம்பச்செய்யும் கருத்துடன் ஆ வின் பெயரை நேர்மையீனமாகச் சுரண்டிவிடு கிறார். அ பொய் ஆவணம் புனைந்துள்ளார்.

(எ) அ என்பவர் வாக்குறுதிப்பத்திரமொன்றில் ''க வுக்கு அல்லது அவர் கட்டளைப்படி கொடுக்கவும்'' என எழுதி அப்புறக் குறிப்பை ஒப்பமிடுவதன் மூலம் க வுக்கு அல்லது கட்டளைப்படி கொடுக்கக்கூடியதாக அவ்வாக்கு றுதிப்பத்திரத்தில் அ புறக்குறிப்பிடுகிறார். க வுக்கும் அல்லது அவர் கட்டளைப்படி கொடுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் என்ற சொற்களை நேர்மையீனமாக அழித்து அச்சிறப்பு புறக்குறிப் பை வரையறை யற்ற தாக்குகிறார் ஆ பொய் ஆவணம் புனை கிறார்.

(ஏ) அ என்பவர் க வுக்கு ஒரு தோட்டத்தை விற்று உறுதி முடிக்கிறார். க வை அத்தோட் டந் தொடர்பில் செய்வதற்கென க வுக்கு உறுதி முடித்துவிட்டதாக நம்பச்செய்யும் கருத் துடன் உறுதிமுடிக்கும் தேதியிலிருந்து ஆறு மாதங் களுக்கு முன்னராக ஒரு தேதியிட்டு அதேதோட்டத்தைச் ஆ வுக்கும் அ உறுதி முடிக்கிறார். அ பொய் ஆவுணம் புனைந்து ள்ளார்.

(ஐ) க தனது விருப்பாவணத்தை அ எழுத எடுத்துரைக்கிறார். க வினால் குறிப்பிடப்பட்ட அவர் பொருளுக்குரிய ஒருவருக்குப் பதிலாக இன்னொருவரை அ கருத்துடன் எழுதி, க வி னது அறிவுறுத்தல்களுக்கிணங்கத் தாம் விருப்பாவணத்தைத் தயாரித்துள்ளதாக க வுக்கு எடுத்துக்கூறி க வை அவ்விருப்பாவ ணத்தை ஒப்பமிடத்தூண்டுகிறார். அ பொய் ஆவணம் புனைந்துள்ளார்.

(ஒ) க என்பவரிடமிருந்து வேறாட்களிடமி ருந்து தருமப் பொருள் பெறுக் கருத்துடன் அ என்பவர் அ நல்லொழுக்க முடையவரென வும் எதிர்பாராத் துரதிட்டத்தினால் அவ்வா றான சூழ்நிலைகளில் உள்ளாரெனவும் அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தாட்சிப்படுத்திக் கடிதமொன்று வரைந்து ஆ வின் கையொப்பத்தை ஆ வின் அதிகாரமில் லாமல் இடுகிறார். க வை ஆதனத்தைக் கைவிடும்படி தூண்டுவதற்காகப் பொய்யான ஆதனத்தைக் கைவிடும்படி தூண்டுவதற்கா கப் பொய்யான ஆவணத்தை அ ஆக்கியுள்ள படியினால் அ பொய் ஆவணம் புனைந்துள்ளர்.*

*(ஓ) க வின் கீழ்த் தொழில்பெறுங் கருத்துடன் அ என்பவர் அ வின் நற்குணத்தை அத்தாட் சிப்படுத்தி ஆ வின் அதிகாரமின்றிக் கடித மொன்று வரைந்து அதில் ஆ வின் ஒப்பமிடு கிறார். பொய்யாகப் புனையப்பட்ட சான்றிதழி னால் க வை வஞ்சித்து அதன்மூலம் வெளிப் படையான அல்லது உட்கிடையான சேவை ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள க வைத் தூண்ட அவர் கருதியபடியால் அ பொய் ஆவணம் புனைந்துள்ளார்.*

**விளக்கம்** 1 - ஆளொருவர் தனது பெயரைக் கையொப்பமிட்டுதலே பொய் ஆவணம் புனைதலாகும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) அதே பெயருடைய வேறோர் ஆளால் அம்மாற்றுண்டியல் வரையப்பட்டது என நம்பப் படலாம் என்ற கருத்துடன் மாற்றுண்டியலொன் றுக்கு அ தனது கையொப்பத்தை இடுகிறார். அ பொய் ஆவணம் புனைந்துள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) க வின் மீது ஆ வினால் வரையப்படும் மாற்றுண்டியலொன்றைப் பின்னர் அக்கடுதாசியில் ஆ எழுதி க வினால் அது ஏற்கப்பட்ட என்ற போன்று அம்மாற்றுண்டியலைக் கைமாற்றுவதற்காக, கடுதாசியொன்றில் "ஏற்கப்பட்டது" என அ எழுதி அதில் க வின் கையொப்பத்தை இடுகிறார். அ பொய் ஆவணம் புனைவதற்குக் குற்றவாளியாகிறார், அத்துடன் அ வின் கருத்தை அனுசரித்து, ஆ நிகழ்வை அறிந்து உண்டியலை வரைந்தால் ஆ வும் பொய் ஆவணம் புனைந்ததற்குக் குற்றவாளியாவார்.

(இ) அதே பெயருடைய வேறொருவரின் கட்டளைக்குக் கொடுபடவேண்டிய மாற்றுண்டியலொன்றை அ கண்டெடுக்கிறார். அது எவ்வாளின் கட்டளைக்குக் கொடுபடவேண்டுமோ அவ்வாளினால் புறக்குறிப்பிடப்பட்டதென நம்பச் செய்யும் கருத்துடன் அ, தமது அம்மாற்றுண்டியலை புறக்குறிப்பிடுகிறார், இங்கு அ பொய் ஆவணம் புனைந்துள்ளார்.

(ஈ) ஆ வுக்கு எதிரான தீர்வையொன்றை நிறைவேற்றுவதில் விற்கப்பட்ட தோட்டமொன்றை அ விலைக்கு வாங்குகிறார். அ வை மோசடி செய்யும் கருத்துடனும் குத்தகை நடுக்கட்டலின முன்னர்க் கொடுக்கப்பட்டதென நம்பச் செய்யு கருத்துடனும், பெயரளவிலான வாடகைக்கும் நீண்டகாலத்திற்கும் க வுக்கு அத்தோட்டத்தைக் குத்தகையாக்கி க வுடன் சூழ்ச்சிசெய்து, நடுக்

242295



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டலுக்கு முன்னர் ஆறுமாதங்கள் முந்திய ஒரு தேதியிட்டு உறுதி முடிக்கிறார். அ, தன் பெயரில் உறுதிமுடித்திருப்பினும் அதனை முற்றேதியிடுவதன் மூலம் பொய் ஆவணம் புனைகிறார்.

(உ) அ என்னும் வியாபாரி, கடனிறுக்க வகை யற்றவராக வரும் என எதிர்பார்த்து, அ வின் நன்மைக்காகவும் கடன்காரர்களை மோசடி செய்யும் எண்ணத்துடனும் எண்ணத்துடனும் தமது பொருட்களை ஆ விடம் ஒப்படைத்து வைத்து, அக்கொடுக்கல் வாங்கல் இருப்பதா கக் காட்டுவதற்கெனப் பெற்றுக் கொள்ளப்பட் பெறுமதியின் பேரில் ஆ வுக்குத் தாம் ஒரு தொகையைக் கொடுக்க அவர் கட்டுப்பட்டுள் ளதா வாக்குறுதிப்பத்திரம் ஒன்றெழுதி அ, கடனிறுதிக்கவகையற்றவராகவரும் நிலைக்கு முன்னர் அது செய்யப்பட்டதாக நம்பத்தரும் கருத்துடன் அப்பத்திரத்தை முன் தேதியிட்டு விடுகிறார். வரைவிலக்கணத்தின் முதலாந் தலைப்பின் அ பொய் ஆவணம் புனைந் துள்ளார்.

விளக்கம் 2: உண்மையான ஆள் ஒருவரால் அவ்வாவணம் ஆக்கப்பட்டதாக நம்பச் செய்யும் கருத்துடன் உண்மை யில்லாத ஆளொருவர் பெயரில் பொய்யாவணம் ஆக்கல் அல்லது இறந்தவரொருவர் பெயரில், அவர் உயிருடனிருந்த காலத்தில் அவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்பட்டதாக நம்பச்செய்யும் கருத்துடன் பொய்யாவணம் ஆக்கல் பொய்யாவணம் புனைவதாகலாம்.

**எடுத்துக்காட்டு**

*உண்மையில்லாத ஆளொருவர் பெயரில் அ மாற்றுண்டியலொன்றை வரைந்து அதனைக் கைமாற்றுங் கருத்துடன்அத்தகைய உண்மையில்லாத ஆளின்பெயரில் மோசடியாக அம்மாற்றுண்டியலை ஏற்றுக்கொள்கிறார். அ பொய்யாவணம் புனைகிறார்.*

பொய்யாவணம் புனைவதற்கான தண்டனை

**454.** பொய்யாவணம் புனையும் எவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டிலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நீதிமன்றப் பதிவேட்டை அல்லது பிறப்பு முதலியவற்றின் பகிரங்க இடாப்பைப் பொய்யாகப் புனைதல்.

**455.** நீதிமன்றத்தின் அல்லது நீதிமன்றமொன்றிலான பதிவேடு அல்லது நடவடிக்கையென அல்லது பிறப்பு, திருமுழுக்கு, திருமணம், அல்லது நல்லடக்கம் பற்றிய இடாப்பென அல்லது பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் அவரால் வைத்திருக்கப்படும் இடாப்பெனக் கொள்ளப்படும் ஆவணமொன்றை அல்லது பகிரங்க ஊழியரொருவரால் அவரது உத்தியோகத்தன்மையில் அவரால் ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் சான்றிதழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஆவணத்தை அல்லது ஏதேனும் வழக்கைத் தொடர அல்லது எதிர்வாதம் புரிய அல்லது அதன்கண் எவையேனும் நடவடிக் கைகளைக் கையாள்வதற்கான தீர்ப்பபை ஒத்துக்கொள்வதற்கு அதிகார மொன்றை அல்லது அற்றோணித் தத்துவத்தைப் பொய் யாவணமாகப் புனையும் எவரும் ஏழு ஆண்டு கள்வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண் டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

456. ஒரு பெறுமதியான பிணையாக அல்லது விருப்பாவணமாகக் கொள்ளப்படும் அல்லது ஏதேனும் பெறுமதியான பிணையை ஆக்க அல்லது மாற்ற அல்லது அதன் மீதான முதலை வட்டியை அல்லது பங்கு லாபத் தைப் பெற அல்லது ஏதேனும் பணத்தை அசைவுள்ள ஆதனத்தை அல்லது பெறுமதி யான பிணையை ஏற்ற அல்லது ஒப்ப டைக்க ஆள் எவர்க்கேனும் அதிகாரம் அிப் பதாகக் கொள்ளப்படும் ஆவணத்தை அல் லது பணக்கொடுப்பனவை தெரிவிக்கும் விடு வித்தல் அல்லது பற்றுச் சீட்டாக அல்லது ஏதேனும் அசைவுள்ள ஆவணத்தை அல் லது பெறுமதியை பிணையை ஒப்படைப்பதற் கான விடுவித்தல் அல்லது பற்றுச் சீட்டாகக் கொள்ளப்படும் ஆவணம் ஒன்றை பொய்யா கப் புனையும் எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்துக்கான

பெறுமதியான பிணையை அல்லது விருப்பாவணத்தைப் பொய்யாகப் புனைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவகையில் ஒருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு குற்றப் பணத்துக்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

ஏமாற்றுவதற்காகப் பொய்யாவணம் புனைதல்.

**457.** பொய்யாகப் புனையப்பட்ட ஆவணம் ஏமாற்றுவதற்கெனப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். என்ற கருத்துடன் பொய்யாவணம் புனையும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பொய்யாகப் புனையப்பட்ட ஆவணம்

**458.** முழுவதாக அல்லது பாகமாகப் பொய்யாவணம் புனைவதிலும் ஆக்கப்படும் பொய்யாவணம் ஒன்று பொய்யாகப் புனையப்பட்ட ஆவணம் ஒன்றெனச் சுட்டப்படும்.

பொய்யாகப் புனையப் பட்ட ஆவணமொன்றை உண்மையானதாகப் பயன்படுத்தல்

**459.** பொய்யாகப் புனையப்பட்ட ஆவணமொன்றென அவர் அறிவதற்கு அல்லது நம்புவதற்கு நியாயமுள்ளதான ஏதேனும் ஆவணத்தை மோசடியாகவும் நேர்மையீனமாகவும் உண்மையானதெனப் பயன்படுத்தும் எவரும் அவர் அவ் வாவணத்தைப் பொய்யாகப் புணைந்திருந்தாற் போன்று அதே முறையாகத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

456ஆம் பிரிவின் கீழ்த் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும்

**460.** நானூற்றியம்பதாறாம் பிரிவின் கீழ்த்த தண்டிக்கப்படற்பாதான ஏதேனும் பொய்யாவணம் புனைதலைப் புரிவதற்கான அடையாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொன்றை ஆக்குவதற்காக ஏதேனும் இலச்சினை, தகடு அல்லது வேறு சாதனம் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற கருத்துடன் அதை ஆக்கும் அல்லது போலியாகப் புனையும் அல்லது அத்தகைய இலச்சினை, தகடு அல்லது சாதனம் போலியாகப் புனையப்பட்டதென அறிந்துகொண்டு அத்தகைய கருத்துடன் அதனைத் தம்முடைமையில் வைத்திருக்கும் எவரும் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் தண்டிக் கப்படுதல் வேண்டு மென்பதோடு, குற்றப் பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பொய்யாவணம் புனைதலைப் புரியும் கருத்துடன் போலியான இலச்சினை, தகடு முதலியவற்றை ஆக்குதல் அல்லது உடைமையில் வைத்திருத்தல்

**461.** நானூற்றியம்பத்தாறாம் பிரிவு தவிர்ந்த இவ்வத்தியாயத்தில் வேறு ஏதேனும் பிரிவின் கீழ்த் தண்டிக்கப்படற்பாதான ஏதேனும் பொய்யாவணம் புனைதலைப் புரிவதற்காக அடையாளதொன்றை ஆக்கவதற்கான ஏதேனும் இலச்சினை, தகடு அல்லது வேறு சாதனம் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற கருத்துடன் அதை ஆக்கும் அல்லது போலியாகப் புனையும் அல்லது அத்தகைய இலச்சினை, தகடு அல்லது சாதனம் போலியாகப் புனையப் படதென அத்தகைய இலச்சினை, தகடு அல்லது சாதனம் போலியாகப் புனையப்பட்ட தென அறிந்துகொண்டு அத்தகைய கருத்துடன் அதனைத் தமதுடைமையில் வைத்திருக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்

வேறுவிதமாகத் தண்டிக்கப்படற்பாலதான ஒரு பொய்யாவணம் புனைதலைப் புரியும் கருத்துடன் போலியான இலச்சினை தகடு முதலியவற்றை ஆக்குதல் அல்லது உடைமையில் வைத்திருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

பொய்யாகப் புனையப்பட்ட தெனஅறிந்து உண்மை யானதெனப் பயன்படுத்துங் கருத்துடன் பொய்யாகப் புனையப்பட்ட பதிவேடு, அல்லது பெறுமதியான பிணை அல்லது விருப்பா வணத்தை உடைமையில் வைத்திருத்தல்.

**462.** ஏதேனும் ஆவணம் பொய்யாகப் புனையப் பட்டதென அறிந்துகொண்டு அது உடைமை யானதென மோசடியாகவும் நேர்மையீனமாக வும் பயன்படுத்தப்படல் வேண்டுமென்று கருத் துடனும் அதனைத் தம் உடைமையில் வைத் திருக்கும் எவரும் அந்த ஆவணம் 455ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விவரை மொன்றையு டைய தாயின் ஏழு ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும். அவ்வாவணம் 456 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விவரணமொன்றைக் கொண்ட தாயின் பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

456ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட ஆவணங் களின் உண்மையை உறுதிப்படுத்தப் படும் உபாயம்

**463.** நானூற்றியம்பத்தாறாம் பிரிவில் விபரிக்கப் பட்ட ஏதேனும் ஆவணத்தின் உண்மையை உறுதிப்படுத்ததுவதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் உபாயத்தை அல்லது குறியை ஏதேனும் பொருளின் மேல் அல்லது பொருளில், அத்தகைய பொருளின் மேல் அப்பொழுது போலியாக்கப்பட்ட அல்லது பின்னர் போலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கப்படவுள்ள ஏதேனும் ஆவணம் உண்மை உறுதிப்படுத்தப்பட்டதெனத் தோன்றச் செய்ய அவ்வுபாயம் அல்லது குறி பயன்படுத்தப் படல் வேண்டும் என்ற கருத்துடன் போலியாகப் புனையும் எவரும் அல்லது குறி அதன் மீது அல்லது அதில் போலியாகப் புனையப்பட்டுள்ள ஏதேனும் பொருளைத் தம் உடைமையில் வைத்திருக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

464. நானூற்றியம்பத்தாறாம் பிரிவில் விபரிக்கப்பட்ட ஆவணங்கள் தவிர்ந்த ஏதேனும் ஆவணத்தின் உண்மையை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் உபாயத்தை அல்லது குறியை ஏதேனும் பொருளின்மேல் அல்லது பொருளில், அத்தகைய பொருளின் மேல் அப்பொழுது போலியாக்கப்பட்ட அல்லது பின்னர் போலியாக்கப்படவுள்ள ஏதேனும் ஆவணம் உண்மை உறுதிப்படுத்தப்பட்டதெனத் தோன்றச் செய்ய அவ்வுபாயம் அல்லது குறி பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற கருத்துடன் அத்தகைய ஏதேனும் உபாயம் அல்லது குறி அதன் மீது அல்லது அதில் போலியாகப் புனையப்பட்டுள்ள ஏதேனும் பொருளைத் தம் உடைமையில் வைத்திருக்கும் எவரும் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொரு

456ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட ஆவணங்கள் தவிர்ந்த ஆவணங்களின் உண்மையை உறுதிப்படுத்தப் படும் உபாயம் அல்லது குறியைப் போலியாகப் புனைதல் அல்லது போலியாகக் குறியிடப்பட்ட பொருளை உடைமையில் வைத்திருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

தந்தி மூலம் பொய்யான செய்தியை அனுப்புதல

**465.** எவரேனுமாளை மோசடி செய்யும், ஊறுபடுத்தும் அல்லது மனக்குலைவுகொள்ளச் செய்யும் அல்லது அரசாங்கத்துக்கு அல்லது பொது மக்களின் அக்கறைக்குப் பாதகம் விளை விக்கக்கூடிய ஏதேனும் பொய்வதந்தியைப் பரப்பும் கருத்துடன் ஏதேனும் பொய்யான செய்தியைத் தந்திமூலம் அறிந்து அனுப்புவிக்கும் அல்லது அனுப்புவதற்கென அஞ்சல் தொலைச்செய்திப் போக்குவரத்துத் திணைக்களத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் பகிரங்க அலுவலருக்குக் கொடுக்கமுனையும் எவரும் ஓராண்டுவரை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

இறுதிவிருப் பாவணம் ஒன்றை மோசடியாக அழித்தல், நீக்குதல் முதலியன.

**466.** பொதுமக்களுக்கு அல்லது எவரேனுமாளுக்குச் சேதம் அல்லது ஊறுவிளைவிக்கும் கருத்துடன் அல்லது மோசடியாக அல்லது நேர்மையீனமாக, விருப்பாவணமொன்றாக அல்லது ஏதேனும் பெறுமதியான பிணையாக அல்லது பகிரங்க ஊழியர் என்ற தன்மையில் பகிரங்க ஊழிய ரொருவரால் அல்லது ஏதேனும் சட்டவாக்கம் அல்லது நியதிச்சட்டத்தினைப் பின்பற்றி ஆளெவராலாயினம் வைத்திருக்கப்படும் ஏதேனும் பதிவேடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடாப்பு, புத்தகம் அல்லது ஆவணம் ஒன்றாக உள்ள அல்லது கொள்ளப் படும் ஏதேனும் ஆவணத்தை நீக்கும், அழிக்கும், ஊறுபடுத்தும் அல்லது உருவழிக்கும் அல்லது நீக்க, அழிக்க, உறுபடுத்த அல்லது உருவழிக்க எத்தனிக்கும் அல்லது இரகசியமாக மறைத்துவைக்கும் அல்லது இரகசியமாக மறைத்துவைக்க எத்தனிக்கும் அல்லது அத்தகைய பதிவேடு, இடாப்பு, புத்தகம் அல்லது ஆவணம் தொடர்பில் சொத்தழிவு புரியும் எவரும் ஏழு ஆண்டுகள்வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டு மென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

கணக்கு களைப் பொய்ப்பித்தல்

**467.** ஒரு எழுதுவினைஞர், அலுவலர் அல்லது ஊழியராய் அல்லது ஓர் எழுதுவினைஞர், அலுவலர் அல்லது ஊழியர் என்ற தன்மையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவராய் அல்லது அத்தன்மையில் செயலாற்று பவராயிருந்து கொண்டு தமது தொழில் தரநருக்கச் சொந்தமான அல்லது அவரின் உடைமையிலுள்ள அல்லது அவரது தொழில்தருநருக்காக அல்லது அவர் சார்பில் பெறப்பட்டுள்ள ஏதேனும் புத்தகம், கடுதாசி, எழுத்து பெறுமதியான பினை அல்லது கணக்கை மாற்றுகின்ற, சிதைக்கின்ற அல்லது பொய்ப்பிக்கின்ற எவரும் அல்லது வேண்டுமென்றும் மோசு செய்யும் கருத்துடனும் அத்தகைய புத்தகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுதாசி, எழுத்து, பெறுமதியான பிணை அல்லது கணக்கில் ஏதேனும் பொய்யான பதிவைச் செய்கின்ற அல்லது செய்ய உடந்தையளிக்கின்ற அல்லது அவற்றில் அல்லது அவற்றிலிருந்து ஏதேனும் முக்கிய விபரத்தினை விட்டுவிடுகிற அல்லது மாற்றுகின்ற அல்லது மாற்ற உடந்தைய ளிக்கின்ற எவரும் ஏழு ஆண்டுவரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

விளக்கம் :- மோசடி செய்யக் கருதப்பட்ட எவரேனும் குறிப்பிட்ட ஆளின் பெயரைக் குறிப்பிடாது அல்லது மோசடிக்குப் பொருளாயமைக்கக் கருதப்பட்ட ஏதேனும் குறிப்பான பணத்தொலையைக் குறிப்பிடாது. அல்லது தவறு புரியப் பட்ட குறிப்பான நாளைக் குறிப்பிடாது. மோசடிசெய்வதற்கான பொதுக் கருத்தை எடுத்துக்கூறினாலே இப் பிரிவின் கீழான குற்றச் சாட்டொன்றுக்குப் போதுமானது.

ஏதேனும் நாணயத்தாள், வங்கிப் பத்திரம், அல்லது நாணயத்தின் ஏதேனும் பிரதியுருவை உடைமையில் வைத்திருத்தல்

**468.** (1) மேன்மை தங்கிய இலங்கைக் குடியரசின் ஆள்புலங்கள் என்பவற்றின் எப்பாதத்திலேனும் அல்லது ஏதேனும் பிறநாட்டில் சட்டதுறையாகப் புழக்கத்திலுள்ள ஏதேனும் நாணயத் தாள், வங்கிப்பத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நாணயத்தின் பிரதியுருவைச் சட்டமுறையான அதிகாரமின்றி அல்லது காரணமின்றி. (அதனை நிரூபிக்கும் பொறுப்புக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின் மேலதாதல் வேண்டும்) தம் உடைமையில் வைத்திருக்கும் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். என்பதோடு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத ஏதாவதொரு காலத்திற்கு இருவகை மறியலலொன்றுக்கு அல்லது குற்றப்பணத்துக்கு அல்லது இவை இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2)இப்பிரிவின் நோக்கங்களுக்கென, போலி மாதிரி, என்னுஞ் சொல்லமைப்பு, மாட்சிமை தங்கிய மகாராணியாரின் நாடுகள், ஆள்புலங்கள் என்பவற்றில் அல்லது ஏதேனும் நாணயத்தாள், வங்கிப்பத்திரம் அல்லது நாணயத்தின் பிரதியுருக்களின் மாதிரிகள் பதிக்கப்பட்ட பருத்தி, பட்டு அல்லது வேறு நெய்யப்பட்ட பொருள்களை உள்ளடக்கும்.

### ஆதனக் குறிகள் பற்றி

**469.** அசைவுள்ள ஆதனம் குறிப்பிட்ட ஆள் ஒருவருக்குச் சேர்ந்தது என்பதனைக் குறிப்பதற்கெனப் பயன்படுத்தப்படும் குறியொன்று ஆதனக்குறி யென்றழைக்கப்படும். ஆதனக்குறி

**470.** குறிப்பிட்ட ஏதேனும் அசைவுள்ள ஆதனம் அல்லது எவையேனும் பொருள்கள் அல்லது பொய்யாதனக் குறியைப் பயன்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விதம் குறியிடப்பட்ட ஏதேனும் உறை, பொட்டணம் அல்லது வேறு கொள்கலனில் அடங்கியுள்ள அசைவுள்ள ஆதனம் அல்லது பொருள்கள், அவை சேர்ந்தனவாயில்லாத ஆளொருவருக்குச் சேர்ந்த என நம்பச் செய்யும் கருத்துடன் ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தில் அல்லது எவையேனும் பொருள்களில் அல்லது அசைவுள்ள ஆதனம் அல்லது பொருள்கள் அடங்கியுள்ள ஏதேனும் உறை, பொட்ணம் அல்லது கொள்கலனில் குறியிடுகின்ற எவரும் அல்லது அதன்கண் ஏதேனும் குறியினைக் கொண்ட ஏதேனும் உறை, பொட்டணம் அல்லது கொள்கலணைப் பயன்படுத்துகின்ற எவரும் பொய்யாதனக் குறியைப் பயன்படுத்துவதாகச் சொல்லப்படும்.

எவரேனுமாளை வஞ்சிக்கும் அல்லது ஊறு படுத்தும் கருத்துடன் பொய் ஆதனக் குறியைப் பயன்படுத்து வதற்குத் தண்டனை

471 எவரேனுமாளை வஞ்சிக்கும் அல்லது அவருக்கு ஊறு விளைக்கும் கருத்துடன் பொய் ஆதனக்குறி எதனையும் பயன்படுத்தும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். சேதம் அல்லது ஊறு விளைக்கும் கருத்துடன் வேறொரவரால் பயன்படுத்தப் படும் ஆதனக் குறியைப் போலி புனைதல்

சேதம் அல்லது ஊறுவிளைக்கும் கருத்துடன்

472. வேறு ஆள் ஒருவரால் பயன்படுத்தப்படும் ஏதேனும் ஆதனக்குறியைப் பொதுமக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது எவரேனுமாளுக்குச் சேதம் அல்லது ஊறு விளைக்கும் கருத்துடன் அறிந்து கொண்டு போலிபுனையும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவக மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வேறொருவரால் பயன்படுத்தப் படும் ஆதனக் குறியைப் போலி புனைதல்

473. பகிரங்க ஊழியரொருவரால் பயன்படுத்தப்படும் ஏதேனும் ஆதனக்குறியை அல்லது ஏதேனும் ஆதனம் குறிப்பிட்ட ஆள் ஒருவரால் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் அல்லது இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டதென அல்லது அது குறிப்பிட்டவொரு தரத்தினை உடையதென அல்லது அது குறிப்பிட்ட ஓர் அலுவலகத்தினூடாகச் சென்றுள்ளதென அல்லது அது ஏதேனும் விதிவிலக்கு உரிமையுடையதெனக் குறிப்பிடுவதற்குப் பகிரங்க ஊழியரொருவரால் பயன்படுத்தப்பட ஏதேனும் குறியைப் பொதுமக்களுக்கு அல்லது எவரேனுமாளுக்குச் சேதம் அல்லது ஊறு விளைக்கும் கருத்துடன் அறிந்து கொண்டு போலிபுனையும் எவரும் அல்லது அத்தகைய குறி போலியானதென அறிந்துகொண்டு உண்மையானதெனப் பயன்படுத்தும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுத்தல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டு

பகிரங்க ஊழியர் ஒருவரால் பயன்படுத் தப்படும் ஏதேனும் ஆதனக் குறியை அல்லது ஏதேனும் ஆதனத்தின் உற்பத்தி, தரம் முதலியவற்றைக் குறிப்பதற்காக அவரால் பயன்படுத்தப்படும் ஏதேனும் குறியைப் போலிபுனைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் பகிரங்க அல்லது தனிப்பட்ட ஆதனக் குறியைப் போலிபுனைவதற்காக ஏதேனும் சாயம், தகடு அல்லது வேறு சாதனத்தை மோசடியாகச் செய்தல் அல்லது உடைமையில் வைத்திருத்தல்.

**474.** ஏதேனும் பகிரங்க அல்லது தனிப்பட்ட ஆதனக் குறியைச் செய்யும் அல்லது போலி புனையும் நோக்கத்தக்கான ஏதேனும் சாயத்தை, தகட்டை அல்லது வேறு சாதனத்தை அத்தகைய குறியைப் போலிபுனைவதற்குப் பயன் படுத்துவதற்கென உண்டாக்கும் அல்லது தம் உடைமையில் வைத்திருக்கும் எவரும், எவையேனும் பொருள்கள் அல்லது வர்த்தகப் பொருள்கள் அவைகளை உற்பத்தியாக்காத ஏதேனும் குறிப்பிட்ட ஆளொருவரினால் அல்லது குழுமத்தினால் உண்டாக்கப்பட்டன அல்லது உற்பத்தியாக்கப்பட்டன என அல்லது அவைகள் ஆக்கப்படாத நேரத்திலோ இடத்திலோ ஆக்கப்பட்டன என அல்லது அவை உடையனவாயிராத குறிப்பிட்ட தரத்தை உடையன என அல்லது அவை சேர்ந்தனவாயிராத ஒருவருக்குச் சேர்ந்தவை எனக் குறிப்பிடுவதற்கான அது பயன்படுத்தப்படல் வேண்டும். என்ற கருத்துடன் ஏதேனும் ஆதனக்குறியைத் தம் உடைமையில் வைத்திருக்கும் எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

போலி ஆதனக் குறியால் குறிப்பிடப்பட்ட பொருள்களை அறிந்து கொண்டு விற்றல்

**475.** பகிரங்க அல்லது தனிப்பட்ட போலியாதனக்குறி அவற்றில் அல்லது அவற்றின்மீது அல்லது அவை அடைக்கப்பட்டுள்ள அல்லது அடங்கியுள்ள ஏதேனும் உறை அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்சுற்றி அல்லது கொள்கலனில் அல்லது அவற்றின் மீது ஒட்டப்பட்ட அல்லது பதிக்கப் பட்ட எவையேனும் பொருள்களை, அத்த கைய குறி பொய்யானது அல்லது போலி யானதென அறிந்துகொண்டு அல்லது அத்த கைய குறியினால் சுட்டப்பட்ட ஆளினால் அல்லது அந்தநேரத்தில் அல்லது அந்த இடத்தில் தயாரிக்கப்படாத பொருள்கள் அல்லது வியாபாரப் பொருள்களில் அல்லது அவற்றின் மீது அக்குறி ஒட்டப்பட்டதுஅல்லது பதிக்கப்பட்தென அல்லது அத்தகையை குறியினால் குறிப்பிடப்பட்ட தரத்தை உடை யன அல்ல என அறிந்துகொண்டு யாரேனு மாளை வஞ்சிக்கும், ஊறு விளைக்கும் அல் லது சேதம் ஏற்படுத்தும் கருத்துடன் விற்கும் எவரும் ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறிய லினால் அல்லது குற்றப் பணத்தினால் அல் லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும்.

**476.** பொருள்களையுள்ளடக்கியுள்ள ஏதேனும் பொட்டணத்தில் அல்லது கொள்கலனின்மீது, பொட்டணம் அல்லது கொள்கலம் கொண் டிராத பொருள்களை அது கொண்டுள்ளது என அல்லது கொண்டுள்ள பொருள்களைக் கொண்டிருக்கவில்லையென அல்லது அத் தகைய பொட்டணத்தில் அல்லது கொள் கலனில் உள்ளடங்கியுள்ள பொருள்கள் அவற்றின் உண்மையான தன்மை அல்லது

பொருள்கள் அடங்கியுள்ள பொட்டணம் அல்லது கொள்க லனின்மீது பொய்க் குறியை மோசடியாக இடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்திலிருந்து வேறானதான தன்மை அல்லது தரத்தினை உடையன என எவரேனும் பகிரங்க ஊழியரை அல்லது வேறு ஆள் ஒருவரை நம்பச்செய்யும் கருத்துடன் மோசடியாகப் பொய்யான குறிகளை இடுகின்ற எவரும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அத்தகைய பொய்க் குறியைப் பயன்படுத்துவதற்கான தண்டனை.

**477.** இறுதியாக மேற்சொல்லப்பட்ட கருத்துடன் அத்தகைய குறி பொய்யானதென அறிந்து கொண்டு அத்தகைய பொய்யான குறியை மோசடியாகப் பயன்படுத்தும் எவரும் இறுதியாக மேற்போந்த பிரிவில் குறிப்பிடப்பட்டவாறாகத் தண்டிக்கப்படுத்தல் வேண்டும்.

ஊறுவிளைவிக்கும் கருத்துடன் ஏதேனும் ஆதனக்குறியை உருவழித்தல்

**478.** ஏதேனுமாதனக் குறியை, ஆள் எவருக்கேனும் ஊறவிளைக்கும் கருத்துடன் அல்லது அதனால் தாம் ஊறுவிளைக்கக்கூடும் என்று அறிவுடன் அகற்றுகின்ற, அழக்கின்ற அல்லது உருவழிக்கின்ற எவரும் ஓராண்டு வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணயத்தாள்களும்
## வங்கிப்பத்திரங்களும் பற்றி

நாணயத் தாள்கள் அல்லது வங்கிப் பத்திரங் களின் போலி புனைதல்

**478.** அ. (1) ஏதேனும் நாணயத்தாளை அல்லது வங்கிப்பத்திரத்தைப் பொய்யாகப் புனைகின்ற அல்லது அதன் போலியைப் புனைகின்ற அல்லது பொய்யாக்கும் அல்லது போலி புனையும் செய்முறையின் ஏதேனும் பாகத்தை அறிந்துகொண்டு புரிகின்ற எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்ககூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொருவகை மறியலி னால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண் டும்.

(2) இப்பிரிவினதும் 478 ஆ, 478இ, 478ஈ என்னும் பிரிவுகளினதும் நோக்கங்களுக்காக.

(அ) ''வங்கிப்பத்த்திரம்''என்பது வாக்குறிதிப்பத்திர மொன்றென, அல்லது உலகின் எப்பாகத்தி லேனும் வங்கித் தொழில் நடாத்தும் எவரே னும் ஆளினால் அல்லது ஏதேனும் அரசின் அல்லது இறையின் அதிகாரத்தினால் அல் லது அதன்கீழ் வழங்கப்படுவதும் பணத்திற் குச் சமமானதாக அல்லது வழங்கப்படுவ தும் பணத்திற்குச் சமமானதாக அல்லது அத பதிலியாகப் பயன் படக் கருதப்படுவதுமான கொண்டு வருபவருக்குக் கோரிக்கையின் மீது பணக்கொடுப்பனவுக்குரிய உடன்பாடு எனப் பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) "நாணயத்தாள்" என்பது 1884 ஆம் ஆண்டின் இலங்கைத் தாள் நாணயக் கட்டளைச் சட்டம், 1941 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க நாணயக் கட்டளைச் சட்டம் அல்லது இலங்கையில் தாள் நாணயம் வழங்குதல் தொடர்பில் அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும் ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் நாணயத்தளொன்று என்று பொருளாவதோடு ஐக்கிய இராச்சியம் அல்லது இலங்கைக்கு வெளியே யுள்ள மாட்சிமைதங்கிய மகாராணியாரின் இராச்சியங்கள், ஆள்புலங்கள் என்பவற்றின் ஏதேனும் பாகத்தின் அரசாங்கத்தினால் பெயரினாலும் அழைக்கப்படும் ஒத்தபணபுள்ள ஏதேனும் பத்திரத்தையும் உள்ளடக்கும்.

பொய்யாகப் புனையப்பட்ட அல்லது போலி புனையப்பட்ட நாணயத் தாள்களை அல்லது வங்கிப் பத்திரங் களை உண்மையான வையெனப் பயன்படுத்தல்

**478 ஆ.** ஏதேனும் பொய்யாகப் புனையப்பட்ட அல்லது போலிபுனையப்பட்ட அல்லது போலி புனையப்பட்ட நாணயத்தாளை அல்லது வங்கிப் பத்திரத்தை, அது பொய்யாகப் புனையப்பட்டது அல்லது போலியானது என அறிந்து கொண்டு அல்லது நம்பவதற்கு நியாய முடைய வராயிருந்து கொண்டு, வேறு எவரேனுமாளுக்கு விற்கின்ற அல்லது வேறுவகையில் கொடுக்கல் வாங்கல் செய்கின்ற அல்லது உண்மை யானதெனப் பயன்டுத்துகின்ற எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

478 இ. ஏதேனும் பொய்யாகப் புனையப்பட்ட அல்லது போல் புனையப்பட்ட நாணயத் தாளை அல்லது வங்கிப்பத்திரத்தை அது பொய்யாகப் புனையப்பட்டது அல்லது போலி யானது என அறிந்துகொண்டு அல்லது நம்பு வதற்கு நியாயமுடையவராயிருந்து கொண்டு அதனை உண்மையானதெனப் பயன்படுத் தும் கருத்துடன் அல்லது உண்மையானதெ னப் பயன்படுத்தப்படலாம் என்பதற்காகத் தம் உடைமையில் வைத்திருக்கும் எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

பொய்யாகப் புனையப்பட்ட அல்லது போலி புனையப்பட்ட நாணயத் தாள்களை அல்லது வங்கிப்பத்தி ரங்களை உடைமையில் வைத்திருத்தல்

478 ஈ.ஏதேனும் நாணயத்தாளை அல்லது வங் கிப் பத்திரத்தைப் பொய்யாகப் புனைவதற்கு அல்லது அதன் போலியைப் புனைதற்குப் பயன் படுத்தப்படுவதற்கான அல்லது அது பயன் படுத்தக் கருதப்பட்டுள்ளதென அறிந்து கொண்டு அல்லது நம்புதற்கு நியாய முடை யவராயிருந்து கொண்டு ஏதேனும் பொறித் தொகுதியை, சாதனத்தை அல்லது பொருளை உண்டாக்கும் அல்லது ஆக்குஞ் செய்ம் முறையில் எப்பாகத்தையேனும் புரியும் அல் லது வாங்குகின்ற அல்லது விற்கின்ற அல்லது கையாளுகின்ற அல்லது தம் உடைமையில் வைத்திருக்கின்ற எவரும் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய அல்லது உடைமை

நாணயத்தாள் களை அல்லது வங்கிப் பத்திரங் களைப் பொய்யாகப் புனைவதற்கான அல்லது போலி புனைதற்கான சாதனத்தை அல்லது பொருளை உண்டாக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால்யில் வைத்திருத்தல் தண்டிக் கப்படுதல் வேண்டுமென்பதோடு, குற்றப்பணத் திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

**இந்த அத்தியாயம் XIX**
**நீக்கப்பட்டுள்ளது. (பி3 2002 ஆம் ஆண்டின் இல 12)**

## அத்தியாயம் XX
## குற்றமுறையான அச்சுறுத்தல், நிந்தை, மனக்குலைவு

குற்றமுறையான அச்சுறுத்தல்

**483.** ஆளொருவருக்கு அச்சத்தை உண்டுபண்ணும் கருத்துடன் அல்லது அத்தகைய அச்சுறுத்தல் நிறைவேறாதபடி தவிர்த்தற்கென, செய்வதற்குச் சட்டதுறையாகக் கட்டுப்பட்டிராத ஏதேனும் வகை செய்விக்கும் கருத்துடன் அல்லது அவர் செய்வதற்குச் சட்ட முறையான உரித்துடைய செயலைச் செய்யாமற்பண்ணுங் கருத்துடன், அவரது உடலுக்கு, புகழுக்கு அல்லது ஆதனத்துக்கு, அல்லது அவ்வாள் அக்கறை கொண்டுள்ள வேறு ஆள் எவரதும் உடலுக்கு, அல்லது புகழுக்கு ஊறு ஏற்படுத்துவதாக அச்சுறுத்தும் எவரும் குற்றமுறையங்கான அச்சுறுத்தலைப் புரிகிறார்.

விளக்கம் - அச்சுறுத்தப்படும் ஆள் அக்கறை கொண்டுள்ள இறந்த எவரேனுமாயின் புகழுக்கு ஊறு ஏற்படுத்துவதான அச்சுறுத்தல் இப்பிரிவினுள் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எடுத்துக்காட்டு**

*குடியுரிமை வழக்கொன்றை மேற்கொண்டு நடத்துவதை விட்டுவிடும்படி அ வை தூண்டுவதற்காக ஆ வின் வீட்டை எரித்துவிடவதாக அ அச்சுறுத்துகிறார். அ குற்றமுறையான அச்சுறுத்தலுக்குக் குற்றவாளியாவார்.*

**484.** அத்தகைய ஆத்திரமூட்டால் யாரோனுமாளைப் பொதுமக்கள் சமாதானத்தைக் கெடுக்க அல்லது வேறு ஏதேனும் தவறைப் புரியச் செய்யும் என்ற கருத்துடன் அல்லது செய்யலாம் என அறிந்துகொண்டு வேண்டு மென்று ஆளொருவரையேனும் நிந்தைசெய்து அதனால் அவர்க்கு ஆத்திரமூட்டும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சமாதான கேட்டை ஏற்படுத்தும் கருத்துடன் வேண்டுமென்று நிந்தை செய்தல்

**485.** இலங்கைக் குடியரசின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள எவரேனும் அலுவலர் மாலுமி, தரைப்படைவீரர் அல்லது வான்படை வீரரைக் கலகம் விளைவிக்கும் கருத்துடன் அல்லது பொது மக்களுக்குப் பயத்தை அல்லது அச்சத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அரசுக்கெதிராக அல்லது பொதுமக்களின் அமைதிக்கெதிராகத் தவறைப் புரியும் படி எவரேனுமாளைத் தூண்

படைக்கலத்தை அல்லது அரசுக்கெதிரான தவறு முதலியவற்றை ஏற்படுத்தும் கருத்துடன் பெய்யான அறிக்கையைப் பரப்புதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் கருத்துடன் தாம் பொய்யானதென அறிந்த ஏதேனும் கூற்றை, வதந்தியை, அல்லது அறிக்கையைப் பரப்புகின்ற அல்லது வெளி யிடுகின்ற எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டியாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

குற்றமுறையான அச்சுறுத்தலுக்கான தண்டனை

**486.** குற்றமுறையான அச்சுறுத்தல் தவறினைப் புரியும் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியலினால் அல்லது குற் றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினா லும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.

மரணம் அல்லது கடுங் காயம் முதலியன விளைவிப்பதற்கான அச்சுறுத்தல்

அத்துடன் அச்சுறுத்தலானது மரணம் அல் லது கடும்காயத்தை விளைப்பதற்கானதா னால் அல்லது தீ மூலம் ஏதேனும் ஆதனத் திற்கழி ஏற்படுதுதுவதானால் மரணதண்டனை விதிக்கப்படக்கூடிய அல்லது ஏழு ஆண்டு கள் நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவ றொன்றை விளைப்பதற்கான தானால் அல் லது பெண்ணுக்குக் கற்பின்மை கற்பிப்பதா னால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப் படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

487. பெயர் குறிப்பிடப்படாத தகவல் மூலம் அல்லது அச்சுறுத்தும் ஆளின் பெயர் அல்லது வதிவிடத்தை மறைத்துவைக்க முன்னெச்சரிக்கை செய்துகொண்டு குற்றமுறையான அச்சுறுத்தல் தவறைப் புரியும் எவரும், அத்தவறுக்கென இறுதியான முற்போந்த பிரிவினால் அக்குற்றத்திற்கேற்பாடு செய்யப்பட்ட தண்டனையுடன் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால்திற்கான இருவகையிலொருவகை மறியிலினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பெயர் குறிப்பிடப்படாத தகவல் மூலம் குற்ற முறையான அச்சுறுத்தல்

**எடுத்துக்காட்டு**

*ஆ வை அச்சுறுத்தி பெயர் குறிப்பிடப்படாத கடிதமொன்றை எழுதி ஆ வுடன் வாழும் இக்கு அனுப்பிவைக்கிறார். அக்கடித்தை இ, ஆ, வுக்குக் காட்டுவார் என அ நம்பி எதிர்பார்த்துள்ளார். இப்பிரிவின் கீழ் ஆ குற்றவாளியாவார்.*

488. மதுபோதை நிலையில் பொது இடத்தில் அல்லது அவர் நுழைந்தால் அத்து மீறலாகக் கூடிய ஏதேனும் இடத்தில் தோன்றி எவரேனுமாளுக்கு மனக்குலைவு ஏற்படுத்தக் கூடிய அத்தகைய முறையாக அங்கு நடந்து கொள்ளும் எவரும் ஒரு மாதத்துக்கு நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியலினால் அல்லது நூறு ரூபா வரை செல்லக் கூடிய குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

குடிவெறி கொண்ட ஆளினால் பொது இடத்தில் முறைகேடான நடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XXI
## சட்டவிரோதமான சத்தியங்கள் பற்றி

தவறொன்றைப் புரியும்படி சத்தியத்தை எடுத்தோதல் அல்லது எடுத்தல் அல்லது எடுத்தலை உடந்தையளித்தல்

**489.** ஏதேனும் சத்தியத்தைச் செய்துகொள்ளும் ஆளொருவரை ஏதேனும் தவறைப் புரிய அல்லது தவறைப் புரிவதற்கு உடந்தையளிக்க அவரைக் கட்டுப்படுத்துவதாகக் கொள்ளப் படும் அல்லது கருதப்படும் ஏதேனும் சத்தியத்தை அல்லது இணக்கத்தை அல்லது சத்தியத்தின் தன்மையுள்ள கடப்பாட்டினை எடுத்தோதும் அல்லது எடுத்தோதுவிக்கும் அல்லது எடுத் தோதுவிக்க அல்லது எடுக்க உதவியளிக்கும் அல்லது அத்தகைய ஏதேனும் சத்தியத்தை, இணக்கத்தை அல்லது கடப்பாட்டைச் செய்து கொள்ளும் எவரும் அச்சத்தியம், இணக்கம் அல்லது கடப்பாடு தொடர்புபடும் தவறு மரண தண்டனையினால் அல்லது இருபது ஆண்டுகளுக்கான மறிய லினால் தண்டிக்கப்படக் கூடிய ஒரு காலத் திற்கான இருவகையிலொருவகை மறியலி னால் அல்லது குற்றப் பணத்தினால் அல் லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படு தல் வேண்டும். அத்துடன் அத்தவறு இருபது ஆண்டுகளுக்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய, அத்தகைய சத்தியம், இணக்கம் அல்லது கடப்பாடு தொடர்பட்ட தவறுக்கு விதிக்கப்படக்கூடிய அத்தகைய தண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண் டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XXII

## தவறுகள் புரிவதற்கான எத்தனங்கள் பற்றி

**490.** மறியற்றண்டனை மூலம் இச்சட்டக் கொவை யினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன் றைப் புரிய எத்தனித்து அல்லது அத்தகைய தவறு புரியப்படுதலைச் செய்விக்க எத்த னித்து, அத்தகைய எத்தனத்தில் அத்தவறு புரியப் படுதலுக்கான ஏதேனும் செயலைச் செய்யும் எவரும்.

மறியலினால் தண்டிக்கப்படக் கூடிய தவறுகள் புரிவதற்கு எத்தணிப்பதற்கான தண்டனை

அத்தகைய தண்டிக்கதற்கான வெளிப்பாடை ஏற்பாடு எதுவும் இச் சட்டக்கோவையினால் செய்யப்படாதவிடத்து, அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆகக்கூடிய காலத்தின் அரைவாசிக்கு நீடிக்ககூடிய ஒரு காலத்திற்கு இருவகையிலொரு மறயலினால் அல்லது அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அத்தகைய குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்**

*(அ) பெட்டியொன்றை உடைப்பதன் மூலம் சில நகைகளைக் களவாட அ எத்தனித்து அவ் விதம் திறந்தப்பின்னர் அப்பெட்டியில் நகை எதுவும் இல்லையெனக் காண்கிறார். திருட்டு புரிவதற்கான செயலொன்றை அவர் புரிந்துள்ள படியால் அவர் இப்பிரிவின் கீழ்க் குற்றவாளி யாவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) க வின் சட்டைப்பையுள் தன் கையைப் போடுவதன் மூலம் கவின் சட்டையில் இருந்து திருட அ எத்தனிக்கிறார். க. அச்சட்டைப் பையி னுள் எதுவும் வைத்திருக்காததன் விளை வினால் அ இதில் தோல்வியடைகிறார் இப் பிரிவின் கீழ் அ குற்றவாளியாவார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இணைப்பு 1

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாரளுமன்றம்

## 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டம்

1988ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டது

1999ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டது

1982, மாச்சு மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1982 மார்ச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

**பகிரங்க ஆதனம் தொடர்பாகப் புரியப்பட்ட குறித்த சில தவறுகள் தொடர்பிலும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1) இச்சட்டமானது, 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக் கெதிரான தவறுகள் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்

2) பகிரங்க ஆதனத்துக்குச் சொத்தளித்தல் என்னும் தவறைப் புரிகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஓராண்டுக்குக் குறையாததும் ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற் தண்டனையினாலும், அத்துடன் ஆயிரம் ரூபா அல்லது அத்தகைய ஆதனத்துக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதத்துக்கான தொகையின் மும்மடங்கு ஆகியவற்றுள் எது கூடியதோ, அக்குற்றப் பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதலும் வேண்டும். — பகிரங்க ஆதனத்துக்கு சொத்தளித்தலைப் புரிதல்

3) பகிரங்க ஆதனத்தைத் திருடுதலென்னும் தவறைப் புரிகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் — பகிரங்க ஆதனத்தைத் திருடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளியாதல் வேண்டுமென்பது டன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஓராண்டுக்குக் குறை யாததும் ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சா ததுமான ஒரு காலத்துக்கான இருவகையி லொருவகை மறியற்தண்டனையினாலும், அத்து டன் ஆயிரம் ரூபா அல்லது எந்த ஆதனம் தொடர் பில் அத் தகைய தவறு புரியப்பட்டதோ அந்த ஆதனத்தினது பெறுமதியின் மும்மடங்கு ஆகிய வற்றுள் எது கூடியதோ அக்குற்றப்பணம் ஒன்றி னாலும் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

பகிரங்க ஆதனத்தைக் கொள்ளை புரிதல்

4) பகிரங்க ஆதனத்தைக் கொள்ளை புரிதலென் னும் தவறைப் புரிகின்ற எவரேனும் ஆள், தவ றொன்றுக்கு குற்றாவாளியாதல் வேண்டும் என்ப துடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓர் ஆண்டுக்கு குறையாததும் ஆனால் இருபது ஆண்டுகளில் விஞ்சாததுமான ஒரு காலத்திற் கான இருவகையில் ஒரு வகை மறியற் தண்ட னையிலும், அத்துடன் ஆயிரம் ரூபா அல்லது எந்த ஆதனம் தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டதோ அந்த ஆதனத்தினது பெறு மதி யின் மும்மடங்கு ஆகியவற்றுள் எது கூடியதோ அக்குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படு தலும் வேண்டும்.

நேர்மையற்ற முறையில் கையாடல் செய்தல் குற்ற முறையான நம்பிக்கை மீறல், ஏமாற்று.

05) (1) ஏதேனும் அசைவுள்ள பகிரங்க ஆதனத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்யும் அல்லது அதனைத் தனது சொந்தப் பயன்பாட் டுக்கென மாற்றிக் கொள்ளும் அல்லது ஏதேனும் அசைவுள்ள பகிரங்க ஆதனம் தொடர்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றமுறையான நம்பிக்கை மீறலாகிய தவறினைப் புரியும் எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது, ஓர் ஆண்டுக்கு குறையாத ஆனால் இருபது ஆண்டுகள் விஞ்சாத ஒரு காலத்துக்கான இருவகையில் ஒரு வகையில் மறியல் தண்டனையினாலும் அத்துடன், ஆயிரம் ரூபாத் தொகை அல்லது எந்த ஆதனம் தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டதோ அந்த ஆதனத்தினது பெறுமதியின் மும்மடங்கான தொகை ஆகிய இந்த இரு தொகைகளில் எது கூடியதாகவுள்ளதோ அத்தொகையளவிலான குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பொய்யானவணம் புனைதல், கணக்குகள் பொய்ப்பித்தல் என்பன.

(2). பகிரங்க ஆதனம் தொடர்பில், ஏமாற்று, பொய்யாவணம் புனைதல் அல்லது கணக்குகளைப் பொய்ப்பித்தல் என்னும் தவறினைப் புரியும் எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது, ஓராண்டுக்கு குறையாத ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகை யில் ஒரு வகை மறியல் தண்டனையினாலும் அத்துடன், ஆயரம் ரூபாத் தொகை அல்லது அது தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டதோ அதற்குரிய தொகையின் மும்மடங்கான தொகை ஆகிய இரு தொகைகளில் எது கூடியதாகவுள்ளதோ அத்தொகை அளவிலான குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பி2 1999 இன் 28)

(3) பகிரங்க ஆதனமாகவுள்ள களவாடப்பட்ட ஏதேனும் ஆதனத்தை, அது களவாடப்பட்ட ஆதனம் என்பதை அறிந்துகொண்டு அல்லது அது களவாடப்பட்ட ஆதனம் என நம்புவதற்குக் காரணம் கொண்டு நேர்மையற்ற முறையில் பெறுகின்ற அல்லது வைத்திருக்கின்ற ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓராண்டுக்குக்குறையாததும் ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கான இருவகையில் ஒரு வகையில் மறியல் தண்டனையினாலும் அத்துடன் ஆயிரம் ரூபா அல்லது ஆதனம் தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டதோ அந்த ஆதனத்தினது பெறுமதியின் மும்மடங்கு ஆகியவற்றுள் எது கூடியதோ அக் குற்றப் பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

குறித்துரைக்கப்பட்ட எழுத்தை அடையாளத்தை அல்லது செலுக்குகையை தாங்கியுள்ள ஆதனம் பகிரங்க ஆதனமாக இருத்தல் (பி3 1988 இன் 76)

**5 (அ)** இச்சட்டத்திற்குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்று தொடர்பான எவையேனும் நடவடிக்கைகளில் எவ்வாதனம் தொடர்பான அத்தவறு புரியப்பட்டதாகச் சாட்டப்படுகின்றதோ அவ்வாதனம் இதற்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் எழுத்தை, அல்லது அடையாளத்தை அல்லது செதுக்குகையைத் தாங்கி இருக்கின்றதென எண்பிக்கப்படுமிடத்து முரணானது எண்பிக்கப்படும்வரை அத்தகைய ஆதனமானது பகிரங்க ஆதனமென ஊகிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6).** இரண்டாம், 3ஆம், 4ஆம், 5ஆம் அல்லது 10 ஆம் பிரிவின்கீழ் எவரோனுமாள் மீது விதிக்கப் பட்ட குற்றப்பணமானது செலுத்தத் தவறப்படு மிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய குற்றப் பணத் தொகையின் பெறுமதிக்குச் சமானதென அது கருதுவதான தவறுகையாளரின் அசைவுள் ளதும் அசைவற்றதும் ஆன அத்தகைய எல்லாக் குடியரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய குற்றப்பணத் தொகையை விஞ்சுவதாகவுள்ள தும், அத்தகைய ஆதனத்தின் விற்பனை மீது தேறப்படுவதுமான ஏதேனும் பணத் தொகை அத் தகைய ஆளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

ஆதனம் இழப்பிக்கப்படுவதன் மூலம் குற்றப் பணத்தை அறவிடுதல்

**7).** ஆறாம் பிரிவின்கீழ் ஆதனத்தை இழப்பித்தலா னது நடைமுறைச் சாத்தியமற்றதாயுள்ளவிடத்து அல்லது உசிதமற்ற தாயுள்ளவிடத்து, நீதிமன்ற மானது, அத்தகைய இழப்பித்தற் கட்டளையை ஆக்கவதற்குப் பதிலாக 1979 ஆம் ஆண்டின் 15 இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் சமுதாயச் சேவைக் கட்டளை யொன்றை ஆக்க லாம்.

சமுதாயச் சேவைக் கட்டணம்

11157

**8).** (1) ஆளெவரும் தானாகச் சரணடையுமிடத்து அல்லது இச்சட்டத்தின் கீழ் அவர் தவறொன்றைப் புரிந் திருக்கிறார் அல்லது புரிதல் தொடர்புடைய வராயிருந்திருக்கிறார். அல்லது புரிந்திருப்பதாக அல்லது புரிவதில் தொடர்புடையவராகயிருப்ப தாகச் சந்தேகிக்கப்படுகிறார் என்ற சார்த்துகை

பிணையளித்தல் தொடர்பான ஏற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்றின் மீது கைதுசெய்யப்பட்டு கொணரப் படுமிடத்து பிணை தொடர்பான, 1979ஆம் ஆண் டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(பி2 1999 இன் 28)

ஆயின், எவ்வாறாயினும், எவ்விடயப் பொருள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ, அவ்விடயப் பொருளின் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சு கிறதெனப் பொலிசு உதவிக் கண்காணிப்பாளர் தரத்துக்குக் குறையாத தரத்திலுள்ள நிரற்படுத் தப் பட்ட அலுவலரொருவர் அத்தாட்சிப்படுத்து மிடத்து, விளக்க முடிவுறும் வரை அத்தகைய ஆள் விளக்கமறியலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும். பிணையில் விடுவதற்கான காரணங் களைப் பதித்துக் கொண்டதன் பின்னர் அத்த கைய ஆளைப் பிணையில் விடுவதற்கு நீதி மன்றமானது புறநீங்கலான சந்தர்ப்பங்களில் தகுதி வாயந்ததாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்கு நீதி மன்றத்தினால குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வருவரும், அவரது குற்றத் தீர்ப்புக்கு எதிராக அல்லது அவருக்கு விதிக்கப்பட்ட தண்ட னைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு மனு ஒன்றைச் சமர்ப்பித்துக் கொள்ளார் என்பது எவ் வாறிருப்பினும், மேன்முறையீடு முடிவுறுத்தப்படும் வரை விளக்க மறியலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், எவ்வாறாயினும், பிணையில் விடுவதற்கான காரணங்களைப் பகிர்ந்து கொண்டதன் பின்னர் அத்தகைய ஆளை புறநீங்கலான சந்தர்ப்பங்களில் பிணையில் விடுவதற்கு அத்தகைய நீதிமன்றம் தகுதி வாய்ந்ததாதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கு குற்றஞ் சாட்டப்பட்ட எவரேனும் ஆளின் விளக்கத்துக்கு, அத்துடன் அத்தகைய ஏதேனும் தவறின் மீதான குற்றச் தீர்ப்பிலிருந்தும், அத்தகைய குற்றத் தீர்ப்பின் மீது விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பிலிருந்தும் எழுவதான ஏதேனும் மேன்முறையீட்டின் கேட்புக்கும் நீதிமன்றமானது முந்துரிமையளித்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகளின் மீதான விளக்கத்தின் கேட்புக்கும் குற்றத் தீர்ப்புகளிலிருந்து எழுவனவான மேன்முறையீடுகளுக்கும் முந்துரிமை அளிக்கபடுதல்.

10. இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்றவரும் அல்லது அத்தகைய தவறொன்றைப் புரிவிக்க எத்தனிக்கின்றவரும், அத்துடன் அத்தகைய எத்தனிப்பில் தவறு புரியப்படுதலை முன்னிட்டு ஏதேனும் செயலைச் செய்கின்றவருமான எவரேனும் ஆள், அத்தகைய தவறுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவாறான அத்தகைய இருவகையிலொருவகை மறியற்தண்ட னையினாலும், அத்துடன் அத்தகைய தவறுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவாறான அத்தகைய குற்றப் பணத்தினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தவறுகளைப் புரிய எத்தனித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆட்களுக்குத் தண்டனை.

**11.** நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் பதினாறு வயதுக்குப் குறைந்தவராயிருக்கின்ற ஆளொருவர் 2ஆம், 3ஆம், 4ஆம் அல்லது 5 ஆம் பிரிவின் கீழ் தவறொன்றைப் புரியுமிடத்து அல்லது 10 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற அல்லது தவறொன்று புரியச் செய்விக்கின்ற விடத்து, நீதிமன்றம், அந்தத் தவறுக்கென தரப்பட்ட குறைந்த தண்டனையைப் பொருட்படுத்தாது தண்டனையொன்றை விதிக்கத் தற்றுணிபு கொண்டிருத்தல் வேண்டும்.

(பி4 1988இன் 76)


**12.** பொருள் கோடல் பகுதியில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

"களவாடப்பட்ட ஆதனம்" என்பது தண்டனைச் சட்டக் கோவையில் உள்ள பொருளைக் கொண்டுள்ளது.

பிரிவு 5 அ இற்குரிய அட்டவணை (பி5 1988இன் 76)



அல்லது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இணைப்பு 2

தனிசு அறவிடல் சட்டத்தின் கீழான வரைவுக் குற்றச்சாட்டுக்கள்

**1)** .......................... நீர் ........................ இலக்கத்தைக் கொண்ட ................. ரூபா தொகையினைக் கொடுப்பனவு செய்வதற்கு இலங்கை வங்கியின் ஏறாவூர் கிளைக்குக் கட்டளையிட்ட காசோலையை .................... என்பவருக்குக் கொடுத்ததாகவும் குறித்த காசோலை வழங்கப்பட்ட இலக்கத்தைக் கொண்ட கணக்கு அன்றைய தினமாகும்போது மூடப்பட்டி ருந்ததால் குறித்த காசோலையின் மீது இலங்கை வங்கியின் ஏறாவூர் கிளைக்குக் கொடுப்பனவு செய்வதற்கான இணக்கப்பாடொன்று இல்லாத காரணத்தினால் கொடுப்பனவு செய்யப்படாத பணத் தொகை ஒன்றை கொடுப்பனவு செய்யுமாறு எதிராளியினால் குறித்த வங்கிக்கு கட்டளை யிட்டதன் மூலம் 1994 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தனிசு அறவிடல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தின் 25 (1) பிரிவின் கீழ் தண்டனை விதிக்கப்பட வேண்டிய குற்றத்தைப் புரிந்துள்ளீர்.

***(வங்கிக் கணக்கு மூடப்பட்ட சந்தர்ப்பத்தில்)***

**2)** .............................. நீர் ............................ இலக்கத்தைக் கொண்ட .................. ரூபா தொகைக்கான காசோலைக்கு மக்கள் வங்கியின் வெள்ளவத்தைக் கிளை............................ இலக்கக் கணக்கில் நிதியம் இல்லாமையினால் குறித்த வங்கியினால் மதிக்கப்படாத காசோலையென அறிந்திருந்தும் அதை எழுதியதன் மூலம் நீர் 1994 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 25(1) பிரிவின் கீழ் தண்டனை விதிக்கப்பட வேண்டிய குற்றத்தைப் புரிந்துள்ளீர்.

***(வங்கியில் போதுமான பணமில்லாத சந்தர்ப்பத்தில்)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) ............................ நீர் ...................... இலக்கத்தைக் கொண்ட................ திகதியிட்ட............ ரூபா தொகையை கொடுப்பனவு செய்வதற்கான .............. வங்கிக்குக் கட்டளையிட்ட காசோலையை.............................. என்பவருக்கு கொடுத்து குறித்த காசோலைக் கொடுப்பனவுக்கான கட்டளையை பின்னர் நேர்மையற்ற உளக்கருத்துடன் எதிராணையிட்டதாகவும் ஆதலால் நீர் 1994 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 25 (1) பிரிவின் கீழ் தண்டனை விதிக்கப்படவேண்டிய குற்றத்தைப் புரிந்துள்ளீர்.

***(வங்கிக்கு பணம் கொடுக்கவேண்டாம் என கட்டளையிடும் சந்தர்ப்பத்தில்)***

2Ł2295



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



CPPHR

Centre for the Promotion and Protection of Human Rights

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org